# அரசு மணிமேகலையின் படைப்புக்களில்
# பெண் புனைவுகளும் பெண்ணிய விடுதலையும்

முனைவர்ப் பட்டத்திற்காக
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் ஆய்வேடு

பதிவு எண்: **3952**

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
**ஆகஸ்ட் – 2014**

**முனைவர் ஆ.இருதயராஜ், எம்.ஏ, பி.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.**
இணைப் பேராசிரியர்,
தமிழ் ஆய்வு மையம்,
தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி,
பாளையங்கோட்டை – **627 002.**

பாளையங்கோட்டை,
நாள்: .08.2014

# நெறியாளர் சான்றிதழ்

தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரித் தமிழ் ஆய்வு மையத்தில், **‘அரசு மணிமேகலையின் படைப்புக்களில் பெண் புனைவுகளும் பெண்ணிய விடுதலையும்’** எனுந் தலைப்பில் **அ.ஜாண்பால்** என்பார், என் நெறியாள்கையின் கீழ் ஆய்வு மேற்கொண்டுள்ளார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் முனைவர்ப் பட்டத்திற்காக அளிக்கப்படும் இவ்வாய்வேடு ஆய்வாளரால் தன்னியலாக உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் பொருட்டு ஆய்வாளருக்கு இதுவரை எந்தப் பட்டமும் அளிக்கப்படவில்லை என்று சான்றளிக்கிறேன்.

**(ஆ.இருதயராஜ்)**
நெறியாளர்

**அ.ஜாண்பால்,**
பதிவு எண் **3952,**
முனைவர்ப் பட்ட ஆய்வாளர்,
தமிழ் ஆய்வு மையம்,
தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி,
பாளையங்கோட்டை – **627 002.**

பாளையங்கோட்டை,
நாள்: .08.2014

# ஆய்வாளர் உறுதிமொழி

**‘அரசு மணிமேகலையின் படைப்புக்களில் பெண் புனைவுகளும் பெண்ணிய விடுதலையும்’** என்னும் தலைப்பில், தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி, தமிழ் ஆய்வு மையத்தில், முனைவர்ப் பட்டத்திற்காக **முனைவர் ஆ.இருதயராஜ்** அவர்களின் நெறியாள்கையின் கீழ் ஆய்வு செய்துள்ளேன். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் அளிக்கப்படும் இந்த ஆய்வேடு என்னால் தன்னியலாக நிகழ்த்தப்பட்டது என்றும், இவ்வாய்வின் பொருட்டு வேறு எந்தப் பட்டமும் பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

**(அ.ஜாண்பால்)**
ஆய்வாளர்

**உறுதிக் கையொப்பம்**

**முனைவர் ஆ.இருதயராஜ், எம்.ஏ, பி.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.**
இணைப் பேராசிரியர்,
தமிழ் ஆய்வு மையம்,
தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி,
பாளையங்கோட்டை – **627 002.**

# நன்றியுரை

**‘அரசு மணிமேகலையின் படைப்புகளில் பெண் புனைவுகளும் பெண்ணிய விடுதலையும்’** என்ற தலைப்பைத் தேர்ந்து தரவுகளைத் திரட்டி ஆய்வு மேற்கொள்ளவும் ஆய்வேடாக வடிவம் பெறவும் உறுதுணையாக இருந்தோர் பலர்.

அகிலத்தை ஆண்டு நடத்தும் இறைவனின் இணையற்ற இறையருளே என்னை நாள்தோறும் வழிநடத்தி வருகிறது. என் ஆய்வினை முடிக்கக் கரம் பிடித்து வழி நடத்திய **இறைவனுக்கு** நன்றி.

அகிலத்திற்கு என்னை அறிமுகப்படுத்தி, அகரக் கல்வி முதல் ஆய்வுக்கல்வி வரை பயில்வதற்குப் பொருளுதவி தந்து, என்னை இந்த உலகில் வாழச் செய்து கொண்டிருக்கின்ற **என் தந்தை மி. அருளப்பன் பாப்பையா, என் தாயார் அ. மரிய பாப்பா** அவர்களுக்கு மனமார்ந்த நன்றி.

முனைவர்ப்பட்ட ஆய்வினைத் தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரித் தமிழ் ஆய்வு மையத்தில் மேற்கொள்வதற்கு வாய்ப்பளித்த தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி மேனாள் முதல்வர் **அருட்பணி முனைவர் அ. அல்போன்ஸ் மாணிக்கம்,சே.ச., முனைவர் ஆ. ஜோசப். சே.ச.,** அவர்களுக்கும் இந்நாள் முதல்வர் முனைவர் **வி. கில்பட் கமிலஸ், சே.ச.,** அவர்களுக்கும் உளங்கனிந்த நன்றி.

முனைவர்ப் பட்ட ஆய்வு மேற்கொள்வதற்கு அனுமதியளித்த மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக **துணைவேந்தருக்கும்**, ஆய்வுப்புல **ஒருங்கிணைப்பாளர்** அவர்களுக்கும், ஆய்வுப் பிரிவு **அலுவலர்களுக்கும்** நன்றி.

ஆய்வுரை வளமையாக, கருத்துச் செறிவுடன் அமையச் செம்மையுற நெறிப்படுத்தி, வழிகாட்டி ஊக்கமளித்து, ஆர்வத்துடன் ஆய்வறிக்கையை எழுதுவதற்குத் துணைநின்ற நெறியாளர் **முனைவர் ஆ.இருதயராஜ்** அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

என் ஆய்வுப் பணியை விரைந்து முடிக்க என்னை விரைவுபடுத்திய இலொயோலா கல்லூரிச் செயலர் **அருட்பணி ம. ஆல்பர்ட் வில்லியம் சே.ச., அருட்பணி A.M. ஜோ வர்கீஸ்** அவர்களுக்கும், தூய சவேரியார் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் **பேராசிரியர் ஆ. மணி** அவர்களுக்கும் மற்றும் **தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்** அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

முனைவர்ப் பட்ட ஆய்விற்கான தகவல்களைத் திரட்டுவதற்காகப் **பேரா. அரசு மணிமேகலை** வீட்டிற்குச் சென்ற பொழுது, அவர் படைத்து வெளியிட்டுள்ள அனைத்து நூல்களையும் நகல் எடுத்துக் கொடுத்து உதவிய அவரின் **கணவர், மகன் – மருமகள்** மற்றும் **மகள்** அனைவர்க்கும் மனமார்ந்த நன்றி.

ஆய்வின் முன்னாய்வு வளர்ச்சி நிலையினை அறிவதற்குத் துணை புரிந்த **திருமதி கமலா** அவர்களுக்கு நன்றி.

ஆய்வறிக்கையைச் செம்மையுற எழுதுவதற்கு, ஆலோசனைகள் வழங்கிய **அ.அருள் மைக்கேல் செல்வன், அ. அருள் சலேத், தம்பி அருட்பணி வர்கீஸ், அ.அருள் அன்றோ சுதன்** அவர்களுக்கும், என் உடன்பயின்று, பணியாற்றுகின்ற **பேராசிரியர்களுக்கும்** நன்றி.

நெறியாளரைச் சந்திக்கும் பொருட்டு அவர் இல்லத்திற்குச் செல்கின்ற பொழுதெல்லாம் இன்முகத்தோடு வரவேற்று, அமரச்செய்து, உணவு தந்து, ஆய்வுக்கு நல்ல பல ஆலோசனைகளைத் தந்து ஆர்வமூட்டிய நெறியாளரின் மனைவி ஆசிரியை **திருமதி பாப்பா** அவர்களுக்குப் பாசமிகுந்த நன்றி.

இல்லறக் கனவை நனவாக்க, நல்லறம் பேணி என்னுடன் இருந்து, என் ஆய்வுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிய என் பாசமிகு மனைவி **அ.மெர்சி ஜெயந்திக்கும்** மகன் **J.J.ஜோ டியோனிக்ஸ்க்கும்** நெஞ்சார்ந்த நன்றி.

ஆய்வு ஆதார நூல்களைத் திரட்டி, ஆய்வு மேற்கொள்ள உறுதுணையாய்த் திகழ்ந்த தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி நூலகர் **முனைவர் மார்டின் ஆரோக்கியசாமி** மற்றும் **நூலகப் பணியாளர்களுக்குப்** பணிவான நன்றி.

ஆய்வேட்டினை நேர்த்தியாகக் கணிப்பொறியில் தட்டச்சுச் செய்து, கட்டமைத்துத் தந்த பாளையங்கோட்டை **நான்சி** கணினி நிலையத்தாருக்கு என் நன்றி.

**அ.ஜாண்பால்**

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| மேலது. | - | மேற்கூறிய நூல் |
| ப. | - | பக்கம் |
| பக். | - | பக்கங்கள் |
| ப.ஆ. | - | பதிப்பாசிரியர் |
| தொ.ஆ. | - | தொகுப்பாசிரியர் |
| மு.ப. | - | முதற் பதிப்பு |
| பி.எ. | - | பின்னிணைப்பு எண் |
| மு.கூ.நூ. | - | முற்கூறிய நூல் |
| ஜன. | - | ஜனவரி |
| பிப். | - | பிப்ரவரி |
| ஆக. | - | ஆகஸ்டு |
| நவ. | - | நவம்பர் |

# பொருளடக்கம்


| | இயல்கள் | பக்கம் |
|---|---|---|
| 0. | ஆய்வு முன்னுரை | 01 – 13 |
| 1. | பெண்ணியக் கருத்தாக்கங்களும் கொள்கைகளும் | 14 – 66 |
| 2. | கதைக்களமும் நிகழ்வும் | 67 – 93 |
| 3. | உடல் புனைவும் கருத்தியலும் | 94 – 121 |
| 4. | குடும்ப உறவுப் புனைவும் கருத்தியலும் | 122 – 181 |
| 5. | பொருளுறவுப் புனைவும் கருத்தியலும் | 182 – 226 |
| 6. | பண்பாட்டுப் புனைவும் கருத்தியலும் | 227 – 267 |
| 0. | ஆய்வு முடிவுரை | 268 – 272 |
| | துணைநூற்பட்டியல் | 273 – 282 |
| | பின்னிணைப்புக்கள் | |
| | 1. படைப்பாளியின் படைப்புப் பட்டியல் | i - ii |
| | 2. உடல் உறுப்புக்கள் பற்றிய பட்டியல் | iii - iv |
| | 3. ஆண் பெண்ணைப் பற்றிக் கூறும் சொல்லாடல்கள் | v |
| | 4. **ISBN** எண்ணுடன் இதழ்களில் வெளிவந்த ஆய்வாளரின் கட்டுரைகள் | |

# 0. ஆய்வு முன்னுரை

0.1 ஆய்வு நோக்கம்

0.2 ஆய்வுப் பரப்பும் எல்லையும்

0.4 முன்னாய்வு வளர்ச்சி

0.4 ஆய்வுச் சிக்கலும், தலைப்பும்

0.4 கருதுகோள்

0.6 ஆய்வு ஆதாரம்

0.7 ஆய்வு அணுகுமுறை

0.8 ஆய்வுப் பகுப்பு

0.8.1 பெண்ணியக் கருத்தாக்கங்களும் கொள்கைகளும்

0.8.2 கதைக்களமும் நிகழ்வும்

0.8.3 உடல் புனைவும் கருத்தியலும்

0.8.4 குடும்ப உறவுப் புனைவும் கருத்தியலும்

0.8.5 பொருளுறவுப் புனைவும் கருத்தியலும்

0.8.6 பண்பாட்டுப் புனைவும் கருத்தியலும்

0.9 ஆய்வு முடிவுரை

0.10 துணைநூற்பட்டியல்

0.11 பின்னிணைப்புகள்

# 1. பெண்ணியக் கருத்தாக்கங்களும் கொள்கைகளும்


1.0 முன்னுரை

1.1 பெண்ணியப் பின்புலம்

1.2 பெண்ணிய வரலாறு

1.2.1 உலக நாடுகளில் பெண்ணியம்

1.2.2 இந்தியாவில் பெண்ணியம்

1.2.2.1 தாய் தலைமை வகித்த தாய்வழிச் சமுதாயம்

1.2.2.2 வேதகாலம்

2.2.3 பெண்ணடிமைக்காலம்

1.2.2.4 பெண்கள் எழுச்சிக்காலம்

1.2.3 தமிழகத்தில் பெண்ணியம்

1.3 பெண்ணிய வரையறை

1.4 பெண்ணிய வகைகள்

1.4.1 மிதவாதப் பெண்ணியம் அல்லது தாராளவாதப் பெண்ணியம் **(Liberal Feminism)**

1.4.1.1 மிதவாதப் பெண்ணியக் கொள்கைகள்

1.4.2 போராட்டக் குணம் மிக்க பெண்ணியம்

1.4.3 தீவிரவாதப் பெண்ணியம் **(Radical Feminism)**

1.4.4 சமதர்மப் பெண்ணியம்

1.4.5 பொருள் முதல் பெண்ணியம் **(Materialist Feminism)**

1.4.6 மார்க்சியப் பெண்ணியம் **(Marxist Feminism)**

1.4.6 ஓரினக் கலவிப் பெண்ணியம் **(Lesbian Feminism)**

1.4.7 ஆன்மீகப் பெண்ணியம் **(Spiritual Feminism)**

1.4.8 கிறித்தவப் பெண்ணியம் **(Christian Feminism)**

1.4.9 மனைப் பெண்ணியம் **(Domestic Feminism)**

1.4.10 தலைமைத்துவம் வேண்டாப் பெண்ணியம் **(Anarcha Feminism)**

1.4.11 தூய பெண்ணியம் **(Pure Feminism)**

1.4.12 கருப்புப் பெண்ணியம் **(Black Feminism)**

1.4.13 சூழல் பெண்ணியம் **(Eco-Feminism)**

1.4.14 மரபு நிலைப் பெண்ணியம் **(Conservative Feminism)**

1.4.15 நடுத்தர வகுப்புப் பெண்ணியம் **(Bourgeois Feminism)**

1.4.16 கூட்டுச் சேராப் பெண்ணியம் **(Non Aligned Feminism)**

1.4.17 மகளிர் முன்னேற்றப் பெண்ணியம் **(Career Feminism)**

1.4.18 மனித இன மேம்பாட்டுப் பெண்ணியம் **(Eugenic Feminism)**

1.4.19 உளப்பகுப்பாய்வுப் பெண்ணியம் **(Psychoanalytic Feminism)**

1.4.20 இருத்தலியல் பெண்ணியம் **(Existentialist Feminism)**

1.4.21 அதிநவீனப் பெண்ணியம் அல்லது பின்நவீனத்துவப் பெண்ணியம் **(Post-Modern Feminism)**

1.4.22 கல்வி நெறிப் பெண்ணியம் **(Academic Feminism)**

1.4.23 மானுடநேயப் பெண்ணியம் **(Humanist Feminism)**

1.4.24 பண்பாட்டுப் பெண்ணியம் **(Cultural Feminism)**

1.4.25 ஏகாதிபத்தியப் பெண்ணியம் **(Imperial Feminism)**

1.4.26 தனிமனிதப் பெண்ணியம் **(Individual Feminism)**

1.4.27 புரட்சிப் பெண்ணியம் **(Revloutionary Feminism)**

1.4.28 ஆண் பெண்ணியம் **(Male Feminism)**

1.4.29 தலித் பெண்ணியம் **(Dalith Feminism)**

1.4.30 இந்தியப் பெண்ணியம் **(Indian Feminism)**

1.5 பெண்ணியக் கொள்கைகள்

1.6 தொகுப்புரை

# 2. கதைக்களமும் நிகழ்வும்

2.0 முன்னுரை

2.1 கதைக்களம்

2.2 கதைக்கள நிகழ்வுகள்

2.2.1 கிராம வாழ்வியல் நிகழ்வுகள்

2.2.1.1 கண்ணுக்குள் நூறு கவிதை

2.2.1.2 மனிதரில் இவர் மகாத்மா

2.2.2 கிராம – நகர்ப்புற வாழ்வியல் நிகழ்வுகள்

2.2.2.1 தீக்குளிக்காத சீதைகள்

2.2.3 நகர வாழ்வியல் நிகழ்வுகள்

2.2.3.1 கனவு சுமக்கும் கண்கள்

2.2.3.2 நாளை நான் ஜெயிப்பேன்

2.2.3.3 பூவே! இளம் பூவே!

2.2.3.4 பொறுத்திரு பூ மலர

2.23.5 என்றும் தொடரும் பயணம்

2.2.3.6 பொழுது ஒரு நாள் புலரும்

2.2.3.7 காத்திருங்கள் காலம் வரும்

2.3.1 கதை நிகழ்வுகளின் மையம்

2.4 தொகுப்புரை

# 3. உடல் புனைவும் கருத்தியலும்


3.0 முன்னுரை

3.1 ஆணின் கூற்றுக்கள் வழிப்புலப்படும் உடல் சார்ந்த புனைவுகள்

3.1.1 கணவன்

3.1.2 காதலன்

3.1.3 தந்தை

3.2 பெண் கூற்றுக்கள் வழிப்புலப்படும் உடல் சார்ந்த புனைவுகள்

3.2.1 பெண் பிற பெண்களைப் பற்றிக் கூறும் கூற்றுக்கள்

3.2.1.1 ஆசிரியர் பெண்களைப் பற்றிக் கூறும் கூற்றுக்கள்

3.2.1.2 பெண்கள் பிற பெண்களைப் பற்றிக் கூறும் கூற்றுக்கள்

3.2.2 பெண் தன்னைப் பற்றிக் கூறும் கூற்றுக்கள்

3.3 உடல் புனைவும் கருத்தியலும்

3.3.1 உடல் புனைவுகள்

3.4 தொகுப்புரை

# 4. குடும்ப உறவுப் புனைவும் கருத்தியலும்


4.0 முன்னுரை

4.1 குடும்பம்

4.1.2 குடும்ப வகைகள்

4.2 குடும்ப உறவும் பெண் புனைவும்

4.2.1 ஆண் கூற்றுப் பெண் புனைவுகள்

4.2.1.1 கணவன் கூற்றுப் புனைவுகள்

4.2.1.2 தந்தை கூற்றுப் புனைவுகள்

4.2.1.3 சகோதரன் கூற்றுப் புனைவுகள்

4.2.1.3.1 அண்ணன் கூற்றுப் புனைவுகள்

4.2.1.3.2 தம்பி கூற்றுப் புனைவுகள்

4.2.1.4 காதலன் கூற்றுப் புனைவுகள்

4.2.2 பெண் கூற்றுப்புனைவுகள்

4.2.2.1 ஆசிரியர் கூற்றுப் பெண்புனைவுகள்

4.2.2.2 பிற பெண் கூற்றுப் பெண் புனைவுகள்

4.2.2.2.1 மனைவி கூற்றுப் புனைவுகள்

4.2.2.2.2 தாய் கூற்றுப் புனைவுகள்

4.2.2.2.3 சகோதரி கூற்றுப் புனைவுகள்

4.2.2.2.4 தோழி கூற்றுப் புனைவுகள்

4.2.2.2.5 காதலி கூற்றுப் புனைவுகள்

4.2.2.2.6 மகள் கூற்றுப் புனைவுகள்

4.2.2.2.7 பிற பெண்கள் கூற்றுப் புனைவுகள்

4.3 பெண் புனைவும் கருத்தியலும்

4.3.1 ஆணைச் சார்ந்து வாழ்பவள்

4.3.2 ஆண்களுக்கான நுகர்ச்சிப் பொருள்

4.3.3 பெண் முடிவெடுக்கத் தகுதி அற்றவள்

4.3.4 காதலைத் தேர்ந்தெடுக்கும் உரிமை
4.3.5 ஆண் நல்லவனாகப் படைக்கப்படல்
4.3.6 ஆண் வேறொரு பெண்ணை மணக்க முதல் மனைவி பழி சுமத்தப்படல்
4.3.7 ஆண் செய்த தவற்றைத் தெய்வம் மீது சுமத்துதல்
4.3.8 பெண் குடும்பத்தின் குலவிளக்கு
4.3.9 தியாகத்தின் மறு உருவம்
4.3.10 கணவனுக்காகவே வாழ்பவள்
4.3.11 விருந்தினரை உபசரிப்பவள்
4.3.12 பொறாமைக் குணம் படைத்தவள்
4.3.13 ஆண்களை வளைத்துப் போடுபவள்
4.3.14 பிரச்சினையை உருவாக்குபவள்
4.3.15 பெண்ணின் அறிவு குடும்பத்தைப் பேணுவதற்கு
4.3.16 உறவுகளை இணைப்பவள்
4.3.17 ஆண்களின் இலட்சியத்தை நிறைவு செய்பவள்
4.3.18 தண்டனையை ஏற்பவள்
4.4 தொகுப்புரை

# 5. பொருளுறவுப் புனைவும் கருத்தியலும்

| | |
|---|---|
| 5.0 | முன்னுரை |
| 5.1 | குடும்ப நிலையில் பொருள் சார்ந்த நெறி |
| 5.1.1 | பிறருக்காக வாழ்பவள் பெண் |
| 5.1.2 | பணத்திற்காக மனைவியை கொடுமைப்படுத்துதல் |
| 5.1.3 | குடும்பப் பாரத்தைச் சுமப்பவள் |
| 5.1.4 | சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை |
| 5.1.5 | திருமண பந்தம் |
| 5.1.6 | பணம் சம்பாதிக்கிற இயந்திரம் |
| 5.1.7 | பணமே உறவு |
| 5.2 | தொழில் நிலையில் பொருள் சார்ந்த நெறி |
| 5.2.1 | தொழில் நிலையில் ஆண் – பெண் வேறுபாடு |
| 5.2.2 | நாவல்களில் தொழில் உறவு சார்ந்த புனைவுகள் |
| 5.2.2.1 | பாலியல் தொல்லை |
| 5.2.2.2 | இரட்டைச் சிலுவை |
| 5.2.2.3 | பெண் தலைமையேற்றல் |
| 5.2.2.4 | நிர்வாகத் திறன் |
| 5.2.2.5 | பால் வியாபாரம் |
| 5.2.2.6 | அடிமைத் தொழில் |
| 5.3 | கல்வி கற்றலில் பொருள் சார்ந்த நெறி |
| 5.3.1 | கல்விச் சூழலில் பெண்களின் மனநிலை |
| 5.3.2 | ஆசிரியர் கூறும் அறிவுரை |
| 5.3.3 | நண்பர்கள் நற்பணி மன்றம் |
| 5.3.4 | கேலி செய்தல் |
| 5.3.5 | துணிவு மிக்கவர்கள் |
| 5.4 | சமூக நிலையில் பொருள் சார்ந்த நெறி |

5.4.1 வரதட்சணை இல்லாத் திருமணம்

5.4.2 குடும்ப வறுமை

5.4.3 பொறுப்பற்ற தனம்

5.4.4 துணிவு மிக்க பெண்

5.4.5 சூழல் காரணமாக நெறி பிறழ்தல்

5.5 பெண்புனைவும் கருத்தியலும்

5.6 தொகுப்புரை

# 6. பண்பாட்டுப் புனைவும் கருத்தியலும்

6.0 முன்னுரை

6.1 பண்பாடு – வரையறை

6.2 காதல் பற்றிய புனைவுகள்

6.2.1 எதிர்ப்பில் தொடரும் காதல்

6.2.2 சம்மதத்தில் தொடரும் காதல்

6.2.3 தோல்வியில் முடியும் காதல்

6.3 திருமணம் பற்றிய புனைவுகள்

6.3.1 காதல் திருமணம்

6.3.2 நிச்சயிக்கப்பட்ட திருமணம்

6.3.3 விதவைத் திருமணம்

6.4 ஒழுக்க நெறிகள் சார்ந்த புனைவுகள்

6.4.1 கணவனுக்கு மனைவி கீழ்படிதல்

6.4.2 காலில் விழுந்து வணங்குதல்

6.4.3 பெண் பணிவிடை செய்பவளாக இருத்தல்

6.4.4 நடை, உடை பாவனை

6.4.5 பாரா முகங்கொண்ட நகரப் பண்பாடு

6.4.6 அறிவுரை

6.4.7 பெரியோரை மதித்தல்

6.4.8 சகுனத் தடை

6.4.9 அசோகவனத்துச் சீதை

6.5 மதம் சார்ந்த புனைவுகள்

6.6 சாதி சார்ந்த புனைவுகள்

6.7 பண்பாட்டுப் புனைவும் கருத்தியலும்

6.8 தொகுப்புரை

## இயல் – 0

# ஆய்வு முன்னுரை

# இயல் – 1

# பெண்ணியக் கருத்தாக்கங்களும் கொள்கைகளும்



# இயல் – 2

# கதைக்களமும் நிகழ்வும்



# இயல் – 3

# உடல் புனைவும் கருத்தியலும்




# இயல் – 4

# குடும்ப உறவுப் புனைவும் கருத்தியலும்



# இயல் – 5

# பொருளுறவுப் புனைவும் கருத்தியலும்



# இயல் – 6

# பண்பாட்டுப் புனைவும் கருத்தியலும்



## இயல் – 0

# ஆய்வு முடிவுரை



# துணைநூற்பட்டியல்



# பின்னிணைப்புக்கள்

# 1. படைப்பாளியின் படைப்புப் பட்டியல்

# 2. உடல் உறுப்புக்கள் பற்றிய பட்டியல்



# 3. ஆண் பெண்ணைப் பற்றிக் கூறும் சொல்லாடல்கள்



# 4. ISBN எண்ணுடன் இதழ்களில் வெளிவந்த ஆய்வாளரின் கட்டுரைகள்

# இயல் – 0

# ஆய்வு முன்னுரை

## 0.1 ஆய்வு நோக்கம்

இலக்கியம் வாழ்க்கையைப் புரிந்து கொள்வதற்கான களமாக உள்ளது. இலக்கியப் படைப்பாளி, தன் வாழ்வில் கண்ட அனுபவம், பெற்ற அனுபவம் இவைகளின் ஊடாக அவனுடைய சொந்த ஆளுமைத் திறன் மூலம் இலக்கியத்தைப் படைக்கின்றான். அதாவது, தமிழ்ச் சமூக வாழ்வியலின் மாற்றங்களைப் பதிவு செய்வதற்கு வடிவம், உள்ளடக்கம், உணர்ச்சி, கற்பனை, உத்தி முதலானவைகளைக் கையாண்டு இலக்கியப் படைப்பினை உருவாக்குகின்றான். படைப்பாளி மற்றும் படிப்போர் ஆகியோரின் சமூக, அரசியல், பொருளாதார, நாகரிக மற்றும் பண்பாட்டுச் சூழலுக்கேற்ற முறையிலான புனைவுகள் படைப்பிலக்கியங்களாக வெளிவரத் தொடங்கின. மரபு வழியாக வெளிவந்துள்ள செய்யுள் இலக்கிய வடிவங்கள், கவிதை வடிவங்களாக மறுமலர்ச்சியுற்றன.

தமிழ்க் கருவும், மேலை உருவும் தாங்கிய இலக்கிய வடிவங்கள் பல தமிழில் உருவாயின. இத்தகைய இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை, நாடகம் மற்றும் புதுக்கவிதை வடிவங்களில் வெளிவரும் இலக்கியங்களை இக்கால இலக்கியங்கள் என வகைப்படுத்துகின்றனர். இக்கால இலக்கிய வகைமைகளுள் அரசு மணிமேகலையின், நாவல் இலக்கியத்தில் பெண் புனைவுகள் எத்தகைய முறையில் பதிவு பெற்றுள்ளன; இப்புனைவுகள் புலப்படுத்தும் கருத்தியல்கள் பெண்ணடிமைத்தன ஒழிப்பிற்கு எத்தகைய பங்பளிப்பு நல்குகின்றன என்பதனை ஆய்வு நோக்கில் கண்டறியும் அவாவில் இவ்வாய்வு அமைந்துள்ளது.

## 0.2 ஆய்வுப் பரப்பும் எல்லையும்

இலக்கியப் படைப்பாளர்களின் படைப்புக்களான, இலக்கியம், இலக்கணம் முதலானவைகளைப் பல்வேறு விதமான ஆய்வுப் பரப்புகளில் ஆய்வுக்குட்படுத்தும் மரபு கல்விப் புலத்தின் அடிப்படையான பணியாகத் திகழ்கிறது. ஆய்வாளர் ஆய்வுப் பட்டம் கருதி, முனைவர்ப் பட்டத்திற்காக மேற்கொண்ட இந்த ஆய்விற்கு, இலக்கியத் துறையை ஆய்வுக்களமாகத் தேர்ந்தெடுத்து உள்ளார். இக்கால இலக்கியத்தினுள் பல்வேறு வகைமை பெற்றுள்ள இலக்கியப் படைப்பில், நாவல் இலக்கியத்தை ஆய்வுக்குரிய களமாகத் தேர்ந்தெடுத்துள்ளார். நாவல் பகுதியைப் பரப்பு எல்லையாகக் கொண்டு கால அடிப்படையில் தேர்ந்தெடுப்பதா? சமூக, அரசியல் இயக்கப் பின்னணி அடிப்படையில் தேர்ந்தெடுப்பதா? குறிப்பிட்ட படைப்பாளியின் படைப்புகளை ஆய்வுக்கு உட்படுத்துவதா? என்ற சிக்கல் ஆய்வாளருக்கு எழுந்தது.

இறுதியில் ஒரு குறிப்பிட்ட படைப்பாளியின் அனைத்துப் புதினங்களையும் ஆய்வுக்குரிய எல்லையாக ஆய்வாளர் இறுதி செய்தார். அரசு மணிமேகலை என்பார் படைத்துள்ள படைப்புக்கள் கவிதையாகவும் சிறுகதையாகவும், நாவலாகவும் பல்வேறு வடிவங்களில் வெளிவந்துள்ளன. இவைகளுள், அரசு மணிமேகலையின் பத்து நாவல்களும் ஆய்வுக்குரிய எல்லைகளாக அமைகின்றன.

## 0.4 முன்னாய்வு வளர்ச்சி

ஆய்வாளர் ஆய்வுச் சிக்கலின் பின்புலத்தில் ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்து ஆய்வு மேற்கொள்வதற்கு முன், அரசு மணிமேகலையின் படைப்புக்கள் பற்றி இதுகாறும் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகள் பற்றிய முன் வளர்ச்சியினை அறிந்து கொண்டால் ஆய்வு எல்லையை வரையறுத்துத் தலைப்பை இறுதி செய்து, ஆய்வு மேற்கொள்ளத் தெளிவு பிறக்கும் எனும் நோக்கில் இம் முன்னாய்வு வளர்ச்சியினை

ஆய்வாளர் அறிய முற்பட்டார். ஏனெனில், ஆய்வு என்பது தொடரோட்டம் போன்றது. ஒருவர் விட்ட இடத்திலிருந்து தொடர்வதே ஆய்வாகும். ஒருவர் ஓடிய பாதையிலேயே ஓடினால் அஃது ஆய்வு ஆகாது என்ற தமிழண்ணலின் கூற்றிற்கு இணங்க ஆய்வாளர் முன்னாய்வு வளர்ச்சியை மேற்கொண்டுள்ளார்.

திருமதி பொன்முடி என்பார் இளநிலை ஆய்வாளர் பட்டத்திற்காக (எம்.ஃபில்) அரசு மணிமேகலையின் சிறுகதைகளை ஆய்வு செய்துள்ளார்.

திருமதி சந்திரலேகா என்பார் இளநிலை ஆய்வாளர் பட்டத்திற்காக அரசு மணிமேகலையின் கவிதைகளை ஆய்வு செய்துள்ளார்.

திருமதி கமலா என்பார் அரசு மணிமேகலையின் நாவல்களுள் ஆண் பெண் கருத்தாக்கம் எனும் தலைப்பில் இளநிலை ஆய்வுப் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளார்.

திருமதி மதியழகி மனோகரன் என்பார், அரசு மணிமேகலையின் படைப்புக்கள் ஒரு பார்வை எனும் தலைப்பில் ஓர் ஆய்வு நூலை எழுதி வெளியிட்டு உள்ளார்.

படைப்பாளரின் அனைத்துப் படைப்புக்களையும் தொகுத்து, தொகுத்தவற்றை வகுத்து, வகைப்படுத்தி, வகைப்படுத்தியவற்றினூடே, தம் பார்வையைப் பதித்து, அவர் தம் பார்வையில் கிடைத்த செய்திகளை அந்நூலில் பகிர்ந்துள்ளார். படைப்பாளரின் மனிதநேயப் பண்பு, மகளிரின் பொருளாதார மேம்பாடு பற்றிய சிந்தனைகள் படைப்பாளரின் அனைத்து வகைப் படைப்புக்களிலும் பதிவு பெற்றுள்ளமையினை இந்நூல் ஆசிரியர் விவரித்துள்ளார்.

படைப்பாளரின் படைப்புக்கள் பற்றி ஆய்வு செய்துள்ளோரில் ஆய்வாளரினுடைய ஆய்வு எல்லையை வரையறுத்துத் தலைப்பைத் தேர்ந்து

ஆய்வைத் தொடர, திருமதி கமலா என்பார் நிகழ்த்திய அரசு மணிமேகலையின் படைப்புக்களுள் ஆண் - பெண் கருத்தாக்கம் எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வு, ஆய்வாளரின் ஆய்வுக்கான தொடக்கப் புள்ளியாய் அமைந்தது. ஆண் - பெண் பற்றிய சொல்லாடல்கள் வழிப் புலப்படும் கருத்தமைவுகளை இவர் தம் ஆய்வில் சிறப்புற விளக்கியுள்ளார். பெண்ணிய நோக்கில் பெண் விடுதலைக் கருத்தாக்கங்கள் படைப்பாளரின் படைப்புக்களுள் பெண் பற்றிய புனைவுகளில் புலப்படும் பாங்கினை அறியும் நோக்கில் ஆய்வாளரின் ஆய்வுப் பயணம் தொடர்வதால், மேற்கூறிய ஆய்வுகளிலிருந்து இவ்வாய்வு வேறுபடுகிறது.

பெண்ணிய நோக்கில் அரசு மணிமேகலையின் நாவல்களுள் புனைவு பெற்றுள்ள பெண் பாத்திரங்களின் உடல், குடும்ப உறவு, பொருளியல் உறவு மற்றும் பண்பாட்டுப் புனைவுகளின் வழிப் புலனாகும் கருத்தியல்களை வெளிக் கொணரும் நோக்கில் முனைவர்ப் பட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த ஆய்வு, முதன்மை ஆய்வாக அமைகிறது.

## 0.4 ஆய்வுச் சிக்கலும், தலைப்பும்

அரசு மணிமேகலையினுடைய புதினப் படைப்புக்களை ஆய்வின் எல்லையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ள முனைகின்ற பொழுது, எத்தகைய நோக்கில் இவ்வாய்வினை மேற்கொள்வது என்ற சிக்கல் ஆய்வாளரிடம் எழுந்தது.

தமிழக அரசின் மூலம், சிறந்த பெண்ணியவாதி என்பதற்கான ‘கலைமாமணி’ விருது பெற்றுள்ள அரசு மணிமேகலையின் படைப்புக்களில் பெண்ணியக் கருத்தியல்கள் எங்ஙனம் பதிவு பெற்றுள்ளன; பெண் புனைவுகள் மூலம் வெளிப்படும் பெண் விடுதலை சார்ந்த கருத்துக்கள் எங்ஙனம் வெளிப்படுகின்றன என்பதை அறியும் நோக்கில் ***“அரசு மணிமேகலையின் படைப்புக்களில் பெண்புனைவுகளும்***

***பெண்ணிய விடுதலையும்***" என்னும் தலைப்பினை இறுதி செய்து ஆய்வாளர் ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

## 0.4 கருதுகோள்

பெண் விடுதலை சார்ந்த கருத்தியல்கள், மரபு சார்ந்து, மிதவாதப் போக்கிலும், சமூக நிறுவனங்களான குடும்பம், மதம், சாதி, பொருளாதாரம் முதலானவற்றைத் தகர்க்கும் முறையில் முன்வைக்கும் தீவிரவாதப் போக்கிலும் எனப் பல்வேறு விதமான கருத்தியல் பின்புலத்தில் இலக்கியப் படைப்புக்களாகவும், ஆய்வுகளாகவும் வெளிவருகின்றன.

அரசு மணிமேகலை, தான் படைத்துள்ள நாவல்களின் கதைக்கள நிகழ்வுகளில் ஊடாடி உறவாடும் பாத்திரங்களில், குறிப்பாகப் பெண் பாத்திரம் பற்றிய புனைவுகளில் புலனாகும் கருத்தியல்களைக் கண்டறியும் நோக்கில் மேற்கொண்ட ஆய்விற்கு ஆய்வாளர் உருவாக்கிய கருதுகோள் பின்வருமாறு.

அரசு மணிமேகலை படைத்துள்ள நாவல்களுள் பெண் புனைவு பற்றிய பதிவுகளில் வெளிப்படும் பெண் விடுதலை குறித்த கருத்தியல்கள் மரபு சார்ந்து கட்டமைக்கப்பட்டுள்ளன; சமூக, அரசியல், பொருளாதார மாற்றத்திற்கு ஏற்ப உருவான பண்பாட்டு மறுமலர்ச்சியை மரபு சார்ந்து இவர் தம் புதினங்கள் பதிவு செய்துள்ளன என்பதே இவ்வாய்வின் கருதுகோள் ஆகும்.

## 0.6 ஆய்வு ஆதாரம்

அரசு மணிமேகலை என்பவர் படைத்துள்ள 1) என்றும் தொடரும் பயணம், 2) பொழுது ஒரு நாள் புலரும், 3) தீக்குளிக்காத சீதைகள், 4) கனவு சுமக்கும் கண்கள், 5) காத்திருங்கள் காலம் வரும், 6) மனிதரில் இவர் மகாத்மா, 7) பூவே இளம் பூவே, 8)

நாளை நான் ஜெயிப்பேன், 9) கண்ணுக்குள் நூறு கவிதை, 10) பொறுத்திரு பூ மலர ஆகிய பத்துப் புதினங்களும் ஆய்வின் முதன்மை ஆதாரங்களாக உள்ளன.

அரசு மணிமேகலையின் படைப்புக்கள் பற்றி வெளிவந்துள்ள ஆய்வுகள், நூல்கள் மற்றும் பெண் விடுதலை பற்றிய ஆய்வுகள், நூல்கள் மற்றும் கட்டுரைகள் துணைமை ஆதாரங்களாக அமைந்துள்ளன.

நாவல் பற்றிய கருத்தியல்கள், ஆய்வுகள், நூல்கள் மற்றும் கட்டுரைகள் இவ்வாய்வின் சார்பாதாரங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

## 0.7 ஆய்வு அணுகுமுறை

முதன்மை, துணைமை மற்றும் சார்பாதாரங்களின் வழி மேற்குறிப்பிட்ட சிக்கல்களைக் களையும் நோக்கில் திரட்டப்பட்ட தரவுகளை ஆய்வாளர் ஆய்வுக்கு உட்படுத்தியபொழுது, பின்வரும் அணுகுமுறைகளைக் கையாண்டுள்ளார்.

❖ பெண் விடுதலை குறித்த கருத்தியல்களைப் பெண்ணியப் பின்புலத்தில் இவர் தம் படைப்பில் ஆய்ந்தறியும் நோக்கில் பெண்ணிய அணுகுமுறையினையும்,

❖ அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு நோக்கில் பெண் விடுதலை சார்ந்த கருத்துக்கள் பன்முகத் தன்மையில் வெளிப்படுவதனைக் காண்பதற்குச் சமூகவியல் அணுகுமுறையினையும்,

❖ திரட்டிய தரவுகளைத் தொகை, வகைப்படுத்தி, பகுத்து, விவரித்து, விளக்குவதற்கு விளக்கவியல் அணுகுமுறையினையும், ஆய்வாளர் இவ்வாய்வில் கைக்கொண்டுள்ளார்.

## 0.8 ஆய்வுப் பகுப்பு

“அரசு மணிமேகலையின் படைப்புக்களில் பெண் புனைவுகளும் பெண்ணிய விடுதலையும்” என்னும் தலைப்பில் மேற்கொண்ட இவ்வாய்வில், முதன்மை, துணைமை மற்றும் சார்பாதாரங்களின் வழித் திரட்டிய கருத்துக்களைத் தொகை வகைப்படுத்தி ஆய்வறிக்கையாக எழுதுகின்றபோது, முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஆறு இயல்களாகப் பகுத்து ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

1) பெண்ணியக் கருத்தாக்கங்களும் கொள்கைகளும்

2) கதைக்களமும் நிகழ்வும்

3) உடல் புனைவும் கருத்தியலும்

4) குடும்ப உறவுப் புனைவும் கருத்தியலும்

5) பொருளுறவுப் புனைவும் கருத்தியலும்

6) பண்பாட்டுப் புனைவும் கருத்தியலும்

எனப் பகுத்து ஆய்வறிக்கையினை எழுதியுள்ளார்.

### 0.8.1 பெண்ணியக் கருத்தாக்கங்களும் கொள்கைகளும்

பெண் விடுதலை சார்ந்த கருத்தியல்கள் முன்வைக்கும் பல்வேறு கொள்கைகளைத் தமிழ்ச் சமூக அரசியல் பொருளாதாரம் மற்றும் பண்பாட்டுப் பின்புலத்தில் மதிப்பீடு செய்து விளக்கம் அளித்துள்ள பல்வேறு அறிஞர்களின் பெண்ணியக் கருத்தாக்கங்கள் மற்றும் கொள்கைகளைப் பெண்ணியப் பின்புலம், வரலாறு, வரையறை, வகைகள் என வகைப்படுத்தி இவ்வியலுள் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

அதாவது, ஆண்டாண்டு காலமாகத் தமிழ்ச் சமூக வரலாற்றில் தாய்வழிச் சமூக அமைப்பில், அதாவது ஆதிப் பொது உடைமைக் காலத்தில் அனைவருக்கும்

பொது என்ற நிலைமை இருந்தது. தாய்வழிச் சமூக அமைப்பில் பெண் என்பவள் முழுச் சுதந்திரம் பெற்றவளாக இருந்தாள். தந்தை வழிச் சமுதாய அமைப்பில், பெண் உடமைப் பொருளாக மாற்றப்படுகின்றாள். வீடு பெண்ணுக்கான வெளியாக மாற்றப்படுகின்றது. உலகமே வீடாக ஆணுக்காக மாற்றம் செய்யப்படுகின்ற போது, அரசியல் நிலை, குடும்ப நிலை, பொருளாதார நிலை, சமய நிலை ஆகிய அனைத்து மட்டங்களிலும் பண்பாட்டு நிலையிலும், பெண் அடிமைப்படுத்தப்படுகின்றாள் என்பதைப் பெண்ணியப் பின்புலம் என்னும் பகுதியில் விளக்கியுள்ளார்.

இந்தப் பெண்ணடிமைத்தனத்திற்கு எதிரான கலகக் குரல்கள் உலக நாடுகளிலும், இந்தியாவிலும் தமிழகத்திலும் எங்ஙனம் பரவி வளர்ச்சி பெற்று வந்துள்ளன என்பதைப் பற்றிப் பெண்ணிய வரலாறு என்னும் பகுதியில் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

பெண் விடுதலை குறித்த கருத்தியல்களை முன் வைத்துள்ள உலக அளவிலான, இந்திய அளவிலான, தமிழக அளவிலான பல அறிஞர்களின் பெண் விடுதலை சார்ந்த கருத்தியல் கொள்கைகளைப் பெண்ணிய வரையறை என்னும் பகுதியில் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

பெண் விடுதலை சார்ந்த கருத்துக்கள் பல்வேறு விதமாகப் பல்கிப் பெருகியுள்ளன. மிதவாதப் பெண்ணியம், தீவிரவாதப் பெண்ணியம், சமதர்மப் பெண்ணியம், இந்துப் பெண்ணியம், சோஷலிசப் பெண்ணியம் என்ற பல்வேறு விதமான பெண்ணிய வகைமைகளைப் பெண்ணிய வகைகள் என்னும் பகுதியில் ஆய்வாளர் விவரித்துள்ளார்.

பல்வேறுபட்ட பெண்ணிய வகைகள் முன்வைக்கக்கூடிய பெண்ணியக் கொள்கைகள் சார்ந்த விளக்கங்களை ஆய்வாளர் விளக்கியுள்ளார். ஆணாதிக்க

எதிர்ப்பு, மரபு எதிர்ப்பு, குடும்ப நிறுவனத் தகர்ப்பு, மதத் தகர்ப்பு முதலான கொள்கைகளைப் பெண்ணிய இயக்கங்கள் எங்ஙனம் முன்வைக்கின்றன என்பதனைப் பெண்ணியக் கொள்கைகள் என்னும் பகுதியில் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

### 0.8.2 கதைக்களமும் நிகழ்வும்

அரசு மணிமேகலையின் படைப்புக்களின் கதை நிகழ்வுகள் நடைபெறும் கதைக்களமானது நகரம், கிராமம் மற்றும் நகரமும் கிராமமும் கலந்த வாழ்வில் களம் என மூவகையாகப் பகுத்து இவ்வியல் விவரிக்கிறது.

மனிதன் மனிதனோடு இணைந்து வாழ்கின்ற போது ஆண் <-> ஆண் சார்ந்த உறவு நிகழ்வுகளில், அப்பா, மகன், முதலாளி, தொழிலாளி, பெற்றோர் என்ற நிலையிலும், ஆண் <-> பெண் உறவு சார்ந்த நிகழ்வுகளில் கணவன் – மனைவி, காதலன் – காதலி, தாய் – தந்தை, அண்ணன் – தங்கை என்ற நிலையிலும், பெண் <-> பெண் உறவு சார்ந்த நிகழ்வுகளில் அக்காள் – தங்கை, மனைவி – கிழத்தி, அம்மா – மகள், பெண் அதிகாரி – பெண் தொழிலாளி என்ற நிலையிலும், பாத்திரங்கள் ஊடாடி, உறவாடும் கதை நிகழ்வுகளை இவ்வியலுள் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

### 0.8.3 உடல் புனைவும் கருத்தியலும்

தனிமனித நிலையிலும் குடும்ப உறவு வாழ்விலும் பொருளியல் நெறியிலும் சமூக நிலையிலும் ஒருவர் ஒருவருடன் அதாவது, பண்பாட்டுச் சூழலில் ஆணும் பெண்ணும் இணைந்து உறவாடி வாழ்கின்ற பொழுது, ஒருவர் ஒருவரைப் பற்றி அதாவது, ஆண் பெண்ணைப் பற்றி, பெண் ஆணைப் பற்றி அவர் தம் உடல் உறுப்புகள் பற்றிய தத்தம் கருத்துக்களை வெளியிடும் தன்மையினையும் உடல்

உறுப்புக்கள் பற்றிய புனைவுகளின் வழிப் புலனாகும் கருத்தியல்களையும் ஆய்வாளர் இவ்வியலில் விளக்கியுள்ளார்.

தாய், மகள், மனைவி, தோழி, சகோதரி முதலான பல தரப்பட்ட உறவுப் படிநிலை முறைகளில் தனிமனிதராகவோ குடும்ப உறவாகவோ சமூக நிலையிலோ இணைந்து வாழும் பெண்கள் பற்றி அவர் தம் உடல் உறுப்புக்கள் பற்றிய புனைவுகள் ஆண் கூற்றுக்கள் வழியாகவும் பெண் கூற்றுக்கள் வழியாகவும் பதிவாகியுள்ளமையினையும், அப்பதிவுகளின் வழிப்புலனாகும் கருத்தியல்களையும் இவ்வியலுள் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

### 0.8.4 குடும்ப உறவுப் புனைவும் கருத்தியலும்

குடும்பம் என்கிற நிறுவனம் ஆணும் பெண்ணும், கணவனும் மனைவியுமாகக் கூடி வாழ்வதாகும். இக்குடும்பம் கூட்டுக் குடும்பமாகவும், தனிக் குடும்பமாகவும் பிறந்த குடும்பமாகவும், புகுந்த குடும்பமாகவும், சுருங்கிய குடும்பமாகவும், விரிந்து பெருகிய குடும்பமாகவும் நாவலில் எவ்வாறு கதைப் பின்னலாகியுள்ளன என்பதை இவ்வியல் விவரிக்கிறது. மேலும், இந்தக் குடும்பம் என்கிற நிறுவனத்தில் உள்ள தந்தை, சகோதரன், கணவன், காதலன் என்ற உறவு நிலையிலுள்ளோர், தாய், மகள், மனைவி, சகோதரி, காதலி, தோழி எனும் உறவு நிலையிலுள்ளோரிடம் உறவில் ஒன்றித்து வாழ்கின்ற பொழுது, பெண்கள் பற்றிக் கூறும் கூற்றுக்கள் பற்றிய புனைவுகளை ஆண் கூற்றுப் பெண் புனைவுகள், பெண் கூற்றுப் பெண் புனைவுகள் என வகைப்படுத்தி விரிவாக விளக்கி, இப்புனைவுகள் புலப்படுத்தும் கருத்தியல்களை ஆய்வாளர் இவ்வியலுள் விளக்கியுள்ளார்.

### 0.8.5 பொருளுறவுப் புனைவும் கருத்தியலும்

மனிதர்கள் இன்பமாக வாழ்வதற்குப் பொருள் தேவை. அந்தப் பொருளை அறவழியில் ஈட்டுவதற்கு ஆணும் பெண்ணும் முயல்கின்ற பொழுது, குடும்ப நிலையிலும், பணித்தள நிலையிலும் உருவாகும் அல்லது உருவாக்கும் பொருளுறவு சார்ந்த வாழ்வியலில், பெண்கள் எங்ஙனம் புனைவு பெற்றுள்ளனர் என்பதனை 1) குடும்ப நிலையில் பொருள் சார்ந்த நெறி, 2) தொழில் நிலையில் பொருள் சார்ந்த நெறி, 3) கல்வி நிலையில் பொருள் சார்ந்த நெறி, 4) சமூக நிலையில் பொருள் சார்ந்த நெறி என நான்காகப் பாகுபடுத்தி விரிவாக ஆராய்ந்து விளக்குவதோடு, பொருளுறவு வாழ்நெறி எப்படிப் பெண்களை 'இரட்டைச் சிலுவை' சுமப்பவர்களாக அடிமைப்படுத்தியுள்ளது என்பதையும் இவை வழிப்புலனாகும் கருத்தியல்களையும் விரிவாக இவ்வியல் விளக்குகிறது.

### 0.8.6 பண்பாட்டுப் புனைவும் கருத்தியலும்

தமிழ்ப் பண்பாடு என்பது ஒவ்வொரு மக்களும் வாழ்வதற்கான தனித் தனி அடையாளம். மக்களிடம் காணப்படும் பண்புகளைக் கொண்டு பண்பாட்டை மதிப்பிட முடியும். பண்பாடு, தலைமுறை தலைமுறையாக மக்கள் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும் பழக்க வழக்கங்களும் மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே ஆகும். இப் பண்பாடு பற்றிய பல அறிஞர்களின் கருத்துக்களையும், பண்பாட்டின் தன்மையையும் ஆய்வாளர் இவ்வியலுள் விளக்கியுள்ளார்.

பண்பாட்டுப் புனைவும் கருத்தியலும் எனும் இவ்வியலைக் காதல் பற்றிய புனைவுகள், திருமணம் பற்றிய புனைவுகள், சாதி பற்றிய புனைவுகள், மதம் பற்றிய புனைவுகள், ஒழுக்கநெறி சார்ந்த புனைவுகள் என வகைப்படுத்தி விரிவாக விளக்கியுள்ளார்.

மேற்கூறிய வகைப்பாட்டிற்கேற்ப அரசு மணிமேகலையின் படைப்புக்களுள் பதிவு பெற்றுள்ள பெண்களின் புனைவுகளின் வழிப் புலனாகும் கருத்தியல்களையும் இவ்வியலில் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

## 0.9 ஆய்வு முடிவுரை

"அரசு மணிமேகலையின் படைப்புக்களில் பெண் புனைவுகளும், பெண்ணிய விடுதலையும்" என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்ட போது இயல் வாரியாகப் பகுத்து, தொகை வகைப்படுத்தி விளக்கம் பெற்றுள்ள கருத்துக்களைத் தொகுத்து, அவற்றில் இருந்து பெண் விடுதலை சார்ந்து பெறப்பட்ட கருத்துக்கள் முடிவுரை என்னும் இப்பகுதியில் இடம்பெறுகின்றன.

அரசு மணிமேகலையின் படைப்புக்களில் பெண் புனைவுகள் மூலம் வெளிப்படும் பெண்ணிய விடுதலை சார்ந்த கருத்தியல்கள், மரபு சார்ந்து வெளிப்பட்டுள்ளன. மரபு நிலையில் பெண் வாழ்வியலைப் பதிவு செய்துள்ள போதிலும் காலமாற்றத்திற்கேற்பச் சமூக, சமய, அரசியல், பொருளாதார, பண்பாட்டு மாற்றங்களுக்கேற்ப மாறி வரும் சீர்திருத்த நிகழ்வுகளைத் தம் நாவல்களுள் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார் என்ற முடிவை ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

## 0.10 துணை நூற்பட்டியல்

முதன்மை, துணைமை மற்றும் சார்பாதாரங்களாகத் துணை நின்று, தரவுகள் திரட்டி, ஆய்வறிக்கை எழுதத் துணைபுரிந்த நூல்களை முதன்மை மற்றும் துணைமை ஆதாரங்கள் என வகைப்படுத்தி, அகர வரிசைப்படுத்தித் துணைநூற்பட்டியல் எனும் இப்பகுதியில் பட்டியலிட்டுள்ளார்.

## 0.11 பின்னிணைப்புகள்

1) படைப்பாளியின் படைப்புப் பட்டியல்

2) உடல் உறுப்புகள் பற்றிய பட்டியல்

3) ஆண் பெண்ணைப் பற்றிக் கூறும் சொல்லாடல்கள்

4) இதழில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள்

ஆகியன பின்னிணைப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

# இயல் – 1

# பெண்ணியக் கருத்தாக்கங்களும் கொள்கைகளும்

## 1.0 முன்னுரை

உலகத்தில் உயிரினங்கள் பிறக்கின்றன; வளர்கின்றன; வாழ்கின்றன; இறக்கின்றன. ஆனால், மனித இனம் தவிர்த்த ஏனைய உயிரினங்களுக்கு வாழ்தல் பண்பு என்பது இல்லை. இருத்தல் பண்பு மட்டுமே உள்ளது. மனிதனுக்குத்தான் வாழ்தல் பண்புடன் இருத்தல் பண்பும் உண்டு. இப்பூவுலகில் அவன் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வருகின்றபோது மனிதன், மனிதனோடும், ஏனைய பிற உயிரினங்களோடும், செயற்கைப் பொருள்களோடும் இயற்கையோடும் கொள்ளக்கூடிய உறவுகளில் உருவான வாழ்வியல் முறையே சமூக உருவாக்கத்திற்கான அடிப்படையாக மாறுகின்றது. இந்தச் சமூக உருவாக்க அடிப்படையில் ஆண் ஆணுடனும், பெண் பெண்ணுடனும், ஆண் பெண்ணுடனும், பெண் ஆணுடனும் இணைந்து வாழக்கூடிய வாழ்வியல் தளம் உருவாகி உள்ளது. இத்தகைய வாழ்வியல் தளங்களில் உருவான பல்வேறு விதமான வாழ்வியல் கோட்பாடுகள் நாளும் வளர்ந்த வண்ணம் உள்ளன. இந்தப் பின்புலத்தில் 19–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து உலகளாவிய அளவில் மனித வாழ்வியல் குறித்த பல்வேறு விதமான கொள்கைகள் வெளிவரலாயின. அத்தகைய கொள்கைகளில் பெண்ணியக் கொள்கையும் முக்கியமான ஒன்றாகும்.

ஆண் – பெண் சார்ந்த வாழ்வியலை மையமிட்ட பெண் விடுதலைக் கருத்தியல்களை இவ்வியல் ஆய்கிறது. இவ்வியலில் பெண்ணியம் சார்ந்த கருத்தியல்கள் பின்வருமாறு வகைப்படுத்தி விவரிக்கப்படுகின்றன.

1) பெண்ணியப் பின்புலம்

2) பெண்ணிய வரலாறு

3) பெண்ணிய வரையறை

4) பெண்ணிய வகைகள்

5) பெண்ணியக் கொள்கைகள்

எனப் பகுத்து ஆய்வாளர் இவ்வியலில் விளக்கியுள்ளார்.

## 1.1 பெண்ணியப் பின்புலம்

மனிதகுலம் தொடக்கத்திலிருந்து இன்றுவரை பல்வேறு சமுதாய அமைப்புகளைத் தாண்டிக் கடந்து வந்துள்ளது. இன்றும் பல்வேறு மாற்றங்களோடு வளர்ந்து கொண்டிருக்கிறது. "தொடக்கக்காலச் சமுதாயத்தை 'ஆதிப் பொதுவுடமைச் சமுதாயம்' என்று அழைத்தனர். 'காட்டுமிராண்டிக் காலம்', 'வேட்டைக் காலம்', 'மன்னராட்சிக் காலம்', 'நிலக்கிழார்க் காலம்' இக்காலத்தை நிலவுடைமை என்று அழைத்தனர். பிறகு 'முதலாளியர் காலம்', 'சமதர்மர்களின் (சோசலிஸம்) காலம், என்று மாறிக் கொண்டே வளர்ந்த காலத்தை வெவ்வேறு பெயர்களில் வழங்கினர்."[1] என்று டாக்டர் சண்முகசுந்தரம் கூறுகிறார்.

இக்காலங்கள் இவ்வாறு அழைக்கப்பட்டதற்கு உற்பத்திக் களமும், சக்தியும், (Productive Field and Force) உற்பத்தி சாதனங்கள் (Productive Means), உற்பத்தி உறவுகள் (Productive Relations) போன்றவையும் அடிப்படைக் காரணிகளாக விளங்கின. இவைதான் சமூகச் செந்நெறிகளைத் தீர்மானிக்க உதவின. முதற் சமுதாய அமைப்பை ஆதிப் பொதுவுடமைச் சமுதாயம் என்றனர். இன்று நிலவுகின்ற குடும்பம், தனியுடைமைச் சொத்து, அரசு போன்ற நிறுவனங்கள் ஆதிப்பொதுவுடைமை அமைப்பில் இருந்திருக்க வாய்ப்பில்லை. "மக்கள் ஆண்

பெண் சேர்ந்து குழுக்களாக வாழ்ந்தனர். பெண்கள் உணவுப் பொருட்களாக கனிகள், கிழங்குகளைத் திரட்டிக் கொண்டு வந்தனர். இவை இயற்கை அவர்கட்கு எந்த முயற்சியுமின்றி அளித்தவை. கொண்டு வந்தவை அனைத்தும் பொதுவாக்கப்பட்டன. எல்லோர்க்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டன. மேலும், இயற்கையிலேயே பெண்களின் உடற்கூறுகள் குழந்தைகள் பெறுவதற்கும், பெற்ற குழந்தைகளைப் பேணி வளர்ப்பதற்கும் தக்கவாறிருந்தன. இப்பெறும் பேற்றை விளக்கும் வகையில் தான் இச் சமுதாயத்தினைத் ‘தாய்வழிச் சமுதாயம்’ (Matriarchial Society) என அழைத்தனர்.”[2]

மனிதன், கற்கள், நெருப்பு, இரும்பு, விலங்குகள், நிலங்கள் இவை போன்று பலவற்றை எவ்வாறெல்லாம் பயன்படுத்தலாம் என்ற உத்திகளைக் கற்று அறிந்தான். இயற்கையை முடிந்த வரை தன்கைவசம் கொண்டு வந்தான். இப்பொழுது குடும்பம் என்றதொரு நிறுவனம் தோன்றியது.

தான் உருவாக்கிய சொத்து, தனக்குப் பிறகு தன் குழந்தைகளுக்கு மட்டுமே போய்ச் சேர வேண்டுமென்று எண்ணினான். ஒரு பெண்ணோடு வாழத் தொடங்கினான். அப்பெண் வேறு ஆடவர்களோடு தொடர்பு கொள்ளக்கூடாது என்று எண்ணி குடும்ப அமைப்பை உருவாக்கினான். பிற ஆடவர்களைத் தன்னோடு வாழும் மனைவியான பெண் மனதாலும் நினைக்கக் கூடாது என்று எண்ணியபோது கற்புக் கோட்பாட்டை உருவாக்கினான். கற்புக் கோட்பாடு குடும்பத் தலைவியான பெண் மீது ஏற்றப்பட்டது. இதன் பிறகு தனியுடைமை என்ற புதிய கருத்தினைச் சமுதாயம் பின்பற்றியது. இப்படித்தான் சொத்து, தனியுடைமை, குடும்பம், கற்பு, வாரிசு என்ற அமைப்புகளெல்லாம் தோன்றின. இவ்வமைப்புகள் பெண்களின் உலவு வெளியைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டது. இப்பொழுது திருமணம், குழந்தை, குடும்பம் என்று சொல்லி, அவளின் எல்லை குடும்பம் என்ற நான்கு சுவர்

எல்லைக்குள் அடங்கிப் போனது. இதனால் பெண்களின் சமூக வெளி (Social Space) தொலைந்து வீடு என்று சுருங்கிப் போனது. தாய்வழிச் சமுதாய அமைப்பில் தலைமை நிலையிலிருந்த பெண், மெல்ல மெல்லச் சரிந்து, தந்தை வழிச் சமுதாய அமைப்பில் அடிமை நிலையை அடைந்தாள். உலக உயிரின வாழ்வு, மனித உயிரின வாழ்வு, குடும்ப வாழ்வு, சமூக உறவுகளில் ஆண் தலைமையேற்று, பெண் அடிமைப்படுத்தப்படுவதைப் பெண்ணியப் பின்புலத்தில் அறிய முடிகிறது.”[3]

ஆண் பெண் இணைந்த வாழ்வில், ஆண் தலைமைப்படுத்தப்படுகிறான். பெண் அடிமைப்படுத்தப்படுகிறாள். பெண்ணுக்கு வீடே உலகம் என்று மாற்றப்படுகிறது. தாய் வழிச் சமுதாய அமைப்பு முறையும், நில உடமைச் சமுதாய அமைப்பு முறையும் பெண்களின் வாழ்வியல் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தும் பின்புலங்களாக உள்ளன எனலாம்.

ஆதிப் பொதுவுடைமைச் சமுதாயத்தில் உணவுகள் அனைத்தும் பொதுவாக்கப்பட்டன. முதலில் தாய் வழிச் சமுதாய அமைப்புதான் சமூகத்தில் நிலவி வந்தாலும், பெண்களின் உடலியல் கூறுகள் ஆண்களுக்கு அடிமைப்படச் செய்தன. குடும்ப அமைப்பு உருவாக்கப்பட்டு ஆணுக்குப் பெண் உடமையாக்கப்பட்டாள். அதனால், அவள் மனத்தாலும் பிற ஆடவர்களை நினைக்கக் கூடாது என்று கருதினாள். ஆகையால் கற்புக் கோட்பாடு அவர்களுக்குத் திணிக்கப்பட்டது. பெண்கள் சொத்துரிமை இழந்து அடிமைப்படுத்தப்பட்டனர். ஆண்கள் சொத்துரிமை பெற்றுத் தலைமைப் பொறுப்பு வகித்தனர்.

இந்தப் பின்புலத்தில் பார்க்கின்ற பொழுது, பெண்ணடிமைத்தனம் என்பது உலக அளவில் தோன்றி வியாபித்திருக்கிறது. இந்தப் பெண்ணடிமைத்தனத்திற்கு எதிரான குரல்கள் ஆங்காங்கே முளைவிட ஆரம்பிக்கின்றன. பெண்ணடிமைத்

தனத்தைப் போக்குவது, ஆண் பெண் இணையாக வாழ்வது, ஆண்களுக்கான முழு உரிமையைப் போன்று பெண்களும் உரிமை பெறுவதற்கான குரல்கள் ஆங்காங்கே எழும்ப ஆரம்பிக்கின்றன.

இத்தகைய போராட்டக் குரல்களும், கோட்பாட்டுச் செயல்களும் உருவாக்கம் பெற்ற நிலைகளைப் பெண்ணிய வரலாறு என்ற தலைப்புகளில் காணலாம்.

## 1.2 பெண்ணிய வரலாறு

பல்வேறு விதமான பெண் அடிமைத்தன ஒழிப்பு குறித்த வரலாற்றுப் போக்கிலான பெண்ணிய வரலாறு குறித்த நிகழ்வுகளைப் பின்வருமாறு வகைப்படுத்திக் காணலாம்.

1) உலக நாடுகளில் பெண்ணியம்

2) இந்தியாவில் பெண்ணியம்

3) தமிழகத்தில் பெண்ணியம்

என மூவகையாகப் பகுத்துப் பின்வருமாறு காணலாம்.

### 1.2.1 உலக நாடுகளில் பெண்ணியம்

உலக நாடுகளில் பெண்ணியம் என்ற இயக்கம், கி.பி. 1400-இலிருந்து கி.பி. 1789 வரை மூன்று முக்கிய நிலைகளை அடைகிறது. முதலில் பெண்கள் தங்களை அவமதிக்கும் / துன்புறுத்தும் ஆண்களை எதிர்த்துப் போராட நினைத்தது ஆகும். இரண்டாவதாக, பாலியல் உறவை வெறும் உடற்கூறாகப் பார்க்காமல் நாகரீகமானதாகக் கருதும் நிலை ஆகும். மூன்றாவதாக ஆண்களின் குறுகிய மனப்பான்மையை எதிர்த்து, தாங்களும் ஆண்களுக்கு நிகரான தகுதியும், மதிப்பும் பெற வேண்டும் என்று கருதியது ஆகும்.

ஆண்களால் தாங்கள் துன்புறுத்தப்படுகிறோம். ஆகையால், அதை எதிர்த்து ஒரு புரட்சி உருவாக வேண்டும் என்று கருதியது முதல் காலக் கட்டம் ஆகும். பின் வந்த காலக்கட்டங்கள் அக்கருத்தைச் செயல்படுத்தி வெற்றி காண வைக்கிறது.

உலகம் முழுவதும் கல்வி என்பது ஆண்களுக்குரியதாக அதுவும், மேல்நிலையில் உள்ளவர்களின் உயர்குடிமக்களுக்குரிய பெறும் பேறுகளில் ஒன்றாகவே இருந்தது. ஐரோப்பாவில் பெண்கல்வி இருந்தது. ஆனால் அக்கல்வி மேட்டுக் குடிக்காரர்களின் அலங்கார அணிகளாகவே திகழ்ந்தன. அங்குக் குறைந்த அளவு கல்வி, குடும்பத்தை நிர்வகிப்பதற்குத் தேவையாயிருந்ததால் கொடுக்கப்பட்டது.

அமெரிக்காவில் எவாஞ்சலிக இயக்கம் (Evangelicalism) என்றோர் இயக்கம் செயல்பட்டுக் கொண்டிருந்தது. அவ்வியக்கம் சமூகச் சீர்திருத்தம் செய்வதில் ஈடுபட்டது. பெண்களுக்குக் கல்வி மிகத்தேவை என இவ்வியக்கம் கருதியது. அமெரிக்காவில் 1830-முதல், பெண் கல்விக்கெனத் தனிக்கல்வி நிறுவனங்கள் தொடங்கப்பட்டன.

இங்கிலாந்து தன் வியாபாரத் தேவையை நிறைவு செய்யக் காலனி நாடுகளைப் பிடிக்கத் தொடங்கியது. இங்கிலாந்தியர் வேலையின் பொருட்டுக் குடிபெயர்ந்தார்கள். இதனால், தனித்து வாழும் பெண்கள் தற்சார்புடன் வாழ அவர்களுக்குக் கல்வி தேவையான ஒன்றாயிற்று. இக்காலச் சூழலில் புரோட்டஸ்டண்டு என்ற கிறித்தவப் பிரிவின் உட்கிளையான எவாஞ்சலிகம், பிற மதத்தவரை எவாஞ்சலிக்கத்திற்கு மதமாற்றம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டது. இம்மதமாற்றச் செயலில் பெண்களும் ஈடுபட்டனர். 1798-முதல் 1828-

ஆம் ஆண்டுக்குள் மதமாற்றம் செய்யப்பட்டவர்களில் மூன்றில் இரண்டு பேர் பெண்கள். இதனால் பெண்கள் முழுநேரம் வேலை செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

ஆண்களின் மேற்பார்வையில் எவாஞ்சலிக இயக்கத்தினர், அகதிகள், ஆதரவற்றோர், குருடர், செவிடர், உடற்குறை, மனக்குறை உடையவர்களுக்கு நிதிதிரட்டி ஆதரவளித்தனர். வெளியுலக வாழ்வில் பங்கேற்கவும் குழுக்களை நிர்வகிக்கவும், சட்டதிட்டங்களை இயற்றவும் இவ்வியக்கம் பெண்களுக்கு வாய்ப்பளித்தது.

எவாஞ்சலிக இயக்கம் அமெரிக்காவில் விலைமாதரை நல் வழிப்படுத்தும் செயல்திட்டமொன்றில் ஈடுபட்டது. (Advocate of Moral Reform). ஒழுக்கச் சீர்திருத்தத்திற்கு ஆதரவு என்றொரு இதழ், முழுக்கமுழுக்கப் பெண்களால் மேற்கூறிய நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது.”[4]

ஒழுக்கக் கட்டுப்பாட்டில் ஆண்களுக்கு ஒரு நியதி, பெண்களுக்கு ஒரு நியதி என்பதை எவாஞ்சலிக இயக்கத்தினர் ஒத்துக்கொள்ளவில்லை. மாறாக, இதனைச் சாடினர். விலைமாதரோடு தொடர்பு கொண்ட ஆண்களும் தண்டிக்கப்பட வேண்டும் என்றனர். பெண்கள் வறுமையினால்தான் விலைமாதர்களாக ஆகிறார்கள். அதனால், வேலைவாய்ப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றனர். இவ்வியக்கத்தினர் குடிப்பழகத்திற்கு எதிராகவும் செயல்படலாயினர்.

புரோட்டஸ்டன்டின் மற்றொரு உட்கிளையினராகிய குவாக்கர்(Quakers)களும், குடிப்பழக்கம், விலைமாதர் ஒழிப்பு, அடிமை ஒழிப்பு போன்றவற்றில் ஆர்வம் காட்டினர். மேலும், தீவினைகளுக்குக் காரணமான தனிநபர்ச் சொத்துரிமையை அழிப்பதன் மூலம் சமூக சீர்திருத்தங்கள் நிறைவேறுமென்றனர். சொத்துரிமை அழிக்கப்படும் பொழுது, திருமணங்கள்

பொருளாதாரத்தால் உறுதி செய்யப்படாமல் அன்பின் வழியே நடக்கும் என்றனர். திருமணமும் குடும்பமும் அழிக்கப்பட வேண்டியதில்லை. அவை திருத்தப்பட வேண்டும் என்றனர்."[5]

உலகப் பெண்ணிய வரலாற்றில் இருபெரும் அலைகள் உண்டாயின. முதல் அலை 1830-இல் அமெரிக்காவில் தோன்றி ஐரோப்பாவிற்கு விரைவாகப் பரவியது. இதன் காரணமாகப் பெண்கள் ஓட்டுரிமை பெற்றனர். இரண்டாவது அலை 1960-களில் அமெரிக்காவில் தோன்றி உலகின் பல நாடுகளிலும் பரவத் தொடங்கியது. இது மிகப்பெரிய பண்பாட்டுப் பாதிப்பை ஏற்படுத்தியது. சூசன் ஆண்டனி (Susan B.Antony), அன்டாண்ட் ப்ரௌன் (Antoinette Brown), லூசி டோன் (Lucy stone) போன்ற பல பெண்கள் இணைந்து ஆண்களை எதிர்த்துப் பெண்களின் உரிமையை நிலைநாட்டினர்."[6]

1840-களில் உலக அடிமை ஒழிப்பு மாநாட்டில் பெண்கள் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இதனைப் பெண்ணுரிமைவாதிகள் தண்டித்து ஆண்-பெண் சமம் என்ற கருத்தை வெளியிட்டனர். வேறு பல மாநாட்டில் பெண்கள் கலந்து கொண்டு, ஆண்களுக்கு நிகரானவர்கள் தாங்கள் என்பதைக் காட்ட அவர்களைப் போன்று உடைகளை அணிந்து கொண்டு மாநாட்டுக்குச் சென்றனர். கணவனின் குடிப்பழக்கத்தால் தாங்கள் துன்புறுத்தப்படுவதை உலகிற்கு இனம் காட்டிட குடி ஒழிப்புக் குழுக்களைத் தோற்றுவித்தனர்."[7]

1848-இல் அமெரிக்காவில் நியூயார்க்கில் உள்ள செனகா பால்ஸ் (Seneca Falls) என்ற இடத்தில் நடந்த மாநாட்டை இரு பெண்கள் முன்னின்று நடத்தினர். அவர்கள் லூக்கிரியா மாட் (Lucretia Moti) எலிஸபெத் கேடி ஸ்டான்டன் (Elizabeth Cady Stanton) என்ற இரு பெண்மணிகளும் பெண்களுக்கான இயக்கம் ஒன்றை

முறையாகத் தொடங்கினர். மாநாட்டில் பெண்களுக்குச் சில சலுகைகள் வழங்க அரசாங்கத்தை வற்புறுத்துவது என்று முடிவு செய்து வெளியிட்டனர்.”[8]

அவை,

1. திருமணமான பெண்களுக்குச் சொத்தில் உரிமை

2. கல்வியில் பெண்களுக்கு அதிக வாயிப்பளித்தல்

3. தொழில் வணிகத்துறை மற்றும் வழிபடும் இடங்களில் (Church) பெண்களுக்கு வாய்ப்பளித்தல் - போன்றவையாகும்.

சுமார் 50 ஆண்டுகள் போராடியதன் விளைவாக, 1920-இல் 19-ஆவது சட்டத் திருத்தம் பெண்களுக்கு ஓட்டுரிமை அளித்தது. இது பெண்கள் போராட்டத்தின் முதல் வெற்றிப்படியாகும். இதுபோல் இங்கிலாந்துப் பெண்களும் ஓட்டுரிமையைப் பெற்றனர். ஆனால், பெண் உரிமை என்ற விளக்கு சரியாகத் தூண்டப்படாமல் இருந்தது.

1920-க்குப் பின் ஓட்டுரிமை கோரும் இயக்கங்கள் நான்கு குழுக்களாகப் பிரிந்து செயல்படத் தொடங்குகிறது.

முதல் குழு சமதர்மத்தைக் (Socialism) கடைபிடித்து, பெண் வாக்காளர்கள் குழு (The League of Women Voters) என்ற பெயரில் அக்குழு இயங்கியது.

இவ்வமைப்பு, பெண்களின் நலன், அரசியல் பங்கு, அதிக வேலை வாய்ப்பு, கல்வியில் அதிக வாய்ப்பு, கருச்சிதைவு உரிமை, குழந்தைப் பராமரிப்பு போன்றவற்றில் கவனம் செலுத்தியது. மேலும் விவாகரத்தைச் சட்டப் பூர்வமாக்கியது.

இரண்டாவது குழு அமைதி மற்றும், விடுதலைக்கான அகில உலகப் பெண்கள் குழு என்ற பெயரில் செயல்பட்டது. இவ்வமைப்பு பெண்கள், விடுதலையையும், சமாதானத்தையும் விரும்புவார்கள் என்று வலியுறுத்தி வந்தன.

மூன்றாவது குழு சிறு சிறு குழுக்களைத் தொடங்கிப் பெண்களுக்கான சமூக வேலை வாய்புக்களை வலியுறுத்தி வந்தன.

நான்காவது குழு, தீவிரவாத இயக்கமாக மாறியது. பெண்களிடம் சோஷலிச உணர்வு தோன்றியது. அதன் விளைவாக அவர்களிடம் தோற்ற மாற்றம், உடை மாற்றம், நவீன சிகை அலங்காரம், புகை பிடிக்கும் பழக்கம் போன்றவை ஏற்பட்டன.”[9]

1920 முதல் 1960 வரை தனிப்பட்ட பெண்களின் நலம் நாடும் அமெரிக்கப் பல்கலைக்கழகப் பெண்கள் சங்கம் (American Association of University Women) தேசிய கத்தோலிக்கப் பெண்கள் சங்கம் (National Council of Catholic Women) போன்ற அமைப்புகள் தான் இக்காலத்தில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தன.”[10]

அறுபதுகளில் பெண்ணியத்தின் இரண்டாவது அலை எழுச்சி பெற்றது. இக்காலக் கட்டத்தில் புதிய பெண்ணிய இயக்கத்தின் (New Feminist Movement) விளக்கங்களுடன் செயல்பாடுகளும் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தின. இதனால் பெண்கள் பலர் ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராட முன்வந்தனர்.

பாலியல் வேறுபாடு தகர்த்தெறியப்பட்டது. வேலைவாய்ப்பு விளம்பரங்களில் ஆண்-பெண் என்று தனிப்பட்டு குறிப்பிடுவது தடை செய்யப்பட்டது. 1930-களில் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டதால் அதைச் சீர் செய்ய மணமான பெண்களை, நீக்கிவிட்டு, ஆண்களை வேலைக்கு அமர்த்தியது முதலானவற்றை எதிர்த்து இவ்வியக்கம் தீவிரமாகப் போராடியது.

1968-இல் தீவிரவாதப் பெண் இயக்கம், மிஸ் அமெரிக்கா என்ற அழகிப் போட்டி நடத்துவதற்கு மிகப்பெரிய எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டத்தில் ஈடுபட்டது.

1970-களில் பெண்கள் சம ஊதியம், சம வேலைவாய்ப்பு, கருச்சிதைவு உரிமை பெற்றனர். பெண்ணியக் கருத்தை எதிரொலிக்கப் பல பத்திரிகைகள் தோன்றலாயின. பர்மிங்ஹாம் போஸ்ட் (Birmingham Post), தி டைம்ஸ் (The Times), தி கார்டியன் (The Guardian) போன்ற பத்திரிகைகள் மகளிர் பக்கத்தில் பெண்களைத் தாக்கி எழுதும் கட்டுரைகளை வெளியிட்டனர். இவைகளை எதிர்த்துக் கலகக் குரல்கள் தீவிரமடைந்தன.

மார்க்சியக் கொள்கைகளைத் தழுவி 1970-இல் சமதர்மப் பெண்கள் (Socialist Women) என்ற பத்திரிகை வெளிவந்தது. உழைப்பாளி வர்க்கத்தை இவ்விதழ் ஆராய்ந்தது. பெண் விடுதலையை முதல் செய்தியாக்கும் நோக்குடன் 1972-இல் ஸ்பேர் ரிப் (Spare Rip) என்ற இதழ் தொடங்கப்பட்டது. 1970 மத்தியில் பெண்ணியக் குழுக்கள் குடும்ப வன்முறை, பாலியல் வன்முறை, ஆபாச இலக்கியம் போன்றவற்றிற்கு எதிரான நடவடிக்கைககளில் ஈடுபடலாயின. பாலியல் வன்முறை ஆபாசத் திரைப்படம் இவற்றிற்கு எதிராக இரவு நேர ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்தினர்.

1979-இல் வயர்ஸ் செய்தி மடலில் (Wires New Letter) லீட்ஸ் புரட்சிப் பெண்ணியவாதிகளின் (Leeds REveluationay Feministy) அரசியலில் பெண் ஒரு பாலியல் சேர்க்கையிடம் இருபால் சேர்கைகையை எதிர்த்த வாதம் என்ற கட்டுரையில், பெண்ணியவாதிகள் கட்டாயமாக ஆண்களோடு உறவு வைத்துக் கொள்ளக் கூடாது. ஆனால் கட்டாயம் தன் பாலினத்தோடு உறவு வைத்துக் கொள்ள

வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை என்று விளக்கியுள்ளனர். ஆண் வழிச் சமூக அமைப்புக்கு எதிராகப் போராட வேண்டுமானால் பாலியல் நெறியில் ஆண்களோடு உறவு வைத்துக்கொள்ளமை ஒன்றே வழியாகும் என்று பிரகடனப்படுத்தினர்.

1980-களில் பெண்களுக்கான பலவிதச் சமூக அமைப்புகள் தோற்றம் பெற்றன. இக்காலக்கட்டத்தில் இருபால் சேர்க்கைப் பெண்ணியம் ஆணின் மேலாதிக்கத்தை ஆதரிப்பது என்றும், இவ்வகைப் பெண்ணியாவாதிகள் பகைவருடன் உறவு வைத்துக் கொண்டவர்களாவர் என்ற கருத்து மேலோங்கி இருந்தது. பெண்கள் வீட்டில் வேலைபார்ப்பது ஊதியமில்லா உழைப்பாகக் கருதப்பட்டது. மனித உரிமைப் பாதுகாப்பு, பொருளாதார உத்திரவாதம் என்பன போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.”[11]

### 1.2.2 இந்தியாவில் பெண்ணியம்

18-ஆம் நூற்றாண்டில் மேலை நாட்டில் ஏற்பட்ட புதிய சிந்தனையும், கோட்பாடும், இந்தியாவில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தியாவில் நிலவி வந்த குழந்தை மணம், விதவையர் நிலை, விதவையர் திருமண மறுப்பு, பெண் கல்வி மறுப்பு, பலதார மணம், முதலானவைகளை ஐரோப்பிய அறிஞர்களும், கிறித்தவர் நிறுவனங்களும் கண்டனம் செய்தன.

அதனால், இந்தியப் பெண்களின் உண்மை நிலையை உணர்ந்த சீர்திருத்தவாதிகளுள் முன்னோடியான ராஜாராம் மோகன்ராய் 1828-இல் பிரம்ம சமாஜத்தைத் தோற்றுவித்து, சதி என்னும் உடன்கட்டைக்கு எதிராகப் போராடி வெற்றியைப் பெற்றுத் தந்தார். மேலும், அவர் போராட்டத்தில் பலதார மண எதிர்ப்பு, பெண் கல்வி, பெண்ணுக்குச் சொத்துரிமை ஆகியனவும் முக்கிய இடம் பெற்றன.

1850-இல் ஈஸ்வர சந்திர வித்யாசாகர், தேவேந்திரநாத தாகூரும் ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்து, விதவை மறுமணத்திற்காகப் போராடி வெற்றி கண்டனர்.

பிரம்ம சமாஜத் தலைவரும், சீர்திருத்தவாதியுமான கேசவ சந்திரசென் குழந்தைத் திருமணத்திற்கு எதிராகப் போராடி வெற்றி கண்டார். இவரின் முயற்சியினால் குழந்தை மணத் தடைச் சட்டம் இயற்றப்பட்டது. குழந்தை மணம் நமது பண்பாட்டிற்கும், வேதங்களுக்கும் எதிரானது என்பதை உணர்த்தி மக்களைத் திருத்தினார்.

மேலைநாட்டுப் பெண்ணியத்திற்கு என்று தனித்த வரலாறு உண்டு. ஆனால் இந்தியப் பெண்ணிய வரலாற்றை விடுதலைப் போராட்ட வரலாற்றோடுதான் ஒப்பிட்டு பார்க்க வேண்டும்.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் பெண்களுக்குத் தனியுரிமை என்பது ஒரு புதிய கருத்தாக்கம் ஆகும். இந்தியப் பெண்ணிய வரலாற்றை,

1. விடுதலைக்கு முன்

2. விடுதலைக்குப் பின்

என இரு காலக் கட்டங்களாகப் பகுத்துப் பார்க்க வேண்டும். மேலும் இதனை, வரலாற்றுப் போக்கில் மூன்று காலக்கட்டங்களாகப் பிரித்து விளக்கியுள்ளார்.

1. தாய் தலைமையேற்று பெண்கள் ஆதிக்கம் புரிந்த காலம், 2. வட இந்தியாவில் வேதகாலம், 3. பெண்ணடிமை தோன்றி பெண்கள் உரிமை இழந்த காலம், 4. பெண்கள் எழுச்சி பெற்று தேசிய விழிப்புணர்வு தோன்றிய காலம் எனப் பகுக்கலாம்.

### 1.2.2.1 தாய் தலைமை வகித்த தாய்வழிச் சமுதாயம்

இங்கு ஆண் பெண் வேறுபாடில்லை. கிடைத்த உணவுப் பொருட்கள் அனைத்தும் எல்லோருக்குமாகப் பகிர்வு செய்யப்பட்டன. போர், வேட்டையாடல், உணவு சேகரித்தல், பங்கிடுதல் போன்றவற்றைப் பெண்களே செய்தனர்.

தாய் ஆட்சி செய்த காலமே தொடக்கக் காலம் என உலகின் பல நாகரிகங்களையும் சமய உணர்வுகளையும் ஆராய்ந்த அறிஞர்கள் கூறியுள்ளனர். எகிப்து, சுமேனியா, பாபிலோனியா, சீனா, இந்தியா ஆகிய பழங்கால நாகரிகங்களில் பெண் பெற்றிருந்த ஏற்றம், தலைமை, உரிமை ஆகியவை பற்றிப் பலர் ஆராய்ந்து தெளிவுப்படுத்தியுள்ளார்கள்.

இத்தகு தாய்த்தலைமை பின்பு மாறியது ஏன்? கீழ்க்கண்ட காரணங்களை முன் வைக்கலாம்.

அ) சொத்துரிமை, பெண்களின் கைகளிலிருந்து ஆண்களுக்கு மாறியதே. பெண்களின் அடிமை வாழ்விற்கு அடிப்படைக் காரம்.

ஆ) ஆண்கள், தான் தலைமை ஏற்க, சொத்துரிமை தனக்கு வர, பெண்ணிடம் காம இன்பம் துய்த்து மகிழ, பெண் தனக்கு வாரிசுகளை உருவாக்கிக் கொடுக்க கற்புக் கோட்பாட்டை உருவாக்கிக் கொண்டான். பெண்களுக்குப் பத்தினித் தர்மம் என்ற புனிதச் சொல்லாடலைக் கொண்டு போர்த்தினர்.

பலதாரமணம், உடன்கட்டை ஏறல், மனைவியைப் பிறர்க்குப் பணயம் வைத்தல், குழந்தை மணம், கைம்பெண் கோலம் கொள்ளச் செய்தல், பரத்தமைத் தொழிலை மேற்கொள்ளச் செய்தல் போன்ற கொடுமைகளைப் பெண்களுக்குரிய நியமமாக்கினர்.”[13]

## 1.2.2.2 வேதகாலம்

இனி இரண்டாம் காலக் கட்டமான வேதகாலப் பெண்களின் நிலையைக் காணலாம். வேதத்திற்குரிய காலம் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு வரை எனக் கொள்ளலாம். இக்காலத்தில் பெண் குழந்தைகள் வரவேற்கப்படவில்லை. ஆனாலும் பெண் குழந்தைகள் பரிவோடு வளர்க்கப்பட்டனர். காதல் மணம் வெறுக்கப்படவில்லை. பலதார மணமுறை இருந்தது. இருந்தாலும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற முறை வரவேற்கப்பட்டது. விதவைப் பெண்களுக்குக் கூட்டுப்பாடுகள் மிகுதியில்லை. அவர்கள் மறுமணம் செய்து கொள்ளும் முறையும் காணப்பட்டது. வேதகாலப் பெண்களுக்குப் பூணூல் அணியும் சடங்கும் செய்யப்பட்டது. கல்வி கற்ற பெண்கள் பிரம்மவாதினி என்று அழைக்கப்பட்டனர்.”[14]

### 2.2.3 பெண்ணடிமைக்காலம்

கௌதமரின் தர்மசாஸ்திரம் முதல் சட்டப் புத்தகமாகும். அதில் இந்துக்களின் சட்டத்தை உருவாக்கித் தந்தார். இவர் சட்டப்படி திருமணம் என்பது ஒரு ஒப்பந்தம். இவ்வகைத் திருமணத்தில் நான்கு தலைமுறைகள் தாய்வழிமுறை சம்பந்தப்படாமல் இருக்க வேண்டும். ஒரே சாதியில் பெண் எடுக்க வேண்டும். அப்பெண் இளமையுடையவளாக இருக்க வேண்டும். கற்பு வலியுறுத்தப்பட்டது. பெண் தன்னிச்சையாகச் செயல்பட இயலாது.

கௌதமர் காலத்தில் ‘நியோகம்’ (Niyogam) தடைசெய்யப்பட்டது. நியோகம் என்பது கணவவனல்லாத அந்நிய ஆடவனுடன் இணைந்து குழந்தை பெற்றுக் கொள்வதாகும். ஆனால், கணவன் இறந்தபின் அப்பெண் விரும்பினால் கணவனின் உடன் பிறந்தவனுடன் இணைந்து குழந்தை பெற்றுக் கொள்ள உரிமை இருந்தது. விதவை மறுமணமும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

புத்தயானா இவரும் ஒரு சட்ட வல்லுநர். பெண் சுதந்திரமாக இயங்க இயலாதவள் என்று கூறியவர். ஒருதார முறையை ஆதரித்தவர். ஆண் குழந்தைகள் மதித்துப் போற்றப்பட்டனர். ஒரு கணவன் ஆண் குழந்தை பெறுவதற்காக பெண் குழந்தையை மட்டும் பெற்றெடுத்த மனைவியை விட்டுவிட்டு வேறு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற நிலை இருந்தது. விதவையர் வெறுந்தரையில் படுத்துறங்க வேண்டும். இவ்வாறாக ஒரு வருடம் வாழ்ந்தபிறகு அவள் விரும்பினால் மறுமணம் செய்துகொள்ளலாம். மேலும் பெண்களுக்குச் சொத்துரிமை மறுக்கப்பட்டது.

அபஸ்தபேர் இவர் ஒரு சட்ட வல்லுநர். மறுமணம் மற்றும் கலப்பு மணத்தைக் கடுமையாக மறுத்துள்ளார். மனைவி என்பவள் கணவனுக்கு ஒரு அலங்காரப் பொருள் என்று கூறி பெண்ணடிமைத்தனத்திற்கும் ஆண் மேலாதிக்கத்திற்கும் வழிகாட்டியுள்ளார்.

வசி டர் ஒரு சட்ட வல்லுநர் பெண்ணுக்கு ஆடவனே முதலாளி ஆவான் என்கிறார். பிராமணர்களும், சத்திரியர்களும் பலதார மணம் செய்து கொள்ளலாம் என்கிறார்.

கௌடில்யர் ஒரு சட்ட வல்லுனர் ஆவார். இவர் கூறிய சட்டங்களும் பெண்ணடிமைக்குக் காரணமாயின. பெண்ணைப் பெற்றவர்கள் ஆணிடம் பணத்தை பெற்றுக் கொண்டு, பெண்ணை விற்றதை அறிய முடிகிறது. இவர் விதவை மறுமணத்தை ஆதரித்தாலும் முதல் உரிமை மாமனார்க்கே உண்டு என்கிறார். பெண்ணுக்குச் சொத்தில் உரிமை இல்லை என்கிறார்.

மனுஸ்மிருதி ஒருவரால் எழுதப்பட்ட சட்டநூல்; நான்கு நூற்றாண்டுகளாகப் பலரால் எழுதி தொகுக்கப்பட்டது என்ற கருத்துடன் நிலவுகிறது. சாதிக்

கட்டுப்பாடுகள் சொல்லப்பட்டுள்ளன. விதவைத் திருமணம் எதிர்க்கப்பட்டது. இறந்த கணவன் சொர்க்கம் செல்ல, இவள் கைம்மை நோன்பு நோற்க வேண்டும் என்று கூறுகிறது. பெண்ணின் திருமண வயது ஏழு என்றும் கூறுகிறது. மனைவி கணவனைக் கடவுளாக நினைத்துப் போற்ற வேண்டும். பெண்ணாகப் பிறந்தவள் எந்நிலையிலும் ஆணுக்கு அடிமையே என்று மோசமான விதியைக் கொண்டு வந்தவர். ஆணுக்கு ஓர் நீதி, பெண்ணுக்கு ஓர் நீதி என்று கூறி பெண்ணடிமைத் தனத்தை ஆதரித்தார்.

### 1.2.2.4 பெண்கள் எழுச்சிக்காலம்

பெண் விடுதலைக்கான முதல் போராட்டமாக 18-ஆம் நூற்றாண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற ‘தோள்சீலைக் கலகம்’ கருதப்படுகிறது. மீட் பாதிரியார் தலைமையில் கூலி இல்லாமல் வேலை செய்வதை எதிர்த்தும், மேலாடை அணிவதைத் தடைசெய்வதை எதிர்த்தும் பெண்கள் போராடி அவ்வுரிமையைப் பெற்றனர்.

இப்படிப்பட்டச் சூழலில் கிறித்தவ மத எழுச்சி, இந்துக்களிடையே தங்கள் மதத்தைக் காக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

அதனால், இந்து சமயவாதிகள் சமூகச் சீர்திருத்தத்திலும் அக்கறை காட்டினர். குறிப்பாக, பெண்கள் மேம்பாட்டிற்காகப் பாடுபடத் தொடங்கினர். குழந்தை மணம், சாதி, பர்தாமுறை, தேவதாசி முறை போன்றவற்றை ஒழிப்பதை முன்னிறுத்திப் பாடுபட்டனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர், இந்தியச் சீர்திருத்தவாதிகளுள் முதன்மையானவரான வங்காளத்தைச் சேர்ந்த ராஜாராம் மோகன்ராய் ஆவார். பிரம்மசமாஜம் என்ற ஒன்றை ஏற்படுத்தி, இந்து மத மூடப்பழக்க வழக்கங்களைக் கண்டித்தார். இவ்வமைப்பு எல்லா மதங்களும் உயர்வானவை, ஒரே கடவுள்

கொள்கை, பெண்களுக்குச் சுதந்திரம், சம உரிமை, விதவா விவாகம் ஆகியவற்றைச் சீர்திருத்தக் கொள்கைகளாகக் கொண்டு செயல்பட்டது.

தன் தமையன் இறந்த பிறகு, தமையனின் மனைவியைத் தீக்குளிக்கச் செய்த காட்சியைக் கண்டு வருந்தி, சதியை ஒழிக்க உறுதி பூண்டார். பெண் கல்வியை ஆதரிக்கும் விதமாக விக்டோரியா பெண்கள் பள்ளியைத் தொடங்கினார்.

சுவாமி தயானந்த சரஸ்வதி ஆர்ய சமாஜம் என்ற அமைப்பைத் தோற்றுவித்து பெண் விழிப்புணர்வை உருவாக்கும் செயல்களில் ஈடுபட்டார்.

கோபால கிரு ண கோகலே பெண் கல்விக்காகப் பாடுபட்டார். ராமகிரு ண பரம்ஹம்சர், விவேகானந்தர் தம் போதனைகளால் பெண்கள் பற்றிய உயர்மதிப்பை மக்களிடம் ஏற்படுத்தினர். சீர்திருத்த இயக்கங்கள் சீர்திருத்தவாதிகள் முயன்று செய்ததை காந்திஜி சில ஆண்டுகளில் செய்து விட்டார்.

> **“1880–இல் பெண் அமைப்புகள் தோற்றம் பெற்றன. பெண் கல்வி, ஆதரவற்ற பெண்களுக்கு அடைக்கலம் தருதல் போன்ற பணிகளை இவ்வமைப்பு மேற்கொண்டன.”[17] என்கிறார் முனைவர் சு.சண்முக சுந்தரம்.**

## 1.2.3 தமிழகத்தில் பெண்ணியம்

ஆபாசச் சுவரொட்டிகளை எதிர்த்துப் போராடச் சென்னையில் 1977–ல் தோன்றிய பெண்ணுரிமை இயக்கம்; வரதட்சணைக் கொலை, குடிசை வாழ் மகளிர் அடிப்படை வசதிக்காகப் போராடும் நிலையிலும், அவர்களுக்குப் பயிற்சி முகாம்கள் நடத்தும் நிலைக்கும் தன்னை விரிவாக்கிக் கொண்டது.

தமிழகத்தைச் சேர்ந்த வை.மு.கோதை நாயகி அம்மாள், அந்நியத் துணிக்கடை மறியலில் சிறை சென்ற எஸ்.அம்புஜம்மாள், ஜானம்மாள், கள்ளுக்கடை

மறியலில் ஈடுபட்ட ஈ.வெ.ரா., நாகம்மை, கண்ணம்மாள், உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற ருக்மணி லட்சுமிபதி, தேச பக்தர்களுக்கு யாரும் வீடு வாடகைக்குத் தரக்கூடாது என்று தடை விதிக்கப்பட்ட போது காவல் கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்திலேயே அடுப்பை வைத்துச் சமையல் செய்த அஞ்சலையம்மாள் சரஸ்வதி பாண்டுரங்கன், அம்மு சுவாமிநாதன், லலிதா பிரபு, லட்சுமி சங்கர ஐயர், சுப்பம்மாள், குட்டியம்மாள், ஜி.விசாலாட்சி, துர்க்காபாய் போன்றவர்கள் காந்தி வழிச் சுதந்திர போராட்டங்களில் ஈடுபட்டதோடு, பெண் விழிப்புணர்வுக்கு எழுச்சியாகத் திகழ்ந்த முக்கியப் பெண்கள் ஆவர்.”[17]

தமிழில் பெண் விடுதலை பெறப் பேசியவர்களுள் பெரியார் மிகவும் குறிப்பிடத்தக்கவராவார். பெண்கள் சுதந்திரமாக வளர்க்கப்பட வேண்டும், தனக்கான வாழ்க்கைத் துணையைப் பெண்ணே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். தாலி, மஞ்சள், குங்குமம் போன்ற மூடப்பழக்கங்களை ஒதுக்கிவிட்டு, பிடித்த நல்ல வேலைக்குச் சென்று, தன் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் கல்வி பயில வேண்டும்; இருவரும் ஒரே பாடசாலையில் பயில வேண்டும், கற்பைக் காப்பாற்றப் பெண்கள் அடிமை வாழ்வு வாழ வேண்டியதில்லை என்று கூறிப் பெண் விடுதலைக்கு வித்திட்டமையை அறியலாம்.

விதவைத் திருமணத்தை ஆதரித்ததோடு மட்டுமல்லாது, தான் பேசும் மேடையிலே திருமணமும் செய்து வைத்தார். பெண்கள் கர்ப்பத்தடையைப் பயன்படுத்திப் பிள்ளைப் பெறுவதையே அடியோடு நிறுத்திவிட வேண்டும் என்ற பெரியாரின் கருத்தை இன்றளவும் யாரும் பேசத் துணிவில்லாதவர்களாக இருப்பதைக் காணமுடிகிறது.”[18]

காந்தியடிகள், பெண்களுக்கு அரசியல் அறிவை ஊட்டி, வெளிஉலகிற்குக் கொண்டு வந்தார். கணவன் மோசமானவாக இருக்கும்போது மட்டும் குடும்பத்தைத் துறந்து வெளியே வரலாம். மற்றபடி குடும்பம் பெண்ணுக்குப் பாதுகாப்பானது; அதைக்கட்டிக் காப்பதில் அவளுக்கு முக்கியப் பங்கு உண்டு என்பதைத் தெளிவுப்படுத்தினார்.

தமிழகத்தில் நிலவுடைமைக் காலத்திலிருந்து உச்சநிலையிலிருந்த பெண்ணடிமைத்தனத்தினைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

- ❖ திருமணத்திற்குப் பெண்கள் ஒப்புதல் பெறாமை
- ❖ பெண் குழந்தை பிறந்தால் கள்ளிப்பால் கொடுத்தல்
- ❖ பெண்களைத் தனிமைப்படுத்துதல்
- ❖ விதவைக்கு மறுமணம் மறுப்பு
- ❖ இளமைத் திருமணம்
- ❖ பெண்களுக்கு மணம் புரிய வரதட்சணை கொடுத்தல்
- ❖ தேவதாசி, பொட்டுக் கட்டி விடும்முறைமை
- ❖ சமய தத்துவ நோக்கில் பெண்களை வெறுத்து ஒதுக்கிடுதல்
- ❖ திருமணக் காரணம் காட்டிக் கல்வி மறுப்பு
- ❖ அறியாமை, மூடத்தனத்தில் ஆழப்படுத்துதல்
- ❖ ஆண்கள் பலதார மணம் புரிதல்
- ❖ உடலடிப்படையில் தோன்றும் நோய்களுக்குப் பெண்ணே காரணம் எனல்
- ❖ பெண்களை உடன் கட்டை ஏற்றுதல்

❖ பெண் ஆணைச் சார்ந்தே வாழவேண்டுமெனக் கட்டாயப்படுத்துதல்

முதலானவைகள் வழித் தமிழகத்தில் தொடக்கக் காலத்தில் இருந்தே பெண் உரிமை, பெண் விடுதலை என்பவை மறுக்கப்பட்டிருந்தமையை அரசியல் பொருளாதார, சமூக பண்பாட்டு வரலாறுகள் வழிக் காண முடிகிறது.

ஆங்கிலேயர் வருகையினால் அறிவியல் போக்குகள், இந்தியாவிலும், தமிழகத்திலும் நுழைந்தன. சாலை, ரயில் போக்குவரத்துகள், ஆங்கிலக் கல்வி, அதனால் உண்டான. மத்தியதர வர்க்கம், வேலை வாய்ப்பு, எழுத்து வாசிப்பு போன்றவை நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும், சமூக மாறுதல்களைத் தோற்றுவித்தன.

விடுதலைப் போராட்டக் காலக் கட்டத்திலும், விடுதலைக்குப் பிந்தைய காலக் கட்டத்திலும் உண்டான சமுதாய, அரசியல், பொருளாதார, மதமாற்றப் பின்புலத்தில, பெண் அடிமைத்தனத்திற்கெதிரான கலகக் குரல்கள், பெண் விழிப்புணர்ச்சிச் செயல்பாடுகள், பெண் கல்வி முக்கியத்துவம் முதலானவைகள் மூலம் பெண்ணுரிமை அமைப்புக்களும் இயக்கங்களும் தமிழகத்தில வலுப்பெறலாயின. கோட்பாட்டளவிலும் செயலளவிலும் பெண்ணுரிமைக் கருத்துக்கள் வலுப்பெற்று வளர்ச்சி பெறலாயின. முதலாளித்துவ சமூக அமைப்பில் பெண்ணுரிமைக் குரல்கள் பல வடிவங்களில் பல்வேறு தளங்களில் வெளிப்படலாயின.

## 1.3 பெண்ணிய வரையறை

பெண்ணுரிமைக்காகக் கருத்தாக்க நிலையிலும் செயல் தளங்களிலும் குரலெழுப்பியவர்கள் பெண்ணியம் குறித்த வரையறைகளைக் கொள்கைகளாக வெளிப்படுத்தலாயினர். இவர் தம் பெண்ணியம் குறித்த வரையறைகளை இனிக் காண்போம்.

உலகின் அனைத்து நிகழ்வுகளையும், இரட்டைகளாகவும், எதிரெதிராகவும் இருப்பதை அமைப்பியல் வாதிகளில் ஒரு பிரிவினர் கண்டனர். இவ்வாறு தாம் கண்டு அறிந்தவற்றுக்கு எதிரிணை (Building Oppositim) எனவும் பெயரிட்டனர்.

நன்மை x தீமை, பகல் x இரவு, கடவுள் x சாத்தான், சூரியன் x சந்திரன், ஆண் x பெண் என எதிரிணைகளாகக் கொண்டனர்.

> **இவற்றில் பல இயற்கையிலேயே எதிரிணைகளாக உள்ளன. சில செயற்கையாகப் பகுப்பட்டன. குறிப்பாக ஆண்– பெண் என்ற எதிரிணை செயற்கையாக அமைக்கப்பட்டது. அதுவும் ஆண்களால் ஏற்படுத்தப்பட்டது. ஆணுக்கு பெண் சளைத்தவர்களில்லை. சரிநிகர் சமானம் என்றபடி பெண் என்பவள் ஆணுக்கு நிகரானவள்தான் என்று இரா. பிரேமா 'பெண்ணியம்' என்ற தன் நூலில் கூறுகிறார்.**"[19]

பெண்ணியம் என்பது உலகளாவியது. இஃது உலகிலுள்ள அனைத்து மனிதகுலத்துள்ளும் ஒவ்வொரு காலகட்டத்திலும் பெண்களின் முன்னேற்றத்தை விமர்சிக்க ஏற்பட்டதாகும். "Feminisam என்ற ஆங்கிலச் சொல், தமிழில் பெண்ணியம் என்ற மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. Feminsm என்ற ஆங்கிலச் சொல்லின் மூலம் இலத்தீன் சொல்லான Femina என்பதாகும். இந்த இலத்தீன் சொல்லுக்குரிய பொருளாகப் பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ளன எனக் கொள்ளலாம். தொடக்கத்தில் Feminism என்ற சொல் பெண்களில் பாலியல் குணாதிசயங்களைக் குறிப்பிட வழங்கியது. பின்பு பெண்களின் உரிமைகளை உள்ளடக்கிய அர்த்தமுள்ளதாக மாறியது. Feminism என்பது முதலில் Womanism என்றிருந்தது. 1890–ஆம் ஆண்டில்தான் Womanisam தளத்தை Feminism இடப்பெயர்ச்சி செய்தது."[20]

'பெமினிசம்' என்ற சொல்லுக்குத் தன் வாழ்வின் வழியாக அர்த்தம் தந்தவர் ரோஸ்ரேசே என்பவராவர். ரோஸ்ரேசே, தீவிரப் பெண்ணியத்தின் செயற்பாட்டாளர் என்று கூறலாம். பெண்ணியம் என்ற சொல்லுக்குத் தரப்பட்ட வரையறைகளையும், விளக்கங்களையும் ஆய்வாளர் ஈண்டுத் தருகிறார்.

**"பெண்களின் தேவையை நிறைவேற்ற, அவர்கள் சார்பாக வாதாடுவது, போராடுவது என ஆக்ஸ்போர்டு அகராதி வரையறுக்கிறது"**[21]

**"பெண் உரிமைக் கோட்பாடு, பெண் உரிமை ஆதரவு**

என்னும் பொருளை சென்னைப் பல்கலைக் கழக ஆங்கிலத் தமிழகராதி முன் வைக்கிறது."[22]

தெற்காசியாவில் நடந்த பெண்கள் மாநாட்டில் பல்வேறு விளக்கங்கள் விவாதிக்கப்பட்டு, முடிவில் பெண்ணியம் என்ற சொல்லை வரையறை செய்தனர். இதனை முத்துச்சிதம்பரம் தன் நூலான பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும் என்ற நூலில் எடுத்தாண்டுள்ளார்.

**"பெண்கள் சமூகத்திலும் அலுவலகங்களிலும் வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும், அந்நிலையை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படும் முயற்சிகளும் பெண்ணியம் ஆகும் என்று முத்துச்சிதம்பரம் கூறுகிறார்."**[23]

**"சமூகத்திலும், வேலைத் தளத்திலும், குடும்பத்திலும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகள் இந்நிலைகளை மாற்றுவதற்குப் பெண்களும், ஆண்களும் எடுக்கும் உணர்வுபூர்வ நடவடிக்கைகள் ஆகிய இவற்றைப் பெண்ணியத்தின் பரந்துபட்ட வரையறையாகக் கொள்ளலாம் என தேவதத்தா கூறுகிறார்."**[24]

‘‘காலங் காலமாகத் தொடர்ந்து வரும் பெண்ணியத்தின் பிரச்சனைகட்குத் தீர்வு காண்பதோடு சமுதாயச் சமத்துவத்தை ஏற்படுத்துவது பெண்ணியம் என சு.ருக்மணி கூறுகிறார்.’’[25]

‘‘பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளைப் பெண்ணியம் என கார்டன் கூறுகிறார்.’’[26]

‘‘பெண்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஒரு ஆற்றலை உருவாக்கி, பெண்மை, அதன் தன்மையில் ஆண்களோடு மாறுபட்டிருப்பினும் இது ஆண்மைக்கு நிகரானது என்பதை ஏற்றுக்கொள்ள வைப்பதே பெண்ணியம் என ஜெயின் விளக்கம் தருகிறார்.’’[27]

‘‘பெண்ணியம் என்பது பெண்கள் பாலினப் பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம் ஆகும் என்று புட்சர்ட் விளக்கம் தருகிறார்.’’[28]

‘‘பெண் ஆணுக்குக் கீழாகத்தான் மதிக்கப்படுகிறாள். வேலைத்தளத்திலும், சமூகத்தில் பிற நிலையிலும் ஆணின் தாக்குதலுக்கும், கேவலபடுத்துதலுக்கும் ஆளிகின்ற நிலையினை எதிர்த்து ஒலிக்கின்றகுரலேப் பெண்ணியம் என குணசேகரன் கூறுகிறார்.’’[29]

இரா. ரெங்கம்மாள், சி. வாசுகி இருவரும் கூட்டாக எழுதியுள்ள நூல் ‘பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும்’ என்பதாகும். அந்நூலில் சில மேல்நாட்டு அறிஞர்களின் பெண்ணிய வரையறைகளைத் தந்துள்ளனர்.

‘‘பெண்ணியம் என்து பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல, சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும் என சார்லட் பன்ச் கூறுகிறார்.’’[30]

‘‘எல்லா தரப்புப் பெண்களுக்கும் உரிமை பெற்றுத் தருவதே பெண்ணியம் பெண்ணியம் தீவிரச் செயல்பாடுடையது பெண்களின் நிலையை மாற்றுகின்ற இயக்கம் என பார்பரா ஸ்மித் விளக்கம் தருகிறார்.’’[31]

‘‘பல்வேறு நிலைகளிலுள்ள பெண்களால் அவர்களின் வர்க்கப் பின்னணி, கல்வித் தகைமை, உணர்வுநிலை, என்பனவற்றை உள்ளடக்கியது பெண்ணியம் என்று வாசுகி ஜெயரத்னம் கூறுகிறார்.’’[32]

‘‘பெண்களுக்கு எதிராகக் குடும்ப – சமூக நிறுவனங்களில் அரசியலாகி (Politics) வரும் ஆண் அதிகாரத்தை (Power) ஆளுகையை (Domination) எதிர்த்துச் செயல்படும் உணர்வு நிலை என்று அரங்க மல்லிகா தரும் விளக்கம் ஆகும்.’’[33]

‘‘பெண்ணியம் பெண்ணைத் தன்னியலாகப் பார்க்கும் பார்வையைப் பேசும்’’ என்றும், ‘‘பெண்களுக்குத் தனி இருப்பு நிலை கிடையாது என்று மறுக்கப்பட்டதை மறுதலிப்பதை பெண்ணியம் என்றும் ஜூலியா கிறிஸ்தவா கூறுகிறார்.’’[34]

‘‘பெண்ணியம் என்பது பெண்களின் நிலையை மாற்றுகின்ற இயக்கம் (A Movement of change in the position of women) என்று ரோஸலிண்ட் டெல்மார் விளக்கம் தருகிறார்.’’[35]

பெண்ணியம் என்ற வார்த்தையானது மிகவும் அண்மைக் காலத்தில் தான் தோன்றி வளர்ந்து வருகிறது. இது பெண்களின் உரிமைக்காகப் போராடும் ஓர் இயக்கம் ஆகும். அதனோடு பெண்ணின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும்,

சமுதாய அரசியல், பொருளாதாரச் சூழ்நிலையிலும் அவள் ஆண்களுக்குச் சமமானவள் என்பதை நிலைநாட்டும் இயக்கம் மேலும்,

‘‘பெண்ணியத்தின் கரு பெண்களின் இரத்தத்தில் உள்ளது. இதன் கொள்கை நமது இனத்தின் இதயத்திலுள்ளது. இதன் வார்த்தை நமது தினசரி நாளிதழ்களின் பக்கங்களில் உள்ளது என்று ஜூலியட் மிசன் ஆண் ஒகாபி விளக்கம் தருகிறார்.’’[36]

‘‘வர்க்கம், நிறம், மதம், சாதி, தேசம், மொழி ஆகிய அனைத்துக் கூறுகளும், பெண் அடையாளத்தோடு இணைந்து வெவ்வேறு தன்மைகளை உருவாக்குகின்றன. பெண்ணியம் என்ற தொடர் பெண்ணியக்கங்களை குறிக்கிறது என்ற புரிதல் நமக்கு அவசியமாகிறது என அ.மங்கை கூறுகிறார்.’’[37]

‘‘பெண் என்பவள் தன்னை அதாவது தனது இருப்பை, ஆளுமையை, உணர்ந்தவள், என்ற பொருள் முன்பு, உரைப்படாமல் இருந்தது. ஒரு பெண் தனது ஆளுமையைத்தானே உணர முடியாத நிலையில் இந்தச் சமூகம் அவளை ஆக்கி வைத்திருக்கிறது. இந்நிலையை இன்று வெகுவாக மாறிவருகிறது. பெண் தன்னை உணருகிறாள். தன் இருப்பை உணர்த்துகிறாள். நடைமுறையில், பெண் விடுதலைப் பற்றிய உணர்வே பெண்ணியம் ஆகும் என தி.சு.நடராசன் கூறுகிறார்.’’[38]

பெண்ணியம், ஒரு படிப்பு, ஆய்வு, நடைமுறை, பெண்ணுரிமைப் பற்றிய பார்வை, இப்படித்தான் இருக்க வேண்டும் பொம்பள என்பதை எல்லாம் கேள்வி கேட்கும் ஏற்பாடு, ஆணாதிக்கம் என்பதற்கு மறுப்பு ஆகும். மேலும்,

“சமூகத்தின் ஓர் இனமாகப் பெண்கள் உள்ளனர். தந்தைவழிச் சமூகத்தால் பெண்கள் அனைத்துத் தளத்திலும் சுரண்டப்படுவதை உணர்ந்து, உணர்த்துவதே பெண்ணியம் என்று இராமன் செல்டன் கூறுகிறார்.”[39]

“பெண்ணியம் என்பது பெண்களின் அரசியல் நிலைப்பாடு தந்தை வழிச் சமுதாயத்திற்கும், அது கொடுக்கும் பாலியல் அதிகாரத்திற்கும் எதிரானது என்று டொலில் மொய் கூறுகிறார்.”[40]

தமிழ்ப் பெண்ணியளர்களின் பெண்ணியம் பற்றிய வரையறைகளும், மேலைநாட்டாரின் வரையறைகளும், சில வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் பெண்ணியம் என்பது பெண்களின் உரிமையை வீட்டிலும், சமூகத்திலும், பெறப் போராடும் ஓர் இயக்கம், அது பெண்களை உடல் ரீதியாகவும், உள்ள ரீதியாகவும் இருப்பை உணர்த்தும் விடுதலையை அடையப் போராடும் ஆண் தன்னை அடிமைப்படுத்துவதிலிருந்து விட்டு விடுதலையாகி அரசியல், பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம் என்று அனைத்து ஆண் வளையங்களிலிருந்தும் விட்டு விடுதலையாகி நிற்க முழுமையாகப் போராடும் பெண்களின் ஓர் இயக்கம் என்ற முடிவுக்கு வரலாம். பெண்ணியச் சிந்தனைவாதிகள் கொடுத்துள்ள விளக்கங்களின் அடிப்படையில் அமைந்துள்ள பெண்ணியத்தைப் பல்வேறு வகையாகப் பகுத்து இனி காண்போம்.

## 1.4 பெண்ணிய வகைகள்

ஒரு சமூகத்தில் எந்த ஒரு புதிய சிந்தனையும், பெருகி வளரத் தொடங்கும் போது, நாடு, மொழி, இனம், கொள்கை, தத்துவம் முதலியவைகளின் அடிப்படையில் அந்தச் சிந்தனைக்குப் பல்வேறு விளக்கங்களும் பெயர்களும் வந்து அமைகின்றன.

மனிதர்களின் இந்தப் பயன்பாட்டிற்கேற்ப பெண்ணியமும் பல வகைகளாகப் பெயரிட்டு வழங்கப்படுகிறது.

பெண்ணிய வகைகள் பொதுவாக,

1. மிதவாதப் பெண்ணியம்

2. தீவிரவாதப் பெண்ணியம்

3. சமதர்மப் பெண்ணியம்

என்று மூன்று பெரும் பிரிவுகளில் வகைப்படுத்த முடியும் என்றாலும், சிற்சில மாற்றங்களுடன் பல்வேறு பெயர்களில் பெண்ணிய வகைகள் வழங்கப்படுகின்றன.”[41]

பெண்ணியம் அல்லது பெண்ணிலை வாதம் என்பது ஒரே நிலைப்பாடு கொண்டதல்ல. அதனுள் பல கருத்தியல்கள், கோணங்கள் உண்டு. அவை பின்வருமாறு:

- ❖ மிதவாத பெண்ணியம் அல்லது தாராளவாதப் பெண்ணியம் (Liberal Feminism)
- ❖ தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism)
- ❖ சமதர்மப் பெண்ணியம் (Socialist Feminism)
- ❖ பொருள் முதல் பெண்ணியம் (Materialist Feminism)
- ❖ மார்க்சியப் பெண்ணியம் (Marxist Feminism)
- ❖ ஓரினக்கலவிப் பெண்ணியம் (Lesbian Feminism)
- ❖ ஆன்மீகப் பெண்ணியம் (Spiritual Feminism)

- ❖ கிறித்தவப் பெண்ணியம் (Christian Feminism)
- ❖ மனைப் பெண்ணியம் (Domestic Feminism)
- ❖ தலைமைத்துவம் வேண்டாப் பெண்ணியம் (Anarcha Feminism)
- ❖ தூய பெண்ணியம் (Pure Feminism)
- ❖ கருப்புப் பெண்ணியம் (Black Feminism)
- ❖ சூழல் பெண்ணியம் (Eco-Feminism)
- ❖ மரபுநிலைப் பெண்ணியம் (Conservative Feminism)
- ❖ நடுத்தர வகுப்புப் பெண்ணியம் (Bourgeois Feminism)
- ❖ கூட்டுச் சேராப் பெண்ணியம் (Non aligned Feminism)
- ❖ மகளிர் முன்னேற்றப் பெண்ணியம் (Career Feminism)
- ❖ மனித இன மேம்பாட்டுப் பெண்ணியம் (Eugunic Feminism)
- ❖ உளப்பகுப்பாய்வுப் பெண்ணியம் (Psychoanalytic Feminism)
- ❖ இருத்தலியல் பெண்ணியம் (Existentialist Feminism)
- ❖ அதிநவீனப் பெண்ணியம் அல்லது பின்நவீனத்துவ பெண்ணியம் (Post-Modern Feminism)
- ❖ கல்வி நெறிப் பெண்ணியம் (Academic Feminism)
- ❖ மானுடநேயப் பெண்ணியம் (Humanist Feminism)
- ❖ பண்பாட்டுப் பெண்ணியம் (Cultural Feminism)
- ❖ ஏகாதிபத்தியப் பெண்ணியம் (Imperial Feminism)

- ❖ தனிமனிதப் பெண்ணியம் (Individual Feminism)
- ❖ புரட்சிப் பெண்ணியம் (Revolutionary Feminism)
- ❖ ஆண் பெண்ணியம் (Male Feminism)
- ❖ இந்தியப் பெண்ணியம் (Indian Feminism)
- ❖ தலித் பெண்ணியம் (Dalith Feminism)

என இரா.ஸ்ரீவித்யா வகைப்படுத்துகிறார்.”[42]

### 1.4.1 மிதவாதப் பெண்ணியம் அல்லது தாராளவாதப் பெண்ணியம் (Liberal Feminism)

18–ஆம் நூற்றாண்டில் இப்பெண்ணியம் தோன்றியது. ஒவ்வொருவருடைய தனிப்பட்ட சுதந்திரம் அரசால் காப்பாற்றப்பட வேண்டும். இது இவ்வியக்கத்தின் தலையாய நோக்கமாகும். இந்தக் காலக்கட்டத்தில் பெண் விடுதலை பற்றி ஆண் எழுத்தாளர்கள் மிகுதியாக எழுதி வந்துள்ளனர்.

மிதவாதப் பெண்ணியக் கோட்பாட்டாளராக மேரி உல்ட்ஸ்டோன்கிராஃப்ட் கருதப்படுகிறார். வாழ்வின் எல்லாக் கட்டத்திலும் மகளிர்க்கு உரிமைகளும் சந்தர்ப்பங்களும் சமமாகக் கிடைக்க வேண்டும் என்பது இவரின் உயரிய கருத்தாக இருந்து வந்துள்ளது.

ஜான் ஸ்டூவர்ட் மில் எழுதிய பெண்ணடிமைத்தனம் (1969) என்ற நூல் மிதவாதப் பெண்ணிய ஆதிநூலாகக் கருதப்படுகிறது. இன்று அமெரிக்காவில் மிதவாதப் பெண்ணியம் முதன்மைப் பெண்ணிய நீரோட்டம் என்று வழங்கப்படுகிறது. இதன் அடிப்படை நோக்கம்,

1. மகளிர்க்கு சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும்

2. சமூகப் புரட்சி, சட்டப்புரட்சி இவற்றின் மூலம் மகளிர்க்குச் சுதந்திரம், சமத்துவம், சமநீதி முதலியவை வழங்கப்பட வேண்டும் என்பதாகும்.''[43]

இது பெண்ணின் சிறப்புக்களைக் கூறுவதிலேயே அதிகம் கவனம் செலுத்துகிறது. கடவுளுக்கு முன், ஆண் பெண் எல்லோரும் சமம் என்று சொல்லுகிற அதே நேரத்தில் அதற்காகப் போராடுவதைத் தவிர்க்கிறது. வழக்காடுமன்றங்கள், சட்டமன்றங்கள் முதலியவற்றிற்குப் போவதில் ஆர்வம் கொள்கிறது.

### 1.4.1.1 மிதவாதப் பெண்ணியக் கொள்கைகள்

- பகுத்தறிவு
- **தனிமனித சுதந்திரம் (ஆணுக்குரிய சுதந்திரம் பெண்ணுக்கும் கொடுக்கப் படல்).**
- **சொத்துரிமை, ஓட்டுரிமை**
- **ஆண் – பெண் சமம்.**
- **ஒரு பெண் தன்னைப் பற்றித் தானே பேசுவதற்கும், எழுதுவதற்கும் உரிமை பெற வேண்டும்.**
- **ஆணுக்கு நிகரான, தான் விரும்பிய பணியை ஏற்க வேண்டும்.**''[44]

### 1.4.2 போராட்டக் குணம் மிக்க பெண்ணியம்

பெண் உரிமைகளைப் போராடித்தான் பெற முடியும். பெற வேண்டும் என்று இது வற்புறுத்துகிறது. பெண்களுக்குச் சொத்துரிமை போன்றவை பற்றிற்காக இது போராடிப் பெற்றும் தந்துள்ளது.

### 1.4.3 தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism)

ரேடிகல் (Radical) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு வேர் என்பது பொருளாகும். இச்சொல் லத்தீன் மொழியிலிருந்து உருவான சொல்லாகும். சமுதாயத்தில் பிரச்சனைகளின் காரணங்களை வேரிலிருந்து ஆராய்வது என்பதைக் கருத்தில் கொண்டே இச் சொல்லைப் பெண்ணியவாதிகள் பயன்படுத்தினர்.

தீவிரப் பெண்ணியவாதிகள், தந்தை வழிச் சமூக அமைப்பை எதிர்த்துப் போராடினர். பெண்ணடிமைத்தனமானது பொருளாதார வேறுபாட்டில் வேர் கொண்டது என்பதைவிட பெண் ஆண் பாலியல் உறவில் உண்டானது என்றே இவர்கள் கருதினர்.

பெண் அடிமைத்தனத்திற்கு ஆண்தான் காரணம். அதனால் அவனைப் பகைவனாக எண்ணி ஆண் மேலாண்மையை வெறுத்து, பாலியல் வேறுபாட்டை முற்றிலுமாக ஒழிக்க என்னினர். அதனால் இவர்கள் வாழ்வில் ஆண்களுக்கு இடமில்லாமல் போயிற்று. பாலியல் உரிமை, உடம்பின் மீதான கட்டுப்பாடு, விடுதலைக் காதல், தன்னின அனுபவம், குழந்தைகளின் கூட்டுப் பாதுகாப்பு ஆகியன இவர்களின் செயல்பாடுகளாயின. ஆண் மேலாண்மையை முழுவதுமாகப் போக்கப் பாலியல் அடிப்படையிலான புரட்சி தேவை என்று இவர்கள் கருதினர். நவீனப் பெண்ணியம் என்று சொல்லுகின்ற இது அரசியல் அமைப்புச் சட்டங்களிலும் அரசு ஆணைகளிலும் வழங்கப்பட்டுள்ள ஆண்-பெண் சமத்துவம் நடைமுறையில் அவைக்குவதவாதது என்று குற்றம் சாட்டுகிறது. குடும்பம், பாலியல் உறவு முதலியவை பெண்ணை அடிமைப் படுத்துகின்றவை. எனவே இவற்றிலிருந்து பெண் விடுதலையாகி, வெளியே வர வேண்டும் என்று பேசுகிறது.

- **தந்தை வழிச் சமூகத்தை உடைக்க எண்ணுதல்**

- ❖ குடும்ப அமைப்பு, சமூக அமைப்பு, ஆணின் மேலாண்மை ஆகியவற்றை உடைக்க எண்ணுதல் (பாலியல் கோட்பாட்டைத் தகர்த்தல்)
- ❖ ஆண் பெண்ணுக்குப் பகைவனாகிறான்
- ❖ பாலியல் உரிமை
- ❖ உடம்பின் மீதான கட்டுப்பாடு
- ❖ விடுதலைக் காதல்
- ❖ தன்னின அனுபவம்
- ❖ குழந்தைகளின் கூட்டுப் பாதுகாப்பு
- ❖ எதற்காகவும் ஆணை சார்ந்திராத தன்மையை உருவாக்க எண்ணுதல்

முதலானவை அடிப்படைக் கொள்கைகளாககின்றன.''[45]

## 1.4.4 சமதர்மப் பெண்ணியம்

தீவிரப் பெண்ணியப் போக்கில் மார்க்சிய அணுகுமுறையோடு செயல்படுவது சமதர்மப் பெண்ணியமாகும். வர்க்கப்பேதம், பால் வேறுபாடு ஆகிய இரண்டையும் சமூகத்திலிருந்து நீக்குவதன் மூலம் எல்லாவிதச் சுரண்டலையும் நீக்க முடியும். ஆண் மேலாதிக்கமோ, பெண் மேலாதிக்கமோ இல்லாத சமதரும சமூகத்தை உருவாக்க முடியுமென்பது இதன் நோக்கமாகும். பெண்கள் வீட்டில் செய்யும் வேலையானது ஆண்கள் வெளியில் செய்யும் வேலைக்கிணையான மதிப்பைக் கொண்டது. ஆனால், அதற்குத் தகுந்த மதிப்போ, ஊதியமோ அளிக்கப்படவில்லை என்பதையும், இது சுட்டிக்காட்டுகிறது. பால் அடிப்படையிலான தொழிற்பாகுபாட்டினை நீக்க வேண்டுமென்று இவ்வகைப் பெண்ணியம் வற்புறுத்துகிறது.

குடும்பத்திற்குள்ளும் அதற்கு வெளியேயும், பெண், பொருளாதார அடிப்படையில் சுயநிலை பெறவேண்டும். அப்போதுதான் பெண் விடுதலை சாத்தியமாகும் என்று சொல்கிறது. ஒட்டுமொத்தமான சமூக, சமதர்ம அமைப்பிலேயே பெண்ணும்; நிரந்தரமாக சமத்துவநிலை பெறுகிறாள் என்று இது கூறுகிறது. இந்தியாவில் தமிழகத்தில் பெண்ணியச் சிந்தனைகளில் இதுவே பெரும்பான்மையாகக் காணப்படுகிறது."[46]

### 1.4.5 பொருள் முதல் பெண்ணியம் (Materialist Feminism)

சமதருமப் பெண்ணியத்தின் வளர்ச்சிப்பெற்ற போக்காக இதனைக் கருத முடிகிறது. பொருள் முதல் பெண்ணியமானது பெண்கள் எவ்வாறு பால் மற்றும் பண்பாட்டுக் கருத்தியல்களுக்குள் அடிமைப்படுத்தப்பட்டனர் என்பதற்கான விளக்கம் மார்க்சியத்தில் இல்லாதிருப்பதை எடுத்துக்காட்டுகிறது. பெண்கள் பால் அடிப்படையில் ஆண்களால் ஒடுக்கப்படுபவர்களாகவும் வகுப்பு, இன அடிப்படையில் பிறரை ஒடுக்குகின்றவர்களாகவும் ஒடுக்குகின்றவர்களுக்குத் துணைபோகிறவர்களாகவும் இருக்கிறார்கள். வெள்ளை இனப் பெண்ணும், முதலாளியப் பெண்ணும், மேற்கத்தியப் பெண்ணும் முறையே கறுப்பினத் தொழிலாளிய, கீழைப்பண்பாட்டைச் சேர்ந்த பெண்களையும் ஆண்களையும் ஒடுக்குகிறார்கள் என்பதைப் பொருள் முதல் பெண்ணியம் வெளிப்படுத்தியுள்ளது."[47]

### 1.4.6 மார்க்சியப் பெண்ணியம் (Marxist Feminism)

மார்க்சியம் உலகளாவிய விடுதலை நோக்கை வளர்க்க முனைகிறது. எனவே, மார்க்சியம் எடுத்துள்ள பல முக்கிய இலட்சியங்களில் ஒன்றாகப் பெண் விடுதலையும் அடங்கும். பெண்கள் ஒடுக்கப்படுவது தொடர்பான பிரச்சினையானது, சமூகத்தின் உற்பத்திமுறை மற்றும் உற்பத்தி உறவுகளுடன் தொடர்பு கொண்ட

வரலாற்று அடிப்படையிலான ஒரு பிரச்சனையே என்று மார்க்சியம் எடுத்துரைக்கிறது. தனிச்சொத்து முதலாளியத் திருமண அமைப்பு முறையான ஒருதாரமணக் குடும்பமுறை ஆகிய சமுதாய நிறுவனங்கள் தகர்த்தெறியப்படும் போது, பெண்கள் வெறும் இன விருத்திக்கான கருவிகள் என்ற நிலையிலிருந்து தாமாகவே விடுதலை அடைவர் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையில் மார்க்சும் எங்கெல்சும் கூறுகின்றனர்.

பாட்டாளி வர்க்க விடுதலைக்கு அளிக்கும் முக்கியத்துவம் பெண் விடுதலைக்குத் தரப்படாததும், தந்தைவழிச் சமுதாயம் தவறி பிற ஆணாதிக்க மேம்பாட்டைப் பற்றி அதிகம் பேசாததும் இவ்வகைப் பெண்ணியத்தின் குறைபாடுகளாக உள்ளன.[48]

### 1.4.6 ஓரினக் கலவிப் பெண்ணியம் (Lesbian Feminism)

ரிட்டா மாவோ பிரௌன், சார்லட் பன்ச், டிகிரேஸ், அட்கின்சன், ஜில் ஜான்ஸ்டன் ஆகியோர் ஓரினக்கலவியில் ஈடுபடும் பெண்களே இயற்கையான பெண்ணியவாதிகள் என்கின்றனர். ஏனென்றால் அவர்களே ஆண்களை நிராகரித்து விலக்கி வாழ்கின்றனர் என்று கூறினர். பெண், ஆண் இடையே ஏற்படும் உடலுறவு பெண் அடக்குமுறைக்கு வித்திடுவதால், அதை நிராகரிப்பதன் மூலம் அடக்குமுறையினின்றும் மீள முடியுமென்று இவ்வகைப் பெண்ணியம் கருதுகிறது.[49]

### 1.4.7 ஆன்மீகப் பெண்ணியம் (Spiritual Feminism)

ஆன்மீகப் பெண்ணியம் என்பது சமயம் பற்றிய விழிப்புணர்வைப் பெண்களுக்குள் உருவாக்குவது ஆகும். இப் பெண்ணியவாதிகள், பெண்கள் சமத்தியலும் ஒடுக்கப்படுவதைப் பார்த்து, அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி,

சமயத்திலும் பெண்களுக்குரிய உரிமையை நிலைநாட்ட விரும்பினர். பெண்ணியத்தின் ஒரு பேறாக ஆன்மீகம் இணைக்கப்பட வேண்டும் என்ற கருத்து பாஸ்டனில் நடந்த முதல் ஆன்மீகப் பெண்ணியக் கருத்தரங்கில் (1979) எடுத்துரைக்கப்பட்டது. ஆன்மீகப் பெண்ணியம் குறித்துப் பெண்ணியவாதிகளிடம் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. சமயத்தில் பெண்களின் இருப்பு, பங்கு பற்றி எடுத்துரைக்கும் இத்தகைய பெண்ணியம் குறிப்பிடத்தக்க ஒன்று என ஒருசாரரும், ஆன்மீகப் பெண்ணியத்தின் வளர்ச்சி பெண் விடுதலை இயக்கத்தைப் பிற்படுத்திவிடும் என ஒரு சிலரும் கருதுகின்றனர்.[50]

### 1.4.8 கிறித்தவப் பெண்ணியம் (Christian Feminism)

கிறித்தவ மடாலயங்களில் பெண் அடக்குமுறை அதிகம் காணப்படுவதைக் கண்டித்து இவ்வகைப் பெண்ணியம் தோற்றம் பெற்றது. கிறித்தவ மதத்தில் சீர்திருத்தம் வேண்டும் என்று கூறும் இவ்வகைப் பெண்ணியவாதிகள், கிறித்தவக் கருத்துக்களில் பெண்ணிய நோக்கை இணைத்து, மதத்தில் பெண்ணடிமை கூடாது என்று எடுத்துரைத்தனர். மெரி டாலி இவ்வகைப் பெண்ணியவாதி ஆவார். இவர் வெளிப்படையாக மடாலயங்களின் தலைமைப் பொறுப்புக்குப் பெண்கள் வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.[51]

### 1.4.9 மனைப் பெண்ணியம் (Domestic Feminism)

மனைப் பெண்ணியம் என்பது பெண் தனது மதிப்பையும் பெருமையையும் உயர்த்திக் கொள்ள வேண்டுமென்றால் மரபார்ந்த தாய், இல்லத் தலைவி என்ற பங்கு நிலைகளை இன்னும் உயர்த்திக் கொள்ள வேண்டும் என்கிறது.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இவ்வகைப் பெண்ணியம் பேசப்பட்டது. பெண்கள் உடலியல் அடிப்படையில் இல்லம் சார்ந்தவர்கள் என்று இப் பெண்ணியவாதிகள் நம்பினர். காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இப்பெண்ணியம் காணாமல் போயிற்று. இதற்கு மாறாகத் தீவிரப் பெண்ணியச் சிந்தனைகள் வளர்ந்து, ஆண் பெண்ணுக்கென்று தனித்தனி உலகங்கள் இல்லை இருபாலரும் இணைந்து செயலாற்ற முடியுமென்ற கருத்து வளர்ச்சி ஏற்பட்டது.[52]

### 1.4.10 தலைமைத்துவம் வேண்டாப் பெண்ணியம் (Anarcha Feminism)

கிரேக்கச் சொல்லான அனார்கஸ் (Anarchaos) என்பதற்கு ஆட்சியாளர் இல்லாத அல்லது தலைமை இல்லாத என்பது பொருளாகும். தலைவர் என்றும் தொண்டர் என்றும் மனிதரைப் பாகுபாடு செய்து படிநிலைப்படுத்த விரும்பாமல் எல்லோருக்கும் சமபங்களித்து சமசெயல்பாட்டுச் சுதந்திரம் வேண்டுவது தலைமை வேண்டாப் பெண்ணியத்தின் மையக்கருத்தாகும். பெண்களின் இரண்டாந்தர நிலைக்குக் காரணமாக அமைவது புறக்கணிக்கப்பட்ட பாலியல் மற்றும் குடும்ப முறைகேடுகளே என்று கூறும் இப்பெண்ணியவாதிகள், பெண்களுக்குப் பொருளாதாரம் மற்றும் உளவியல் சார்ந்த விடுதலை தேவை என்பதை வலியுறுத்தினர். தனிநபர் சுதந்திரத்தை வலியுறுத்திய இவர்கள் சட்டங்களால் மட்டும் இத்தகைய சுதந்திரத்தைப் பெற்றுத்தர முடியாது என்றும் கூறிவந்தனர். இவ்வகைப் பெண்ணியத்தைச் சார்ந்தவர் எம்மா கோல்டுமென் என்ற புகழ்பெற்ற பெண்ணியவாதியாவார்.[53]

### 1.4.11 தூய பெண்ணியம் (Pure Feminism)

தூய பெண்ணியவாதிகள் பெண்ணடிமைத்தனத்திற்குக் காரணமாக இருப்பது தனிச்சொத்துடைமையின் தோற்றமே என்ற மார்க்சியக் கருத்தை ஏற்றுக் கொள்ளாமல்

கருத்தரித்தல், குழந்தை பெறுதல் போன்ற உடலியல் சம்பந்தப்பட்ட காரணிகளே பெண்ணடிமைத் தனத்திற்கான அடிப்படைகள் என்று கூறுகின்றனர். எனவே பரிசோதனைக் குழாய்க் குழந்தை போன்ற தொழில் நுட்ப வளர்ச்சியினால் ஏற்படும் மாற்றங்களையே பிரச்சனைக்கான தீர்வாகத் தூய பெண்ணியவாதிகள் முன் வைக்கின்றனர்.[54]

### 1.4.12 கருப்புப் பெண்ணியம் (Black Feminism)

கருப்புப் பெண்ணியம் என்பது கருப்புப் பெண்களின் பண்பாட்டுத் தளத்தின் ஆழத்தில் இருந்து தோற்றம் பெற்றது. கருப்புப் பெண்ணியவாதிகள் அடிமைக்கு அடிமையாக இருக்கின்றனர். அதாவது, அடிமைப்படுத்தப்பட்ட கருப்பு ஆணுக்கு அடிமைகளாக இருக்கிறார்கள். இப்பெண்ணியவாதிகள் கருப்பு அழகானது என்ற தொடரை முன்னிறுத்துகின்றனர். இஃது நிறத்தை ஒட்டி எழுந்த தன்று. இனம் மற்றும் வரலாற்றை அடியொற்றியதாகும். இப்பெண்ணியவாதிகள் மனித உரிமை சார்ந்த சமத்துவத்திறக்காவும், சுரண்டலுக்கு எதிராகவும் குரல் கொடுத்து வருகின்றனர். பார்பரா ஸ்மித் கருப்புப் பெண்ணியவாதிகளுள் குறிப்பிடத்தக்கவராவர்.[55]

### 1.4.13 சூழல் பெண்ணியம் (Eco-Feminism)

சூழல் பெண்ணியவாதிகள் போர் வன்முறைகள் மற்றும் பாலியல் வன்முறைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்றனர். இவர்கள் அணு ஆயுதத்தைப் போருக்காகப் பயன்படுத்துவதைக் கடுமையாக எதிர்த்துப் போராடுகிறார்கள். ஆண்களின் வன்முறைகளில் ஒரு வகைப் போக்குத்தான் அணு ஆயுதத் தொழில்நுட்பம் என்று இப்பெண்ணியவாதிகள் கூறுகின்றனர். நுகர்வுப் போக்கு வாழ்க்கை, உயர்தொழில் நுட்பம், மரபணு பொறியியல், மறு உற்பத்தித்

தொழில்நுட்பம் ஆகியவை இயற்கைக்கு எதிரானவை என்று சூழல் பெண்ணிவாதிகள் கருதுகின்றனர்.[56]

## 1.4.14 மரபு நிலைப் பெண்ணியம் (Conservative Feminism)

பெண்ணியத் தீவிரவாதிகள், மிதமான போக்குடைய பெண்ணியவாதிகளை மரபுநிலைப் பெண்ணியவாதிகள் என்று குறிப்பிடுகின்றனர். இவ்வகைப் பெண்ணியவாதிகள் மார்க்சியப் பெண்ணியக்கோட்பாடுகளைப் பயன்படுத்தினாலும் அதனை முழுமையாக ஏற்க மறுக்கின்றனர். புரட்சியை விரும்பாத இவர்கள் ஆண்களோடு இணைந்து செயல்படவே விரும்புகின்றனர்.[57]

## 1.4.15 நடுத்தர வகுப்புப் பெண்ணியம் (Bourgeois Feminism)

மரபுநிலைப் பெண்ணியமும் நடுத்தர வகுப்புப் பெண்ணியமும் மிதவாதப் போக்கினையே கொண்டதாகும். நடுத்தர வகுப்புப் பெண்ணியம் என்ற இச்சொல் மார்க்சிய மற்றும் சமதரும பெண்ணியவாதிகளால் உருவாக்கப்பட்டது. முதலாளித்துவ நாடுகளின் அரசியல், பொருளாதார அமைப்புகளில் எவ்வித மாற்றமும் இன்றியே மகளிர் சம உரிமை பெற முடியும் என்பதே இப்பெண்ணியத்தின் கருத்தாகும்.[58]

## 1.4.16 கூட்டுச் சேராப் பெண்ணியம் (Non Aligned Feminism)

அடக்குமுறைத் தளைகளிலிருந்து பெண்கள் விடுதலை பெற வேண்டும்; சம உரிமை வேண்டும்; மகளிர் வாழ்வின் அரசியல் பண்பாட்டுப் பொருளாதார, ஆன்மீகப் பரிமாணங்களையும் ஆராய வேண்டும்; தனித்துவத்தையும் இழக்காமல் எதனுடனும் கூட்டுச்சேராமல் மகளிர் வாழ்வுடன் தொடர்புடைய அனைத்தையும்

ஆராய்ந்து உண்மையை அறிவதே இதன் இலக்கு என சார்லட் பஞ்ச் இப்பெண்ணியத்திற்கு வரையறை தந்துள்ளார்.[59]

### 1.4.17 மகளிர் முன்னேற்றப் பெண்ணியம் (Career Feminism)

சுய இலக்குகளை அடைதல், மகளிர் கூட்டமைப்புகளை ஏற்படுத்துதல், திறம்படச் செயல்படுதல், சமூகத்தில் எந்தப் பணியையும் ஏற்றுச் செயல்படும் உரிமை வேண்டுதல் ஆகிய நோக்கங்களுடன் செயல்படும் இப்பெண்ணியக் குழுவினரைக் குறிக்க மைரா மார்க்ஸ் பேர்ரீ மற்றும் பெத்ஃஃபீ ஹெல் ஆகியோர் எழுதிய எதிர்ப்பும் ஒற்றுமையும் புதிய பெண் இயக்கம் என்ற நூலில் (மகளிர் முன்னேற்றப் பெண்ணியம்) இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.[60]

### 1.4.18 மனித இன மேம்பாட்டுப் பெண்ணியம் (Eugenic Feminism)

பிரிட்டனில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இச்சொல் பயன்படுத்தப்பட்டது. பெண் விடுதலை என்பது பெண்ணின் தாய்மைப் பண்பைச் சிதைத்துவிடும் என்பது இவ்வியக்கத்தினரது அசையாத நம்பிக்கையாகும். உண்மையில் பெண்ணியத்திற்கு இவ்வியக்கம் எதிரானதாகும் என்று பெண்ணியக் கலைச்சொல் விளக்கக் கையேடு தெரிவிக்கிறது.[61]

### 1.4.19 உளப்பகுப்பாய்வுப் பெண்ணியம் (Psychoanalytic Feminism)

ஃபிராய்டின் கோட்பாடுகளான பெண்ணின் இயல்பு, இடிபஸ் சிக்கல், எலெக்ட்ரா சிக்கல், காயடிப்புப் பயம் ஆகியவை பெண்ணிய நோக்கில் இன்று மறுபரீசிலனை செய்யப்பட்டு வருகின்றன. ஃபிராய்டின் உளப் பகுப்பாய்வுக் கோட்பாடு ஆண்வயச் சிந்தனையின் விளைவே என்றும், பெண் நோக்கிலிருந்து

அவை பார்க்கப்பட்டவை அல்ல என்றும் உளப்பகுங்பபாய்வுப் பெண்ணியம் விளக்குகிறது.[62]

### 1.4.20 இருத்தலியல் பெண்ணியம் (Existentialist Feminism)

இருத்தலியல் வாதத்தைப் பெண்ணிய நோக்கில் பயன்படுத்திக் கொள்கிறது. இருத்தலியல் பெண்ணியம் 19-ஆம் நூற்றாண்டிலேயே இருத்தலியல்வாதம் (சோரன் கிர்கேகார்ட்) தோற்றம் பெற்றாலும், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஏற்பட்ட விளைவுகளால் அதன் முக்கியத்துவம் அதிகரித்தது. கபீரியல் மார்சல் (1889-1973), ஜான் பால் சார்த்தர் (1905-1985) மோரிஸ் மெர்லோ போன்றி (1908-1961) ஆகியோர் பிரான்சில் இருத்தலியல்வாதத்தை வளர்த்தனர். சார்த்தரின் துணைவியான சிமோன் தெ பௌவாயர், இருத்தலியல் பெண்ணியவாதிகளுள் முதன்மையானவர்.

இருத்தலியம் புறவயமானவற்றையும் அகவயமானவற்றையும் இணைப்பது; முழுமையையும் தற்காலிகமானவற்றையும் இணைப்பது; நிரந்தரமானவற்றையும் வரலாற்று ரீதியானவற்றையும் இணைப்பது; சாராம்சத்தை அது இருத்தலிலேயே கைப்பற்ற விழைகிறது. தத்துவம் இயல்பிலேயே அத்தகைய சாராம்சத்தை நோக்கியதெனில், இலக்கியம் இருத்தலின் பிரவாகத்தைத் தனித்த பிரத்தியட்ச உண்மையாகக் காண்பது என்கிறார் சிமோன். தெ பௌவாயர், இவர் தனது இரண்டாம் பால் (The Second Sex - 1949) என்ற நூலில், தான்மை மாற்றமை (Self, Other) என்ற கருத்தாக்கத்தைப் பெண்ணிய நோக்கில் விளக்குகிறார். சிறுபான்மையினரை, காலனித்துவ மக்களை, லெஸ்பியன் போன்ற விளிம்புநிலைக் குழுவினரைப் பற்றிய மரபார்ந்த பார்வைகளைக் (மனப்பான்மையை) குறிக்க மற்றமை என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார். ஆணாதிக்க உலகு, பெண்ணை மாற்றமையாகக் கருதுவதைப் பெண்ணியம் சுட்டிக்காட்டுகிறது. ஆண்களால்

எழுதப்பட்ட இலக்கியங்களில் பெண் இழிவானவளாக அச்சுறுத்துபவளாகச் சித்திரிக்கப்படுகிறாள். இப்படிப் பெண்ணை இரண்டாந்தாரமாக ஆக்கிய விதத்தைப் பௌவாயர் தனது நூலில் (The Second Sex) விளக்குகிறார்.

இருத்தலியல் பெண்ணியம் பௌவாயரின் கருத்துக்களை அடிப்படையாகக் கொள்கிறது. பிரெஞ்சுப் பெண்ணியவாதிகள் பின்னர் மேலும் இதனை வளர்த்தெடுத்தனர்.[63]

### 1.4.21 அதிநவீனப் பெண்ணியம் அல்லது பின்நவீனத்துவப் பெண்ணியம் (Post-Modern Feminism)

அதிநவீனப் பெண்ணியம், பெண் மொழி, பெண் சமுதாயம், ஆண் மொழி, ஆண் சமுதாயம் என்ற இரண்டையும் மறுக்கிறது. அதிநவீனப் பெண்ணியலார் மொழி தத்துவக்கருத்து ஆகியவை சுதந்திரமாகப் பயன்படுத்த வேண்டும் என்பர். பெண்ணுக்குரிய பாலியல் வெளிப்படையாகப் பேச வேண்டும். பெண் ஆணைப் படைக்க வேண்டும் என்கின்றனர். பெண்கள் எதிர்கால வாழ்வில் எப்படி இருக்க வேண்டும் என்றும் பெண்ணைப் போகப் பொருளாகச் சுட்டுவதாக எந்தப் படைப்புகளும் இருக்கக்கூடாது என்றும் இப்பெண்ணியம் வலியுறுத்துகிறது.[64]

### 1.4.22 கல்வி நெறிப் பெண்ணியம் (Academic Feminism)

ஆணாதிக்கம் நிறைந்தும் அதிகாரத்துவம் மற்றும் நடுத்தர வர்க்கக் குணம் நிறைந்தும் இருக்கிற உயர்நிலைக் கல்வி நிறுவனங்களான கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இப்பெண்ணிய வாதம் பெரிதும் பேசப்படுகின்றது. இக்கல்வி நிறுவனங்களில் வேலை பார்க்கும் பெண் கல்வியாளர்கள் இப் பெண்ணியத்தை வளர்த்தெடுக்கின்றனர்.[65]

### 1.4.23 மானுடநேயப் பெண்ணியம் (Humanist Feminism)

ஆடவரது சுயவர்ச்சியை அனுமதிக்கும் சமூகத்தில், பெண் அடக்குமுறை என்பது பெண்ணின் ஆற்றலைச் சிதைக்கக் கூடியது. எனவே, பெண் விடுதலை வேண்டும் என்று கருதிய ஜரி யங், (1985) இல் கொள்கையை வளர்த்தெடுத்தார்.[66]

### 1.4.24 பண்பாட்டுப் பெண்ணியம் (Cultural Feminism)

ஆண்களது ஆண்மைத்துவத்தால் ஏற்படும் ஆக்கிரமிப்பு, வன்முறை, பலம், அகங்காரம் என்பவற்றுக்கு எதிராகப் பெண்மையைப் போற்றுகின்ற ஒரு கருத்தாக்கமே பண்பாட்டுப் பெண்ணியமாகும். இவ்வகைப் பெண்ணியவாதிகள் கவிதை, இசை, கலை, திரைப்படங்கள், சமயம், அறிவியல், மருத்துவம் ஆகிய அனைத்தையும் பெண்ணை மையப்படுத்தியதாக, பெண்ணை நோக்கியதாக உருவாக்க முற்பட்டனர். இவ்வகைப் பெண்ணியவாதிகள் மிக அமைதியாக இயங்கக் கூடியவர்கள் என்றாலும், தீவிரவாதப் பெண்ணியத்தின் அரசியல் சித்தாந்தங்களை ஏற்றுக் கொண்டவர்கள் ஆவார்கள்.[67]

### 1.4.25 ஏகாதிபத்தியப் பெண்ணியம் (Imperial Feminism)

பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் தோன்றிய பெண்ணிய மூல நீரோடை ஏனைய மூன்றாவது உலக நாடுகளைச் சேர்ந்த பெண்களை அடக்கியான முற்படுகிறது என்று பிரதீபா பார்மர், வலேரி அமோஸ் ஆகியோர் இச்சொல்லின் மூலம் அந்நாடுகளில் உருவான பெண்ணியத்தைக் குறிப்பிட்டனர்.[68]

### 1.4.26 தனிமனிதப் பெண்ணியம் (Individual Feminism)

தனது ஆற்றலைப் பயன்படுத்துவதன் மூலம் தன்னுடைய எதிர்காலத்தைத் தானே வடிவமைத்துக் கொள்ளுவதற்குரிய உரிமையும், பெண், ஆண் யாராக

இருப்பினும் தனி நபர் ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் தேவை என்றும் இப்பெண்ணியம் கூறுகிறது.[69]

### 1.4.27 புரட்சிப் பெண்ணியம் (Revloutionary Feminism)

தீவிரவாதப் பெண்ணியத்தைப் புரட்சிப் பெண்ணியம் என்றும் குறிப்பிட்டனர். பெண் அடக்கு முறைக்கு எதிர்ப்பாலியத் திருமண முறையே அடிப்படைக் காரணமாகும். எனவே, அதை நீக்கிவிட்டுப் பிரிவினை வழியைப் பின்பற்ற வேண்டும் என்னும் தீவிர முழக்கங்கள் (1977) ஏற்பட்டன. இதனைப் புரட்சிப் பெண்ணியம் என்பர். பாலியல் உரிமை (Sexual Right), கட்டற்ற அல்லது கட்டுபாற்ற பாலியல் உறவு (Free Sex), ஓரினச் சேர்க்கை (Lesbianism) குழந்தை பெறுவதை மறுத்தல் முதலியவற்றை இது வலியுறுத்துகிறது.[70]

### 1.4.28 ஆண் பெண்ணியம் (Male Feminism)

பெண்ணியல் சிந்தனைகளை மிகவும் தீவிரமாக ஆண் பேசலாம். ஆனால், பெண்ணை நோக்க, இவன் அதைப் பேசப் பொருத்தமானவன் அல்லன். மேலும், பெண்கள் ஆண்கள் பேசுகின்ற பெண்ணியத்தை வரவேற்கக்கூடாது என்பதில்லை. ஆனால், அவர்களின் சொல்லாடலிலும் நோக்கத்திலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அப்படி வரவேற்பதால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியும் ஆழமாக எண்ணிப் பார்க்க வேண்டும் என்று ஸ்டீன் ஹீத் கூறுகிறார். பெண்கள் சார்பாக ஆண்கள் எழுதுகிற எழுத்தை ஆண் பெண்ணியம் என்றழைக்கின்றனர். பெண்ணியத்தின் பேசுபொருளாகவும், பெண்ணியத்தின் தோற்றம், இருப்பு ஆகியவற்றுக்கு மூலகாரணமாக விளங்குகிற ஆண் பேசுகின்ற பெண்ணியத்தை முழுவதுமான நம்பிவிடக் கூடாதெனப் பெண்ணிவாதிகள் எச்சரிக்கை செய்கின்றனர்.[71]

### 1.4.29 தலித் பெண்ணியம் (Dalith Feminism)

நகரத்து ஆலைகளில் தொழிலாளி சுரண்டப்படுகிறான். அந்தத் தொழிலாளியை நோக்க, கிராமத்தில் பண்ணைக்கூலி அதிகமாகச் சுரண்டப்படுகிறான். அந்தப் பண்ணைக் கூலிகளிலும் தாழ்த்தப்பட்ட பண்ணைக்கூலி இன்னும் அதிகமாகச் சுரண்டப்படுகிறான். அந்தத் தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த பண்ணைக் கூலியைவிட அவன் மனைவி அதிகமாகச் சுரண்டப்படுகிறாள். அவன் மனைவியைவிட அவள் வீட்டுப் பெண் குழந்தை அதிகமாகச் சுரண்டப்படுகிறாள் என்ற கூற்று, சமுதாயத்தின் படிவரிசை முறையில் அடிமட்ட நிலையில் இருக்கும் தலித் பெண்களைப் பற்றியும் அவளைவிட அதிகமாகச் சுரண்டலுக்கு உள்ளாகும் தலித் பெண் குழந்தைகளின் அவல நிலையையும் சுட்டிக்காட்டுகிறது.

சாதி அடிப்படையில் மட்டுமின்றி, தங்களுக்குள்ளேயே ஆண், பெண் என்ற பால் வகையின் அடிப்படையாலும், தலித் பெண்கள் அடிமைப்பட்டுள்ளனர். தலித் பெண்களின் காயங்களும், சோகங்களும் வெப்பங்களும் பெருமூச்சுகளும் தலித் இலக்கியத்தின் உள்ளுறையாக அமைகின்றன. இவற்றை ஆராய்வதே தலித் பெண்ணியமாகும்.[72]

தலித் பெண் படைப்பாளர்களான சிவகாமி, பாமா ஆகியோரின் படைப்புகளைத் தலித் பெண்ணிய நோக்கில் ஆராயும் போக்கு இன்று பல்கலைக்கழக ஆய்வு மட்டத்தில் வளர்ந்து வருகிறது. இவ்வாறு பெண்ணிய வகைப்பாடுகள் நாடு, இனம், சாதி அடிப்படையாலும், பிற காரணிகளாலும் பல வகைப்பட்டதாய் வளர்ந்து வருகின்றன எனலாம்.

### 1.4.30 இந்தியப் பெண்ணியம் (Indian Feminism)

மேலைநாடுகளில் பெண்ணியத்தின் தோற்றம் பகுத்தறிவு அடிப்படையில் அமைய, இந்திய நாட்டில் பெண்ணியம் சமூகச் சீர்திருத்தங்களின் அடிப்படையில் தோற்றம் பெற்றது எனலாம். சமூகச் சீர்திருத்தவாதிகளான இராஜாராம் மோகன்ராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், கேசவ சந்திர சென் போன்றோர் பலதார மண எதிர்ப்பு, சதி ஒழிப்பு, குழந்தை மண எதிர்ப்பு, பெண் கல்வி, விதவை மறுமணம், தேவதாசி முறை ஒழிப்பு ஆகிய சீர்திருத்தங்களை முன் வைத்துப் பெண் விடுதலைக்கு வித்திட்டனர். விடுதலைப் போராட்டக் காலத்தில் பாரதியார், பெண் விடுதலைக்காகக் குரல் கொடுத்ததும், காந்தி விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பிற்கு வித்திட்டதும் பூலே, பெரியார் போன்றவர்கள் பெண் விடுதலைக்காகத் தீவிரமாகப் பேசியும் எழுதியும் வந்ததும் இந்தியப் பெண் விடுதலை வரலாற்றில் புதிய எழுச்சிக்கு வித்திட்டன எனலாம்.

இந்தியப் பெண்ணியம் என்பது இந்தியப் பண்பாட்டின் அடித்தளமான குடும்ப அமைப்பைச் சிதைக்கவில்லை என்றாலும் பெண்கள், குடும்பம் பேணுதலுக்கே உரியவர்கள் என்ற மரபான போக்கு மாற்றம் பெற வேண்டும் என்பதையும் பெண்களின் ஆளுமை முக்கியத்துவம் பெற வேண்டும் என்பதையும் வற்புறுத்தி வருகிறது.[73]

## 1.5 பெண்ணியக் கொள்கைகள்

களச் செயல்பாடுகளின் வழியாகவும், கருத்தாக்க முறையியலிலும் பல்வேறு விதமான பெண்ணிய வரையறைகளை உருவாக்கி, இவைகளின் பின்புலத்தில் பெண் விடுதலைக்கான செயல்களில் இறங்குகின்ற பொழுது, பெண் விடுதலைக்கான இலக்கும் பயணமும் வேறுபட்டுப் பல்வேறு விதமான பெண்ணுரிமைச் செயல்பாடுகளைக் குழுக்கள், அமைப்புக்கள், இயக்கங்கள் போன்றவை

முன்னெடுத்துச் செல்லும் பெண் விடுதலை சார்ந்த கொள்கைகள் நாட்டுக்கு நாடு வேறுபடும் அரசியல், பொருளாதார, மத, பண்பாட்டிற்கேற்ப மாறுபடுவதைக் காணலாம். அந்த வகையில் தமிழகச் சூழலில் செயல்களம் காணும் பெண்ணியக் கொள்கைகளைக் கீழ்க்காணுமாறு தொகுக்கலாம்.

மேலை நாட்டுப் பெண்களும் கீழை நாட்டுப் பெண்களும் வெவ்வேறான வாழ்வியல் நெறிமுறைகளைக் கொண்டுள்ளனர். ஆண் முக்தி தரும் குழந்தையாக; தன் கடைசிக் காலத்தில் தன்னைக் காப்பாற்றும் மகனாக; மங்கல நிகழ்வுகள், விருந்து பேணல் போன்றவற்றில் பங்கேற்க சமூக அமைதி தரும் கணவனாக; குடும்பம், தாய்மை, குழந்தைப்பேறு போன்றவற்றைப் புனிதத் தன்மையுடனேயே பின்பற்றுபவர்களாக இந்தியப் பெண்கள் பெரும்பாலானோர் வாழும் சூழலில், பெண்ணியம் சார்ந்த அமைப்புகள், குழுக்கள், இயக்கங்கள் போன்றவை பெண் விடுதலைக்குரிய கொள்கைகளாக வகுத்தெடுத்துப் போராடி, வெற்றி பெறும் இலக்கை நோக்கிய பயணத்திற்குப் பின்வரும் கொள்கைகளைக் கைக்கொள்கின்றனர்.

- **ஆணாதிக்கத் தகர்ப்பு**
- **மரபு உடைப்பு**
- **மேலை நாட்டு நாகரிக எதிர்ப்பு**
- **பார்ப்பனியக் கலாச்சார மறுப்பு**
- **உயர்தட்டு மனோபாவச் சிதைப்பு**

முதலானவைகளை அடிப்படைக் கொள்கைகளாகக் கொள்ளலாம். தனிமனிதன், குடும்பம், மதம், சாதி, விழாக்கள், சடங்குகள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களில் ஆண் – பெண் சமத்துவச் செயல்பாட்டிற்காக,

- **பெண் அடிமைத்தன அனுபவங்களை வெளிப்படுத்துதல்.**

- பெண்ணடிமைக்கான சமூக, அரசியல், பொருளில், வரலாறு, பண்பாட்டுக் காரணிகளை ஆய்தல்.
- பெண் விடுதலைக்கான இலக்கினை நிர்ணயித்தல்.
- இலக்கை வென்றிடப் போராடல்

என்ற நிலைகளில் பெண்ணுரிமைக்கான களச்செயல்களில் இறங்குவதைக் காணலாம். அதாவது,

- ஆண் – பெண் வளர்ப்பில் வேறுபாடு களைதல்
- உணவு, உடை, நடை, வாழ்வியல் நெறிகளில் ஆண் – பெண் சமனை உருவாக்கப் போதிடல்
- பெண்கள் சமூக மதிப்பும், தகுதியும் உடையவர்கள் என வலியுறுத்தல்
- குடும்ப உறவுகளில் சமன் பேணப் போராடல்
- பெண்களின் நலன்
- அதிக வேலை வாய்ப்பு
- கல்வியில் அதிக வாய்ப்பு
- கருச்சிதைவு உரிமை
- குழந்தைப் பராமரிப்பு
- ஆண்களுக்கு நிகரான சமவேலை, சம உதியம்
- விதவை மறுமணம்
- பலதார மணத்தைத் தடை செய்தல்
- சதி மற்றும் முகத்திரை ஒழிப்பு
- பெண்களுக்குச் சட்ட ரீதியான சமத்துவம்

- ❖ குழந்தை மணத்தைத் தடை செய்தல்
- ❖ சொத்துரிமை

இவை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு, பெண்ணியவாதிகள் இயக்கங்கள் வாயிலாகவும், குழக்கள் வாயிலாகவும் போராடி வருவதைக் காணலாம்.

## 1.6 தொகுப்புரை

உலக உயிரினங்கள் மத்தியில் ஆண் - பெண் மையமிட்ட மானுட வாழ்வே வாழ்வியல் மையாகிறது. ஆண் - பெண் இணைந்து ஏனைய உயிரினங்களோடும், மனிதர்களோடும் கூட்டாக வாழ்கின்ற போது உருவாகக்கூடிய சமூகத்தில் ஆண் பெண் சமத்துவம் என்ற நிலையே ஆரம்ப காலத்தில் தொடர்கிறது. தாய்வழிச் சமுதாய அமைப்பு முறையில் பெண் தலைமை பெற்றுள்ளமையை அறியலாம். நிலவுடைமைச் சமுதாய அமைப்பில் பெண்ணின் சமூகவெளி ஒடுக்கப்பட்டு, வீடுதான் உலகம் என்ற நிலை உருவாக்கப்படுகின்ற போது, ஆண் தலைமைத்துவம் பெறுகின்றான். சமூகவெளி ஆணுக்கான உலகமாக மாறுகின்றது. இத்தகைய பின்புலத்தில் பெண்கள் அடிமைப்படுவதற்கான பின்புலத்தை அறிய முடிகிறது.

இத்தகைய சமூகப் பின்புலத்தில் பெண்கள் அடிமைப்பட்டுள்ளதற்கான காரணத்திற்கு எதிராகக் கலகக் குரல்கள் உலக நாடுகளில் ஒலிக்க ஆரம்பித்தன. உலக அளவில் எழுச்சி பெற்று ஒலித்த இத்தகைய கலகக் குரல்கள், பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சியினையும், விழிப்புணர்வையும் நல்கியுள்ளன. பெண்களுக்குக் கல்வியுரிமை, ஓட்டுரிமை பெறுதல், சமவேலை வாய்ப்பு, சம ஊதியம், சொத்துரிமை, பாலியல் சுதந்திரம் முதலானவற்றைப் போராட்ட வழி வென்றெடுத்துள்ளமையை உலக நாடுகளில் காணலாம்.

உலக அரங்கில் ஏற்றப்பட்ட பெண்ணிய தீபம் இந்தியாவில் பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் மூலம் ஒளிவிட ஆரம்பிக்கிறது. அதனால், பலதார மணம் தடைசெய்யப்படுகிறது. குழந்தைத் திருமணம் கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும் சொத்துரிமை பெறவும் வழிவகை செய்கிறது.

இந்தியாவில் ஒளிவிட்டுப் பரந்து விரிந்த பெண்ணிய தீபம் பெரியார் போன்ற பகுத்தறிவு பகலவன்களால் தமிழகம் முழுவதும் எடுத்துச் செல்லப்படுகிறது. அதனால், விதவைத் திருமணம் வரவேற்கப்படுகிறது. மூடப்பழக்கம் அழிக்கப்படுகிறது. ஆண்களுக்குச் சமமாகக் கல்வி பயிலப் பெண்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். உடன்கட்டை ஏறுவது முற்றிலுமாக ஒழிக்கப்படுகிறது.

உலக அளவில் பெண்ணியவாதிகள் பலர் தோன்றிப் பெண்ணிய விடுதலை குறித்த கருத்தியல்களைப் பதிவு செய்துள்ளனர். அவர்களது பெண்ணிய விடுதலைச் சிந்தனையை எவ்வித நோக்கத்தில் பதிவு செய்துள்ளனர் என்பதனை அவர் தம் வரையறைகள் வழிக்காண முடிகிறது.

பெண் விடுதலை சார்ந்த களச்செயல்களில் கருத்தாக்க நிலைகளிலும் ஈடுபாடு கொண்டு, செயல் வடிவில் பயணிக்கின்ற பொழுது, பெண் விடுதலை சார்ந்த பயணப் பாதை வேறுபாடுகளை மிதவாதப் பெண்ணியம், தீவிரவாதப் பெண்ணியம், சமதர்மப் பெண்ணியம், சூழல் பெண்ணியம், மதப் பெண்ணியம், பின் நவீனத்துவப் பெண்ணியம், ஒருபாற் புணர்ச்சிப் பெண்ணியம், இருத்தலியல் பெண்ணியம், மார்க்சியப் பெண்ணியம், தலைமைத்துவம் வேண்டாப் பெண்ணியம், கருப்புப் பெண்ணியம், மகளிர் முன்னேற்றப் பெண்ணியம், தலித் பெண்ணியம் எனப் பல்வகைப் பெண்ணியப் போக்குகளாக இவ்வியலுள் ஆய்வாளர் வகைப்படுத்தியுள்ளமையினைக் காணலாம்.

பல்வேறு வகைகளாகக் கிளைத்துள்ள பெண்ணியக் கருத்தாக்கக் கொள்கைகளின் பொதுமைப் போக்குகளை ஆய்வாளர் இவ்வியலில் விவரித்து உள்ளார். அதாவது, ஆணாதிக்க எதிர்ப்பு, குடும்ப நிறுவனத் தகர்ப்பு, மதத் தகர்ப்பு, பிராமணிய ஆதிக்க அழிப்பு, மேல்நாட்டுக் கலாச்சாரப் புறக்கணிப்பு, மேல் தட்டு மனோபாவ அழிப்பு, மரபு மீறல், எதிர்ப்பு மற்றும் மரபு உடைப்பு முதலான பல்வேறு பொதுமைக் கொள்கைகள் பல்வேறுபட்ட பெண்ணியக் கருத்தாக்கங்களில் வெளிப்படுவதனை இவ்வியலுள் ஆய்வாளர் விவரித்துள்ளமையை அறியலாம்.

## அடிக்குறிப்புகள்

1. டாக்டர் சண்முகசுந்தரம், பெண்ணியமும் கலை இலக்கியப் பிரதிகளும், ப.11.
2. மேலது., ப. 12.
3. முனைவர் இரா.ரெங்கம்மாள், முனைவர் சி.வாசுகி, பெண்ணியமும் அணுகுமுறைகளும், இலக்கியப் பயன்பாடும், ப. 14.
4. முனைவர் இரா.பிரேமா, பெண்ணியம், ப. 24.
5. மேலது., ப. 17.
6. மேலது., ப. 19.
7. மேலது., ப.
8. தேவதத்தா, பெண்ணியம், ப. 7.
9. முனைவர் இரா.பிரேமா, மு.கூ.நூ., ப. 11.
10. மேலது., ப. 22.
11. திரு.வி.க., பெண்ணின் பெருமை, ப. 33.
12. தேவதத்தா, வி.பி., பெண்மை, போலி புனைவு, எதிர்விளைவு, ப. 21.
13. தேவதத்தா, வி.பி., பெண்கள் படைப்பில் பெண்கள், ப.11.
14. பஞ்சாங்கம், க., பெண், மொழி, புனைவு, ப. 42.
15. மைதிலி சிவராமன், பெண்ணுரிமை - சில பார்வைகள், ப. 8.
16. ஜீவானந்தம், ப., புதுமைப் பெண், ப. 27.
17. மு.வரதராசன், பெண்மை வாழ்க, ப. 18.
18. மேலது., ப. 20.
19. முனைவர் இரா.பிரேமா, மு.கூ.நூ., ப. 23.
20. மேலது., ப.
21. ஆக்ஸ்போர்ட அகராதி, ப. 22.
22. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி, ப. 23.
23. முத்துச்சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், ப. 8.
24. மேலது., ப. 11.
25. மேலது., ப. 2.
26. மேலது., ப. 1.
27. மேலது., ப.2.
28. மேலது., ப. 3.
29. சாந்தி சத்தியானந்தம், பெண்களின் சுவடுகளில், ப. 23.
30. முனைவர் இரா.ரெங்கம்மாள், முனைவர் சி.வாசுகி, மு.கூ.நூ., ப. 10.
31. மேலது., ப. 10.
32. மேலது., ப. 10.
33. அரங்க மல்லிகா, தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், ப.11.
34. மேலது., ப. 12.
35. முனைவர் இரா.பிரேமா, மு.கூ.நூ., ப. 14.
36. பிரிட்டானியாக் கலைக்களஞ்சியம், ப. 20.

37. அரங்க மல்லிகா, பெண்ணிய குரலதிர்வும், தலித் பெண்ணிய உடல் மொழியும், ப. 13.
38. எம்.ஏ.சுசீலா, விடுதலைக்கு முன் தமிழ் நாவல்களில் பெண்கள், ப. 106.
39. அரங்க மல்லிகா, பெண்ணிய குரலதிர்வும், தலித் பெண்ணிய உடல் மொழியும், ப. 13.
40. சு.சண்முகசுந்தரம், மு.கூ.நூ., ப. 36.
41. முனைவர் இரா.பிரேமா, மு.கூ.நூ., ப. 28.
42. இரா. ஸ்ரீவித்யா, நவீனப் பெண்ணியல் திறனாய்வும் வ.ரா.வின் புதினங்களும், ப. 23.
43. மேலது., ப. 24.
44. மேலது., ப. 25.
45. மேலது., ப. 25.
46. மேலது., ப. 25.
47. மேலது., ப. 26.
48. மேலது., ப. 26.
40. மேலது., ப. 27.
50. மேலது., ப. 27.
51. மேலது., ப. 27.
52. மேலது., ப. 27.
53. மேலது., ப. 28.
54. மேலது., ப. 28.
55. மேலது., ப. 28.
56. மேலது., ப. 29.
57. மேலது., ப. 29.
58. மேலது., ப. 29.
59. மேலது., ப. 30.
60. மேலது., ப. 30.
61. மேலது., ப. 30.
62. மேலது., ப. 31.
63. மேலது., ப. 31.
64. மேலது., ப. 32.
65. மேலது., ப. 32.
66. மேலது., ப. 32.
67. மேலது., ப. 32.
68. மேலது., ப. 33.
69. மேலது., ப. 33.
70. மேலது., ப. 33.
71. மேலது., ப. 33.
72. மேலது., ப. 34.
73. மேலது., ப. 33.

# இயல் – 2

# கதைக்களமும் நிகழ்வும்

## 2.0 முன்னுரை

அரசு மணிமேகலை என்பவர் 1945-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6-ஆம் நாள் காஞ்சிபுரத்தில் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் மணிமேகலை. இவருடைய தந்தை பெயர் இரத்னசாமி. தாயார் பெயர் இராஜ கண்ணம்மாள். இருப்பினும் சிறு வயது முதல் மணிமேகலையை சி.டிட்டி அரசு, திருமதி கண்ணம்பா தம்பதியர் வளர்த்து வந்தனர். வளர்ப்புத் தந்தையின் மீதுள்ள பாசத்தால் தன் பெயரைக் கல்லூரியில் பயிலும் போது அரசு மணிமேகலை என்று மாற்றிக் கொண்டார்.

இவர் காஞ்சிபுரத்தில் உள்ள மிஷன் பள்ளியில் படித்தார். பிறகு, எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் இளங்கலையில் பொருளாதாரம் எடுத்துப் படித்தார். பிறகு தமிழ் மேல் உள்ள பற்றால் இராணி மேரி கல்லூரியில் முதுகலையில் தமிழ்ப்பாடம் எடுத்துப் படித்தார். பின் இளநிலை ஆய்வை எஸ்.ஐ.ஈ.டியில் முடித்தார். காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியில் (சென்னை) தேர்வுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றினார். இவர், நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை எனத் தம் எழுத்தாற்றலைப் பல்வகை இலக்கிய வடிவங்களில் வெளிப்படுத்தியுள்ளார். இவர் தம் படைப்புகளுக்காக, மத்திய அரசிடம் இருந்தும் மாநில அரசிடம் இருந்தும் பல்வேறு விதமான பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். கலைமாமணி விருது பெற்றிருப்பது மிகவும் குறிப்பிடத் தகுந்ததாகும். இவர் தம் படைப்புக்கள் பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளன (காண்க. பி.எ.1).

இவர் தம் நாவல் படைப்புக்களின் கதைக்கள நிகழ்வுகளை இவ்வியலுள் காணலாம்.

## 2.1 கதைக்களம்

அரசு மணிமேகலை நாவல் படைப்புக்களில் உள்ள கதைக்களத்தினை, கிராம வாழ்வியல் களம், நகர வாழ்வில் களம், கிராமமும் நகரமும் கலந்த வாழ்வியல் களம் என மூவகையாகப் பகுக்கலாம்.

'மனிதரில் இவர் மகாத்மா', 'கண்ணுக்குள் நூறு கவிதை' எனும் இரு நாவல்களும் கிராம வாழ்வியலை கதைக்களமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன.

'கனவு சுமக்கும் கண்கள்', 'நாளை நான் ஜெயிப்பேன்', 'பூவே இளம் பூவே', 'பொறுத்திரு பூமலர', 'என்றும் தொடரும் பயணம்', 'பொழுது ஒரு நாள் புலரும்', 'காத்திருங்கள் காலம் வரும்' ஆகிய ஏழு நாவல்களும் நகர வாழ்வியலை கதைக்களமாகக் கொண்டு அமைந்துள்ளன.

'தீக்குளிக்காத சீதைகள்' எனும் நாவல் கிராமமும், நகரமும் கலந்த வாழ்வியலைக் கதைக்களமாகக் கொண்டு அமைந்துள்ளன.

கிராம வாழ்வியலை மையமாகக் கொண்ட கதைக்களத்தைக் 'கண்ணுக்குள் நூறு கவிதை' எனும் நாவல் கொண்டுள்ளது.

கிராம வாழ்வையும், நகர வாழ்வையும் மையமாகக் கொண்ட கதைக்களத்தைத் 'தீக்குளிக்காத சீதைகள்' எனும் நாவல் கொண்டு அமைந்துள்ளது.

நகர வாழ்வியலை மையமாகக் கொண்ட கதைக்களத்தைக் 'கனவு சுமக்கும் கண்கள்', 'நாளை நான் ஜெயிப்பேன்', 'பூவே இளம் பூவே' ஆகிய நாவல்கள் கொண்டுள்ளது.

## 2.2 கதைக்கள நிகழ்வுகள்

கிராமம், நகரம் ஆகிய இரு களங்களிலும் கிராமமும் நகரமும் கலந்த களங்களிலும் பின்னப்பட்டுள்ள கதை நிகழ்வுகளைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தி இவ்வியல் விவரிக்கிறது. அவை பின்வருமாறு,

1) கிராம வாழ்வியல் நிகழ்வுகள்

2) கிராம – நகர்ப்புற வாழ்வியல் நிகழ்வுகள்

3) நகர வாழ்வியல் நிகழ்வுகள்

எனப் பாகுபடுத்தி இவ்வியல் விவரிக்கிறது.

### 2.2.1 கிராம வாழ்வியல் நிகழ்வுகள்

அரசு மணிமேகலையின் நாவல்களுள் ‘கண்ணுக்குள் நூறு கவிதை’, ‘மனிதரில் இவர் மகாத்மா’ எனும் இரு நாவல்களும் கிராமப்புற வாழ்வியலை மையமாகக் கொண்டு கதைக்கள நிகழ்வுகள் பின்னப்பட்டுள்ளன.

#### 2.2.1.1 கண்ணுக்குள் நூறு கவிதை

முத்தையன், பண்ணையார் வீட்டில் வேலைக்காரனாகப் பணிபுரிந்து வருகிறான். அவனது ஒரே மகள் பொன்னாத்தா. கறுப்பாக இருந்தாலும் நல்ல அழகாக இருப்பாள். தந்தைக்குத் தேவையான உதவிகளைச் செய்து வந்தாள்.

பண்ணையார் மகன் கதிர்வேலு. அந்தக் கிராமத்தில் இருந்து பட்டணத்துக்குப் படிக்கச் சென்றவன், தன் தந்தையை ஏமாற்றிப் பணத்தைப் பெற்று ஊதாரியாகச் செலவழித்துப் பெண் சகவாசத்துடன் வாழ்ந்து வந்ததால் கல்வியை ஒழுங்காக முடிக்காமல் ஊருக்கு வந்துவிடுகிறான்.

பண்ணை வீட்டில் வேலை செய்யும் முத்தையன் மகள் பொன்னாத்தா மேல் அவனுக்கு ஆசை எழுந்து, உடனே அவளை எப்படியாவது அடைய வேண்டும் என்று திட்டம் போடுகிறார். அதன்படி, அவளைக் கண்டிப்பாகத் திருமணம் செய்வதாகக் கூறி, அவளுடன் தகாத உறவை வைத்துக் கொள்கிறான்.

இதை அறியாத கதிர்வேலுவின் பெற்றோர், அவனுக்கு வேறு இடத்தில் பெண் பார்க்கின்றனர் என்று தன் அப்பா மூலம் அறிந்த பொன்னாத்தா, பண்ணை வீட்டுக்குச் சென்று கதிர்வேலுவிடம் கேட்ட போது, அவன் உண்மையை மறைத்து, கண்டிப்பாக உன்னைத் திருமணம் செய்து கொள்வேன் என்று பண்ணை வீட்டில் அவளுடன் தவறான உறவு வைத்துக் கொள்கிறான். அதைப் பண்ணையார் பார்த்து விடுகிறார். மகனையும், வேலைக்காரனின் மகளையும் கண்டிக்கிறார். பொன்னாத்தாவுக்கு வேசி என்று பட்டம் சூட்டுகிறார். தன் மகன் கதிர்வேலுவுக்கு வேறு பெண்ணைத் திருமணம் செய்து வைக்கிறார். இதற்கு இடையூறாக வந்த முத்தையனைப் பண்ணையார் கொன்று விடுகிறார்.

கதிர்வேலுவினால் கருவான குழந்தையுடன் பொன்னாத்தா வயிற்றில் தனிமையில் வாழ்கிறாள். பண்ணையார் ஆட்கள் பொன்னாத்தாவிற்குத் தொடர்ந்து தொல்லை கொடுக்கிறார்கள். இதையறிந்த பட்டாளத்துக்காரன் தங்கத்துரை பொன்னாத்தாவுக்கு மறு வாழ்வு கொடுக்கிறான். கதிர்வேலுவுக்குப் பிறந்த பொன்னாத்தாவின் குழந்தையையும் தன் குழந்தையாக எண்ணி வளர்க்கிறான். கோபமுற்ற பண்ணையார் தங்கத்துரை வயலைத் தீ வைத்துக் கொளுத்தி விடுகிறார். நியாயம் கேட்கச் சென்ற தங்கத்துரையைக் கடத்தி ஓரிடத்தில் அடைத்து வைத்துச் சித்ரவதை செய்கின்றனர். பண்ணையார் வீட்டில் நியாயம் கேட்கச் சென்ற தங்கத்துரை

வீட்டிற்குத் திரும்பி வரவில்லை. பொன்னாத்தா தன் மகள் மேனகாவுடன் தனிமையில் இன்னலுறுகிறாள்.

முத்தையனைக் கொலை செய்தமைக்காகவும், தங்கத்துரை காணாமல் போனதற்காகவும் பண்ணையாரையும், அவர் மகன் கதிர்வேலையும் காவலர்கள் கைது செய்கின்றனர்.

இந்நிலையில் தந்தையைக் கொலை செய்தமையால் வேதனையில் துடித்த பொன்னாத்தா, பொன்னாத்தா நிலை உணர்ந்து வாழ்வு கொடுத்த தங்கத்துரையையும் இழந்து தனிமையில் தவித்ததைக் கண்டு வேதனையுற்ற கிராம மக்கள் காவலரிடம் புகார் தெரிவிக்கின்றனர்.

இதனால், கோபமுற்ற பண்ணையார் மனைவி பொன்னாத்தாவுக்குப் பல வழிகளில் தொல்லை கொடுக்கிறாள். தொல்லைகளை எதிர்க்க இயலாமல் அந்த ஊரையே காலி செய்துவிட்டு வேறு ஊரில் குடிபெயர்ந்து, தன் மகள் மேனகாவை இந்த உண்மைகள் எதுவும் தெரியாமல் வளர்த்து வருகிறாள்.

மோகனா எதைப் பற்றியும் கவலைப்படாமல் சுற்றித் திரிந்து வருகிறாள். அம்மாவுக்கு வேலையில் எந்த உதவியும் செய்வதில்லை. ஒருநாள் அவர்கள் வசிக்கும் கிராமத்திற்குச் சினிமா படப்பிடிப்புக் குழுவினர் வருகின்றனர். அக்குழுவினருடன் வந்த சோமசேகர் என்பவன் மோகனாவைக் காதலிப்பதாகக் கூறுகிறான். அவளும் அவன் காதலை ஏற்கிறாள். ஆனால் பொன்னாத்தா மறுக்கிறாள். மோகனா காரணம் கேட்கிறாள். பொன்னாத்தா தான் ஏமாற்றப்பட்ட நிலையினையும் அதனால் பட்ட துன்பங்களையும் மகள் மோகனாவிடம் கூறுகிறாள்.

தன் அம்மா வெளிப்படுத்திய கடந்த கால அனுபவங்களைத் தன் காதலன் சோமசேகரிடம் மோகனா கவலையுடன் எடுத்துரைக்கிறாள். தன் அம்மாவிற்கு

ஏற்பட்ட நிலை தனக்கும் வந்துவிடக் கூடாது என்ற கவலையில் ஆழ்ந்திருந்த மோகனாவிடம், உன் அம்மாவின் கணவர், தங்கதுரையை நாம் இருவரும் தேடிக் கண்டுபிடித்து உன் அம்மாவிடம் ஒப்படைத்த பின் அவர்கள் நம்பிக்கையைப் பெற்று மனமகிழ்வுடன் வாழ்வோம் என உறுதி அளிக்கிறான். அதன்படி இருவரும் தங்கத்துரையைத் தேடி பண்ணையார் வாழும் கிராமத்திற்குச் செல்கின்றனர். வேலைக்காரியாகப் பண்ணை வீட்டுக்குள் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்கிறாள் மோகனா. பண்ணையில் அனைவராலும் ஓரங்கட்டப்பட்டு நோயாளியாக வாழ்கிறான் கதிர்வேல். வேலைக்காரியான மோகனா தான் பெற்ற மகள் என்பதை கதிர்வேலும், கதிர்வேல்தான் தன் தந்தை என்பதை மோகனாவும் அறிந்திருந்தும் இருவரும் இவ்வுறவு முறையை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.

இருப்பினும், தன் அப்பா, அம்மா முதலானோர் தங்கத்துரைக்கு இழைத்த கொடுமைகளையும் இன்னலுற்ற தங்கத்துரை பைத்தியமாக மாறிய நிலையினையும், கதிர்வேலு மோகனாவிடம் தெரிவிக்கிறான்.

மோகனா, தன் தந்தையைத் தேடும் பணியில் சோம சேகருடன் இணைந்து ஈடுபடுகிறாள். இருவரும் இணைந்து தேடும் விடாமுயற்சியைக் கண்டு மனம் மாறிய பொன்னாத்தா இவர்களின் திருமணத்திற்கு இசைவு தெரிவிக்கின்றாள். காதலை மனதில் சுமந்து திருமணத்தைத் துறந்து, தங்கதுரை தொண்டு நிறுவனம் என ஒன்றை தந்தையின் பெயரில் தொடங்கி, கிராமத்தில் விழிப்புணர்வு பணியில் ஈடுபடப் போவதாகத் தெரிவிக்கிறாள். தன் மகள் மோகனாவின் திருமணச் செலவிற்காகப் பால் விற்று சேர்த்தப் பணத்தைத் தொண்டு நிறுவனம் நடத்தக் கொடுத்து உதவி செய்கிறாள்.

### 2.2.1.2 மனிதரில் இவர் மகாத்மா

வெங்கடேஷன் என்பவருக்கு இரகுராமன், இராஜா ராமன் என்ற இரு மகன்கள் இருந்தனர். இரகுவுக்கு வயது 25. இராஜா ராமனுக்கு வயது 12. அவர்கள் குடும்பத்தில் அனைவரும் நண்பர்கள் போல் பழகினார்கள். அவர் காந்திஜி சேவா சங்கம் நடத்தி வந்தார்.

இரகுவுக்குத் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டிருந்தது. பெண்ணின் பெயர் உமா. வரதட்சணையே வாங்காமல் இரகு திருமணம் செய்து கொண்டான்.

பாசத்திற்காக ஏங்குகிற மாமனார், கணவர் மற்றும் கணவரின் தம்பியிடம் அன்பை வாரி வழங்குகிறாள் உமா. இவர்களுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்று அறிந்து திறம்படக் குடும்பம் நடத்துகிறாள். புகுந்த வீட்டில் மருமகளாக அல்லாமல் சிறந்த மகளாக வாழ்க்கை நடத்துகிறாள். அன்பு என்பதை மட்டும் மனத்தில் கொண்டு நிறைய தன்னம்பிக்கை, துணிச்சலோடு, யாரையும் சந்தேகப்படாமல், கோபப்படாமல் அனைவரையும் ஒருங்கிணைத்து இல்லற வாழ்வில் மேன்மை காண்கிறாள் உமா.

தீண்டாமை ஒரு பெருங்குற்றம் என்றும் சொல்லுக்கு ஏற்ப வெங்கடேஷன் அனைவரையும் நண்பரைப் போல் மதித்து உறவாடினார். உமாவும் எல்லோரிடமும் கலகலப்பாகப் பழகினாள்.

வெங்கடேஷன் தான் நிருவகித்து வந்த காந்திஜி சேவா சங்கத்தில் தன் மருமகள் உமாவையும் உறுப்பினராகச் சேவையில் ஈடுபடச் செய்வதோடு மட்டுமல்லாமல், அச்சங்கத்தில் தலைமை உரையாற்றுகிற அளவுக்கு தன் மருமகளை சேவை மனப்பான்மை உடையவராக மாற்றுகிறார்.

சேவா சங்கத்தில் ஒரு நாள் வெங்கடே தலைமை உரையாற்றிக் கொண்டிருந்த பொழுது நெஞ்சு வலியால் இறந்து விடவே அதிர்ந்த உமா மனம்

தளராது அச் சேவா சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று தன் மாமா விட்டுச் சென்ற பணியைச் செவ்வனே செய்ய ஆரம்பிக்கிறாள். அப்பொழுது, தான் கருவுற்று இருப்பதை எண்ணி மகிழ்ந்த உமா, மனிதரில் மகாத்மாவான தன் மாமனாரே மகனாக கருவுற்றிருக்கிறார் என்று பூரிப்படைகிறார்.

### 2.2.2 கிராம – நகர்ப்புற வாழ்வியல் நிகழ்வுகள்

அரசு மணிமேகலையின் ‘தீக்குளிக்காத சீதைகள்’ எனும் நாவல் கிராமப்புற வாழ்வியலையும், நகர்ப்புற வாழ்வியலையும் மையமாகக் கொண்டு கதை நிகழ்வுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

#### 2.2.2.1 தீக்குளிக்காத சீதைகள்

கண்மணி ஓர் ஏழைக் குடும்பத்துப் பெண். தன் தாய் தந்தை இறந்துவிட்ட நிலையில் உடன் பிறந்த அண்ணன் சிவகுருவாலும், அக்கா மஞ்சுளாவாலும் அனாதை ஆக்கப்படுகிறாள். மாமா கனுபாஸா வாங்கிக் கொடுத்த அலுவலக வேலையைப் பார்க்க விடாமல் மேலதிகாரி மாதவன், கண்மணியைப் பாலியல் தொந்தரவு செய்ததால், அந்த வேலையை விட்டுவிட்டு விடுகிறாள்.

ஒரு நாள் நாளிதழில் உடல் நலமில்லாத பெண்மணியைப் பார்த்துக் கொள்ள ஆள் தேவை என்ற விளம்பரத்தைப் பார்த்தாள். உடனே அந்த வேலையில் சேர சென்னை சென்றாள். வேலைக்கு வந்த இடத்தில் தான் உதவி செய்ய வந்த பெண்ணுக்குப் பைத்தியம் என்று அறிந்தாள். உடனே வேலையை விட்டுவிட எண்ணினாள். ஆனால் அந்த வீட்டின் மேனேஜர் சாரங்கன் அந்தப் பெண்ணின் கதையைக் கூறினார்.

செண்பகராஜ பூபதியின் ஒரே செலல மகள் மதுமதி என்பவள் ஆவாள். பெண்ணால் எதையும் செய்ய முடியும் என்பதை நிரூபிக்கத் தன் மகளை அயல்நாட்டிற்கு அனுப்பி படிக்க வைத்தார். அவரும் பல வியாபார நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்து நாடு திரும்பினார். தந்தையின் கம்பெனியைத் திறம்பட ஏற்று நடத்தினாள். பூபதி அவளை ரமணன் என்பவனுக்குத் திருமணம் செய்து வைத்தார். அவன் மிகவும் கெட்டவன். அவன் மதுமதியைக் கொடுமைப்படுத்தினான். எனவே, அவள் அவளை விவாகரத்து பண்ண எண்ணினாள். இதை மேனேஜர் சாரங்கனிடம் கூறினாள். அதற்குள் மதுமதிக்கு பைத்தியம் பிடித்து விடுகிறது. மேனேஜர் சாரங்கன் பூபதியிடம் இதை மறைத்து விடுகிறார். மதுமதி வெளிநாடு சென்றிருப்பதாகக் கூறினார். அதற்குள் பூபதிக்கு பக்கவாத நோய் ஏற்பட்டது. இதனால் ரமணன் மேலும் பல தகாத செயலில் ஈடுபட்டான். மதுமதியின் கதையைக் கேட்ட கண்மணி வேலைக்குச் சேர்ந்தாள். சாரங்கன் பூபதியிடம் கண்மணியை மதுமதியின் தோழி என்று அறிமுகம் செய்து வைக்கிறார். கண்மணி மதுமதியையும், பூபதியையும் கண்ணும் கருத்துமாகப் பார்த்தாள். பூபதியும் அவளைத் தன் மகளைப் போல எண்ணினார். பூபதியின் உடல் நிலை தேறத் தொடங்கியது.

ஒருநாள் கண்மணியும், சாரங்கனும் மதுமதியின் உடல்நிலை பற்றிப் பேசிக் கொண்டிருந்ததை பூபதி கேட்டுவிடுகிறார். ரமணன் தன்னை ஏமாற்றித் தன் மகளைத் திருமணம் செய்துவிட்டுச் சொத்தினை அபகரிக்கத் திட்டமிட்டு, அவளைப் பைத்தியமாக்கிய செய்தியை அறிந்த செண்பகராஜ பூபதி வேதனைப்படுகிறார். அதனால் தன் மருமகன் ரமணனை நிர்வாகப் பொறுப்பிலிருந்து விலக்குகிறார்.

அதனால் கோபமடைந்த ரமணன் பிரபாவதி என்ற பெண்ணுடன் சேர்ந்து தவறாகக் காமம் துய்த்துக் கெட்ட வழியில் நடக்கிறான். உண்மையை அறிவதற்காகப்

பூபதியால் அனுப்பப்பட்டாலும், அவனுடன் சேர்ந்து வாழலாம் என்ற எண்ணத்துடன் இருந்த மதுமதிக்கு, தன் மனைவி பைத்தியமாவதற்குத் தானே காரணம் என்று ரமணன் கூறியதைக் கேட்டதும் வெறுப்படைகிறாள். இப்படிப்பட்ட கெட்ட வாழ்க்கை வேண்டாமென்று, அந்தக் கெட்டவனிடமிருந்து பிரிந்து நல்லவளாக மாறி சைக்கிள் கடை நடத்தி வாழ முற்படுகிறாள். அவளிடம் பணம் வாங்கிச் செல்ல ரமணன் வருகிறான். அந்த நேரம் திருடன் ஒருவன் பிரபாவதியைக் கொலை செய்துவிட்டு ஓடிவிடுகிறான். அந்தப் பழி ரமணன் மேல் விழுகிறது. நீதிமன்றம் அவனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கிறது.

செண்பகராஜ பூபதி கண்மணிக்கு அலுவலக நிர்வாகத்தை கற்றுக் கொடுக்கிறார். கண்மணியும் நிர்வாகத்தை ஏற்று திறம்படச் செயலாற்றுகிறாள். பணம் வர உறவும் வரும் என்ற பழமொழிக்கேற்ப கண்மணியின் தமக்கை மஞ்சுளா கண்மணியிடம் அவள் உடன்பிறந்த அக்கா மஞ்சுளா உதவி கேட்டு வருகிறாள். கண்மணி உதவ மறுத்து விடுகிறாள். அதனால், மஞ்சுளா கண்மணியைத் தவறாகப் பேசுகிறாள். இதையறிந்த செண்பகராஜபூபதி, தன் சொத்தை இரு பங்காகப் பிரித்துக் கொடுக்கிறார். கண்மணி சொத்தைப் பிரிப்பதை நினைத்து வருத்தமடைகிறாள். பணத்தால் எதையும் சாதிக்கலாம் என்ற சிந்தனை செண்பகராஜ பூபதியிடம் இருந்து அகல்கிறது. தன் மகளுக்கு சுயநினைவு எப்பொழுது வரும் என்ற எதிர்பார்ப்புடன் தன் நிர்வாகப் பணியை நம்பிக்கையுடன் தொடர்கிறார்.

### 2.2.3 நகர வாழ்வியல் நிகழ்வுகள்

'கனவு சுமக்கும் கண்கள்', 'நாளை நான் ஜெயிப்பேன்', 'பூவே இளம் பூவே', 'பொறுத்திரு பூ மலர', 'என்றும் தொடரும் பயணம்', 'பொழுது ஒரு நாள் புலரும்',

‘காத்திருங்கள் காலம் வரும்’ ஆகிய ஏழு நாவல்களின் கதைக்கள நிகழ்வுகள் நகர்ப்புறத்தை மையமாகக் கொண்டு புனைவு பெற்றுள்ளன.

### 2.2.3.1 கனவு சுமக்கும் கண்கள்

நந்தகோபால் தன் மனைவி மங்களாவைப் பிரிந்து தனிமையில் வாழ்பவர். மனைவி கொடுக்கும் தொல்லைகளைப் பொறுக்க முடியாத நந்த கோபால் அவள் அறியாத வண்ணம் வேறு ஊரில் வந்து வாழ்கிறார்.

அந்த ஊரில் நண்பர்கள் நற்பணி மன்றத்தில் வரதன் என்ற இளைஞனுடன் சேர்ந்து சமூக சேவை செய்து வருகிறார்.

ரங்கநாதனின் மனைவி மைதிலி, தங்கை நளினி, இவள் திருமணமான புதிதிலேயே வாழ்க்கையைத் தொலைத்தவள். அதனால் அவள் அவர்களுடைய வீட்டு உறுப்பினர்களாலேயே ஓரங் கட்டப்படுகிறாள்.

இதை அறியாத நந்தகோபால், தனக்கு நன்கு தெரிந்த மேனேஜர் சுந்தர் என்பவரை வரதன் மூலம் திருமணம் முடிக்க ஏற்பாடு செய்கிறார். அதை அறிந்த அண்ணன் ரங்கநாதன், அம்மா இருவரும் மகிழ்கிறார்கள். ஆனால் நளினி திருமணம் செய்ய மறுக்கிறாள். நந்தகோபாலை திருமணம் செய்ய விரும்புவதாகக் கூறுகிறாள். அதிர்ந்து போன நந்தகோபாலைப் பேசி சம்மதிக்க வைக்கிறாள்.

வடிவேல் காண்ட்ராக்டர் தன் அடியாள் மூலமாக நந்தகோபாலை வெட்டிவிடுகிறார்கள். வரதன் ஓடி வந்து நளினி அக்காவிடம் நடந்ததைக் கூறுகிறாள். வெட்டுப்பட்டுக் கிடக்கும் நந்தகோபாலை தன் மடி மீது கிடத்துகிறாள்.

நந்தகோபால் உடம்பிலிருந்து வெளியேறும் இரத்தம் நனிளி ஆடையை வண்ணமாக மாற்றுகிறது. குங்குமமாக அவள் உடம்பில் பதிகிறது.

நந்தகோபாலை சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் செல்கிறார்கள். பின்பு அங்கு மருத்துவம் செய்ய முடியாமல் சென்னைக்குக் கொண்டு செல்கிறார்கள். அங்கு தீவிர சிகிச்சைப் பெற்று, குணமடைந்து திரும்பி வந்து நளினியைத் திருமணம் புரிந்து அழைத்துச் செல்கிறான்.

விதவை நளினியின் கனவு சுமக்கும் கண்கள் ஆனந்தத்தில் திளைத்தது.

### 2.2.3.2 நாளை நான் ஜெயிப்பேன்

தியாகு வேலை இல்லாத பட்டதாரி. பல இடங்களில் வேலை தேடியும் கிடைக்கவில்லை. தியாகுவின் மாமா சுந்தர் மிகவும் நல்லவர். சமூகத்தில் நடக்கும் அநீதிகளைத் தட்டிக் கேட்பார். அதனால் சமூக விரோதி கும்பலால் வெட்டிச் சாய்க்கப்படுகிறார்.

தியாகுவுக்கும் மாமாவைப் போலச் சமூகச் சிந்தனை மிகுந்து காணப்பட்டது. அதனால் இனி வேலை தேடி அலையப் போவதில்லை என்று அனைத்துச் சான்றிதழ்களையும் தீயில் போட்டு எரிக்கிறான். சுயமாகத் தொழில் தொடங்கி நான் நான்கு பேருக்கு வேலை கொடுப்பேன் என்று உறுதி எடுக்கிறான்.

அச்சுத் தொழிலகத் தொழில் தொடங்குகிறான். தாத்தா, அம்மா அவர்களை நன்கு பராமரித்துக் காக்க மிகவும் க டப்படுகிறான்.

அவர்கள் குடியிருக்கும் பக்கத்து வீட்டில் மரகதம் – சிவராமன் தம்பதியர் இருந்தனர். சிவராமன், தியாகுவுக்கு பல வழிகளில் உதவி புரிந்தார். இன்னொரு வீட்டில் தியாகுவின் நண்பன் ஆனந்தின் குடும்பம் இருந்தது. தியாகு ஆனந்தின் தங்கை உஷாவை விரும்பினான்.

அடுத்த வீட்டில் மாணிக்கம் சுந்தரவல்லி தம்பதியினர் வசித்தனர். அவர்களின் ஒரே மகள் பொன்னி என்பவள் ஆவாள். மாணிக்கம் பெண்களை வைத்து வியாபாரம் செய்து வந்தான். இதை அறிந்த பொன்னி தன் வீட்டை விட்டு வெளியேறி சகோதரனைப் போல எண்ணும் தியாகுவின் வீட்டிற்கு வந்தாள். தந்தை என்று அந்தத் தொழிலை விடுகிறாரோ அன்று தன் வீட்டிற்கு வருவதாகக் கூறினாள். மகளின் பிடிவாதத்தால் மாணிக்கம் திருந்தினான்.

வேலை கிடைக்காத காரணத்தினால் ஆனந்த் பல மோசமான தொழில் புரிய ஆரம்பித்தான். தீய பழக்கத்தினாலும், தகாத நடவடிக்கையினாலும் அவள் இறந்துவிட குடும்பப் பொறுப்பு உஷாவின் மேல் விழுந்தது. அவள் தன்னையே விற்று குடும்பத்தைக் காப்பாற்றினாள்.

தியாகுவுக்கு வேலை கிடைத்தது. அவனும் வசதி வாய்ப்புகளுடன் வாழ ஆரம்பித்தான். தியாகு மனதில் இன்னும் உஷா நிலைத்து இருக்கிறாள். பொன்னி போராடி தன் அப்பா வாழ்க்கையை மாற்றியது போல், குடும்பச் சூழ்நிலை காரணமாக விபச்சாரத்தில் தள்ளப்பட்டிருக்கும் உஷாவைத் திருத்தித் திருமணம் புரிய எண்ணுகிறான். ஆனால் அவள் மறுத்து தற்கொலை செய்து கொள்கிறாள்.

உஷாவைப் போல வாழ்விழந்து தவிக்கும் பெண்ணிற்குத் தான் வாழ்க்கை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், நம்பிக்கையுடன் தியாகு வாழ்கிறான்.

### 2.2.3.3 பூவே! இளம் பூவே!

சொர்ணா ராஜலிங்கத்தின் ஒரே மகள். அப்பா, அம்மா, மகள் என மூன்று பேரும் மகிழ்வுடன் நண்பர்கள் போலப் பழகி மகிழ்வுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

ராஜலிங்கம் வியாபாரத்தில் சிறந்து விளங்கி, உடல், உள்ள நலத்துடன் இருக்கின்ற பொழுது, பெண்ணைத் தன் மகனுக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்ட தூரத்து உறவான காந்திமதியம்மாள், ராஜலிங்கம் விபத்தில் கால் ஒடிந்து வியாபாரம் செய்ய முடியாமல் சிக்கித் தவிக்கின்ற போது, காந்திமதியம்மாள் உதவ மறுக்கிறாள். இதனால் வெறுப்படைந்த சொர்ணா வேலை தேட வேண்டும் என்ற எண்ணத்தில் காந்திமதியம்மாள் வீட்டிலிருந்து சோகத்துடன் திரும்புகிறாள்.

வழியில் குடிகாரன் ஒருவனால் சொர்ணா அச்சுறுத்தப்படுகிறாள். அந்தக் கயவனின் பிடியில் இருந்து, ரமே  என்ற வாலிபன் அவளைக் காப்பாற்றுகிறான்.

விபத்தில் இருந்து மீண்டு வந்த இராஜலிங்கம், வியாபார நண்பர் குருமூர்த்தியிடம் பண உதவிக்காக எதிர்பார்த்திருக்கிறார். ஆனால், பணத்தைத் தருவதாகக் கூறிவிட்டுச் சென்றவன் பதினைந்து நாட்கள் ஆகியும் திரும்பி வரவில்லையாதலால் ராஜலிங்கத்தின் நோய் தீவிரமடைகிறது. அதனால், சொர்ணா மேலும் சில கல்விப் பயிற்சியைப் பெற்று வேலைக்குச் செல்ல முற்படுகிறாள். ஆனால் பொருத்தமான எந்த வேலையும் கிடைக்காததால் வருத்தமடைகிறாள்.

இராஜலிங்கம் வேறு ஒரு நண்பருடன் சேர்ந்து வியாபாரம் செய்யத் தொடங்கி முன்னேற்றத்தைக் காண்கிறார். அத்தொழிலில் தன் செல்ல மகள் சொர்ணாவையும் ஈடுபடுத்துகிறார். தொழில் நண்பர் மகன் ராம் குமாருக்குச் சொர்ணாவைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஆனால், சொர்ணாவின் மனம் தன்னைக் காப்பாற்றிய ரமே  மீது இருப்பதால் திருமணத்திற்கு மறுக்கிறார். அதை ரமேஷிடம் சொல்லி விரைவில் தன்னைத் திருமணம் முடிக்க ஏற்பாடு செய்யலாம் என்று அவனைக் காண விரைகிறாள்.

ஆனால், அந்தத் தொழிலதிபர் மகன் ராம்குமார் என்பர் நான்தான் என்பதை சொர்ணாவிடம் மறைத்து விடுகிறான். ஆகையால் சொர்ணா நேரிடையாகச் சென்று, தான் ரமே என்பவரைக் காதலிப்பதாக, அப்பா பார்த்த மாப்பிள்ளையிடம் கூறுகிறாள். அப்பொழுதுதான் இருவரும் ஒரே ஆள் என்பதை அறிந்து மகிழ்கிறாள். இருவரும் திருமணம் புரிந்து மகிழ்வுடன் வாழ்கிறார்கள்.

### 2.2.3.4 பொறுத்திரு பூ மலர

இராணி பத்மாவதி மகளிர் கல்லூரியில் உள்ள மாணவியர் விடுதியில் தங்கி பூவிழி பயில்கிறாள். அங்கு ஏற்கனவே படித்துக் கொண்டிருக்கும் மாணவிகளுள் அர்ச்சனா, காஞ்சனா, கண்ணம்மா, ரோஸ் மூத்த மாணவியர் முதலான முதலாமாண்டு மாணவிகளைக் கேலி செய்கிறார்கள். இவர்கள் எல்லோரும் அடி பணிந்து மூத்த மாணவிகள் சொல்வதைச் செய்கிறார்கள்.

அது போலப் பூவிழியையும் வம்புக்கு இழுக்க முயற்சிக்கிறார்கள். ஆனால் பூவிழி பயப்படாமல் அவர்கள் கேட்பதற்கெல்லாம் தடாலடியாகப் பதில் சொல்லி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்துவதோடு மட்டுமில்லாமல், சாதுரியமாக அவ்வழி வந்த பேராசிரியரிடம் கூறிவிடுகிறாள். அதனால் அர்ச்சனா குழுவைச் சார்ந்த மாணவிகள் கல்லூரி முதல்வரிடம் மாட்டிக் கொள்கிறார்கள்.

எல்லா மாணவிகளும் தங்கிப் படிக்கும் விடுதியில் மங்கை என்ற மாணவி சக மூத்த மாணவியரின் கேளிக்கைகளைச் சமாளிக்க முடியாமல் துன்பப்படுகிறாள். அவளைத் தேற்றி, எழுச்சி வார்த்தைகள் கூறி, இந்தச் சூழ்நிலையில் மூன்றாமாண்டு மாணவிகளை எப்படிச் சமாளிக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்துத் தைரியப்படுத்துகிறாள்.

கல்லூரி முதல்வரிடம் தண்டனை பெற்ற அர்ச்சனா குழு மாணவியர் விடுதியில் பூவிழியைப் பல்வேறு வேலைகளைச் செய்யச் சொல்கிறார்கள். அனைத்தையும் முகம் கோணாமல் செய்து முடித்து அசத்துகிறாள்.

விடுதியில் உரிய அனுமதி பெற்று பூவிழியும், மங்கையும் வெளியில் செல்கிறார்கள். கல்லூரியும் விடுதியும் அருகில் இருப்பதால் வெளியில் சென்று வருவது மாணவிகளுக்குப் புத்துணர்ச்சி தரும் ஒன்றாகும். ஆனால், அப்பா அம்மாவின் துன்பங்களை நினைத்துப் பார்க்காமல் நவநாகரீக உடை வாங்கி போட்டுக் கொண்டு முகத்திற்குப் பொருந்தாத உதட்டுச் சாயத்தைத் தீட்டிக் கொண்டு திரியும் பெண்களைப் பார்த்து பூவிழி வருத்தமடைகிறாள்.

பூவிழியும், மங்கையும் தனக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொண்டிருக்கும் அந்த நேரத்தில், தன் கல்லூரியில் படிக்கும் கண்ணம்மாவை ஒரு ஆடவன், அடிக்க ஓங்கியபடிக் கண்ணம்மாவின் கையைப் பிடித்துத் துன்புறுத்துகிறான். இந்தக் கொடூரக் காட்சியைக் கண்ட பூவிழி பொங்கியெழுகிறாள்.

தன்னுடைய தாத்தாவை மனதில் நினைத்துக் கொண்டு அருகில் உள்ள கடையில் இருந்த கரும்பு ஒன்றை எடுத்து அவனை அடித்து விரட்டுகிறாள். கயவன் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட கண்ணம்மாவைப் பார்த்து பூவிழி புதுமைப் பெண்ணாகவும், புரட்சிப் பெண்ணாகவும் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறாள்.

பின்பு எல்லோரும் விடுதிக்குச் செல்கிறார்கள். செல்லும் வழியிலேயே வண்டிக்காரக் கிழவன் பூவிழியைப் பாராட்டிப் புகழ்கிறான். இந்தச் செய்தி உடனடியாக விடுதி முழுவதும் பரவி அனைவரும் முதலாமாண்டு பூவிழியை வியப்புடன் பார்க்கின்றனர்.

ஆனால் ஒரு பேராசிரியை மட்டும், ஆண்பிள்ளையை நடு ரோட்டில் வைத்து அடித்ததால் கல்லூரிக்கும், உனக்கும்தான் அவப்பெயர் என்று கூறியவுடன் மங்கை புரட்சியாகப் பேசுகிறாள்.

‘சலங்கைகள்’ என்ற பத்திரிக்கையில் பணிபுரியும் இமயவரம்பன், பூவிழியிடம் பேட்டி காண்பதற்காகக் கல்லூரி விடுதிக்கு வருகிறான். அவனின் கறுப்பழகு பூவிழியைக் கவர்ந்து விடுவதால் நாணத்தில் தலை குனிந்து நிற்கிறாள்.

நடந்த சம்பவம் பற்றி அழகான பேட்டி எடுத்த பின்பு, அதை அவளின் புகைப்படத்துடன் செய்தியாக வெளியிடுகிறான். இந்நிலையில் இமயவரம்பன் மேல் உருவாகிய காதல் உணர்வைப் பூவிழி அமைதிப்படுத்துகிறாள்.

பூவிழியின் வீர தீரச் செயலை இதழில் படித்து அறிந்த தாத்தா, அப்பா, அம்மா உடன் வந்து தன் புகழை நிலை நாட்டிய பேத்தியை மகிழ்ச்சியோடு பாராட்டிச் செல்கிறார்கள். பூவிழி ஒரு வாரத்தில் கல்லூரி முழுவதும் பிரபலமாகி விடுகிறாள்.

பூவிழி கல்லூரியில் உள்ள குறைகளை நேரிடையாகக் கல்லூரி மாணவத் தலைவி யூனியன் பிரசிடெண்ட் ஜில்லு மேனகாவிடம் சொல்கிறாள். ஆனால் அவள் கல்லூரிக் குறைகளை முதல்வரிடம் கூற மறுத்து விடுகிறாள்.

அதனால், பூவிழி தைரியத்துடன் முதல்வரிடம் கூறி, கல்லூரி முழுவதும் நல்லவிதமாக மாற வழி வகை செய்கிறாள்.

அதே போல் கல்லூரியில் மாணவர் பேரவைத் தலைவராக இருக்கிறார்கள் தமிழ் தெரிந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறி, பிற மொழி பேசுபவர்கள் மாணவர் பேரவைத் தலைவராக வரும் பழைய வழக்கத்தை மாற்றுகிறாள்.

இதற்கிடையில் இமயவரம்பன் பூவிழியைப் பல வழிகளில் தினமும் மூன்று முறை சந்திக்கிறான். பூவிழி அதற்குத் தடை போடுகிறாள். பரிந்து பேசி மாதம் ஒரு தடவை சந்திப்பதற்கு அனுமதி வாங்குகிறான்.

ஆனால், பூவிழியோ விடுதியை விட்டு வெளியேறி, தான் புதிதாகக் குடியேறிய வீட்டிலிருந்து வருகிறாள். அதனால் இமயவரம்பரன் அவளைச் சந்திக்க இயலாமல் போகிறது. அதனால் அவள் மிகுந்த வருத்தம் அடைகிறான். தன்னுடைய ஹவி டீச்சர், 3-ஆம் ஆண்டு தோழி காஞ்சனா ஆகியோரின் காதல் வாழ்வைத் தனது காதல் வாழ்வுடன் ஒப்பிட்டு மகிழ்வும் குழப்பமும் அடைகிறாள்.

மனக் குழப்பத்திலிருந்த பூவிழிக்கு முதல் இருபது ஆண்டுகள் ஒரு மனிதன் தன் பெற்றோரிடமும், ஆசிரியரிடமும் அடிமை போல நடந்து கொள்ள வேண்டும் என்ற செஸ்டர்டன் அறிஞரின் பொன் மொழியை, ஹவி டீச்சர் அடிக்கடி கூறுவது நினைவுக்கு வந்தவுடன் மனக்குழப்பத்திலிருந்து மீளுகிறாள்.

பூவிழியின் அப்பா தன் நண்பனின் மகன் டாக்டர் தங்கவேலுவுக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஆனால் தங்கவேலுவைத் திருமணம் செய்ய விருப்பம் இல்லை என்று அம்மாவிடம் மறுத்துப் பேசியும் பலன் இல்லாததால், வீட்டிற்கு வந்த தங்கவேலுவிடம் பூவிழி அண்ணா அண்ணா என்று சொல்லி பழகி அப்பாவின் ஆசைக்கு முடிவு கட்டுகிறாள்.

தான் இமயவரம்பன் என்பவரைத் திருமணம் செய்ய விரும்புவதாகத் தெரிவிக்கிறாள். ஆனால் அதற்குப் பூவிழி அப்பா மறுப்புத் தெரிவித்து விடுகிறார்.

பூவிழி முதன் முதலாகக் கடிதம் மூலம் இமயவரம்பனைத் தொடர்பு கொண்டு நேரில் சந்தித்துப் பேசுகிறாள். பின்னர் வீட்டிற்கு வந்து வாகனத்தில் கொண்டு வந்து

விடுகிறான். இதைக் கண்ட பூவிழியின் அப்பா, தன் மகள் என்றும் பாராமல் அடித்துவிட்டு இகழ்வாக பேசுகிறார். பூவிழி அதனால் துடித்துப் போகிறாள்.

இமயவரம்பன் அவரைச் சமாதானப்படுத்தி அமரச் செய்கிறான். நான் ஐ.ஏ.எஸ். தேர்வில் தேர்ச்சி பெற்று விட்டேன். எங்கள் ஊரில் நிறைய சொத்துக்கள் உள்ளன. சொந்தக் காலில் நிக்க வேண்டும் என்பதற்காகத் தனித்து வந்து பத்திரிக்கையில் பணிபுரிகிறேன் என்று உண்மை நிலவரத்தைச் சொல்வதைக் கேட்டுப் பூவிழியும் அவள் தந்தையும் ஆச்சரியப்பட்டுப் போகின்றனர்.

பூவிழி கல்லூரி மாணவர் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறாள். இமயவரம்பன் ஐ.ஏ.எஸ். பணிப் பயிற்சிக்குப் போய்ப் பயிற்சியை முடித்துவிட்டு மதுரை மாவட்ட ஆட்சியராகப் பொறுப்பேற்கிறான்.

மாணவர் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவள் பணி தீவிரமடைகிறது. ஒரு நாள் கிராமத்தில் சேவை செய்யும் போது, காஞ்சனா ஒருவனால் ஏமாற்றப்பட்டு, அவனால் வேறொருவனுக்கு விற்கப்பட்டு, அதன் மூலம் நோய் வாய்ப்பட்டுக் கிடக்கிறாள். அதனால் அவளை மருத்துவ முகாமுக்கு அழைத்துச் செல்கிறாள். அங்கு அவளுக்குக் குணமளிக்க முடியாத நோய் ஒன்று வந்துள்ளதாகப் பரிசோதித்த மருத்துவர் கூறுகிறார். அதனால் மருத்துவமனையில் உயர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகிறாள். கல்லூரியில் முப்பெரும் விழா கொண்டாடுகிறார்கள். நிறைவுச் சொற்பொழிவு நிகழ்த்துவதற்கு மாவட்ட ஆட்சியர் இமயவரம்பன் கலந்துள்ள அந்த விழாவிற்குப் பூவிழி வரவேற்றுப் பேசுகிறாள். விழாவில் புரட்சியாகப் பேசிய இமயவரம்பனிடம் ஒரு மாணவி நீங்க வரதட்சணை வாங்காமல் திருமணம் செய்வீர்களா? என்று கேட்டவுடன், அவர் தேடக் கிடைக்காத திரவியம் கிடைத்துள்ளாள். அவள் உங்கள் நடுவில் இருக்கும் பூவிழி தான் என்று

கூறுகிறார். பூவிழியும் – இமயவரம்பனும் திருமணம் செய்து கொண்டு மகிழ்வாக வாழ்கிறார்கள். பாரதிதாசன் தொழிற்கூடம் ஒன்றை நிறுவி கணவனின் அப்பாவிடம் பொறுப்பைக் கொடுத்து நிர்வகிக்கச் செய்துவிட்டு, அங்கு இமயவரம்பனை அழைத்துச் செல்கிறாள். அங்கு அப்பா, மகன் இருவரும் உள்ளன்பை நீண்ட நாளுக்குப் பிறகு அனுபவிக்கிறார்கள்.

### 2.23.5 என்றும் தொடரும் பயணம்

விசாலாட்சி மகளிர் கல்லூரி (மயிலாப்பூர்)யில் பேராசிரியையாக சரோஜினி பணியாற்றுகிறாள். இளம் வயது முதல் தன்னுடன் பழகிய முத்து என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்கிறாள்.

குடும்பத்தில் கணவன் முத்துவுக்குத் தேவையான அனைத்துக் கடமைகளையும் நல்ல மனைவியாக இருந்து நிறைவேற்றுகிறாள். ஆனால், தன் காதல் கணவனாலேயே கொஞ்சம் கொஞ்சமாக விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டு வருவதை அறியாமல் இருக்கிறாள். ஆனால், சரோஜினியுடன் பணியாற்றும் லீலா என்ற பேராசிரியை, தன் சக பேராசிரியை சரோஜினியைத் தன் கணவர் பணிபுரியும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறாள்.

சரோஜினியைப் பரிசோதனை செய்த மருத்துவர் வசந்த், சரோஜினிக்கு அவர் கணவர். விஷம் கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் செய்தியை மறைத்து, உடம்பு சரியாக உள்ளது என்று சொல்லி விடுகிறார்.

முப்பத்திரண்டு வயதாகிய சரோஜினி மகிழ்ச்சியுடன் வீட்டிற்குச் செல்கிறாள். அவள் வாழ்க்கையில் விஞ்ஞானி முத்துவின் ஆய்வு மாணவி மாலதி மூலமாகப் புயல் வீசுகிறது.

ஆய்வு மாணவி மாலதியுடன் தன் கணவர் கொண்டுள்ள தகாத உறவைக் கண்டு கோபமடைந்த சரோஜினி, மாலதியைத் துடப்பத்தால் அடித்து விரட்டுகிறாள். இதனால் ஆத்திரமடைந்த முத்து பல வழிகளில் சரோஜினிக்குத் தொல்லை கொடுக்கிறான்.

அதோடு மட்டுமல்லாமல் சரோஜினியின் சொத்துக்களை அபகரிக்கத் திட்டமிடுகிறான். சரோஜினியைக் கடத்தி வைத்துக் கொடுமைப்படுத்துகிறான். சொத்துக்களைத் தன் பெயரில் எழுதித் தரக் கையெழுத்துப் போடச் சொல்கிறான். ஆனால் சரோஜினி அவனுடைய எந்த மிரட்டலுக்கும் பயப்படாமல் கையெழுத்துப் போட மறுக்கிறாள்.

தன் பெயரில் சொத்துக் கிடைக்கக் கையெழுத்துப் போட மறுத்த சரோஜினியை, விஷ ஊசி போட்டுத் தன் காதல் மனைவி சரோஜினியையே கொல்ல முயற்சிக்கிறான்.

ஆனால், அவனது அத்தனை திட்டங்களும், சரோஜினியுடன் பணி புரியும் பேராசிரியை லீலாவின் கணவர் மருத்துவர் வசந்த் மூலமாக முறியடிக்கப்படுகின்றன.

முத்துவுக்கு ஏழு ஆண்டு சிறைத் தண்டனை கிடைக்கிறது. காதல் கணவனால் கைவிடப்பட்ட சூழ்நிலையில் சரோஜினியின் வாழ்க்கை நூல் அறுந்த பட்டம் போல் ஆகிறது.

ஆனால் அவள் வருகைக்காக மகளிர் கல்லூரி மாணவியர் காத்திருக்கின்றனர். மெல்லத் தன் கல்யாண ஆல்பத்தைத் திருப்பிப் பார்த்து எவ்வித நடுக்கமும் இல்லாமல் தன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்கிறாள்.

### 2.2.3.6 பொழுது ஒரு நாள் புலரும்

பார்வதி - வெங்கடே தம்பதியரின் பிள்ளைகள் அமுதா, தாமரை, கதம்பம், இளமுருகன் என நான்கு நபர்கள். அதில் அமுதா குடும்பத்தில் மூத்த மகள் ஆவாள்.

அமுதாவின் தந்தை பொறுப்பற்ற முறையில் அமுதாவின் விருப்பத்திற்கு மாறாகத் திருமணம் செய்து வைக்கிறார். இரண்டு வருடத்தில் அமுதாவின் கணவர் நோய்வாய்ப்பட்டு இறந்து விடவே அமுதா விதவையாகிறாள்.

அதன்பின் அமுதா ராம் அண்ட் ராம் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்கிறாள். நிறுவனத்தில் பணிபுரிபவர்களிலேயே சிறந்த பெண்ணாகப் பெயரெடுக்கிறாள்.

அமுதா விதவை என்பதை அறியாத நிலையில், அவளுடன் பணிபுரியும் மூர்த்தி, அமுதாவைத் திருமணம் செய்து கொள்ள விருப்பம் தெரிவிகிக்கிறாள்.

அமுதா தன் குடும்பப் பொறுப்பை முழுவதும் ஏற்று நடத்துவதால் அவனை மறு திருமணம் செய்து கொள்ள மறுக்கிறாள்.

அப்பா வெங்கடேஷன் அமுதாவின் தங்கை தாமரைக்கு விஜயரங்கன் என்பவரைத் திருமணம் செய்து கொடுக்கிறார்.

விஜயரங்கன் பல பெண்களை ஏமாற்றித் திருமணம் புரிந்தவன் என்பதை அறிவதற்குள் தாமரை கனிமொழி என்ற குழந்தைக்குத் தாயாகிறாள்.

திருமணம் ஆன மூன்று மாதத்தில் தாமரை தன் கணவன் விஜயரங்கனால் கைவிடப்படுகிறாள். இதனால் குடும்பப் பொறுப்பு தன் மீது விழும் என்று பயந்து தம்பி இளமுருகன் ஒதுங்கிக் கொள்கிறான். குடும்பப் பொறுப்பை முழுவதும் விதவையான அமுதா ஏற்றுக் கொள்கிறாள். தங்கை தாமரையின் மகள் கனிமொழியைத் தன் மகளாக எண்ணி வளர்க்கிறாள்.

தாமரையின் கணவன் விஜயரங்கன் பத்தொன்பது மாதம் கழித்து வீட்டிற்கு வருகிறான். அவனை ஏன் என்று கூடக் கேட்காமல் தாமரையுடன் சேர்ந்து வாழ மீண்டும் அனுமதிக்கிறார்கள். ஆனால் அவன் தாமரையைத் தாய்மை அடையச் செய்துவிட்டு, ஏமாற்றிச் செல்கிறான். இது போலப் பல பெண்களை ஏமாற்றித் திருமணம் செய்து கொண்டது தெரிய வருகிறது.

அந்தக் கயவனைத் தேடிக் காவலர்கள் வீட்டிற்கு வருகின்றனர். அதில் உயர் அதிகாரி ஒருவர் அமுதாவிடம் மூர்த்தியைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்கிறார். காவல் உயர் அதிகாரியின் அறிவுரைக் கருத்துக்களைக் கேட்ட அமுதா தெளிவு பெறுகிறாள். தன் அம்மா அப்பாவின் போலியான அன்பினை நன்கு புரிந்து கொண்ட அமுதா, குடும்பப் பொறுப்பிலிருந்து விலகுகிறார்.

தன் உடன் பணியாள் மூர்த்தியோடு அவன் இல்லம் சென்ற அமுதா, அவன் அம்மாவைச் சந்தித்து, ஆசி பெற்று, இருவரும், பொழுது ஒரு நாள் புலரும் என்ற நம்பிக்கையில் தன் பயணத்தைத் தொடர்கிறார்கள்.

### 2.2.3.7 காத்திருங்கள் காலம் வரும்

கல்லூரியில் பணிபுரியும் ஒரு துணிவு மிக்க நல்ல பேராசிரியை நிர்மலா. அவள் பணிபுரியும் கல்லூரியில் படிக்காமல் பார்வதியம்மாள் கல்லூரியில் தங்கை மாலா படித்து வருகிறாள். கல்லூரிக்குச் சென்ற நாள் முதல் அவள் நடவடிக்கையில் பெரும் மாற்றம் நிகழ்கிறது. தன்னை அலங்கரிப்பதும், அசோக் என்ற பணக்கார வாலிபனோடு தன் இளமையைப் பகிர்ந்து கொள்வதுமான செயல்பாடுகளில் ஈடுபடுகிறாள்.

இந்தச் செயல்பாடுகளை அறிந்த அண்ணன் ராஜா மாலாவைக் கண்டிக்கிறான். ஆனால், மாலா அவன் வேறொரு பெண்ணுடன் சினிமா பார்க்கப்

போனதைக் குறிப்பிட்டுக் கேட்கிறாள். இவ்வாறு இவர்கள் உரையாடுவதை நிர்மலா கவனிக்கிறாள். தம்பி, தங்கைகளின் போக்கை அறிந்து வருத்தமடைகிறாள். இவர்களின் தவறான போக்கைத் தந்தையிடம் சொல்லித் திருத்தலாம் என்றால் அவர் குதிரைப் பந்தயத்தில் கலந்து கொள்வதிலே ஆர்வம் காட்டிப் பணத்தை இழப்பவராய் அலைகிறார்.

ஒரு நாள் கல்லூரி முடிந்து நிர்மலா வீடு திரும்பும் போது, பேருந்தில் எம்.எஸ்.ஸி. படிக்கும் கௌரி என்ற ஒரு மாணவியிடம், ஒருவன் தவறாக நடக்கிறான். அதை நிர்மலா துணிவுடன் தட்டிக் கேட்கிறாள். அந்த நிகழ்வினைக் கண்டு வியந்து பாராட்டி ஆட்டோகிராப் தருமாறு கோபால் கேட்கிறான். இதை அவள் தந்தை பார்த்துவிட்டு, நிர்மலாவைத் தவறாகப் பேசுகிறார்.

தந்தையின் கண்டிப்பு இல்லாமல் மாலா வளர்ந்ததால் ‘அசோக்’ என்ற வாலிபனோடு ஊரை விட்டு ஓடிப்போகிறாள். அவன் அவளைத் திருச்சியில் ஒரு தங்கும் விடுதியில் தங்க வைத்து இன்பம் அனுபவிக்கிறான். இறுதியில் வேறொரு ஆணுடன் உறவு வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றுவிடுகிறான். அவனிடமிருந்து நிர்மலாவைத் திருமணம் செய்ய ஆசைப்படும் கோபால், அவளை மீட்டுக் கொணர்கிறான். அதனால் மாலாவின் மனநிலை பாதிக்கப்படுகிறது. நிர்மலா, மாலாவை மருத்துவர் மாத்ருபூதம் அவர்களிடம் காட்டிச் சிகிச்சை மேற்கொள்கிறாள்.

திடீரென்று, எதிர்பாராத விதமாகத் தன்னை ஏமாற்றிய அசோக்கைப் பார்த்த உடன் சுயநினைவு வந்து குணம் அடைகிறாள். கொடைக்கானலில் ஆசிரியராகப் பணிபுரியும் வாய்ப்பைத் தங்கை மாலாவுக்கு நிர்மலா ஏற்படுத்திக் கொடுக்கிறாள்.

கோபால் எப்படியாவது நிர்மலாவைத் திருமணம் செய்ய வேண்டும் என்று காத்திருக்கிறான். ஆனால் அதற்கான காலங்கள் வரவில்லை என்று உள்ளம் உடைகிறான்.

விபத்தில் சிக்கித் தவிக்கும் கோபால் மீது தன்னையும் அறியாது அன்பை நிர்மலா வெளிப்படுத்துகிறாள். அண்ணன் சிவாவின் உதவியுடன் இருவரின் திருமணம் நடைபெறுகிறது. காத்திருந்து நல்ல காலத்தின் பலனை அனுபவிக்கத் தொடங்கினர்.

## 2.3 கதை நிகழ்வுகளின் மையம்

அரசு மணிமேகலையின் கதை நிகழ்வுகளிலிருந்து வெளிப்படக்கூடிய கருத்துக்களை, ஆண் – ஆண் உறவு சார்ந்த நிகழ்வுகளில் அப்பா – மகன், அண்ணன் – தம்பி, முதலாளி – தொழிலாளி என்று கதை பின்னப்பட்டுள்ளன. இந் நிகழ்வுகள் கதைக்களத்தில் மிகவும் குறைவாக உள்ளன.

ஆண் – பெண் உறவு சார்ந்த நிகழ்வுகளில் கணவன் – மனைவி, பெற்றோர் – மகள், காதலன் – விதவை, அண்ணன் – தங்கை, தம்பி – அக்கா என்று கதைக்களம் பரந்து விரிந்து செல்கிறது.

பெண் – பெண் உறவு சார்ந்த நிகழ்வுகள், அக்காள் – தங்கை, அம்மா – மகள், மனைவி – கிழத்தி, பெண் அதிகாரி – பெண் என்று பல்வேறு விதமாகக் கதைக்கள நிகழ்வுகள் அமைந்துள்ளன.

பெண்ணும், பெண்ணும் இணைந்த சமூக வாழ்வியல் நிகழ்வுகள் மாணவி – மாணவி, பேராசிரியர் – மாணவி என்று கதைக்கள நிகழ்வுகள் பின்னப்பட்டுள்ளன.

இவ்வாறு பல்வேறு விதமாகப் பாகுபடுத்தி அறியக்கூடிய நிகழ்வுகள் மூலம், ஆண்களைச் சார்ந்து பெண் வாழக்கூடியவர்களாகப் படைக்கப்பட்டுள்ளார்கள். தந்தைவழிச் சமுதாய அமைப்பு, பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ளதைக் கதை நிகழ்வுகள் மூலம் அறிய முடிகிறது.

## 2.4 தொகுப்புரை

அரசு கல்லூரியில் பேராசிரியையாகப் பணியாற்றிய அரசு மணிமேகலை என்பார், சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை எனப் பல்வகைப்பட்ட இலக்கிய வடிவங்களைப் படைத்துள்ளார்.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் மூலம் பாராட்டுக்களையும், பரிசுகளையும் விருதுகளையும் பெற்றுள்ள இவர் தம் நாவல் படைப்புக்களான ‘மனிதரில் இவர் மகாத்மா’, ‘கண்ணுக்குள் நூறு கவிதை’, ‘கனவு சுமக்கும் கண்கள்’, ‘நாளை நான் ஜெயிப்பேன்’, ‘பூவே இளம் பூவே’, ‘பொறுத்திரு பூ மலர’, ‘என்றும் தொடரும் பயணம்’, ‘பொழுது ஒரு நாள் புலரும்’, ‘காத்திருங்கள் காலம் வரும்’, ‘தீக்குளிக்காத சீதைகள்’ ஆகிய பத்து நாவல்களினுடைய கதைக் களங்களையும், களங்களில் பின்னப்பட்டுள்ள கதை நிகழ்வுகளையும் இவ்வியல் வகைப்படுத்தி விளக்கியுள்ளது.

அரசு மணிமேகலையின் நாவல்கள் கிராம வாழ்வியலையும், நகர வாழ்வியலையும் கிராமமும் நகரமும் கலந்த வாழ்வியலையும் கதைக்களங்களாகக் கொண்டு அமைந்துள்ளன.

களங்களில் பின்னப்பட்டுள்ள கதை நிகழ்வுகளை கிராம வாழ்வியல் நிகழ்வுகள், கிராம நகர்ப்புற வாழ்வியல் நிகழ்வுகள், நகர வாழ்வியல் நிகழ்வுகள் என மூவகையாகப் பகுத்து ஆய்வாளர் இவ்வியலில் விளக்கியுள்ளார்.

‘கண்ணுக்குள் நூறு கவிதை’, ‘மனிதரில் இவர் மகாத்மா’ எனும் இரு நாவல்களிலும், புனைவுப் பெற்றுள்ள கிராமப்புற வாழ்வியல் நிகழ்வுகளை ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

‘தீக்குளிக்காத சீதைகள்’ எனும் நாவலில் கிராமப்புறமும், நகர்புறமும் இணைந்த வாழ்வியல் கதை நிகழ்வுகளை ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

‘கனவு சுமக்கும் கண்கள்’, ‘நாளை நான் ஜெயிப்பேன்’, ‘பூவே இளம் பூவே’, ‘பொறுத்திரு பூ மலர’, ‘என்றும் தொடரும் பயணம்’, ‘பொழுது ஒரு நாள் புலரும்’, ‘காத்திருங்கள் காலம் வரும்’ ஆகிய ஏழு நாவல்களிலும் புனைவு பெற்றுள்ள நகர்ப்புற வாழ்வியலை ஆய்வாளர் வகைப்படுத்தி விளக்கியுள்ளார்.

# இயல் – 3

# உடல் புனைவும் கருத்தியலும்

## 3.0 முன்னுரை

ஓர் இலக்கியப் படைப்பின் அடிப்படையான பண்பு கதையை நேரிடையாகக் கூறுவதன்று. கதை நிகழ்வுகளை, பாத்திர உறவுகள் மூலமலாகத் தேவைகள் விவரிக்கப்படுவது அடிப்படைப் பண்பு. அதில் அந்தக் கருத்தை உணர்ச்சி கலந்து கற்பனையான முறையில் எழுத்து வடிவில் படைக்கின்ற பொழுது. அந்தக் கற்பனைக்கு அந்தப் பாத்திரங்களின் புனைவு என்பது அவசியமாகிறது.

மனிதன், தனிமனிதனாகவோ குடும்பமாகவோ சமுதாயமாகவோ சேர்ந்து உறவாடி வாழ்கின்ற பொழுது, தனி மனித நிலையிலும் குடும்ப உறவு நிலையிலும் தொழில் உறவு சார்ந்த பொருளியல் நிலையிலும் பண்பாட்டு விழுமியங்களை உள்ளடக்கிய சமூக வாழ்வு நிலையிலும், வெளிப்படும் வாழ்வியலைப் படைப்பாளர் தம் படைப்பாக்கத் திறன் மூலமாக இலக்கியப் படைப்பாக்குகிறார்.

மேற்குறிப்பிட்ட படைப்பாக்க முறையில் அரசு மணிமேகலை, தாம் படைத்துள்ள நாவல்களுள் பெண் குறித்த புனைவுகளை அதாவது, பெண்ணின் உடல் சார்ந்த புனைவுகளை எங்ஙனம் பதிவு செய்துள்ளார் என்பதை இவ்வியல் விவரிக்கின்றது. உடல் சார்ந்த புனைவுகள் என்கிற பொழுது பெண்ணின் தலைமுடி முதல் பாதம் வரையுள்ள உறுப்புகள் பற்றிப் படைப்பாளி தம் படைப்பில் எங்ஙனம் புனைந்துள்ளார் என்பதனை அறிதலாகும்.

தலைமுடி, நெற்றி, கண், விளி, கன்னம், மூக்கு, உதடு, குரல், முகம், தோல், கை, விரல், மார்பு, இடை, தொடை, நடை, உடல், நிறம், பாதம் என்பன போன்ற உடல் உறுப்புகள் பற்றிய புனைவுகள் பாத்திர உறவு இடையேயான உரையாடலின் வழியே

இவர்தம் நாவல்களுள் பதிவு பெற்றுள்ளமையினைக் காணலாம் காண்க: (பி.எ.2) உடல் உறுப்பு சார்ந்த புனைவு, இவர் தம் நாவல்களுள் பதிவு பெட்றறுள்ளமையினைப் பின்வருமாறு வகைப்படுத்திக் காணலாம்.

* ஆணின் கூற்றுக்கள் வழிப்புலப்படும் உடல் சார்ந்த புனைவுகள்

* பெண்ணின் கூற்றுக்கள் வழிப்புலப்படும் உடல் சார்ந்த புனைவுகள்

* உடல் புனைவும் கருத்தியலும்

என மூவகைப்படுத்தி விளக்கலாம்.

## 3.1 ஆணின் கூற்றுக்கள் வழிப்புலப்படும் உடல் சார்ந்த புனைவுகள்

அரசு மணிமேலையின் படைப்புக்களில் ஆண் கூற்றுக்கள் வாயிலாகப் புலப்படும் பெண் உடல் உறுப்புகள் சார்ந்த புனைவுகள் பதிவு பெற்றுள்ளன. (காண்க பி.இ.3) இவை, கணவன் மனைவி உறவு நிலையிலும், காதலன் - காதலி உறவு நிலையிலும் தந்தை-மகள் உறவு நிலையிலும், பதிவு பெற்றுள்ளமையை இவண் காண்போம்.

### 3.1.1 கணவன்

விஞ்ஞானி முத்து என்பவர், தான் காதலித்த சரோஜினி என்பவரை மணம் முடித்து இல்லறம் நடத்துகிறார். பத்து ஆண்டுகள் காத்திருந்து பெற்றோர்களின் எதிர்ப்பையும் மீறி சரோஜினியை மணம் முடித்த முத்து இல்லற வாழ்வில் நெறிபிறழ்கிறார். தன்னிடம் ஆய்வு மேற்கொள்ளும் ஆய்வு மாணவி மாலதியுடன் தகாத உறவில் ஈடுபடுகிறார். அதனைத் தட்டிக் கேட்ட சரோஜினியிடம், தன் கோபத்தைக் கூற்றுக்களாக முத்து வெளிப்படுத்துகின்ற பொழுது, மனைவி

சரோஜினியின் உடலையும், ஆய்வு மாணவி மாலதியின் உடலையும் ஒப்பிட்டு வார்த்தைகளைக் கக்குகிறார்.

"என்னடி அப்படி ஒரு பார்வை பாக்கிறே? எரிச்சுடுவியா? மாலதி கால்தூசு ஆவியாடி நீ? அதிலயும் **அவ ரப்பர் பந்து மாதிரிடி...** என்னமா வளைஞ்சு, எப்படி ஈடு கொடுப்பா தெரியுமா? **மரக்கட்டை பார்வை**[1]

"அவ **லட்டுடி**, மாலதி உடம்பு எப்படி **கிண்ணுன்னு இருக்கு பார்த்தியா?**"[2]

மாலதி இவ உடம்பு கல்லுலே செய்தாங்ளா?[3] என்பன போன்று கணவன் மனைவியின் உடலைப் பற்றிய கூற்றுக்களாகப் புலப்படுத்துகிறான்.

இரகு ராமன் என்பவர் தன் மனைவி உமாவைப் புகழ்கின்ற பொழுது, சந்தன நிற மடிசார் புடவையில் பளபளவென்று ஒளிர்ந்து கொண்டு இருக்கும் தன் மனைவியைச் சரித்திரகாலக் கதாநாயகியாக உணர்ந்து, தன் இரு கண்களாலும் அவள் அழகை அள்ளிப் பருகிக் கொண்டிருக்கிறான். அவள் கன்னத்தில் மூக்கை வைத்து அந்த **இள நுங்குக் கன்னத்தின்**[4] வாசனையை முகர்கிறான்

அந்தத் **தங்கச் சிலையைக்**[5] கட்டிலில் உட்கார வைத்து எதிரே நாற்காலியில் உட்கார்ந்தபடி புன்னைகையும், பொன்னகையுமாக ஜொலிக்கிற இந்த **மஞ்சள் நிலா**[6] என மணம் **கவர்ந்த இந்த சிலை**[7] என் மனைவி என்கிறாள். **ஒடிசலான உடம்பும்**[8] **தங்கத்தின் ஜொலிப்பும்**[9], **நீண்ட கருங்குழலும்**[10] அவர் மனத்தை கவர்வதாகக் கூறுகின்றார். **கண்ணாடிக் கன்னத்தில்**[11] நாணத்தின் சிவப்பு[12] சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கிறது என்கிறார்.

விடாதத் தேகப் பயிற்சியாலும், உழைப்பாலும், கம்பீரமாகத் தோன்றும் அவன் முதுகின் அருகில் ஒரு **முயல் குட்டி**[13] வந்து பதுங்குவதாக உணர்கிறார். **பஞ்சு**

**போன்ற அவள் மேனி**[14] தன் தோள்களில் படிந்ததை நினைத்து இன்பச் சிலிர்ப்படைகின்றான்.

திருமணம் முடிக்க வேண்டாம் என்ற மனநிலையில் இருந்த ரகுராமன் தன் மனைவி உமாவிடம், கிராதகி எனக்கு வாழ்க்கைப்பட்டால் என்னாவது, அதான் பயந்து திருமணம் வேண்டாம் என்றேன். தேவதை மாதிரி ஒரு பொண்ணு கருணையே வடிவமாக கிடைத்தால் பரவாயில்லை. ஆனா **நீ தேவதை**[15] தான் உமா, அதனால் தான் உன்னை மணம் முடித்தேன்.

மேலும், மனைவி தூங்கிக் கொண்டிருக்கும் நிலையைக் கூறும்பொழுது, நீ பாவமா கையை, காலை சுருட்டிக் கொண்டு பூனைக்குட்டியாட்டமா[16] தூங்கிக் கொண்டிருந்தாய் என்கிறார்.

மனைவியைப் புகழ்கின்ற பொழுது **மேகக்குவியல் போன்ற கூந்தலில்**[17] இருந்து நறுமணம் வருவதாகவும், **பவழம் போன்ற உதடுகள்**[18] மின்னுவதாகவும் குறிப்பிடுகிறார்.

## 3.1.2 காதலன்

காதலன் தன் காதலியைப் பற்றி எண்ணுகின்ற பொழுதும், அவளுடன் உரையாடுகின்ற பொழுதும், வெளிப்படுகின்ற கூற்றுக்கள் வழியாகப் பெண்ணின் உடல் உறுப்புக்கள் பற்றிய புனைவுகள் நாவலுள் இடம் பெற்றுள்ளன.

மூர்த்தி என்பவர், தான் விரும்பும் அமுதாவின் **கண்களை மீன்**[19] என்றும், **நெற்றியை நிலாத் துண்டு**[20] என்றும் **உதட்டினை ரோஜா இதழ்**[21] என்றும் **விரல்களை வெள்ளரிப் பிஞ்சு**[22] என்றும் குறிப்பிடுகிறார்.

தியாகு, தான் விரும்பும் காதலி உஷாவைப் பற்றிய நினைவலைகளில் மிதக்கின்ற பொழுது, வெளிவரும் கூற்றுக்கள் வழி, உடல் உறுப்புகள் பற்றிய புனைவுகள் இடம் பெறுவதைக் காணலாம். **பச்சை வெல்வெட்டில் இரத்தினத்தைப் பதித்தாற்போன்ற மூக்கு**[23] **செதுக்கி வைத்த சிலை**[24] **பட்டுக் கன்னம்**[25] **கன்றுக்குட்டியின் கண்கள்**,[26] **பவளத்துண்டுப் போன்ற உதடுகள்**[27] **பளபளக்கும் முகம்**[28] **சாட்டையைப் போன்ற பின்னல்**[29] **மான் போன்ற கண்களின் மருட்சி**[30] காகிதத் தேர் காற்றிலே நகர்வது போன்ற அமைதியான நடை ஆகியன உடல் உறுப்புகள் பற்றிய புனைவுகளாக வெளிப்படுகின்றன.

காதலன் சோமசேகர், தன் காதலி மோகனாவிடம் உரையாடுகின்ற பொழுது, காட்டு ரோஜாவைப் போல **என்ன சௌந்தர்யம்**[31] **காதளவேடிய கண்கள்**[32] **கொடி போன்ற உடல் மாந்தளிரின் நிறம்**[33] **மேகம் போல் செழித்திருக்கிற கூந்தல்**[34] என்று உடல் உறுப்புகளை புனைவதைக் காணலாம்.

இமயவரம்பன் தன் காதலி பூவிழியின் விரல்களைப் **பஞ்சு விரல்கள்**[35] என்றும், **பளபளக்கும் உதடுகள்**[36] என்றும் **பவள உதடுகள்**[37] என்றும், கை விரல்களைப் **பூ விரல்கள்**[38] என்றும், பூவிழியின் உடலைப் **பூமாலை**[39] என்றும், குறிப்பிடுகின்றான்.

நந்தகோபால் தன் காதலி நளினியின் உடல் உறுப்புக்களைக் கூறுகின்ற பொழுது, பூக்களைப் போன்ற முகம்[40] என்றும், **பளபளக்கும் கண்கள்** என்றும்,[41] **கையகலச் சடைப்பின்னல்**[42] என்றும், **காந்தள் மலர் கண்கள்**[43] என்றும், **பிறை போன்ற நெற்றி**[44] என்றும், **குழந்தை முகம்**[45] என்றும், **புள்ளிமான்**[46] என்றும், **வாழைத் தண்டு போன்ற கை** என்றும்[47] **கொடி இடை**[48] என்றும், **பொன் மாலை உடல்**[49] என்றும், குறிப்பிடுவதனைக் காணலாம்.

### 3.1.3 தந்தை

கணவன் ரமணனால் கொடுமைப்படுத்தப்பட்டுப் பைத்தியமாக உழலும் மதுமதியின் நிலையைக் கண்டு வருந்திய மதுமதியின் தந்தை செண்பகராஜபூபதி,

அரங்கிலே நடமாடும் **மயிலின் கால்கள்** முறிக்கப்பட்டனவா? **பறவையின் சிறகுகள் கத்தரிக்கப்பட்டனவா?** என்று பதறித் துடிக்கும் போது **மயில், பறவை** போன்று செயலற்று இருக்கும் அவல நிலையை எண்ணி வருந்துவதோடு, தன் மகளை இந்த நிலைக்கு ஆளாக்கிய மருமகனைக் **கிராதகன்** என்று கூறுகிறார். ‘‘பச்சைக் கிளியை கெஞ்சிக் கேட்டு வாங்கி இறக்கையைப் பிய்ச்சிப் போட்ட படுபாவி’’ என்கிறார்[50]

மதுமதியின் வீட்டில் மேலாளராக வேலைப் பார்க்கும் சாரங்கன், தந்தை நிலையிலிருந்து மதுமதியைப் பற்றிப் புதிதாக வேலைக்குச் சேர்ந்துள்ள கண்மணியிடம் கூறும் பொழுது, ‘‘தங்கச்சிலையா இருந்த பெண்ணை என்ன பண்ணானோ, ஏது பண்ணானோ? சிறகை முறிச்சுப் போட்டுட்டான். அது **நோயாளிக் கிளியா** முடங்கிக் கிடக்குது[51] என்று கூறுகிறார். மேலும், சாரங்கன் மதுமதியை **மான்குட்டி**[52] என்றும் **கன்றுக்குட்டி** என்றும் புனைவதை, **மான்குட்டி போன்ற இளம் பருவம் என்றும், காலொடிந்த கன்றுக்குட்டியாய்**[53] செய்வதறியாது மனநிலை பாதிக்கப்பட்டவளாய் வீட்டிலே இருப்பதை மோசமான குழல் என்றும் கூறுகிறார்.

## 3.2 பெண் கூற்றுக்கள் வழிப்புலப்படும் உடல் சார்ந்த புனைவுகள்

அரசு மணிமேகலையின் படைப்புகளுள் கதைக்களங்களில் உறவாடும் பெண்கள், பெண்கள் பற்றிக் கூறும் பொழுது காணலாகும். உடல் பற்றிய புனைவுகள் எங்ஙனம் புனையப்பட்டுள்ளன என்பதை இங்குக் காணலாம்.

1. பெண் பிற பெண்களைப் பற்றிக் கூறும் கூற்றுக்கள்

2. பெண் தன்னைப் பற்றிக் கூறும் கூற்றுக்கள் என இரு வகையாகப் பகுத்துக் காணலாம்.

### 3.2.1 பெண் பிற பெண்களைப் பற்றிக் கூறும் கூற்றுக்கள்

அரசு மணிமேகலையின் படைப்புக்களில் உள்ள கதைக்கள நிகழ்வுகளில் உறவாடுகின்ற பெண்கள், தத்தம் வாழ்வியல் சூழலில், பிற பெண்களைப் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற பொழுது, உடல் உறுப்பு மற்றும் தோற்றம் சார்ந்த சொல்லாடல்களைப் பயன்படுத்துவதைக் காணலாம்.

1. படைப்பாசிரியர் பெண்கள் பற்றிக் கூறும் கூற்றுக்கள்

2. படைப்பில் வரும் பெண்கள் பிற பெண்களைப் பற்றிக் கூறும் கூற்றுக்கள் என வகைப்படுத்தி விளக்கலாம்.

#### 3.2.1.1 ஆசிரியர் பெண்களைப் பற்றிக் கூறும் கூற்றுக்கள்

ஆசிரியர், சரோஜினி என்ற பெண் கதாபாத்திரத்தை அறிமுகம் செய்கிற போது **ஒல்லியான தேகத்தைக்**[53] கொண்டவளாக இருந்தாலும், வலிமை படைத்த கணவனுக்கு ஈடு கொடுக்கும் உயரத்தைக் கொண்டவள் என்று கூறுகிறார். அவளின் உடல் தோற்றம் **மாநிறமாக**[54] இருந்தாலும், நல்ல **அழகான கண்கள்**[55] செதுக்கி வைத்த **முகவாய் கட்டை**[56] போன்றவை அவளுக்கு அழகான உடலமைப்பைக் கொடுத்திருப்பதாகக் கூறுகிறார். சரோஜினியின் ஒட்டு மொத்தமான அழகு, விஞ்ஞானி முத்துவிற்குப் பொருத்தமாக இருப்பதாகப் புலப்படுத்தியுள்ளார்.

சரோஜினியின் கணவன் முத்துவுடன் தவறான உறவில் ஈடுபடும் மாலதியைப் பற்றிக் கூறும் போது, **நாட்டுக்கட்டை போன்ற உடலமைப்பு**[57] **செம்பட்டை முடி**[58]

கட்டையான குட்டையான அசிங்கமான தோற்றத்தைக் கொண்டவள் மாலதி[59] என்ற கூறுகிறார்.

பொழுது ஒருநாள் புலரும் எனும் நாவலில், வீட்டுப் பொறுப்பை நான் இனி சுமப்பதில்லை என்று அமுதா கூறியவுடன், பெற்றோர்கள் அதிர்ந்து போய், திக் பிரமை பிடித்தவர்களாய் நிற்கின்றனர். அப்பொழுது **உழைக்கும் மாட்டினைக் குத்தி**[60] குத்திப் புண்ணாக்கியது எவ்வளவு பெரிய தவறு என்று உணர்வதாக ஆசிரியர் புனைகிறார்.

அமுதா வாழ்க்கை இழந்தவள். அவள் தங்கை தாமரையும் கணவனால் கர்ப்பிணியாகக் கைவிடப்பட்டவள். இந்நிலையை ஆசிரியர் கல்யாணம் என்கிற வலையில் இப்படி எத்தனை **மான்கள்**[61] மாட்டிக் கொள்கின்றன என்று புனைகிறார்.

ஓலைச் சருகுகளாக இருக்கும் வயதான பெற்றோரால், குடும்பப் பொறுப்பை ஆலமரமாக இருந்து தாங்க வேண்டிய அமுதா, தாமரையின் மகள் கனிமொழி தன்னை அம்மா என்றவுடன் மலையளவு துன்பம் பனி போல் கரைந்து விட்டது என்கிறார்.

தீக்குளிக்காத சீதைகள் என்னும் நாவலில், கண்மணியின் உடல் அழகை வருணிக்கின்ற பொழுது, மஞ்சுளாவைப் போல பிரமிக்க வைக்கிற அழகு கிடையாது என்றாலும், கண்மணிக்கு அவள் **மாநிறமே**[62] ஒரு தனிக் களையைக் கொடுத்தது. **திருத்தமான கண்களும்**[63] **உதடுகளும்**[64] **மெல்லிய உடல்மைப்பும்** தான் அவள் அழகின் பிரகாசங்கள். கோழிக் குஞ்சைப் போல... பருந்தைச் சந்திக்க நேர்ந்த புறாக் **குஞ்சுப் போல வெறித்த விழிகளும்**[66] **பயங்கரமான பார்வையும்**[67] கண்மணியை மிரள வைத்தன என்கிறார்.

ஆசிரியர் மதுமதியைப் பற்றிக் குறிப்பிடுகின்ற பொழுது, **பளபளக்கும் கண்கள்**[68] **கார்மேகம் போன்ற நீளக் கருங்கூந்தல்**[69] **அழகு தேவதை**[70] **ஒல்லியான கொடி போன்ற உடல்**[71] என வர்ணிக்கிறார்.

கண்மணியின் அக்கா மஞ்சுளா அவள் கணவர் குமார் மனைவியின் அழகில் மயங்கிப் போன குமார் எடுபிடி போன்று செயல்படுவதற்கு மஞ்சுளாவின் அழகு காரணமாக அமைவதாக ஆசிரியர் புனைகிறார். ஆசிரியர் கண்மணியைப் பற்றிக் கூறும் போது, அழகி கிடையாது. ஆனால் அவளின் **மாநிறமே**[72] ஒரு அழகைக் கொடுக்கும். மேலும் அவளின் திருத்தமான **கண்கள்**[73] **உதடுகள்**[74] **மெல்லிய உடலமைப்பு**[75] போன்றவை கண்மணி அழகின் பிரகாசங்கள் என்று புனைகிறார்.

கண்மணிக்கு மதுமதியை ஆசிரியர் அறிமுகம் செய்யும்போது **வெறித்த விழிகள்**[76] **பயங்கரமான பார்வை**[77] கண்மணியை மிரள வைப்பதாகப் புனைகிறார்.

அயல் நாட்டில் மூன்றாண்டுகள் தங்கிப் படித்துவிட்டு, வீடு திரும்பும் மதுமதியை, ஏழெட்டுக் கோடிக்குச் சொந்தக்காரரான செண்பகராஜ பூபதி வரவேற்க ஓடி வருகிறார். அப்பொழுது அவள் காண்டஸா காரில் இருந்து இறங்கி, வரும்போது, சாயம் போன ஜீன்ஸ் ஆடை, **வெட்டப்பட்ட தலைமுடி**[78] குதித்து ஆட **உதட்டுச் சாயமும் தோசைக்கல் கண்ணாடியுமாக**[79] வந்து நின்றாளா? என்றால் இல்லை. சாதாரணமாக, அமைதியாகப் பளபளக்கும் **கண்களோடு**[80] **கார்மேகம் போன்ற நீண்ட கருங்குழலோடு**[81] கனகாம்பரத்தை அளவாகச் சூடிக் கொண்டு வந்தாள் என்று ஆசிரியர் மதுமதியைப் பணக்கார ஆடம்பரம் மற்றும் திமிர் இல்லாத ஒரு பெண்ணாகப் புனைகிறார்.

கனவு சுமக்கும் கண்கள் என்னும் நாவலில் நளினியைப் பற்றி ஆசிரியர் குறிப்பிடுகின்றபொழுது **பூனைக்குட்டி**[82] தோள் அளவுக்கே வருகின்ற மெல்லிய **உருவம், புன்னகை புரிகின்ற பூமுகம்**[83] **காதளவோடிய கண்கள்**[84] என்று குறிப்பிடுகிறார்.

மனிதரில் இவர் மகாத்மா நாவலில் உமாவைத் **தங்க ரதம்**[85] என்றும், பூனைக் குட்டி[86] என்றும் **புன்னைகை புரிகின்ற பூ முகம்,**[87] **காதளவோடிய கண்கள்**[88] என்றும் புனைகிறார்.

படைப்பாசிரியர் கல்லூரியில் பயிலும் மாணவியரின் தோற்றப் பொலிவு, செயல்கள், பண்புகள் முதலானவற்றைக் குறிப்பிடுகின்ற பொழுது, உடல் உறுப்புச் சார்ந்த சொல்லாடல்களைப் பதிவு செய்துள்ளார். **ஆந்தை விழி,**[89] **பூனை முழி,**[90] **மாண்குட்டி,**[91] **இளையநிலாக்கள்,**[92] **பிள்ளைக் கிளிகள்,**[93] **இளந்தளிர்கள்,**[94] **பூந்தென்றல்,**[95] **முல்லைச்சரம்,**[96] **புத்தம் புது பூ,**[97] **பட்டுப்பூச்சி,**[98]**சிட்டுக்குருவி,**[99] **சிங்காரத் தேர்,**[100] **மான்கண்,**[101] **ரோஜாப்பூ**[102] என உடல் தோற்றம் பற்றியும் உறுப்புப் பற்றியும் புனைந்துள்ளமையினைக் காணலாம்.

### 3.2.1.2 பெண்கள் பிற பெண்களைப் பற்றிக் கூறும் கூற்றுக்கள்

அரசு மணிமேகலையின் படைப்புக்களில் புனைவு பெற்றுள்ளன. பெண் பாத்திரங்கள், குடும்ப நிலையிலும் சமூக வாழ்வியல் நிலையிலும் உறவாடுகின்ற பொழுது, தத்தம் வாழ்வியல் சூழலில், பிற பெண்களைப் பற்றிக் கூறும் கூற்றுக்கள் வழியாக வெளிப்படும் உடல் உறுப்புகள் சார்ந்த புனைவுகளை இவண் காணலாம்.

சரோஜியினோடு பணிபுரியும் சக பேராசிரியைகளான, மாலதி, பானுமதி, மாலினி ஆகியோர் கூடி உறவாடிக் கொண்டிருக்கின்ற பொழுது, அக் கூட்டத்தில் உள்ள பானுமதி என்ற பேராசிரியை பேசும் போது, அனைவரும் சிரித்து மகிழும் படியாகப் பேசுவார் என்று சரோஜினி குறிப்பிடும் பொழுது,

“அவள் அடிக்கும் கொட்டமும் கும்மாளமும் எப்படிப்ட்ட சிடுமூஞ்சியையும் சிரிக்க வைத்துவிடும்”[103] என்கிறார்.

சரோஜினியின் கணவன் முத்து வேறொரு பொண்ணுடன் தொடர்பு வைத்துள்ளார். சரோஜினியின் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள அம்மா, அப்பெண்ணைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, கட்டையா, குட்டையா, நல்லா நாட்டுக்கட்டையாட்டமா இருக்கும். முகத்தில தளிக் களை இருக்காது. **செம்பட்டைத் தலை**[104] என்கிறார். மேலும் அவளைப் **பொட்டைக் கழுதை**[105] **நாத்தம் புடிச்சக் கழுதை**[106] என்று திட்டுகிறார்.

தன் கணவனுடன் தகாத உறவு வைத்துள்ள மாலதியைப் பற்றி சரோஜினி குறிப்பிடும் பொழுது **செருக்கு பிடித்த நாய்**[107] **தெரு பொறுக்கி நாய்**[108] என்று திட்டுகிறார்.

கண்மணி வேலை தேடிப் பல இடங்களுக்கும் அலைகிறாள். இதனை அவள் அக்கா மஞ்சுளா விமர்சிக்கின்ற பொழுது “**ஓடுகாலி, தறுதலை, நாய், படுபாவி**” என்ற சொல்லாடல்களைப் பயன்படுத்துகிறார்.[109]

கண்மணி அவள் தாய்க்கு மூன்றாவது குழந்தையாக, அதுவும் பெண் குழந்தையாக, தன் விருப்பத்தையும் மீறிப் பிறந்ததால், அவள் தாயே அவளை வளர்க்கின்ற பொழுது, அவளை, “**சனியனே! எருமை மாடே! மூதேவி**”[110] என்று குறிப்பிடுகிறார்.

கல்லூரியில் மூன்றாமாண்டு படிக்கும் காஞ்சனா என்பவள் தன் வகுப்புத் தோழியருடன் சேர்ந்து, முதலாமாண்டு படிக்கும் பூவிழியைச் சீண்டுகிறாள். அப்பொழுது, பூவிழியின் அழகை, **தாழம்பூவை போன்ற அழகான நிறம்**, விரல் நீளத்திற்கு **ஓடியிருந்த அழகிய விழிகள்**. ஆனால் **மானின் மருட்சி** அந்தக் கண்களில்

அடியோடு காணப்படவில்லை. மெல்லிய கொடியைப் போன்ற வடிவம்... கருமேகக் கற்றையைப் போன்ற கூந்தலில் எலிவால் பின்னல் **வாலிப நிலவு**[111] என்கிறாள்.

அர்ச்சனா அவள் பெயரை வினவ, முதலாமாண்டு மாணவி பூவிழி என தன் பெயரைக் குறிப்பிட, ஆந்தை விழிக்குப் போயி பூவிழின்னு வெச்சிருக்காங்கப் பாரு.. எந்த மடையன் இந்தப் பேரை வெச்சவன்? சரியான மாங்காய் மடையான இருப்பான் போல இருக்குதே[112] என்கிறார் அர்சனா. சோகத்தில் உழன்றுள்ள தன் தங்கை மாலாவிடம் அக்கா நிர்மலா எப்படி இருந்தவள் இப்படி மாறிவிட்டாய். உன் அழகு எங்கே? உன் தங்க நிறம் எங்கே? கண்களைச் சுற்றிக் கருப்பு வளையங்கள், **கருவண்டு விழிகளில்**[113] கடலளவு சோகம், இளைத்துப் போன உடல்[114] மாலா உனக்கு என்னம்மா ஆச்சு..? என வினவுகிறாள்.

கணவனால் ஏமாற்றப்பட்ட மாலா, தன் அக்கா நிர்மலா திருமணம் முடித்து நன்கு வாழவேண்டும் எனும் நோக்கில்

பூவிழி முதலாமாண்டு பயிலும் போது மூன்றாமாண்டு படித்த காஞ்சனா, ஓர் ஆணுடன் உடன் போக்காய் செல்கிறாள். அவன் அவளைக் கைகழுவி விட்டு விலக்குகிறான். அதன் பிறகு (லாரி) ஓட்டுனருடன் சேர்ந்து வாழ்கிறாள். அவன் குடித்து விட்டு இவளைத் துன்புறுத்துவதோடு, பிற (லாரி) ஓட்டுனருக்கும் காஞ்சனாவை விருந்தாக்குகிறான். உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் உள்ள காஞ்சனாவைக் கண்ட பூவிழி, தலையை விரித்துப் போட்டுக் கொண்டு டக் டக் என்று குதிரையைப் போல மதத்துத் திரிவாளே அந்தக் காஞ்சனாவா இவள்? கறுத்துப் போன **காய்ப்பேறிய அழுக்குக் கைககள்**.[115] அலங்காரத் தேவதையாகப் பவனி வந்தவள் என அதிர்ச்சியை மொழியின் மூலமாக வெளிப்படுத்துகிறாள்

தன் அக்கா நிர்மலாவுக்கு, தங்கை மாலா எழுதும் கடிதத்தில், “அக்கா வணக்கம், வெப்பமான பாலைவனத்தில் விழுந்துவிட்ட மழைத்துளி நான். என் ஆத்திரமும், அடக்கமின்மையும், என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது. **கருகிவிட்ட மரத்திற்காக**[116], **செழிக்க வேண்டிய மரம்**[117] காத்திருப்பது தவறு[117] என்று எழுதுகிறாள்.

### 3.2.2 பெண் தன்னைப் பற்றிக் கூறும் கூற்றுக்கள்

அரசு மணிமேகலை படைத்துள்ள நாவல்களில் சமூக வாழ் நிலையிலும், குடும்ப நிலையிலும் பெண்கள் தத்தம் வாழ்வியல் சூழலுக்கேற்பத் தற்கூற்றாக வெளிப்படுத்தும் உடல் சார்ந்த கருத்துக்களை இவண் காண்போம்.

சரோஜினி தன் காதல் கணவன் முத்துவுடன் இணைந்து வாழும் இல்லற வாழ்வின் பரிசாக ஒரு குழந்தையைப் பெற்றுத் தராமல் இருக்கும் நிலையை எண்ணி ஏங்கும் போது, தனக்குத் தானே தன்னை **மலட்டு மரம்**[118] என்று பெயர் சூட்டிக் கொள்கிறாள்.

அமுதா என்பவள் விதவை. அவளை மூர்த்தி என்பவன் திருமணம் முடிக்க விளைகிறான். தன் காதல் கற்பனையை அவளிடம் தெரிவிக்கிறான். இந்நிகழ்வை அமுதா தன் மனத்துள் அசை போடுகிற பொழுது, தான் ஒரு **வெள்ளை ரோஜா** என்று சொல்லிக் கொள்வதோடு, இந்த வெள்ளை ரோஜாவை சாயம் பூசி **மஞ்சள் ரோஜாவாக** மாற்ற முடியாது[119] எனத் தனக்குத் தானே பதில் தேடிக் கொள்கிறாள்.

உஷா என்பவள் குடும்பச் சூழல் காரணமாக, குடும்பப் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காகத் தன் உடலை விற்றுப் பொருள் தேடுகிறாள். நெறி கெட்ட வாழ்வு வாழும் தன்னைத் தியாகு என்பவர் காதல் மணம் முடிக்கும் கருத்தை வெளியிடுகிறார். இச்சூழலில் தன்னைப் பற்றி உஷா எண்ணிப் பார்க்கிறாள். தன்

உடலால் கிடைக்கும் வருவாயினால் தன் வீட்டிற்கு தான் பொன்முட்டை இடும் வாத்தைப் போல் உள்ளதாகவும், அப்பழுக்கு இல்லாத குழந்தையைப் போன்ற தியாகுவிற்கு **அழகிய பழமாக**[120] இருக்கும் தன்னைத் தின்னக் கொடுப்பது தவறு என்றும் உணர்கிறாள்.

பெற்றோர் பார்த்த மாப்பிள்ளையைப் பூவிழி மணம் முடிக்க மறுக்கிறாள். தான் விரும்பிய காதலன் இமயவரம்பனை மணம் முடித்து வைக்க வற்புறுத்துகிறாள். பெற்றோரும், உடன் பிறந்தவர்களும் மறுக்கின்றனர். இந்நிலையில், தான் **ஒத்தப் பறவையாக**[121] வாடுவதாகவும், **ஒத்தை மரமா நிற்பதாகவும்**[122] **ஒத்தைக் குயிலாக**[123] அழுவதாகவும் தனக்குத்தானே புலம்புகிறாள்.

இதுகாறும் அரசு மணிமேகலையின் படைப்புக்களுள் ஊடாடி, உறவாடிய ஆண் பெண் மாந்தர்களிடையே, ஆண்கள் பெண்கள் பற்றியும், பெண்கள் - பெண்கள் பற்றியும் வெளிப்படுத்திய உடல் உறுப்புகள் சார்ந்த புனைவுகளைக் கண்டோம். இனி, இப்புனைவுகள் வழிப் புலனாகும் கருத்தியல்களைக் காணலாம்.

### 3.3 உடல் புனைவும் கருத்தியலும்

மனிதன் தனித்து வாழ்தல் நன்றன்று. ஆணும், பெண்ணுமாகச் சேர்ந்து வாழ்தல்தான் உலக இயற்கையின் அடிப்படை. பல நாடுகளில் ஆண்கள் ஆண்களோடும், பெண்கள் பெண்களோடும் இணைந்து வாழ்வது போன்ற வாழ்வு தமிழர்களின் நாகரிகமன்று, ஆணும் பெண்ணுமாக இணைந்து வாழக்கூடிய வாழ்வு, தனிமனித வாழ்வுக்கு அடுத்த நிலையில் இருந்து ஏற்படும் சமூகத்தின் அடிப்படை நிறுவனமாக இருக்கக்கூடிய குடும்பம் என்கிற நிறுவனம். குடும்பம் என்கிற நிறுவனத்தில் ஆண் பெண் இணைந்து சமூக நிறுவனத்தில் சங்கமிக்கின்றனர். சமூக நிறுவனத்தில் ஆணும் பெண்ணுமாக இணைந்து உறவாடி வாழ்கின்றபோது, குடும்பம்

சார்ந்த, பொருளியல் சார்ந்த, தொழில் உறவுகள் சார்ந்த, சமூக வாழ்வியலில் நிகழ்த்தக்கூடிய சடங்குகள், விழாக்கள் சார்ந்த மற்றும் பல்வேறு நிகழ்வுகளிலிருந்து அறிந்து அல்லது உணர்ந்து கொள்ளும் கருத்துக்களிலிருந்து ஒவ்வொருவரும் உள்வாங்கிக் கொள்ளக்கூடிய கற்பிதங்களைக் கருத்தியல் என அழைக்கலாம்.

அரசு மணிமேகலையினுடைய பத்து நாவல்களிலும் பெண்கள் பற்றிய உடல் உறுப்புக்கள் சார்ந்த புனைவுகள் பதிவு பெற்றுள்ளமையினை மேலே கண்டோம். இப்புனைவுகள் உருவாக்கும் கற்பிதங்கள் எத்தகைய கருத்தியல்களாக நிலை கொள்கின்றன என்பதனை இனிக் காண்போம்.

### 3.3.1 உடல் புனைவுகள்

அரசு மணிமேகலையின் படைப்புக் கதைக் கள நிகழ்வுகளில் ஊடாடி உறவாடும் பெண்கள் பற்றி ஆண்களும், பெண்களும் வெளிப்படுத்தும் பெண்களின் உடல் உறுப்புப் பற்றிய சொல்லாடல்கள், ஆண் கூற்றுக்கள் வழிப் புலப்படும் சொல்லாடல்கள், பெண் கூற்றுக்கள் வழி வெளிப்படும் சொல்லாடல்கள் என வகைப்படுத்தி மேற்கூறிய பகுதியில் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

கணவன்- மனைவி, காதலன்- காதலி, தந்தை- மகள், உறவு நிலையில், ஆண்கள் பெண்களின் உடல் உறுப்புப் பற்றி வெளிப்படுத்திய சொல்லாடல்களை ஆண் கூற்றுக்கள் வழிப்புலப்படும் உடல் உறுப்பு புனைவுகள் என்றும், அரசு மணிமேகலை என்பவர் பெண் என்பதால் இப்படைப்பாசிரியர் பெண்கள் பற்றியும், இவர் படைத்துள்ள நாவல்களின் கதைக்களங்களில் ஊடாடும், பெண்கள் - பிற பெண்களைப் பற்றிக் கூறும் கூற்றுக்கள் வழி வெளிப்படும் உடல் உறுப்புகள் பற்றிக் கூறிய சொல்லாடல்கள் முறையே பெண்கள் தன்னைப் பற்றியும், பிற பெண்கள் பற்றியும், பெண் படைப்பாசிரியர் பெண்களைப் பற்றியும் கூறிய கூற்றுக்களின் வழி

வெளிப்படும் உடல் உறுப்பு புனைவுகளைப் பெண் கூற்றுக்கள் வழி வெளிப்படும் உடல் உறுப்பு புனைவுகள் என்றும் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

இப்புனைவுகளின் வழி அறியலாகும் கருத்துக்களின் வழி உருவாகும் அல்லாது உருவாக்கும் கருத்தியல்களைக் கீழே காண்போம்.

பால் உறுப்புக்கள் அடிப்படையில் ஆண் பெண் இருபாலரும் வேறுபட்டாலும், அந்த உறுப்புக்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள ஆண் பெண் சொல்லாடல் புனைவுகள் ஆண் பெண்களைப் பற்றிய கருத்தியல்களை அறியத் துணை நிற்கின்றன.

அனைத்து உறுப்புக்களின் சேர்க்கை ஒட்டு மொத்தமான உடல். அந்த உடல் சார்ந்தும், உடல் உறுப்புக்கள் சார்ந்தும், குறிப்பிடப்பட்டுள்ள சொல்லாடல்களில் ஆண்களைப் பற்றி ஆண்களும், பெண்களும் குறிப்பிடுகின்ற பொழுது, கம்பீரமான சிங்கம்,[124] கிழச்சிங்கம்,[125] கட்டழகன்,[126] மன்மதன்,[127] கட்டுடல்,[128] மதனகாமராசன்,[129] தேக்கு மரம்[130] என்று உடல் உறுப்புக்கள் பற்றித் தனித்தனியாகப் புனையாமல், உடல் தோற்றத்தினைப் பற்றிப் புனைந்துள்ளதன் மூலம், ஆண்களினுடைய உடல் திண்மையினையும், வன்மையினையும், பெருமையினையும், வீரத்தினையும், வெளிப்படுத்தும் முறையில் ஆண் பெருமைக்குரியவன், வலிமையானவன், பொறுப்புமிக்கவன், ஆண்மை பொருந்தியவன் என்பன போன்ற கருத்தியல்கள் வெளிப்படும் வண்ணம் தம் நாவல்களைப் படைத்துள்ளார்.

பெண்களைப் பற்றி, பெண் உடல் மற்றும் உறுப்புக்கள் சார்ந்த சொல்லாடல்களைப் பதிவு செய்கின்ற பொழுது, ஆணுக்குக் கூறியதைப் போன்று அல்லாமல், கேசாதிபாத முறையில் அதாவது, தலை முதல் பாதம் வரை ஒவ்வொரு

உறுப்பாக, இருபாலாரின் கூற்றுக்கள் வழியாக விவரித்துப் புனைந்துள்ளமையினைக் காணலாம். அதாவது, ஒட்டுமொத்தமான, உடல் முழுமையைக் குறிப்பது போன்ற சொல்லாடல்களை ஆண்களுக்குப் பயன்படுத்தியிருப்பதைப் போன்று பெண்களுக்குப் பயன்படுத்தாமல் ஒவ்வொரு உறுப்பினையும் பற்றிப் பல சொற்புனைவுகள் இடம் பெற்றுள்ளமையினைக் காணலாம். இத்தகைய பெண் பற்றிய உடல் உறுப்புப் புனைவுகள், பெண்களைப் பற்றிய கருத்தியல்களை அறியத் துணை செய்கின்றன. ஆணுக்குள்ள அதே உறுப்புப் பற்றி எவ்விதச் சொல்லாடலும் பயன்படுத்தப்படாமல், பெண் என்று வருகின்ற பொழுது, உடல் உறுப்புக்களைக் காட்சி, வடிவம், ஒப்புமை, பயன், சுவை பண்பு சார்ந்த முறையில், மரபு சார்ந்த நிலையில் நின்று நாவல் படைப்பாளர் தம் படைப்புக்களுள் பெண் புனைவுகளைப் பதிவு செய்துள்ளமையினை அறிய முடிகிறது.

பெண்களைப் பற்றி, பெண்களின் உடல் உறுப்புக்கள் பற்றிய ஆண்களின் சொல்லாடல்களிலிருந்து அதாவது, கணவன், தந்தை, காதலன் எனப் பல தரப்பட்ட உறவு நிலையிலுள்ள ஆண்களின் கூற்றுக்களின் வழி வெளிப்படும் பெண்களின் உடல் உறுப்புக்கள் சார்ந்த புனைவில் உள்ள கருத்தியல்களைப் பின்வருமாறு விளக்கலாம்.

பெண்ணுக்குரிய அனைத்து உறுப்புக்களும் உணர்ச்சி சார்ந்தவையாகக் கூறப்பட்டுள்ளன. கார்மேகம், கருங்குழல், தோகை மயில், பிறைநிலா போன்ற சொல்லாடல்கள் பெண்களின் கூந்தலைக் காட்சிப்படுத்துகின்றன. கார்மேகம் என்கிற போது அது மழை வருவதற்கான அறிகுறி. அதைப் பார்த்தால் இன்பக் கிளர்ச்சி எழும். அது போலப் பெண்ணின் கூந்தலும், உணர்ச்சியைத் தூண்டி இன்பத்தைத் தரும் என்ற பொருளிலில் சொல்லாடல்கள் அமைந்துள்ளன.

தாமரைக் கண், மீன் கண், செண்பகப் பூ, அல்லிப்பூ, பவளம் முதலான சொல்லாடல்கள், பெண்களின் கண், கை, உதடு போன்ற உறுப்புக்களுக்கு ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ள சொல்லாடல்கள் மென்மைத் தன்மையை உணர்த்துகின்றன. ஆனால், அதன் செயல்பாடு வெவ்வேறாக உள்ளது. மீன்கள் என்றால் துடிப்பாக இருக்கும். அதில் தாமரையின் செவ்வரியும் படர்ந்திருந்தால் அது அனைவரையும் கவர்ந்து இழுக்கும் தன்மை உடையது. பவளவாய் என்றால் அனைவரையும் சுண்டி இழுக்கும் தன்மையுடையது. அதனைப் போல பெண்ணின் உதடும் அனைவரையும் கவரும் தன்மை உடையது. அல்லிப்பூ, செண்பகப்பூவின் தன்மை மென்மையாக இருக்கும். அது போல பெண்ணின் கையும் மென்மையாக இருக்கும் என்ற கருத்தியலை மேற்கூறிய சொல்லாடல்கள் தருகின்றன.

இளநுங்கு, கருப்புத் திராட்சை, பலாச்சுளை ஆகிய சொல்லாடல்கள் கன்னம், விழி, உதட்டினைக் குறிக்கின்றன. சொல்லாடல்கள் சுவைத் தன்மையை உணர்துகின்றன. இளநுங்கு என்றால் அது ஈரத்தன்மையுடன், மென்மையாக, அழகாக, பார்த்த உடனே கடித்துச் சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் எழும். அது போல, பெண்ணின் கன்னமும் காண்போரைக் கவர்ந்திழுத்துக் கடித்துத் திண்பதற்குரிய உணர்ச்சியைத் தூண்டுவதற்கேற்ற முறையில் மென்மையாக இருக்கும். கருப்புநிறத் திராட்சையைப் போல கருவிழி அனைவரையும் மயக்கும் தன்மை உடையது. பலாச்சுளை தித்திப்பாக இருக்கும். அது போலப் பெண்ணின் உதடும் தித்திப்பாக இருக்கும். மேற்கூறிய சொல்லாடல்களிலிருந்து பெண் உறுப்புக்கள் ஆண்களின் போக நுகர்ச்சிக்குப் பயன்படுபவை என்ற கருத்தியலைத் தருகின்றன.

பெண்ணினுடைய நடைக்கு வடிவ அடிப்படையில் சொல்லாடல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. காகிதத் தேர், தங்க ரதம், அசைந்து அசைந்து வரும்.

அதுபோலப் பெண்ணின் நடையும் அமைந்துள்ளதாகச் சொல்லாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

நிறம் தொடர்பாக வந்துள்ள சந்தனம் என்ற சொல்லாடல் பயன் அடிப்படையில் அமைந்துள்ளது. சந்தனத்தின் பயன் அதைத் தடவினால் மணம் தரும். அது போலப் பெண்ணின் உடலும் மணம் வீசும். அனைவரையும் கவரும் தன்மையுடையது என்ற கருத்தியலைத் தருகின்றது.

பெண்ணின் உறுப்புக்களும், குணங்களும் மென்மைத் தன்மையுடையவை என்பதைப் பஞ்சுவிரல், மென்மையான உடல், கீக்சுக்குரல் ஆகிய சொல்லாடல்கள் உணர்த்துகின்றன.

மேற்கூறிய அனைத்துச் சொல்லாடல்களும் பெண் உறுப்புக்கள் கவர்ச்சியானவை; ஆணைக் கவர்ந்து உணர்ச்சியைத் தூண்டக் கூடியன. போகம் துய்ப்பதற்கு ஆண்களுக்குப் பயன்படுவன என்பன போன்ற கருத்தியல்களைத் தருகின்றன.

ஒத்தப் பறவை, ஒத்த குயில், ஒத்த மரம், கருகிவிட்ட மரம் ஆகிய சொல்லாடல்களில் பெண் என்பவள் ஆணைச் சார்ந்து தான் வாழ வேண்டும். அதாவது, ஆண் இல்லை எனில் பெண்ணுக்கு வாழ்வு இல்லை என்ற கருத்தியலைப் பெண்ணுக்குத் தருகிறது எனலாம்.

பலியாடு, பாவி, சிலுவை, மலட்டு மரம் என்ற சொல்லாடல்கள் தண்டனையையும் பழியையும் பெண் ஏற்றுக் கொள்பவள் என்ற கருத்தியலைத் தருகிறது.

வீணை எனில் அது அப்படியே இருக்கும் போது பயனில்லை. அதை மீட்டினால்தான் இசை. அதுபோல, ஆணின் மீட்டுதலுக்கேற்பப் பெண் எனும் வீணை

உணர்ச்சி விருந்து படைப்பவள் என்ற கருத்தியலை வீணை என்ற சொல்லாடல் தருகிறது.

வேரற்ற மரம், அதிர் டம் கெட்டவள் என்பன போன்ற சொல்லாடல்களில் உள்ள வேர், அதிர் டம் என்ற பகுதி ஆணைக் குறிக்கிறது. அதாவது, வேரற்ற மரம் எனில் அதில் வேர் என்பது ஆண். அதிர் டம் கெட்டவள் என்பதிலுள்ள அதிர் டம் என்பது ஆணைக் குறிப்பதாக அமைந்துள்ளது. மேற்கூறிய சொல்லாடல்கள், ஆணின் துணையின்றிப் (கணவன்) பெண் வாழ முடியாது என்ற கருத்தியலைக் கற்பிதமாக்குகின்றன எனலாம்.

மாணவிகளைப் பற்றி ஆசிரியர் கூறும் பூந்தென்றல், இளந்தளிர், முல்லைச்சரம், மான்குட்டி போன்ற சொல்லாடல்கள், பெண்களின் மென்மைத் தன்மையினையும் ஆண்களுக்கான கவர்ச்சிப் பொருளாய்த் திகழ்வதற்கேற்பப் பெண்கள் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதனையும் கற்பிதமாக்கும் முறையில் புனைவு பெற்றுள்ன எனக் கூறலாம்.

திருமணம் எனும் சடங்கு, ஆணுக்குச் சந்ததியை விருத்தி செய்யும் அமைப்பாகவும், பெண்ணுக்குப் பாதுகாப்பான புகலிடமாகவும் திகழ்கிறது. இத்திருமண நிகழ்விற்குப் பின் கணவன் மனைவியிடையேயான பாலியல் உறவின் போதும், கணவனுக்காக உணர்வெழுச்சியின் போதும், மனைவியைப் பவுர்ணமி தரிசனம், மன்மத அழகு, வாலிப நிலவு, சந்தன முல்லை, தேவலோக சுந்தரி என்பன போன்ற சொல்லாடல்களைச் சூட்டிச் சுகம் காண்பதைக் காண முடிகிறது. இப்புனைவுகள், ஆண்களின் சுவை நுகர்ச்சிக்கேற்ப புகழ்மாலையைப் பெறும் முறையில், பெண்கள் தங்களைச் சுவை நுகர்ச்சிச் சாதனமாக உருவாக்கிக்

கொள்வதற்கான கற்பிதங்களை உருவாக்கும் கருத்தியலாக நிலை கொள்கிறது எனலாம்.

மாணிக்கம், தங்கப்பதக்கம், தங்க விக்ரகம் போன்ற சொல்லாடல்கள் மனைவி என்பவள் கணவனுக்கு மட்டும் தான். அதாவது கோயில் விக்ரகம் என்னும் பொழுது, அதை ஐயரைத் தவிர வேறு யாரும் தொட முடியாது. அது போலக் கணவரைத் தவிரப் பிறர் யாரும் தொட முடியாத பெட்டகமாக மனைவி இருக்க வேண்டும் என்ற கருத்தியலைத் தருகிறது. ஆனால் கணவர் வேறு பெண்ணுடன் தொடர்பு கொள்வதைப் பற்றிய சூழல் நிகழ்வுகள் கருத்தியலாக்கப்படுவதில்லை. அதே வேளையில், ஆண் செய்கிற தவறுக்கு, மூதேவி, நாய், சாகசக்காரி என்று பெண்தான் பழிதூற்றப்படுகிறாள். மனைவியைத் தவிர, பிற பெண்களை லட்டு, ரப்பர் பந்து, சேலத்து மாம்பழம், கனி என்பன போன்ற சொல்லாடல்களால் கணவன் மனைவியிடமோ, பிற பெண்களிடமோ புகழ்கின்ற பொழுது, கணவனின் செயல் பற்றி விமர்சிக்கும் சமூக மாந்தர், கணவனைப் பழிக்காமல், மனைவி சரியில்லாததால் (போக நுகர்ச்சியில் கணவனை வளைத்துப் போடாததால்) கணவன் வேறு பெண்களை நாடிச் செல்கிறான் என்று தவறான உறவில் ஈடுபடும் பெண்கள் மூலமாகவும் மற்ற பெண்கள் வாய்மொழி வழியாகவும் கதை நிகழ்வில், பாத்திர உரையாடல் மூலம் புனைந்துள்ளமையினைக் காணலாம். இது ஆண்களின் தவறான செயல்களுக்கு அவர்களைத் தண்டனைக்குரியவர்களாக்காமல் பெண்கள் மீது பெண்களும் சமூகமும் பழி சுமத்தும் கருத்தியலைக் கற்பிக்கிறது எனலாம்.

## 3.4 தொகுப்புரை

அரசு மணிமேகலையின் படைப்புக்களில் புனைவு பெற்றுள்ள பெண் உடல் மற்றும் உறுப்புக்கள் பற்றிய சொல்லாடல் புனைவுகள் இவ்வியலில் விளக்கம்

பெற்றுள்ளன. ஆண் பெண்ணைப் பற்றிக் கூறும் உடல் உறுப்புப் புனைவுகள், பெண் பெண்ணைப் பற்றிக் கூறும் உடல் உறுப்புப் புனைவுகள், உடல் உறுப்புப் புனைவும் கருத்தியலும் என மூவகைப்படுத்தி இவ்வியல் கருத்துக்களை ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

வாலிப நிலவு, பௌர்ணமி தரிசனம், சந்தன முல்லை, அழகு தேவதை, தங்கச் சிலை, செப்புச் சிலை, சேலத்து மாம்பழம், மரக்கட்டை, மூதேவி, லட்டு எனப் பெண் வடிவத்தினையும், பண்பினையும் ஆண்களின் கூற்றுக்கள் வழியாக ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

கார்மேகம், கருங்குழல், கருமேகக் குவியல், சாட்டைப்பின்னல் எனக் கூந்தலினையும், பிறைநிலைவென நெற்றியினையும் மீன் எனக் கண்ணினையும் கருவண்டு என விழியினையும், இளநுங்கு பட்டு எனக் கன்னத்தினையும், பலாச்சுளை, பவளம் என உதட்டினையும், மயில் சாயலினையும், குயில் குரலினையும், முல்லைச் சிரிப்பினையும், வாழைத்தண்டுக் கைகளையும், வெள்ளரிப்பிஞ்சு விரலினையும், கொடி இடையினையும், நாட்டிய நடையினையும் பஞ்சு போன்ற உடலினையும், மாநிறம், சந்தனம், தங்கம் போன்ற நிறத்தினையும் உடையவர்களாகப் பெண்கள் உள்ளனர் என ஆண்கள் கூறுவது போன்று ஆசிரியர் புனைந்துள்ளார்.

ஒற்றைமரம், ஒற்றைப் பறவை, ஒத்தைக் குயில், கருகிய மரம், வேரற்ற மரம், பட்டமரம், மலட்டு மரம், உழைக்கும் மாடு, அழுகிப்போன பழம் என பெண்கள் தங்களைப் பற்றியே பெயர் சூட்டிக் கொள்ளும் புனைவுகளை ஆசிரியர் படைத்துள்ள நாவல்களுள் காணலாம்.

படைப்பாசிரியர் கல்வி பயிலும் மாணவியரின் செயல்கள், தோற்றம், மற்றும் உடல் உறுப்புக்களைப் பற்றிக் குறிப்பிடுகின்ற பொழுது, ஆந்தை விழி, பூனை விழி,

மான்குட்டி, முல்லைக்கிளிகள், இளைய நிலாக்கள், சிட்டுக் குருவி, பட்டுப்பூச்சி, இளந்தளிர்கள், மான்கள் என்பன போன்ற சொல்லாடல்களைப் பயன்படுத்தியுள்ளமையினை அறியலாம்.

படைப்புக் கதை நிகழ்வில் ஊடாடும் பெண்கள் பிற பெண்களைப் பற்றி பிற பெண்களின் செயல், குணம், உடல் மற்றும் உறுப்புக்கள் பற்றிக் கூறும் பொழுது ஒடுகாலி, சனியன், மூதேவி, தெருப்பொறுப்பி நாய் என்பன போன்ற சொல்லாடல்களைப் பயன்படுத்தியுள்ளமையினை அறியலாம்.

ஆண்கள்- பெண்கள் பற்றியும், பெண்கள்- பெண்கள் பற்றியும், உடல் மற்றும் உடல் உறுப்புக்கள் சார்ந்து கூறியுள்ள சொல்லாடல்களின் வழிக் கீழ்க்காணும் கருத்தியல்கள் வெளிப்படுகின்றன என்பதனை ஆய்வாளர் இவ்வியலுள் விளக்கியுள்ளார். அதாவது,

* ஆணின் உணர்ச்சியைத் தூண்டுபவள்
* ஆணின் உணர்ச்சிக்கு விருந்து படைப்பவள்
* ஆணின் போக நுகர்ச்சிப் பொருள்
* ஆணைக் கவர்ந்து இழுப்பவள்
* தண்டனை அனுபவிப்பவன்
* பொறாமைப்படுபவள்
* பிறர் மீது பழிதூற்றுபவள்
* ஆணைச் சார்ந்து வாழ்பவள்

என்பன போன்ற கருத்தியல்களை உடல் உறுப்புக்கள் சார்ந்த புனைவுகளின் வழி அறிய முடிகிறது எனலாம்.

## அடிக்குறிப்புகள்

1. அரசு மணிமேகலை, என்றும் தொடரும் பயணம், ப.25.
2. மேலது., ப.32.
3. மேலது., ப.38.
4. அரசு மணிமேகலை, மனிதரில் இவர் மகாத்மா, ப.151.
5. மேலது., ப.152.
6. மேலது., ப.153.
7. மேலது., ப.152.
8. மேலது., ப.151.
9. மேலது., ப.153.
10. மேலது., ப.152.
11. மேலது., ப.153.
12. மேலது., ப.155.
13. மேலது., ப.152.
14. மேலது., ப.132.
15. மேலது., ப.157.
16. மேலது., ப.158.
17. மேலது., ப.159.
18. மேலது., ப.159.
19. அரசு மணிமேகலை, பொழுது ஒருநாள் புலரும், ப.50.
20. மேலது.,ப.50.
21. மேலது., ப.50.
22. மேலது., ப.51.
23. மேலது., ப.121.
24. அரசு மணிமேகலை, நாளை நான் ஜெயிப்பேன், ப.124.
25. மேலது., ப.121.
26. மேலது., ப.124.
27. மேலது., ப.140.
28. மேலது., ப.124.
29. மேலது., ப.147.
30. மேலது., ப.142.
31. அரசு மணிமேகலை, கண்ணுக்குள் நூறு கவிதை, ப.32.
32. மேலது., ப.33.
33. மேலது., ப.34.
34. மேலது., ப.33.
35. அரசு மணிமேகலை, பொறுத்திரு பூ மலர, ப.74.
36. மேலது., ப.77.
37. மேலது., ப.77.

38. மேலது., ப.76.
39. மேலது., ப.77.
40. அரசு மணிமேகலை, கனவு சுமக்கும் கண்கள், ப.17.
41. மேலது., ப.15.
42. மேலது., ப.14.
43. மேலது., ப.15.
44. மேலது., ப.18.
45. மேலது., ப.27.
46. மேலது., ப.26.
47. மேலது., ப.29.
48. மேலது., ப.28.
49. மேலது., பக்.31-32.
50. அரசு மணிமேகலை, தீக்குளிக்காத சீதைகள், ப.105.
51. மேலது., ப.105.
52. மேலது., ப.109.
53. மேலது., ப.4.
54. மேலது., ப.4.
55. மேலது., ப.4.
56. மேலது., ப.4.
57. மேலது., பக்.22-23.
58. மேலது., ப.20.
59. மேலது., ப.18.
60. அரசு மணிமேகலை, பொழுது ஒருநாள் புலரும், ப.87.
61. மேலது., ப.93.
62. மேலது., ப.14.
63. மேலது., ப.18.
64. மேலது., ப.24.
65. மேலது., ப.23.
66. மேலது., ப.28.
67. மேலது., ப.17.
68. மேலது., ப.37.
69. மேலது., ப.39.
70. மேலது., ப.37.
71. மேலது., ப.146.
72. மேலது., ப.32.
73. மேலது., ப.32.
74. மேலது., ப.34.
75. மேலது., ப.35.
76. மேலது., ப.43.

77. மேலது., ப.37.
78. மேலது., ப.127.
79. மேலது., ப.101.
80. மேலது., ப.105.
81. அரசு மணிமேகலை, ப.32.
82. மேலது., ப.33.
83. மேலது., ப.35.
84. மேலது., ப.35.
85. அரசு மணிமேகலை, ப.
86. மேலது., ப.55.
87. மேலது., ப.64.
88. மேலது., ப.63.
89. அரசு மணிமேகலை, ப.6.
90. மேலது., ப.5.
91. மேலது., ப.5.
92. மேலது., ப.5.
93. மேலது., ப.12.
94. மேலது., ப.19.
95. மேலது., ப.33.
96. மேலது., ப.30.
97. மேலது., ப.60.
98. மேலது., ப.68.
99. மேலது., ப.69.
100. மேலது., ப.69.
101. மேலது., பக்.73-74.
102. மேலது., பக்.77-78.
103. அரசு மணிமேகலை, ப.7.
104. மேலது., ப.20.
105. மேலது., ப.21.
106. மேலது., ப.23.
107. மேலது., ப.24.
108. மேலது., ப.27.
109. அரசு மணிமேகலை, ப.119.
110. மேலது., ப.138.
111. அரசு மணிமேகலை, ப.5.
112. மேலது., ப.6.
113. மேலது., ப.120.
114. அரசு மணிமேகலை, காத்திருங்கள் காலம் வரும், ப.110.
115. மேலது., பக்.116-117.

116. மேலது., ப.102.
117. மேலது., ப.112.
118. அரசுமணிமேகலை, பக்.8,17.
119. அரசு மணிமேகலை, ப.13.
120. அரசு மணிமேகலை, பூவே இளம்  பூவே, ப.110.
121. அரசு மணிமேகலை, ப.61.
122. மேலது., ப.69.
123. மேலது., ப.69.
124. அரசு மணிமேகலை, ப.28.
125. மேலது., ப.54.
126. மேலது., ப.23.
127. மேலது., ப.27.
128. அரசு மணிமேகலை, ப,18.
129. மேலது., ப.50.
130. மேலது., ப.54.

# இயல் – 4

# குடும்ப உறவுப் புனைவும் கருத்தியலும்

## 4.0 முன்னுரை

சமுதாய அமைப்பில், குடும்பம் என்பது முக்கியமான முதன்மையான ஓர் அங்கம் ஆகும். மனித வரலாற்றில் அனைத்துச் சமூகங்களிலும், ஏதேனும் ஒரு வடிவத்தில் குடும்பம் என்ற அமைப்பு இருந்து வருகிறது. திருமணம், பாலுறவு, சந்ததியினரை உருவாக்குதல் போன்ற முக்கியச் செயல்கள் நிகழ அடிப்படையாகத் திகழ்வதால் குடும்பம் நிறுவனம் எனப்படுகிறது. சமூகக் கட்டுப்பாட்டை முறையாகச் செயல்படுத்திச் செல்லும் ஒரு சமூக நிறுவனமாகக் குடும்பம் திகழ்கிறது. இக்குடும்பத்தில் ஆணும், பெண்ணும், கணவனும் மனைவியுமாகக் கூடி வாழ்கின்றனர். மக்கட் பேறின் மூலம் தாய், தந்தையர் என்னும் தகுப்பாடுடைய பெற்றோர்கள் ஆகின்றனர். பெற்றோர் பெற்றெடுக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்பச் சகோதர உறவு விரிவடைகிறது. சகோதர உறவில் உள்ளோர் வளர்ந்த பின்பு, வாழ்வின் மையமாகத் திகழும். திருமணச் சடங்கின் மூலம் நிகழும் பாலியல் உறவில் திறைக்கும் சந்ததிப் பெருக்கத்தினால் குடும்ப உறவுகள் பல்கிக் கிளைப்பதோடு, இவ்வுடன்பிறப்புகளின் பெற்றோர்களான தந்தையும், தாயும், தாத்தா, பாட்டி என முதுமைப் பேறு தாங்குகின்றனர்.

குடும்பம் என்ற நிறுவனத்தில் கணவன், தந்தை, மகன், அண்ணன், தம்பி, சித்தப்பா, பெரியப்பா, மாமா, தாத்தா என்பன போன்ற ஆண்களின் உறவுப் பெயர்கள் விரிவடைவதைப் போன்று, மனைவி, தாய், மகள், அக்காள், தங்கை, சித்தி (சின்னம்மா), பெரியம்மா, அத்தை எனப் பெண்களின் உறவுப் பெயர்களும் விரிவு கொள்கின்றன.

இத்தகையக் குடும்ப உறவுகள் பற்றிய வாழ்வியல் நிகழ்வுகளை அரசு மணிமேகலை என்பார், தாம் படைத்துள்ள நாவல்களில் கதைக்கள நிகழ்வுகளாக்கியுள்ளார். குடும்ப உறவு சார்ந்த வாழ்வியல் நிகழ்வில், பல்வகைப் பெயர் தாங்கிய பெண்களைப் பற்றிய குடும்ப உறவு நிகழ்வுகள் இவர் தம் நாவல்களும் புனைவுப் பெற்றுள்ளமையினையும் இப்புனைவுகள் மூலம் புலனாகும் கருத்தியல்களையும் இவ்வியல் விவரிக்கிறது. இதனைக்

1) குடும்ப அமைப்பும் வகைமையும்,

2) குடும்ப உறவும் பெண்புனைவும்,

3) பெண் புனைவும் கருத்தியலும்

என முப்பகுதிகளாக வகைப்படுத்தி ஆய்வாளர் விளக்கி உள்ளார்.

## 4.1 குடும்பம்

குடும்பம் என்பது திருமணத்தால் கூட்டப்பட்ட மாந்தர் குழுவாகும். மனித சமுதாயத்தின் மிகத் தொன்மையான நிறுவனமாகத் திகழ்வது குடும்பம் ஆகும். இது இரத்தத் தொடர்புடையதாக அல்லது தத்து எடுத்ததாக அமைந்திருக்கும். அவர்கள் ஒரே வீட்டில் வாழ்பவர்களாக இருப்பர். ஒரு சிறிய குழுவாகவும் இருக்கலாம். பலர் அடங்கிய பெருங் குழுவாகவும் இருக்கலாம். இதில் குறைந்த அளவு ஓர் ஆணும் பெண்ணும் இருக்க வேண்டும். ஒத்த செயலுடையவர்களாக இருப்பர். சமுதாயத்தில் கணவன், மனைவி, தாய், தந்தை, மகன், மகள், உடன் பிறந்தவர்கள் என்ற உறவுடனும் பொதுவான பண்பாட்டுடனும் வாழ்வர்[1] என்கிறார் சு.சண்முகசுந்தரம்.

குடும்பம் சமுதாயத்திற்கு ஒரு துணை அமைப்பாக இருக்கிறது. சமுதாயம் குடும்பத்திற்கு வாழ்வை அளிக்கிறது[2] என்று இரா. கற்பகம் கூறுகிறார்.

குடும்பம் என்பது பின்வரும் காரணங்களின் அடிப்படையில் அமைந்த ஒரு குழு எனலாம். அது திருமணத்தில் தொடக்கம் கொள்கிறது. கணவன், மனைவி, குழந்தைகள் மற்ற உறவினர்கள் ஆகியோரைக் கொண்டது. அறம், சட்டம், பொருளாதாரம், மதம், சமூக உரிமைகள் ஆகியவற்றில் இணைக்கப்பட்டது[3] என்கிறார் லெவிஸ்ட்ராஸ்.

குடும்பம் என்பது நடைமுறை வாழ்க்கையில் ஒரு வீட்டில் வசிக்கும் இரத்த உறவுடைய உறவினர்கள் அனைவரையும் உள்ளடக்கிய ஓர் அமைப்பாகும். குடும்பம் என்பது ஆண், பெண் பாலுறவை நெறிப்படுத்த அமைக்கப்பட்ட ஓர் அமைப்பாகும் என்கிறார் க.ப. அறவாணன்.[4]

குடும்பம் என்பது ஒரு சிறிய குழுவாக இருக்கலாம் பலர் அடங்கிய ஒரு பெருங் குழுவாக இருக்கலாம். இதில் குறைந்த அளவு ஓர் ஆணும், ஒரு பெண்ணும் இடம்பெற வேண்டும். இவ்விருவரும், அவர்களுடைய சமுதாயம் ஏற்றுக் கொள்ள, திருமண முறைப்படி மணம் செய்து கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு ஆணும், பெண்ணும் கணவன், மனைவி என்ற உறவை ஏற்படுத்திக் கொள்ளும் பொழுதான் அவர்கள் ஒரு குடும்பமாக அமைக்கின்றனர்[5] என்கிறார் பக்தவத்சல பாரதி.

குடும்பம் ஒரு சிறிய குழு, குறைந்த அளவு இது ஒரு ஆணையும், பெண்ணையும் கொண்டிருக்கும். ஓர் ஆணும், பெண்ணும் கணவன் மனைவி என்ற ஓர் உறவு நிலையை அமைக்கின்றார்கள்[6] என வாழ்வியற் களஞ்சியம் குடும்பம் என்பதற்கு விளக்கம் தருகிறது.

இரத்த உறவினாலோ, மணஉறவினாலோ, சுவீகாரத்தினாலோ பிணைப்புண்ட இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட மனிதர்கள் சேர்ந்து வாழும் அமைப்பு

குடும்பம் என்று வரையறை செய்யப்படுகின்றது எனச் சேதுமணிமணியன் குறிப்பிடுகிறார்.[7]

குழந்தைகளைப் பெற்றுப் பேணி வளர்த்துக் கல்வி புகட்டுவதற்காக ஆணும், பெண்ணும், நிலையான ஒரு பிணைப்பினால் இணைந்து வாழும் நிலையைக் குடும்ப அமைப்பில் காண்கிறோம் என்பர் க.ராமச்சந்திரன்.[8]

திருமணச் சடங்கின் மூலம் ஆண், பெண் ஆகிய இரு பாலாரும் கணவன், மனைவி என உறவு பூண்டு, ஒன்றித்துத் தம் குழந்தைகளுடன் சேர்ந்து வாழும் முறையியலைக் குடும்ப அமைப்பு எனலாம். ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதால் மட்டும் அதைக் குடும்பம் எனச் சொல்ல முடியாது. இருவரும் கணவன் மனைவியாக இருக்க வேண்டும். குடும்பம் அமையக் கணவன் மனைவி குழந்தைகள் ஆகிய மூவரும் தேவை. ஆனால் மூவரும் ஒரே நேரத்தில் இருக்க வேண்டும் என்பது இல்லை. மேலும் ஒரு குடும்பத்தில் இம்மூவரும் மட்டுமே (அல்லது) இவர்களில் இருவர் மட்டுமே இருக்க வேண்டும் என்ற தேவையுமில்லை. இவர்களின் உறவினர்களும் இவர்களுடன் சேர்ந்திருக்கலாம்.

### 4.1.2 குடும்ப வகைகள்

குடும்பமானது அன்பு செலுத்தும் இடமாகவும் பொருளாதாரப் பணியிடமாகவும் உறவுகளின் வளர்விடமாகவும் சடங்குகள் நிகழ்த்தும் இடமாகவும் கல்வி அளிக்கும் இடமாகவும் திகழ்கிறது என ஆக்பர், நீம்காஃப் குறிப்பிடுகின்றனர்.[9]

பாலியல் உறவு, இனப்பெருக்கம், பொருளாதாரம் ஆகிய மூன்று முதன்மையான பணிகளைச் செய்கிற குடும்பம் தனிமனிதர்க்கும், சமுதாயத்திற்கும் பெரும் பங்காற்றுகிறது என கிலேவியும் பாலர்சும் குறிப்பிடுகின்றனர்.[10]

தனி மனிதர்க்காகவும் சமூகத்திற்காகவும் பெரும் பங்களிப்புச் செய்கின்ற இக்குடும்ப அமைப்பினை இரா.கற்பகம் என்பார் பின்வருமாறு வகைப்படுத்துகின்றார்.

- ❖ பிறந்த குடும்பம்
- ❖ புகுந்த குடும்பம்
- ❖ சுருங்கிய குடும்பம்
- ❖ விரிந்து பெருகிய குடும்பம்
- ❖ கூட்டுக் குடும்பம்

எனக் குடும்ப அமைப்பை வகைப்படுத்தியுள்ளார்.[11]

அரசு மணிமேகலை படைத்துள்ள பத்து நாவல்களுள் பிறந்த குடும்பத்தை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ள நாவல்கள் மூன்று ஆகும். அவையாவன,

1. பொறுத்திரு பூ மலர
2. நாளை நான் ஜெயிப்பேன்
3. கண்ணுக்குள் நூறு கவிதை

சுருங்கிய குடும்பத்தை மையமாகக் கொண்டு இரண்டு நாவல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவையாவன,

1. கனவு சுமக்கும் கண்கள்
2. பூவே இளம் பூவே

பெருகிய குடும்பத்தை மையமாகக் கொண்டு இரண்டு நாவல்கள் படைப்பாக்கம் பெற்றுள்ளன. அவையாவன.

1. தீக்குளிக்காத சீதைகள்

2. பொழுது ஒரு நாள் புலரும்

புகுந்த குடும்பத்தை மையமாகக் கொண்டு இரண்டு நாவல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவையாவன,

1. என்றும் தொடரும் பயணம்

2. மனிதரில் இவர் மகாத்மா

கூட்டுக் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டு காத்திருங்கள் காலம் வரும் எனன்னும் நாவலைப் படைத்துள்ளார்.

## 4.2 குடும்ப உறவும் பெண் புனைவும்

பல்வேறு வகைப்பட்ட குடும்ப வாழ்வியலை மையமாகக் கொண்டு அரசு மணிமேகலை படைத்துள்ள பத்து நாவல்களிலும், வாழ்வியலில் வெளிப்படும் குடும்ப உறவுகளையும் குடும்ப உறவுகளில் பெண் புனைவு பெற்றுள்ளமையினையும் இவண் காண்போம்.

குடும்ப உறவுகளில் பெண் புனைவு பெற்றுள்ள முறையியலை,

- ❖ ஆண் கூற்றுப் பெண் புனைவுகள்
- ❖ பெண் கூற்றுப் பெண் புனைவுகள்

என இரு வகையாகப் பகுத்துக் காணலாம்.

### 4.2.1 ஆண் கூற்றுப் பெண் புனைவுகள்

அரசு மணிமேகலையினுடைய பத்து நாவல்களுள், ஆண் பாத்திரங்களாக இடம்பெற்றுள்ள கணவன், தந்தை, காதலன், சகோதரன் என்ற உறவு நிலைகளில்

உள்ளவர்கள், தத்தம் உறவு நிலைகளுக்கேற்பப் பெண்களுடன் பேசுகின்ற பொழுது வெளிப்படும் சொல்லாடல்கள் புனைவு பெற்றுள்ளமையினை,

- ❖ கணவன் கூற்றுப் புனைவுகள்
- ❖ தந்தை கூற்றுப் புனைவுகள்
- ❖ சகோதரன் கூற்றுப் புனைவுகள்
- ❖ காதலன் கூற்றுப் புனைவுகள்

என வகைப்படுத்திக் காணலாம்.

### 4.2.1.1 கணவன் கூற்றுப் புனைவுகள்

அரசு மணிமேகலையின் படைப்புக்களுள் கணவன் உறவு நிலையில் முத்து என்பவர் 'என்றும் தொடரும் பயணம்' நாவலிலும், ரகுவும், வெங்கடே வரன் என்பவரும், 'மனிதரில் இவர் மகாத்மா' நாவலிலும், ரமணன் என்பவர் தீக்குளிக்காத சீதைகள் நாவலிலும், தங்கதுரை என்பவர் கண்ணுக்குள் நூறு கவிதை நாவலிலும் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

அலுவலகச் சூழல், குடும்பப் பொறுப்பு இவைகளின் ஊடாக உணவு தயாரித்தல், கணவனை உபசரித்தல் எனும் பொறுப்புணர்ச்சியோடு கல்லூரிக்குப் பேராசிரியைப் பணியாற்ற விரைந்து கொண்டிருக்கும் சூழலில், படுத்து உறங்கி நிதானமாகக் காலை 8 மணிக்குத் தாமதமாக எழும்பும் தன் கணவர் முத்துவிடம், அலுவலகத்திற்குப் போக நேரமாகிவிட்டது என்று சாக்குச் சொல்லாமல், சாப்பிட்டுச் செல்லுங்கள் என்று கூறியபடி, அலங்கோல நிலையில், அவசரமாகக் கல்லூரிக்குக் கிளம்புகிறாள். கணவன் முத்துவிற்கு அவள் உணர்ச்சி தேவதையாகக் காட்சியளிக்கிறாள்.

“வாவ் அட்டகாஷம் சரோ! உன் அலங்காரம் எப்படி இருக்குத் தெரியுமா? . . . நீ இன்னிக்கு படு அழகா இருக்க . . . ஒரு அட்டகாசமான மூடில் இருக்கிறேன்[12] என்று அவளை வாரி அணைத்து, அவன் உணர்வை உறவாகப் பரிமாறுகிறான். இச்சூழலை வெறுப்பது போல் மனைவி சரோஜினி பாவித்தாலும் சிணுங்கினாலும், கணவனின் அரவணைப்பில் பூரிப்படைவதாக ஆசிரியர் புனைந்துள்ளார்.

சரோவின் கணவன் முத்து தன்னிடம் ஆய்வு மேற்கொள்ளும் மாணவியிடம் தகாத உறவு வைத்திருப்பதைக் கண்ட சரோஜினி கோப ஆவேசத்துடன் மாலதியை அடித்துத் திட்டுகிறாள். அப்பொழுது “என்னடி ஆர்ப்பாட்டம் பண்றே? மலட்டுச் சனியனே . . .”[13] என்றும்,

“என்னடி அப்படி ஒரு பார்வை பார்க்கிறே? எரிச்சுருவியா? மாலதி கால் தூசு ஆவியாடி நீ? அதிலேயும் அவ ரப்பர் பந்து மாதிரிடி . . . என்னமா வளைஞ்சி, எப்படி ஈடு கொடுப்பா தெரியுமா[14] என்றும் கூறுகிறான்.

முத்துவின் தகாத உறவினை அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் அறிந்ததை எண்ணிக் கோபமுற்று, “திருட்டு நாயே என்னைச் சந்தியிலே நிக்க வெச்சிட்டு அழுகை வேறயா அழுகை . . . புருஷன் என்ன அக்கிரமம் பண்ணாலும் பொறுத்துக்கிட்டுப் போறவதாண்டி பொண்டாட்டி! ஊரைச் சுத்தற கழுதை! நளாயினி கதை தெரியுமாடி உனக்கு[15] என்கிறான்.

வேறு பெண்ணுடன் உறவு வைத்துள்ள தன் கணவன் முத்துவிடம், தன்னிடம் என்ன குறை கண்டீர்கள் என வினவ, “குறைகளா? எல்லாமே குறைக தாண்டி! ஒரு ஸ்டைலா, நாகரிகமா பார்ட்டிகளுக்கு வரத் தெரியுதா? பெரிய மனுஷங்ககூட உனக்குப் பேசத் தெரியுதா? அமெரிக்கா அளவுக்கு இல்லாட்டாலும், அட . . . மெட்ராஸ் அளவுக்காவது இருக்கியா? . . . ரெண்டே வருஷத்திலே நீ கிழவியாயிட்டே

. . . கையைப் பிடிச்சி, தாங்கி அழைக்கணும்! அப்பவும் என்னமோ வேண்டா வெறுப்பா, மரக்கட்டையாட்டமா கிடப்பே! அவ லட்டுடி! மாலதி உடம்பு எப்படி கிண்ணுன்னு இருக்கு பாத்தியா?[16] என்று வர்ணிக்கிறான்.

தனக்கு விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகத் தன் மனைவியிடம் தெரிவிக்கச் சொல்லி முத்துவும் மாலதியும் நாடகம் ஆடுகின்றனர். இச் செய்தியைக் கேள்விப்பட்டு மருத்துவமனைக்கு ஓடோடி வரும் மனைவியைப் பார்த்து, ‘‘பாத்தியா மாலதி என் பொண்டாட்டி பத்தினித் தங்கம் . . . புருஷனுக்கு ஒண்ணுன்னா அவ எப்படிப் பதறி அடிச்சிக்கிட்டு ஓடி வந்துட்டா பாத்தியா?’’[17] எனக் கணவன் கிண்டலடித்துச் சிரிக்கிறான்.

மனைவி சரோஜினியின் பெயரில் உள்ள சொத்துக்களைத் தன் பெயருக்கு மாற்றித் தரும்படி மிரட்டுகின்ற பொழுது, ‘‘பணம்னா ஒரு ஆசைதானே! நீ வேற வர வர அழுமூஞ்சி தரித்திரமாய் போயிட்டே . . . நீயும் சீக்கிரம் ஒழிஞ்சா, நிறைய பணமும் கிடைக்கும்! ஒன் தொண தொணப்பும் ஒழியும்! லட்டு மாதிரி மாலதி கிடைப்பா. நிம்மதியா அப்படி ஓர்ல்ட் டூர் போய்ட்டு வருவோம்[18] என்கிறான்.

ரமணன் மதுமதியுடன் திருமணமாகி முதல் மூன்று மாதங்கள் நன்றாக வாழ்ந்துவிட்டுப் பின்பு வேறு பெண்ணுடன் ஊர் சுற்றுகிறான். இதை அறியாத மதுமதி, காரில் கணவனுடன் சென்றவளைப் பற்றி விசாரிக்கும் போது, பயந்து போய் விடுகிறான். அப்பொழுது இவளுக்கு அசாத்திய புத்திசாலித்தனம், ஒரு இழை கிடைத்தாலும் உருவி எடுத்து விடுவாள் என்று எண்ணுகிறான்.

உடல் நலமில்லாமல் துன்பப்படும் செண்பகராஜ பூபதியையும், பைத்தியமாக வாழும் அவர் மகள் மதுமதியையும் கவனித்து உபசரித்துக் கொண்டிருக்கும் கண்மணியிடம், ‘‘சேலத்து மாம்பழத்தைப் போல அட்டகாசமாவே இருக்கிறா . . .

அதுதான் கிழவன் விழுந்துட்டான் . . . அடடா என்ன அழகனா கண்ணு? சின்ன அந்த வழுவழுப்பான இடுப்பிலே கிள்ளினா, என்ன மாதிரி போதை ஏறும்? அடடா கடைசல் பிடிச்ச தேக்கு பொம்மை மாதிரி இல்லே இருக்கா[19] என்று மதுமதியின் கணவன் ரமணன் கூறுகிறான்.

மனைவி மதுமதி பைத்தியமாக மாறுவதற்குக் காரணமாக இருந்த கணவன் ரமணன், வேறொரு பெண்ணுடன் உல்லாச அறையில் உறவு கொள்கின்ற சூழலில், மனைவியைப் பற்றி அவள் விசாரித்த பொழுது, ‘‘இதோ பார். முதலும் கடைசியுமான எச்சரிக்கை உனக்கு. நீ ராத்திரி பெண்டாட்டி! அவ்வளவுதான். பகல்லே எதாவது வாயைத் திறந்தே கொலை . . . கொலை விழும். பொட்டச்சிங்க ராத்திரித் தேவதைங்க. பகல் நேரத் தலைவலிங்க . . . தரித்திரங்க . . . பொம்பளைங்க படிச்சவங்களா, பணக்காரங்களா இருக்கக் கூடாது. உடனே சண்டை போடுவாளுக. திமிருத்தனமாக நடப்பாளுக[20] என்று பதிலுரைக்கிறான்.

ரகுராமன் தன் மனைவி உமாவைப் புகழ்கின்ற பொழுது, ‘‘அடடா நீ என்னம்மா மணக்கிறே[21] என்று கூறியபடி அவளைக் கட்டிலில் உட்கார வைத்துவிட்டு, அவளின் தோற்றப் பொலிவினைப் பற்றித் தனக்குத் தானே பின்வருமாறு கூற்றாக்கிக் கொள்கிறான். ‘‘இந்தத் தங்கச்சிலை என் மனைவி. புன்னகையும், பொன்னகையுமாக ஜொலிக்கிற இந்த மஞ்சள் நிலா என் மனங் கவர்ந்தவள். ஒடிசலான இந்த உடம்பும், தங்கத்தின் ஜொலிப்பும், நீண்ட பெருங்குழலும், கனமான மஞ்சள் கயிறும், பளபளக்கும் மாங்கல்யமும், பார்க்கப் பார்க்க மேலும் ஆவலைத் தூண்டுகின்றன’’[22] என்கின்றான்.

இல்லற வாழ்வில் குடும்ப உறுப்பினர்களுடன், நடந்து கொள்ளும் விதம் பற்றித் தன் மனைவி உமாவிடம் ரகுராமன் கூறுகின்ற பொழுது, ‘‘இதோ பார் உமா!

அப்பா எங்களுக்காகவே இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலை. ராஜா ராமனும், அவரும் என்னோட இரண்டு கண்கள் மாதிரி. . . அப்படின்னா நான்? இப்படி உன் பார்வை கேக்கறது. நீ என் உயிர் உமா. நான் சொல்றதைக் கேட்டுக்கோ. ராஜா உன் குழந்தை. அப்பாவும் ஒரு வகையிலே உனக்குக் குழந்தைதான். அவா அன்புக்கு ஏங்கற குழந்தைகள். அவாளை நன்னா கவனிச்சுக்க வேண்டியது உன் பொறுப்பு''[23] என்று கற்பு வாழ்வைக் கற்பிக்கிறான்.

இறந்து போன அம்மாவின் சாயலைத் தன் மனைவி உமாவின் வடிவத்தில் கண்டு நெகிழ்ந்து போன ரகு, கண் கலங்கிய போது, ஆறுதலாக அரவணைத்து, அவன் கண்களில் முத்தம் கொடுத்து, அழக்கூடாது என்கிறாள். அதற்கு அவன், ''அடடே அப்படின்னா இனிமே அடிக்கடி அம்மாவை நினைச்சு அழலாம் போலிருக்கே. ஜாலிதான் அய்யாவுக்கு . . . வலிய வரும் முத்தங்கள் . . . வழி கேட்டு வரும் வசந்தங்கள்''[24] என்று கூறிப் பூரிப்படைகின்றான். உமாவின் நல்ல குணங்களும் மிருதுவான இயல்புகளும், அப்பா தம்பி இருவருக்கும் பிடிக்கும் முறையில் நடந்து கொள்வதும் ரகுவின் மனத்திற்கு மகிழ்ச்சியைத் தருவதால், இவ்வுணர்ச்சி வெளிப்பாட்டிற்கான கூற்றுக்கள் உமாவைப் பற்றிய புனைவுகளாக நாவல் முழுவதும் பதிவு பெற்றுள்ளன.

### 4.2.1.2 தந்தை கூற்றுப் புனைவுகள்

அரசு மணிமேகலையின் நாவல்களுள் தந்தை பாத்திரங்கள் புனைவு பெற்றுள்ளன. செண்பகராஜபூபதி 'தீக்குளிக்காத சீதைகள்' நாவலிலும், வெங்கடேஷன் 'கனவு சுமக்கும் கண்களிலும்', ராஜலிங்கம் 'பூவே இளம் பூவே' நாவலிலும், மாணிக்கம் 'நாளை நான் ஜெயிப்பேன்' நாவலிலும், பெயர் குறிப்பிடாமல் பிள்ளைகள் பெயருடன் உறவை இணைத்து பூவிழியின் அப்பா எனப் 'பொறுத்திரு

பூ மலர' நாவலிலும், கதிர்வேலுவின் அப்பா என்று 'கண்ணுக்குள் நூறு கவிதையிலும்', தந்தை உறவு நிலையில் சித்தரிக்கப்பட்டுள்ளனர். மேற்குறிப்பிட்ட தந்தையர், தம் மகள், மருமகள், மனைவியர் மற்றும் உறவுப் பெண்கள் பற்றிக் கூறும் கருத்துக்கள் புனைவு பெற்றுள்ளமையினை இனிக் காண்போம்.

செண்பகராஜபூபதி இந்தியாவிலே தலைசிறந்த பணக்காரர்களில் ஒருவராகத் திகழ்ந்தாலும், மனைவியை இழந்து வருந்தினாலும் வேறு திருமணம் செய்து கொள்ளாமல், தன் மகள் மதுமதியை அயல் நாட்டிற்குச் சென்று, உயர் கல்வியைப் படித்து வரச் செய்து, அவளுக்காகவே உயிர் வாழ்கிறார். அப்பொழுது அவரைச் சுற்றியுள்ள நண்பர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் தன் மகளைப் பொட்டையா, இல்லே இருக்கு என்ன பிரயோசனம் என்று கூறினாலும் தன்னம்பிக்கையோடு ஆயிரம் ஆயிரம் ஆசைக் கனவுகளைச் செழிக்கச் செய்ய வந்த குல விளக்காகவே அவருக்குப் புலப்படுகிறது. மதுமதியைக் கருவேப்பிலைக் கன்றைப் போலப் பாதுகாத்து வளர்த்தது எதுவும் செண்பகராஜ பூபதிக்கு வீணாகவில்லை. அதனால், அவள் தங்கச் சிலையாக, குணத்திலும் சுத்தத் தங்கமாக வளர்ந்தாள் என்று கூறுகிறார்.[25]

செல்வச் செழிப்பில் வளர்ந்த மதுமதி, கணவன் ரமணனால் பைத்தியமாக்கப்பட்டதை அறிந்த செண்பராஜபூபதி, அதிர்ந்து போய், தொழில் உலகமே அவளைக் கண்டு அதிசயிக்குமே! அந்த மதுமதியா மனநிலை திரிந்து பைத்தியமாக அறைக்குள் முடங்கிக் கிடக்கிறாள் என்று வருந்தும் போது, "அரங்கில் நடமாடும் மயிலின் கால்கள் முறிக்கப்பட்டனவா? பறவையின் சிறகுகள் கத்தரிக்கப்பட்டு விட்டனவா?[26] என்று வருந்துகிறார்.

வெங்கடேஷன் தன் மகன் ரகுவிற்கு உமாவை வரன் பார்க்கச் சென்ற பொழுது, அவள் ஒவ்வொரு செயலுக்கும் பெற்றோரின் அனுமதி பெற்றுச் செய்வதையும், ஒடிசலான உடம்பும் நீண்ட கருங்கூந்தலும் பெரிய கண்களும் திருத்தமான உடலமைப்பும் மாநிறமும் அவளுக்கு அழகு சேர்ப்பதைப் பார்ப்பதோடு, ஒட்டு மொத்தமான அவளின் மென்மையான போக்கையும், அவள் அடையும் மருட்சியையும் எண்ணி மகிழ்ந்து உரையாடுகிறார்.[27]

வெங்கடேஷன் தன் மனைவி சகதர்மிணியைப் பற்றி உமாவிடமும், மற்ற உறவினர்களிடமும் கூறும் போது, ‘‘ஒரு பைசா வரதட்சணை வாங்கக் கூடாது ம்மா! தங்கம்னா தங்கம் . . . அவ நிறைஞ்ச மஞ்சளோடயும், குங்குமத்தோடயும் போய்ச் சேர்ந்துட்டா’’[28] என்று கூறும் போது கண் கலங்கி விடுகிறார்.

ரகுவிற்கு உமாவை ரொம்பப் பிடித்ததால், வெங்கடேஷன் தன் மருமகள் உமாவைப் பார்த்து, உன் விருப்பம் தான் ரொம்ப முக்கியம் என்று கேட்கிறார். அப்பொழுது குத்துவிளக்கு ஜொலிப்பது போல மஞ்சள் புடவையில் பொலிந்த உமா, மெல்ல எழுந்து நின்றவுடன், ரகுவின் தந்தை வெங்கடேஷன், உன் எண்ணம் என்னன்னு சொல்லும்மா என்று புன்முறுவலுடன் கேட்கிறார். அவள் தன் விருப்பத்தைத் தெரிவிக்கும் விதமாக இருவர் காலிலும் விழுந்து வணங்கித் தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறாள்.[29]

வெங்கடேஷன் தன் மனைவி சகதர்மிணியின் நகைகளை உமாவிற்குக் கொடுப்பதற்காக வரும் பொழுது, உமா அவரை வரவேற்று அமரச் செய்தவுடன், எல்லோரும் சுற்றி நின்று கொண்டிருப்பதைப் பார்த்த வெங்கடேஷன் எல்லோரையும் அமரச் சொல்கிறான். ஆனால் அவர்கள் உட்கார மறுக்கும் போது, ‘‘என்னவோ அது பெரிய தப்பு மாதிரின்னா பேசறேள் . . . ஏம்மா ஆத்துல இருக்கிற பொம்மனாட்டி

தைரியத்தோட, சுதந்திரத்தோட, தன்னம்பிக்கையோட இருந்தாத்தானே வீட்டிலே வளைய வர்ற மத்தவளுக்கு அந்தத் தைரியமும், சுதந்திரமும், தன்னம்பிக்கையும் இருக்கும்! லோகத்திலே பொம்மனாட்டிகள் அம்பாளோட ஸ்வரூபங்கள் இல்லை"[30] என்று கூறுகிறார்.

வெங்கடேஷன் தன் மருமகள் உமாவிடம் கொடுத்த சந்தனப் பெட்டியில், வைரக் கம்மல், நான்கு வளையல்கள், இரட்டைப் பேட்டைச் செயின் ஒன்று . . . பவளம் வைத்த மோதிரம் ஒன்று இருப்பதைத் திறந்து பார்த்த உமா அதிர்ந்து போகிறாள். அப்பொழுது, "உன் மாமியார் தன்னோட நகைகளை வரப் போற தன் மாட்டுப் பொண்ணுக்குப் போட்டு அழகு பார்க்கணும்னு அப்படி ஆசைப்பட்டிருந்தா . . . என்ன பண்றது? பிராப்தம் இல்லே . . . எங்க வீட்டு மகாலட்சுமியா நீ? கண்ணுக்கு லட்சணமா அவ நகைகளைப் போட்டுண்டு வளைய வந்துண்டிருக்காளாம் . . ."[31] என்று கூறிப் பூரிப்படைகிறார்.

ரகுவும் உமாவும் கா மீருக்குச் சென்றுவிட்டு இரண்டு வாரம் கழித்து வீடும் திரும்பும் நாளில், வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பதோடு, அவர்களுக்கு உணவு தயார் செய்து வைக்கிறார். அப்பொழுது, அவரின் நினைவலைகளில், தூரத்து உறவுக்காரத் தாத்தாவிடம் கூறிய வார்தைகளை நினைத்துப் பார்க்கிறார். "அந்தப் பேச்சே பேசாதீங்கோ. பர்வதம் போயிட்டாள்னு யார் சொன்னது? அவ என் நெஞ்சுக்குள்ளே குத்துவிளக்கா எரிஞ்சுசுண்டேதான் இருக்கா! இத்தனை வருஷம் ஒத்துமையா வாழ்ந்துட்டு, இப்ப அவ போயிட்டாங்கறதுக்காக, இன்னொரு பொண்ணை அழைச்சுண்டு வந்துட முடியுமா . . . இதே நான் போய்ட்டிருந்தேனா, என் பர்வதத்தை வந்து கேப்பேளா? அந்த மாதிரி நினைச்சுண்டு என்னை இப்படியே விட்டுடுங்கோ" என்று மறுத்துக் கூறிப் பேசி,

இன்று வரையிலும் பிள்ளைகளுக்காகத் தனியாளாக வாழ்ந்து வருவதை எண்ணிப் பார்க்கிறார்.

கா மீருக்குச் சென்று திரும்பிய உமாவிற்கும் ரகுவிற்கும் ஓர் இன்ப அதிர்ச்சி கொடுக்கும் விதமாக வெங்கடேஷன், பல்வேறு விதமான உணவுகளைத் தயாரித்து வைத்திருப்பதைக் கண்ட உமா, ‘‘எதுக்கு இத்தனைக் க டம் என்று கேட்டவுடன், நீயும் ரகுவும் ரெண்டு வாரம் வெளியூர் போயிட்டு வந்திருக்கேள்! கிருகலட்சுமியை அழைச்சுண்டு உள்ளே வந்திருக்கான் ரகு’’ என்று பெருமிதப்படுகிறார். நீங்க எல்லோரும் உட்காருங்கள். நான் பரிமாறுகிறேன் என்று உமா கூறும்போது, வெங்கடேஷன் மறுத்துத் தடுத்தாலும், உமா எல்லோர்க்கும் உணவு பரிமாறிவிட்டு, தான் அப்புறம் சாப்பிடுவதாகக் கூறுகிறாள். அப்பொழுது, ‘‘உன்னை நான் வீட்டுக்கு வந்த மருமகளாக நினைக்கலேம்மா! பெத்த பொண்ணாட்டமா நினைக்கிறேன்! ஒங்கப்பா கிட்டே எப்படி சுவாதீனமா நடந்துப்பியோ அப்படியே நீ அன்பா பாசமா இருந்தியானா அதுவே போறும்’’[32] என்று வெங்கடேஷன் கூறியது, உமாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீரை வரவழைக்கிறது.

ராஜலிங்கம் தன் மகள் சொர்ணாவைப் பற்றி நண்பர்களிடம் கூறும் போது, அவள் அறிவுக்களஞ்சியம் என்று கூறுவார். அலுவலக வேலைகளை அவளுக்குச் சொல்லிக் கொடுக்கும் போது, அவள் உடனே புரிந்து கொள்ளும் விதத்தைப் பார்த்துக் கெட்டிக்காரியாத்தான் இருக்காய் சொர்ணா என்று கூறுவார்.[33]

சொர்ணா பாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக வீட்டில் பயிற்சியில் ஈடுபடுகிறாள். அவள் பாடி முடித்தவுடன் அப்பாவிடம் பாட்டு எப்படி இருந்தது என்று கேட்கிறாள். ‘‘சும்மா ஜிலுஜிலுன்னு குற்றால அருவியிலே குளிச்சுட்டு

வந்தாப்பலே இருந்ததும்மா. உன் குரலும், நீ பாடின விதமும் உணர்ச்சி கொப்பளிக்கிற அந்த பாவமும் ஓ சூபர்ப்''[34] என்று ராஜலிங்கம் கூறுவதாகப் புனைவு பெற்றுள்ளன.

தன்னை ஆபத்தில் இருந்து காப்பாற்றிய ரமேஷைக் காதலிப்பதாகச் சொர்ணா தன் அப்பா ராஜலிங்கத்திடம் கூறியவுடன், ‘‘இதோ பார் சொர்ணா! தீர்மானமாச் சொல்றேன். நீ உலகம் புரியாத சின்னப் பொண்ணு. உனக்கு ஒண்ணும் தெரியாது. என் நண்பன் பையன் ராம் குமார் தான் உனக்கு ஏத்தவன். கண்டபடி மனசை அலைய விடாதே என்று கூறி அவளின் காதலுக்கு மறுப்புத் தெரிவித்துவிடுகிறார்.[35]

மாணிக்கம் பெண்களைக் கடத்தி விபசாரத் தொழில் செய்பவர்களுக்கு விற்றுப் பணம் சம்பாதிக்கும் தொழிலைச் செய்து வருகிறான். இதை அறிந்த மாணிக்கம் மகள் பொன்னி, அப்பா அத்தொழிலை விட வேண்டும் என்று கூறி அம்மாவுடன் போராடி வருகிறாள். அப்பொழுது, ‘‘இந்தா! என்னங்கடி! ரெண்டு பேரும் ஒப்பாரி வெச்சி மயான காண்டம் நடத்தறீங்களா? ஆம்பிளை இ டம்! அவன் குடிப்பான். கூத்தியா வெச்சிருப்பான். என்ன தொழிலு புடிக்குதோ அதைச் செய்வான். அதுலே பொட்டைக் கழுதைங்களுக்குத் துணிச்சல் எங்கே இருந்து வருது, இதை மாத்து, அதை மாத்துன்னு சொல்ல . . . அவ்வளோ பெரீய ஆளா ஆயிட்டீங்களா?''[36] என்று ஆவேசமாகப் பேசுகிறார்.

மோசமான தொழில் செய்து, தன் குடும்பத்தைக் காப்பாற்றுவதை விட்டுவிட்டு, மூட்டை தூக்கியாவது பொழைக்கக் கூடாதா? என்று சுந்தரவள்ளி வருத்தப்பட்டுக் கூறும்போது, இதைச் சற்றும் எதிர்பாராத மாணிக்கம், ‘‘சிரித்த முகத்துடன் வகை வகையாகச் சமைத்துப்போட மட்டுமே தெரிந்த இவளுக்கு கோபப்படவும் தெரியுமோ''[37] என்று அங்கலாய்க்கிறான்.

தனக்கு எதிராகப் போராடும் தன் மகளைக் குரோதமாகப் பார்த்து, “இரத்தம் தெறிக்க எப்படி பேசுது பார்? இந்தப் பொண்ணு கட்டின பசு மாதிரி இல்லே இருக்கும் முன்னெல்லாம். இப்போ பாரு”[38] என்று வருந்துகிறான்.

கதிர்வேல் பொன்னாத்தாளின் மனத்தில் நம்பிக்கை ஏற்படும் அளவுக்கு பேசிக் காதலிக்க வைத்து அவளுடன் உல்லாச உறவாடிய பின்பு ஏமாற்றுகிறான். அவனுக்கு வேறு இடத்தில் பெண் பார்ப்பதை அறிந்த பொன்னாத்தாள் அவள் வீட்டிற்குச் சென்று கதிர்வேலுவிடம் கேட்கும் போது, பண்ணையார் வந்து மகனை அடித்துவிட்டு, “யார் இந்த சிறுக்கி! குச்சு வீட்டுக்காரியை பங்களாவுக்குள்ளே கூட்டிட்டு வந்துட்டியா? யார் இந்த திருட்டுக் கள்ளி? ஏண்டி செக்குலக்கை மாதிரி நிற்கிறியே” என்று பண்ணையார் திட்டுகிறார்.

முத்தையனின் ஒரே மகள் பொன்னாத்தாள். அவள் பண்ணையாரின் மகனைக் காதலித்து, ஏமாந்து, அவன் கருவை வயிற்றிலே சுமக்கிறாள். அதனால் தன்னைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லிக் கதிர்வேலுவைப் பண்ணை வீட்டில் பார்த்துக் கொள்கிறாள். அப்பொழுது, அங்கு பணிபுரியும் முத்தையன் தன் மகளைக் கண்டு வருந்தி, “பாவி . . . மானங்கெட்ட பாவி! ஏழைகள் சொத்தே மானம் தானேடி, அதை ஒழித்துவிட்டு, உயிரோடு நிற்கிறாயே”[39] என்று கொதிப்படைகிறார்.

நியாயம் கேட்டுப் பண்ணையாரிடம் பொன்னாத்தாள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, “இந்தாடி! நீ என்னா பேசறேன்னு புரிஞ்சுதான் பேசறியா? நாங்க யாரு? நீங்க யாரு? உன்னை நான் மருமகளா ஏத்துக்கணுமா? அடி செருப்பாலே! துடைப்பக் கட்டைக்குப் பட்டுக் குஞ்சலம் கேக்குதா? நீ கெட்ட கேட்டுக்கு என் வீட்டு மருமவளா வரணும்னு ஆசைப்பட்றியா? ஒன்பது பேரு பின்னால போன நாயிக்கு ஆசையைப் பாரு ஆசையை”[40] என்று கூறியபடிக் காலில்

விழுந்து கதறி அழுதபடி உண்மையைச் சொல்லும் பொன்னாத்தாளை எத்தி உதறித் தள்ளுகிறான்.

பூவிழியின் அப்பா, தன் நண்பன் முத்து மாணிக்கத்தின் மகன் தங்கவேலுவுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று விரும்பித் தங்கவேலுவை வீட்டிற்கு வரச் சொல்கிறான். அப்பொழுது, பூவிழி அண்ணா அண்ணா என்று தங்கவேலுவை விளித்தபடி உபசரித்து வழியனுப்புகிறாள். இதனைச் சற்றும் எதிர்பாராத தந்தை அதிர்ச்சிக்குள்ளாகி, “இப்படி கூலிக்கு வேலை பார்க்கிறவனைக் கட்டிக்கப் போறேன்னு அடம் பிடிக்கிறியே! என்ன புத்திசாலியா இருந்து என்ன? கல்யாண விசயத்துலே கழுநீர் பானையிலே இல்லே கையை விட்டுட்டே . . . ரொம்ப திறமையா நீ சமாளிச்சு அனுப்பிட்டதா நினைச்சிக்கிட்டிருக்றே இல்லை . . . கனவு காணாதே! உன் இ டத்துக்கு இந்த வீட்டுலே எதுவும் நடக்காது”[41] என்று கூறிவிடுகிறார்.

வெங்கடேஷன் தன் மகள் அமுதாவிற்கு வரன் தேடும் போது மாப்பிள்ளையைப் பற்றி நன்கு விசாரிக்காமல் பொறுப்பில்லாமல் தேர்வு செய்து திருமணம் செய்து வைக்கிறார். இதனால் அவள் வாழ்வு பாழடிக்கப்படுகிறது. ஆனால், அது பற்றி எதுவும் கவலைப்படாமல், தங்கை தாமரையிடம், “ஒன் அக்கா அமுதா அவளுக்கும் தான் அட்டகாஷமா கல்யாணம் பண்ணேன். ஒரு ஸ்வீட் இல்லே! டபுள் ஸ்வீட் போட்டுக் கல்யாணம் பண்ணேன் . . . ஞாபகம் இருக்கா?”[42] அது மூதேவி ஜாதகம் . . . உருப்படலை. அவன் மண்டையை உருட்டிட்டா . . . என்று கூறுவது அமுதா காதில் விழுகிறது. அதனால் உயிர் கருகும் வாடையை அவளால் மட்டுமே உணர முடிவதாக ஆசிரியர் புனைந்துள்ளார்.

### 4.2.1.3 சகோதரன் கூற்றுப் புனைவுகள்

அரசு மணிமேகலையின் நாவல்களுள் சகோதர உறவில் பாத்திரங்கள் புனைவு பெற்றுள்ளன. ரங்கநாதன், அம்மாவின் அண்ணன் ஆகியோர் கனவு சுமக்கும் கண்கள் நாவலிலும், உமாவின் அண்ணன் சுந்தரம் நாளை நான் ஜெயிப்பேன் நாவலிலும், இராஜாராமன் மனிதரில் இவர் மகாத்மா நாவலிலும், தம்பி ராஜா, கனகவேல் ஆகியோர் காத்திருங்கள் காலம் வரும் நாவலிலும், ராஜாராமன் மனிதரில் இவர் மகாத்மா நாவலிலும், இளமுருகு பொழுது ஒரு நாள் புலரும் நாவலிலும் சகோதர உறவில் புனைவு பெற்றுள்ளனர். மேற்குறிப்பிட்ட சகோதரர்கள், தன்னுடன் உடன் பிறந்தவர்களுடனும், பெற்றோர்களுடனும் பேசும்போது, பெண்கள் பற்றி வெளிப்படுத்தும் கருத்துக்கள் எங்ஙனம் புனைவு பெற்றுள்ளமையினை இனிக் காண்போம்.

### 4.2.1.3.1 அண்ணன் கூற்றுப் புனைவுகள்

ரங்கநாதனின் தங்கை, அவளின் உடன் பிறந்த சகோதரனின் குழந்தை வீட்டைவிட்டு வெளியே தவழ்ந்து வந்து சாக்கடையில் விழுந்து தவழ்ந்திடப் போறானோ என்று பயந்து ஓடிப் போய் தூக்குகிறாள். அப்பொழுது, அவள் அண்ணன் கோபமாக “வாசலுக்கு எதுக்குடி தரித்திரம் வந்து நிக்கிறே? போற காரியம் உருப்படவா போறது? அது என்னடி லங்கிணியாட்டமா ஒரு ஓட்டம் . . . என்னமோ துள்ளித் துள்ளிக் குதிச்சிண்டு வரியே! கடவுளாப் பார்த்து உன் கொட்டத்தை அடக்கி வெச்சும் நீ அடங்க மாட்டங்கறியே ஏதானும் வியாஜ்ஜியானம் வெச்சுண்டு வாசலுக்கு வந்துட வேண்டியது. த்தூ! அபசகுனம்[43] என்று கூறுகிறான்.

ரங்கநாதன், மைதிலி தம்பதியினர் ஒரே ஒரு பெண் குழந்தையுடன் வாழ்ந்து வரும் போது, ரங்கநாதனின் தங்கை நளினி விதவையாகி வாழ்ந்து வருகிறாள். அவளுக்கு வேறு திருமணம் செய்து வைக்க அவனின் நண்பர் நந்தகோபால்

அவர்கள் இனத்திலே சுந்தர் என்பவரை முடிவு செய்து தெரிவிக்கிறார். அதை ரங்கநாதனின் பெற்றோரும் அவர் மனைவி மைதிலியும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் ரங்கநாதன் தயக்கம் காட்டுகிறார். அப்பொழுது "ஏண்டி மைதிலி நன்னா யோசிச்சுச் சொல்லியோன்னா! நமக்கும் ஒரு குழந்தை இருக்கா அதுவும் பொண்ணு . . . ரங்கநாதன் மனசுக்குள் பயமும் வியப்பும் சின்னச் சின்ன பூக்களாக இதழ் விரிந்தன. ம்! அம்மாவும், மைதிலியும் வெட்டொன்னு துண்டிரண்டாக எப்படி முடித்து விட்டார்கள்? இவர்களா பலவீனமானவர்கள்? இவர்களா சபல மனம் கொண்டவர்கள்? கிடையாது . . . கிடையவே கிடையாது"[43] என்று உறுதி கொண்டு தன் விதவைத் தங்கைக்கு மறுமணம் செய்வது என்று உறுதி கொள்கிறன்.

### 4.2.1.3.2 தம்பி கூற்றுப் புனைவுகள்

ரகுவின் தம்பி ராஜாராமன், தன் அண்ணன் மனைவியாக வரப்போகும் உமாவிடம் மன்னி, மன்னி என்று அன்பொழுகப் பழகுகிறான். அப்பொழுது உமா, "அவரிடம் என்ன ராஜா? . . . என்று கேட்டவுடன் ஹை! நீங்க ராஜான்னு சொல்றது ரொம்ப ஸ்வீட்டா இருக்கு மன்னி[44] என்று கூறுகிறாள்.

ராஜாராமன் மன்னியைப் பார்க்க வாரத்துக்கு ஒரு தடவையாவது வந்துவிடுவான். சிறப்பான காரணங்கள் என்று எதுவும் இல்லையென்றாலும், மன்னியின் வடிவத்தில் மாதா இருப்பாளா என்று ஏங்குகிறான் ராஜாராமன்.[45]

அமுதாவின் தம்பி இளமுருகுவை அவன் அம்மா தனியாகக் கவனிப்பாள். சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை என்று பெருமையாக நினைப்பாள். உழைத்துப் போடும் அமுதாவிற்கு அத்தகைய மதிப்பு மரியாதை எதுவும் கிடைக்காது. ஒரு நாள் தான் குடும்பப் பொறுப்பில் இருந்து விலகுவதாகத் தெரிந்தவுடன், அமுதாவின் அம்மா இளருமுருகுவிடம் குடும்பப் பொறுப்பை நீ

எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறியவுடன், “தரித்திரம் புடிச்ச குடும்பத்துல இந்தப் பொறுப்பை நான் எடுத்துக்கிட்டா அவ்வளவுதான் . . . ஒங்க ரெண்டு பேரைப் பத்தித் தெரியாதா என்ன? அமுதாவை விரட்டின விரட்டு தெரியாதா? என்ன? என்னாலே முடியாதுப்பா[46] என்று கூறிவிடுகிறான்.

### 4.2.1.4 காதலன் கூற்றுப் புனைவுகள்

நந்தகோபால் தன் மனைவி மங்களாவை விவாகரத்து செய்துவிட்டு முல்லைவனம் கிராமத்தில் வசித்து வருகிறார். அப்பொழுது ரோஜா நிறம் கொண்ட பாதங்களும், மெல்லிய விரல்களும் கொண்ட ரங்கநாதன் தங்கை பேரழகியாய் இருப்பாளோ என்று எண்ணி அவளையே பார்க்கிறான். தேக்குச் சட்டம் போன்ற உடலும், நீளமான கண்களும், பூக்கள் போன்ற முகமும் கண்டு வியக்கிறான். ஆனால் அந்தப் பெண்ணின் கழுத்து வெறுங் கழுத்தாக இருக்கப் பாழ் நெற்றியாக இருப்பதை எண்ணி வருந்தி, “பட்டாம் பூச்சியைப் போல துள்ளித் திரிய வேண்டியவள் . . . கிளியின் சிறகுகளாக கத்தரிக்கப்படுவது . . . மயிலுக்கா ஒரு வைதவ்யக் (விதவை) கோலம்! நந்தகோபால் கண்களில் கண்ணீர் மல்கப் பார்க்கும் போது குழந்தை போன்ற முகத்தையும், வரைந்தது போன்ற புருவங்களும், பவளம் போன்ற உதடுகளும், பிறை நிலா போன்ற நெற்றியும் அவர் மனத்தைக் கரைக்கின்றன. அப்பொழுது ஓ! ஒரு பச்சைக்கிளி இப்படித்தான் வெள்ளைக் கிளியாகி விட்டதோ இது கொடுமை . . . கொடுமை!! பத்து நாட்கள் கூட வாழ்ந்த பாவத்துக்கு, இவள் ஜென்மம் முழுவதும் தண்டனை அனுபவிக்க வேண்டுமோ? செய்யாத பாவத்திற்கு ஏன் இவள் சிலுவை சுமக்க வேண்டும்?”[47] என்று வருந்துவதாகவும் அவள் அழகில் மயங்குவதாகவும் புனைவு பெற்றுள்ளன.

ரமே சொர்ணாவைக் காதலிக்கும் போது, அவளை அழகு தேவதை என்றும், எப்போதும் இந்தச் சௌந்தர்ய தேவதை என் அருகிலேயே இருக்கிற பாக்கியம் கிடைக்குமா? என்றும், இந்த இளம்பூவின் உள்ளத்தில் ஒளிந்திருப்பது என்ன? என்றும் . . . இந்தப் பூ விரலைப் பிடிக்கிற பாக்கியம் எனக்குக் கிடைக்குமா? என்றும் பலவாறாகக் காதல் மேலிட்டால் கூறுவதாகப் புனையப்பட்டுள்ளன.[48]

ரமே சொர்ணாவின் முகம் அருகே சென்று, அவள் விழியை மூடியுள்ள சண்பகப் பூ விரல்களை விலக்கி அறுபதாம் கல்யாணத்தன்றும் நினைவில் இருக்கப் போகிற முதல் முத்தத்தை தருவதற்காகப் பலாச் சுளை போன்ற உதட்டை குனிந்த உடன், சொர்ணாவின் உடல் முழுவதும் ஜிவ்வென்ற புது ரத்தம் உடம்பின் பல அணுக்களிலும் பாய மெல்லிய நடுக்கத்துடன் கண்களை மூடிக் கொண்டாள் என்று புனையப்பட்டுள்ளது.[49]

தியாகு எந்த வேலைக்கும் போகாமல் அதிகாலையில் தூங்கிக் கொண்டிருக்கும் போது அவனது கனவில் வரும் பெண்ணைப் பார்த்துப் பலவாறாக வர்ணிக்கிறான். அவன் காட்டில் இருப்பது போன்றும், சுற்றிலும் பச்சைப் பசேல் என்று அழகான மரங்கள், வேப்ப மரத்தில் ஏறி அமர்ந்து கொள்கிறான். மான்களின் கூட்டமும், குயில்களின் பாட்டும் அழகாக இருக்கிறது. அப்பொழுது அவனது மடியில் ஒரு பெண் படுத்திருக்கிறாள். அந்தப் பேரழகி செதுக்கி வைத்த சிலை போல் காட்சியளிக்கிறாள். நாணத்தால் அவள் பட்டுக் கன்னம் சிவந்து போகிறது. அவளின் கண்கள் கன்றுக்குட்டியின் கண்கள் போன்று படபடத்து விரிகின்றது. அந்த உதடுகள் பளபளக்கின்றன. உதடுகளா இல்லை . . . பவளத் துண்டுகளா என்று பலவாறாக எண்ணிப் பார்க்கிறான். அப்பொழுது அம்மா எழுப்பியவுடன் கனவில் இருந்து

நிஜத்திற்கு வருகின்றான். கனவில் வந்தவள் தன் நண்பன் ஆனந்தின் தங்கை உஷா என்பதை உணருகிறான்.[50]

தியாகு தன் நினைவில் வாழும் மரகதம் என்ற பெண்ணைப் பார்த்து வெடுவெடுக்கிற அவள் முகமும், சிடுசிடுப்பான சொற்களும், கணவனைக் கண்டதுமே எகத்தாளமாகக் கடுகடுக்கிற அவள் இயல்பும் . . . சீ பொண்ணா அவள் என்று வருந்துகிறான்.[51]

தியாகுவின் நினைவில் பொன்னியின் தாய் சுந்தரவல்லி வருகிறாள் அவளின் தோற்றத்தைக் கூறும் பொழுது, மஞ்சள் பூசிய முகம், நெற்றியிலே பெரிய குங்குமப் பொட்டு, கண்ணியமான பேச்சு – அன்பான அணுகுமுறை – எவரிடமும் அன்பாக, மரியாதையாகப் பேசுகிற குணம், ஊரைச் சுருட்டி உலையில் போடும் சிகாமணிகளுக்கெல்லாம் இப்படிப்பட்ட அன்பான, அருமையான மனைவிகள் கிடைக்கிறார்கள் என்று கடவுளைப் பார்த்து, ஏன் அவர் இப்படி இணைத்து வைக்கிறார் என்று வருந்துகிறான்.[52]

தியாகுவின் நினைவில் பொன்னியின் அப்பா மாணிக்கம் நினைவுக்கு வருகிறார். அவர் பெண்களை வைத்து மோசமான தொழில் செய்து வருகின்றார். அவ்வாறு ஊர்ப் பெண்களையெல்லாம் கொண்டு போய் விற்றுவிட்டு, தன் பெண்ணைக் கோவில் சிலையைப் போல வைத்துக் காப்பாற்ற எண்ணும் சுயநலத்தை எண்ணி வியப்படைகின்றான்.[53]

தியாகு வேலையில்லாமல் வாழ்ந்து வருகின்றான். தன் அம்மாவிற்கு சம்பாதித்துக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறான். ஆனால் இயலவில்லை. அப்பொழுது ‘‘அம்மா! நீ பொறுமையின் இருப்பிடம். எப்படி நீ இவ்வளவு

பொறுமையா இருக்கிறாய்? எனக்காக இல்லையென்றாலும், உனக்காகவாவது ஒரு வேலை எனக்குக் கிடைக்கக் கூடாதா? என்று வருந்துகிறான்"[54]

தியாகு இப்பொழுது கை நிறைய சம்பாதிக்கிறான். காரில் தன் தாயுடன் சேர்ந்து போகும் போது உஷா வேறொரு காரில் கண்டபடி ஆடையணிந்து கொண்டு செல்வதைப் பார்த்து வருந்தும் போது, "குத்து விளக்காக இருந்த உஷா இல்லை இப்போது[55] என்று கவலைப்படுகிறான்.

சோமசேகர் படக்குழுவினருடன் சின்னக்குளம் கிராமத்திற்கு வருகிறான். அங்கு மோகனாவைச் சந்திக்கிறான். அப்பொழுது அவள் அழகில் மயங்கி, அவளைப் பார்த்து, "காட்டு ரோஜாவைப் போல என்ன மாதிரியான சௌந்தர்யம்? காதளவோடிய கண்கள் என்று இலக்கியங்களில் படித்திருக்கின்றான். இன்று தான் முதன் முதலாகப் பார்க்கிறான். இயற்கையான அழகைப் பொட்டாலும், பூவாலும், பவுடராலும் மெருகேற்றவும், கொடி போன்ற உடல் . . . பளபளக்கும் கண்கள், தீர்க்கமான மூக்கு – மாந்துளிரின் நிறம், அந்த நிறமே அவளுக்கு தனி கவர்ச்சியும் புதுப்பொலிவும் தருவதை ஒரே பார்வையில் புரிந்து கொள்ள முடிந்ததாகப் புனைந்துள்ளார்.[56]

சோமசேகரை மோகனா தன் வீட்டிற்கு வர வேண்டுமென்று அழைத்த உடன், உலகத்தோட எந்தக் கோடிக்கும் நான் வரத் தயார் என்று கூறுகிறான். அப்பொழுது அவளிடம் தன் எண்ணப் பூக்களை எல்லாம் ஒவ்வொன்றாக அர்ச்சிக்கத் தொடங்குகிறான். "உன்னோட கை கோர்த்துக்கிட்டு சூரியோதயத்தைப் பார்த்து ரசிக்கிறேன். . . . நட்சத்திரங்களை ஒன்னோட சேர்ந்து எண்ணிக்கிட்டிருக்கேன். மேகம் போல செழிச்சிருக்கிற உன்னோட கூந்தல்லே முகம் பதிச்சித்தான் நான்

கண்ணுறங்கறேன்''[57] என்று தன் காதல் மொழிகளால் அவளை அர்ச்சிக்கத் தொடங்குகிறான்.

மோகனா சோம சேகரிடம் நானும் உங்களுடன் சென்னைக்கு வந்து, சினிமாவில் சேர்ந்து நடிகையாயிடலாம்னு நினைக்கிறேன் என்று கூறியதைக் கேட்ட சோம சேகர் அதிர்ந்து போய், ''கோயில் விக்கிரகமாக ஆராதிக்க நினைத்தால், படிக்கல்லாக அல்லவா பாதையில் கிடக்கிறேன் என்கிறாய்''[58] என்று வருந்துகிறான்.

''உன்னைப் போன்ற ஒரு பெண் படிப்பும் பணமும் இல்லாமல் போய் நின்றால் என்ன ஆகும் தெரியுமா மோகனா? நீ தெரிஞ்சுதான் பேசறியா? இல்லே தெரியாமப் பேசறியா? இத்தனைப் பளபளப்பு, மினுமினுப்பு, கொள கொளப்பு, அத்தனைக்கும் பின்னாலே எத்தனைப் பெண்கள். பாலைவனத்துப் பறவைகளாய் பறந்து பறந்து களைச்சிப் போய்க்கிட்டு இருக்காங்கன்னு தெரியுமா? துளி அன்பும் அன்பும் கிடைக்காமே அலையறவங்க அவங்கள்லே எத்தனையோ பேர்''[59] என்று சினிமாவின் மோசமான நிலையை எடுத்துக் கூறி அது உனக்கு வேண்டாம் என்கிறார்.

வெறுங்கை முழம் போடாது என்ற பழமொழிக்கேற்பவும், ஈட்டி எட்டின மட்டும் பாயும். பணம் பாதாளம் மட்டும் பாயும் என்ற பழமொழிக்கேற்பவும் மோகனா பணம் சம்பாதித்து, அதன் வாயிலாகத் தன் தந்தையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தையும், காட்டு முல்லையைப் போல அவள் வசீகரமாக இருந்தாலும் அவள் கண்கள் கலங்கியிருந்ததையும் உணராமல் இருந்ததை எண்ணி சோம சேகர் வருந்துகிறார்.[60]

பண்ணையார் மகன் கதிர்வேல், தன் பண்ணையில் வேலை செய்யும் முத்தையன் மகள் பொன்னாத்தாளைக் காதலிப்பதாகக் கூறிப் பழகுகிறான். அப்பொழுது அவள் அழகைப் பற்றிக் கூறும் போது, கடைந்தெடுத்த தேக்குமரம்

போல ஜொலிப்பதாகவும் இடை என்று ஒன்று இருக்கிறதா என்றும் சிற்றிடை வல்லியாய் செம்மாந்து நின்ற போது, பொன்னியின் மன்மத அழகுகள் மயக்கத்தைத் தருகின்றன என்றும் புனைகிறார்.[61]

கதிர்வேல் பொன்னாத்தாளிடம், காதலித்து ஏழைப் பெண்ணை மணப்பது என்பதே தன் வாழ்க்கை லட்சியம் என்று கூறிவிட்டு மெல்ல மெல்ல அவளை வருணிக்கத் தொடங்குகிறான். இப்படி ஓர் அழகியைப் பார்த்ததே இல்லை என்கிற வியப்பைத் தெரிவிக்கிறான். அவன் பேச்சிலும், அழகிலும் மயங்கிய பொன்னாத்தாள் வீட்டில் பூச்சியாய் விளக்கை நெருங்கிக் கொண்டிருந்தாள்[62] என்று புனைந்துள்ளார்.

பண்ணையார் மகன் கதிர்வேலுவிடம், காதலி பொன்னாத்தாள், தன்னை விடுத்து வேறு பெண்ணை திருமணம் செய்யச் சொல்லி வீட்டில் உள்ளவர்கள் வற்புறுத்தினால் என்ன செய்வீர்கள் என்று கேட்டதற்கு, ‘‘தங்க விக்கிரகம் மாதிரி எனக்குன்னு ஒரு பொண்ணு பொறந்திருக்கா...’’[63] அப்படின்னு சொல்லிடுவேன் என்று கூறியவுடன் நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையே ஊசலாடுகிறாள் பொன்னாத்தாள்.

பூவிழியின் வீரதீரச் செயலைப் பாராட்டி இதழில் எழுத சலங்கைகள் பத்திரிகையில் வேலை பார்க்கும் இமயவரம்பன் பூவிழியைப் பேட்டி காண வரும்போது, அவளைப் பார்த்து, ‘‘பெண் புலியா நிப்பீங்கன்னு பார்த்தா புள்ளி மானா நாணப்பட்டு நிக்கிறீங்க என்றவுடன், பெண் புலிக்கும் நாணம் வரும் சார்... பெண் புலி எதுக்கு நாணப்படணும்? என்று கேட்டவுடன் பூவிழியின் கன்னம் சிவந்து வெட்கமில்லாமல் உரைத்து விட்டனவோ? உதடுகளைத் கடித்துக் கொண்டாள்’’[64] என்று கூறுகிறான்.

பேட்டி காண்பதற்காக வந்த இமயவரம்பனுக்கும் பூவிழிக்கும் காதல் மலர்ந்து விடுகிறது. மாசத்துக்கு ஒரு தடவை விடுதியில் சந்தித்துப் பேசிக்கொள்வது என்று அனுமதி வாங்கியிருந்தான். ஆனால் இப்பொழுது பூவிழி கல்லூரிக்கு வீட்டிலிருந்து செல்ல ஆரம்பித்ததால் இமயவரம்பன் வருத்தப்பட்டு "மாசத்துக்கு ஒருநாள் பவுர்ணமி தரிசனம் கிடைத்தது. இனி அதுவும் கிடையாதா"[65] என்று வருந்திக் கூறுகிறாள்.

இமயன் அவள் அழகிலே மயங்கி அந்தப் பூவிழிகள் மேல் முத்தங்களைப் பொழிய வேண்டும் என்றும், கூந்தல் மலரை நுகர வேண்டும் என்றும், அவள் மடியில் படுத்து வானில் தெரியும் வைரங்களை எண்ண வேண்டும் என்றும், ஆற்று நீர் போல அருகில் இருந்து அள்ளி எடுத்துக் குடிக்க முடியவில்லையே என்றும் ஏங்குகிறான். பூவிழியின் கையை மெல்ல அப்படியே பற்றிக் கொண்டு, அவள் உள்ளங்கையில் நவமணிகள் இருப்பது போன்று எண்ணிப் பஞ்சு விரல்களைப் பார்த்துச் சிலிர்க்கிறான்.[66]

பூவிழி உறவுகளை இணைப்பவளாகத் திகழும் போது, பாரதிதாசன் தொழிற்கூடம் ஒன்றைத் தொடங்கி, இமயனின் லட்சியத்தை நிறைவு செய்கிறாள். இமயாவின் அப்பாவை அழைத்து அதை நிர்வகிக்கச் செய்து இருவரையும் உறவாடச் செய்கிறாள். இமயாவுக்கு அவன் அப்பா மேல் இருந்த வெறுப்பை அன்பாக மாற்றி முத்தங்களைப் பரிசாகப் பெறுகிறாள்.[67]

மூர்த்தி, அமுதாவைப் பார்த்துத் திருமணம் செய்து கொள்ள விருப்பம் தெரிவிக்கும் போது, தான் ஒரு விதவை என்ற காரணத்தைச் சொல்லி மறுப்புத் தெரிவிக்கிறாள். அப்பொழுது மூர்த்தி, "இதோ பாருங்க அமுதா! விதவையாகிப் போயிடறது உங்க தப்பு இல்லே. கடவுள் கணக்கிலே ஏதோ தப்பு. நீங்க என்னவோ

பெரிய பாவம் பண்ணிட்ட மாதிரியும், இனிக் கல்யாணத்தை நினைக்கக்கூட முடியாத அளவுக்கு வீணாப் போயிட்ட மாதிரியும் கற்பனை பண்ணிட்டிருக்கீங்க. அது தப்பு நீங்க கண்டிப்பா மறுமணம் செய்துக்கலாம். எத்தனை ஆண்கள் அவ்வாறு திருமணம் செய்து கொள்கிறார்கள். அதனால் சின்ன வயசுலே இப்படி ஆயிட்டவங்க மறுமணம் பண்ணிக்கிறதுல தப்பே இல்லே"[68] என்று கூறி அவளை எப்படியாவது திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று எண்ணுகிறாள்.

### 4.2.2 பெண் கூற்றுப்புனைவுகள்

அரசு மணிமேகலையினுடைய பத்து நாவல்களுள் பெண் பாத்திரங்களாக இடம் பெற்றுள்ள மனைவி, தாய், சகோதரி, தோழி, காதலி என்ற உறவு நிலையில் உள்ளவர்கள், தத்தம் உறவு நிலைகளுக்கேற்பப் பெண்களுடன் பேசுகின்ற பொழுது வெளிப்படும் சொல்லாடல்கள் புனைவு பெற்றுள்ளமையினை,

* ஆசிரியர் கூற்றுப் பெண் புனைவுகள்

* பிற பெண் கூற்றுப் பெண் புனைவுகள்

என வகைப்படுத்தலாம்.

### 4.2.2.1 ஆசிரியர் கூற்றுப் பெண்புனைவுகள்

ஆசிரியர், சரோஜினியை அறிமுகம் செய்கிற பொழுது, மெல்லிய உருவம்; கொண்டவளாக இருந்தாலும், கணவனுக்கு ஈடுகொடுக்கும் உயரத்தையும், களையான கண்களையும், அழகான முக அமைப்பையும் உடலமைப்பையும் கொண்டவள் என்று புனைகிறார். காதலன் முத்துவுக்காகப் பெற்றோரின் எதிர்ப்பையும் மீறிக் காத்திருப்பதை அசோகவனத்துச் சீதை போன்று இருந்தாள் என்று புனைகிறார்.

சரோஜினியிடம் கல்லூரியில் பயிலும் மாணவியர் சந்தேகம் கேட்க வரும் போது, மாணவியை பெண் குட்டி மான் என்று கூறுகிறார்.[68]

மருத்துவர் வசந்த் கூறுவதைக் கேட்ட சரோஜினி, ‘‘மழைக்காலத்து இளங்கொடியைப் போல நடுங்கினாள்’’[69] என்று புனைந்துள்ளார். முயல் போன்ற மென்மையான சுபாவம் சொண்டவள் சரோ என்று ஆசிரியர் புனைந்துள்ளார். ஏமாற்றிக் கையெழுத்து வாங்கக் கணவர் முத்து முயற்சிக்கும் போது, சரோவின் கொடி போன்ற உடல் சிலிர்த்து அடங்கியதாகக் கூறுகிறார்.’’[70]

விதவையான அமுதாவைத் திருமணம் செய்துகொள்ள விரும்புவதாக மூர்த்தி கூறியவுடன், அமுதா என்ன சொல்வதென்று தெரியாமல் ‘‘கற்சிலை போல உட்கார்ந்தாள்’’[71] என்று ஆசிரியர் கூறுவதாகப் புனையப்பட்டுளள்மைக் காணலாம். அமுதாவின் வருமானம் பற்றிப் புரிந்து கொள்ளாமல், தன் அம்மா பலவற்றை வாங்கி வரவேண்டும் என்று கூறியவுடன், அமுதா பலியாடு மாதிரித் திருதிருவென்று விழிப்பதாகப் புனைந்துள்ளார். குடும்பப் பொறுப்பை இனி தான் ஏற்கப் போவதில்லை என்று அமுதா கூறியவுடன், உழைக்கும் மாட்டினைக் குத்திப் புண்ணாக்கியது எவ்வளவு பெரிய தவறு என்று வருந்துவதாகப் புனைந்துள்ளார்.’’[72] பொறுப்பற்ற பெற்றோர்கள் அமுதா போன்ற எத்தனை பெண்கள் திருமணம் என்ற பந்தத்தில் சிக்கித் தவிப்பதை, ‘‘கல்யாணம் என்கிற வலையில் இப்படி எத்தனை மான்கள் மாட்டிக் கொள்கின்றன’’[73] என்று புனைந்துள்ளார். ஆலமரமாக அமுதா இருந்து தன் பிறந்தகத்தில் உள்ள ஒவ்வொருவருக்காக வாழ்வதாகக் கூறுகிறார்.

ரமணனுடன் தவறான உறவில் பழகும் பிரபாதியைப் பற்றிக் கூறும்பொழுது, அவள் உடல் குளுகுளுவென்று இருக்கும். அவள் வாய் ஆள வாய் விஷத்தைத் தான் கக்கும் என்று புனைகிறார்.[74]

ரமணன் தன் மனைவி மதுமதியைப் பற்றி எண்ணும் போது ‘‘ஒல்லியான கொடி போன்ற உடல் என்று ஆசிரியர் புனைந்துள்ளார்[75]

மதுமதியைப் போன்ற மென்மையானப் பெண்களுக்கு ரமணன் போன்ற முரடர்கள் வாய்ப்பதை, ‘‘மலரனையை மங்கைகள் சிலருக்கு இது போன்ற மாடுகள் தானே வந்து வாய்க்கின்றன’’[76] என்று புனைகிறார்.

வெங்கடேஷன் உமாவிடம் ரகுவைப் பிடிச்சிருக்கா? உன் விருப்பம் என்ன? என்று கேட்கும் போது, ‘‘தங்கரதம் போல் அருகில் வந்தாள்’’[77] என்று ஆசிரியர் புனைகிறார்.

சோமசேகர் மோகனாவைப் பார்த்து, அவள் அழகை வியந்து, ‘‘இது கிராமத்து முல்லைக்கொடி.... ஓவியன் தூரிகைக்கும் அடங்காத ஒப்பற்ற அழகு’’[78] என்று எண்ணுவதாக ஆசிரியர் புனைந்துள்ளார்.

தன் மகள் வாழ்வைச் சீரழித்த கதிர்வேலுவை அடித்துக் கொல்ல வேண்டும் என்ற ஆவேசத்தோடு முத்தையன் முன்நோக்கி வருவதை அறிந்த பண்ணையார், பண்ணையில் வேலை செய்யும் அடியாட்களைப் பார்த்துக் கண்ணைக் காட்டியவுடன், அதைப் புரிந்து கொண்ட மாரி மற்றும் பலர் முத்தையனை அடித்துக் கொன்று விடுகின்றனர். இதை அறிந்த பொன்னாத்தாள் மயங்கி விழுவதை ஆசிரியர் ‘‘காம்பறுந்த மலராய் விநுந்தாள்’’[79] என்று புனைகிறார்.

கதிர்வேலுவினால் பட்ட துன்பங்கள், முத்தையனின் மரணம், அன்பும் பாசமும் காட்டிய தங்கத்துரை காணமல் போனது என இத்தனை இன்னல்களையும் தாங்கிக் கொண்டு வாழும் அவள் வாழ்வை, ‘‘பட்டமரமாய் போனது’’[80] என்று புனைகிறார்.

தன் அப்பாவைக் கண்டுபிடித்து, அம்மாவின் வாழ்க்கையைத் துளிர்விடச் செய்வதற்காகச் சோமசேகர் உதவியுடன், நோயாளிக்கு உதவி செய்கிற பணிப்பெண்ணாகக் கதிர்வேல் வீட்டுக்குள் மோகனா நுழைகிறாள். தன் அப்பா தங்கத்துரை பற்றிய விவரங்களைச் சேகரிக்க முயன்று முயற்சி பலனற்றுப் போகவே, ‘‘கொல்லன் களத்துத் துருத்தியைப் போல... மோகனாவின் மூச்சு ஆவேச நர்த்தனம் ஆடியதாக’’[81] புனைந்துள்ளார்.

பூவிழியை விரும்பும் இமயவரம்பன், அவளைக் காண, அவள் தங்கிப் பயிலும் விடுதிக்குச் செல்கிறான். அங்கு இமயனைக் கண்ட பூவிழிக்கு ஏற்பட்ட உணர்வுகளையும் இமயவரம்பனுக்கு ஏற்பட்ட உணர்வுகளையும், ஆசிரியர் கூறும்போது, கண்கள் படபடக்க அவனைப் பார்க்க, அவன் பேசுவதைக் கேட்கும் போது உள்ளத்தில் போதையை எற்றின என்கிறார். அது போன்று, இமயனுக்கு அவள் மேல் ஏற்பட்ட தாகம், மோகமாகி, பேரழகின் பெண்மைப் பொலிவு, நாணமும் சேர்ந்து கொண்டதால், மாலை வெயில் பட்டு மினுக்கும் தங்கச் சிலை போல் அவளை உருமாற்றம் செய்து ஒயில் காட்டியது’’[82] என்று ஆசிரியர் புனைகிறார்.

இமயவரம்பனும் பூவிழியும் கடற்கரைக்குச் சென்று, தங்கள் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிப் பேசி முடிவெடுத்துவிட்டு, வீட்டுக்குத் திரும்பும் போது,நான் உன்னை வீட்டில் கொண்டுவந்து விடுகிறேன் என்று இமயன் கூறுகிறான். அவள் அவனுடன் வாகனத்தில் பின் இருக்கையில் அமர்ந்து வருவதை, ‘‘பூமாலை ஒன்று உட்கார்ந்து உலா வருவதாக’’ ஆசிரியர் புனைகிறார். வீட்டிற்குள் நுழைந்த பூவிழியை அவள் அப்பா, இமயன் கண்முன்பாகவே அடித்து விடுகிறார். ‘‘தாமரைப் பூவொன்று தள்ளாடுவதைப் போல தடுமாறி விழப் போனவளை இமயன் தாங்கி பிடித்துக் கொள்வதாக ஆசிரியர் புனைகிறார்.[83]

இமயனின் காதலை ஏற்க மறுத்தத் தன் அப்பாவிடம், ‘‘தான் ஐ.ஏ.எஸ். தேர்ச்சி பெற்ற விசயத்தை இமயன் கூறியவுடன், ‘‘துவண்டுபோன கொடியாகக் குழைந்து நின்றவள் புது மழையைக் கண்ட பயிர் போல தெம்புடன் தலை நிமிர்ந்து நின்றாள்’’[84] என்று ஆசிரியர் புனைகிறார்.

### 4.2.2.2 பிற பெண் கூற்றுப் பெண் புனைவுகள்

அரசு மணிமேகலையினுடைய பத்து நாவல்களிலும் பெண் பாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன. மனைவி, தாய், சகோதரி, தோழி, காதலி, மகள், மற்ற பெண்கள் என்ற உறவு நிலையில் உள்ளவர்கள், தத்தம் உறவு நிலைகளுக்கேற்பப் பிற பெண்களுடன் பேசுகின்ற போதும், தன்னைப் பற்றிக் குறிப்பிடுகின்ற பொழுதும், வெளிப்படும் சொல்லாடல்கள் புனைவு பெற்றுள்ளமையினை,

* மனைவி கூற்றுப் புனைவுகள்
* தாய் கூற்றுப் புனைவுகள்
* சகோதரி கூற்றுப் புனைவுகள்
* தோழி கூற்றுப் புனைவுகள்
* காதலி கூற்றுப் புனைவுகள்
* மகள் கூற்றுப் புனைவுகள்
* பிற பெண்கள் கூற்றுப் புனைவுகள்

என வகைப்படுத்தலாம்.

### 4.2.2.2.1 மனைவி கூற்றுப் புனைவுகள்

தன் கணவன் முத்துவுடன் தகாத உறவில் வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்ட மாலதியைப் பார்த்து, சரோஜினிக்கு அழுகையும், ஆத்திரமும் வெகுண்டு வர, ஓங்கிக் கன்னத்தில் அடித்த உடன், படுக்கை மீது சரிந்து விழுகிறாள் மாலதி. அப்பொழுது சரோஜினி அவளைப் பார்த்து, ‘‘தே… கழுதை! டிராமாவாடி போடறே! எச்சக்கலை நாயே எழுந்திரு நாயே’’[85] என்று கூறுகிறாள்.

மேலும், சரோஜினி, மாலதியை பார்த்து ஆவேசத்துடன், ‘‘என் புடவையை எடுத்துக் கட்டிக்கிட்டு, என் வீட்டுலே, என் ஆம்படையான் பக்கத்துலே படுக்க எப்படிடி துணிச்சல் வந்தது? தெரு பொறுக்கி நாயே’’ என்று திட்டுகிறாள். தன் ஆசைக் காதல் கணவன், தன்னை அடித்துத் துன்புறுத்திவிட்டு, அவளோடு செல்வதற்கு அப்படி என்ன அழகை கண்டுவிட்டார்? அவளிடம் அப்படி என்ன திறமை? என்று கலங்குவதாகவும், அழகுக் களஞ்சியம் புழுதி மண்ணிலே கிடக்க, அந்த ஊமத்தம் பூவுக்கு எதற்காக ஆசைப்பட்டார். வானவில்லைத் தூக்கிக் குப்பையிலே போட்டுவிட்டு, கண்ணாடிக் கல்லைக் கட்டிலிலே வைத்து அழகு பார்க்கிறானே என்று சரோஜினி வருந்துகிறாள்.’’[86]

நந்தகோபாலின் முதல் மனைவி மங்களா வெளிநாட்டு நாகரிகத்தில் மூழ்கிப் போனவள். அவளைச் சுற்றிலும் ஆண் நண்பர்கள் எப்பொழுதும் இருப்பதை நந்த கோபால் வெறுத்துக் கண்டித்ததால், அவள் கோபப்பட்டுப் பேசும் போது, ‘‘சீ நீயும் ஒரு மனுஷனா? நாகரிகம்னா என்னன்னே தெரியாத ஒரு ஜென்மத்தோடவா என் வாழ்க்கையை இந்தக் கடவுள் முடிச்சுப் போட்டு வைக்கணும்? லுக் ஹியர், இனி என் பெர்சனல் லைப்லே தலையிட்டா நடக்கிறதே வேற…[87] என்று தன் கணவனிடம் பேசுகிறாள்.

உமா கல்லூரியில் பயிலும்போது, அவளுக்குப் பாடம் எடுத்த தமிழ் ஆசிரியை, “அன்பு என்ற ஒன்றை மட்டும் நாம் கொண்டிருந்தால், யாரையும் சந்தேகப்படமாட்டோம். கோபப்பட மாட்டோம்” என்கிறார். இதனைக் கேட்ட உமா மனத்தில் ஓர் உறுதி ஏற்படுகிறது. நான் போகிற அகத்தை ஒரு சோலையாகவே வைத்திருப்பேன். நிச்சயம் அதன் குளிர்ச்சியும், மணமும் குறையாமல் பார்த்துக் கொள்வேன். அன்புக்கு ஏங்குகிற உள்ளங்களுக்கு நிச்சயம் ஆறுதலைத் தருவேன் என்று உறுதி கொள்கிறாள்.”[88]

ரகு, தன் மனைவி உமாவிடம், அப்பாவைப் பற்றியும் தம்பி ராஜாராமனைப் பற்றியும் விவரித்துச் சொல்கிறான். “தன்னை யார் பார்க்க வந்தாலும், சாப்பிட எதுவுமே கொடுக்காம அப்பா அனுப்பினது கிடையாது. ஒங்காத்து பழக்க வழக்கங்கள், வேறு மாதிரி இருக்கலாம்” இதெல்லாம் நோக்கு புதுசா இருக்கலாம் என்று தன் குடும்பச் சூழலை புரிந்துகொண்டு நடப்பதற்காகக் கூறும்போது உமா, “மாமா எது செய்தாலும் சரியாத்தான் இருக்கும். அவர் மனசு கவலைப்படற மாதிரி ஒரு வார்த்தை என் வாயிலேர்ந்து வராதுன்னா! ராஜா என் குழந்தை போறுமா”[89] என்கிறார்.

மதுமதி பகலில் சுறுசுறுப்பாக இருப்பாள். இரவில் ரமணனைச் சந்திக்கும் போதுதான் தயங்குவாள். ஒல்லியான கொடி போன்ற உடலையும், மென்மையான இயல்புகளையும் அளந்து பேசும் இயல்புகளையும் கொண்டவள். ஆனால் ரமணனின் வக்கிரங்களுக்கு ஈடுகொடுக்க முடியாத பெண்ணாகத் திகழ்கிறாள். அவனைப் பற்றி மதுமதி எண்ணும்போது, “கூடப் படுக்கிற பெண்ணுக்குப் பருகக் கொடுத்த பிறகே பூப்போட்ட கிளாஸையே எடுப்பான்[90] என்கிறாள். மதுமதி இனிய இல்லறத்தைக் கனவு கண்டவள். ஆனால் இனிய இல்லறத்தை ஒரு சிலரால் உணர முடியும்.

மெல்லிய மலரைப் போன்ற காமத்தை ஒரு சிலரால் மட்டுமே உணர முடியும். ஆனால் ரமணனோ, குளத்தை கலக்கி நீரைக்குடிக்கும் எருமை மாட்டைப் போல நடந்து கொள்கிறான்''[91] என்று புலம்புகிறாள்.

ரமணன் போதையில், அவளை அள்ளி அணைக்கும்போது, அதரங்களைச் சுவைக்கும் கண்கள் சிவக்க, நாக்கு குழற, கால்கள் தடுமாற, சாராய நாற்றம் வீசும் சாக்கடை வாய் திறந்து அவன் உளறும்போது, சத்தியமாக உள்ளத்தில் கணவன் என்கிற நினைப்போ, சொந்தம் பந்தம் என்கிற உணர்ச்சியோ எதுவும் தோன்றவில்லை என்று கூறுகிறாள்.

சொர்ணா தன் அப்பாவைப் பலவாறாகப் புகழ்கிறாள். அதைக் கேட்ட அவள் அம்மா, ''ஒரு தடவை சிக்கெடுத்து விட்டதுக்கே இவ்வளவு பாராட்டா! நானும் காலையிலிருந்து ராத்திரி வரைக்கும் பாடாப்படறேன். உழைப்பா எடுக்கிறேன். ஆனாலும் என்ன! உங்க கழுத்துக்குத்தான் மாலையா வந்து விழுது''[92] என்கிறாள்.

அப்பாவும் பிள்ளையும் மகிழ்ச்சியாகப் பேசிச் சிரித்துக் கொண்டு இருக்கும்போது, சொர்ணாவின் அம்மா, ''எல்லாம் சரிங்க! இந்த ஆட்டம் பாட்டம், வால்தனம் எல்லாம் விட்டுட்டு, பொன்னா, லட்சணமாக அடக்க ஒடுக்கமா நடந்துக்கச் சொல்லுங்க[93] என்று கூறுகிறாள்.

### 4.2.2.2.2 தாய் கூற்றுப் புனைவுகள்

பார்வதி – வெங்கடேஷன் தன் இரண்டாவது மகள் தாமரையைத் திருமணம் செய்து வைக்கிறார்கள். அவள் மாப்பிள்ளையோடு கா மீருக்குச் சுற்றுலா செல்ல இருப்பதைத் தெரிவித்தவுடன் அவர்களுக்குப் பணம் கொடுத்து அனுப்புவதற்கு அமுதாவிடம் அவள் அம்மா பணம் கேட்கிறாள். அவள் தன்னிடம் இல்லை என்று மறுத்துக் கூறினாலும் கேட்காமல், ''இது என்னடி பதில்? அங்கே இங்கேதான் வாங்கிக்

கொடுக்கணும். என்னடி மரமாட்டமா நிக்கிறே? சொல்லறது காதுலே விழலியா? நான் பாட்டுக்குச் சொல்லிக்கிட்டே இருக்கேன் நீ என்னமோ ஆந்தை முழி முழிக்கிறியே''[94] என்று கோபப்படுகிறாள்.

அம்மா எனக்கும் மரியாதை தேவைப்படுது என்று அமுதா கூறியவுடன், ''என்னடி ரொம்பதான் சிலுப்பிக்கிறே? என்ன பண்ணுவே?''[95] என வார்த்தைகளால் பார்வதி, அமுதாவைக் காயப்படுத்துகிறாள்.

அமுதாவிடம் தான் இப்படி நடந்து கொள்வதற்கான காரணத்தைக் கூறும் போது, ''இந்த மாதிரி ஆயிட்ட பொண்ணு. அதுங்ககிட்டே ஒரு கண்டிப்பும் கறாருமா நடந்துகிட்டதான் அதுக்கு ஒரு பயம் இருக்கும். அப்படின்னு நினைச்சித்தான் இப்படி நடந்து கொண்டேன்''[96] என்று கூறுகிறாள்.

மூர்த்தி, அமுதாவைத் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான். அங்கு அவனது அம்மா, அமுதாவிடம் அன்பாகப் பழகுகிறாள். அப்பொழுது, ''இப்படியே இந்தப் பூவோட வீட்டுக்குப் போம்மா! மூர்த்தியையும், கூட்டிக்கிட்டுப் போ! அவனே விஷயத்தை உங்கப்பா அம்மா கிட்டே சொல்லட்டும். ஒத்துக்கிட்டா பாருங்க. இல்லைன்னா என்ன பண்ணுவாங்க. .. கத்துவாங்க, பேசுவாங்க அடிக்க வருவாங்க. ஆபாசமாத் திட்டுவாங்க. அவ்வளவுதானே... நீ பாட்டுக்குக் கட்டின புடவையோட மூர்த்தியோட வந்துடு. நாளைக்கு ஊரைக்குகூட்டி கல்யாணம் பண்ண நான் இங்கே இருக்கேன் என்ன[98] என்று ஆறுதல் கூறுவதாகப் புனையப்பட்டுள்ளது.

கண்மணியின் அம்மா அடிக்கடி கூறுவாள். ''பொண்ணுக்கு கோபந்தாண்டி சத்ரு... அனாவசியமா இப்படி ஆத்திரப்படாதே... இப்படியாடி ஒரு பொண்ணு செருப்பை உதறும். செருப்பைக் கலட்றதும் தெரியக்கூடாது... உள்ளே வர்றதும் தெரியக் கூடாது''[97] என அவள் மகளுக்கு அறிவுரை கூறுகிறாள்.

கண்மணி, தன் அம்மாவிடம், தலையைப் பின்னிவிடும்மா என்றாலும், சைக்கிள் கத்துக்கப் போறேம்மா என்றாலும் கோபமாகப் பேசுவாள். “என்னடி கொஞ்சுறே எருமை மாடாட்டமா வயசு ஆயிட்டுது. பின்ன அம்மா வேணுமா சீக்கிரமா பின்னிக்கிட்டு இஸ்கூலுக்குக் கிளம்பற வழியை பாரு” என்று கூறிவிடுவாள். ஆனால் தங்கை மஞ்சுளாவிற்குப் புன்னைகையோடு சீவி விடுவாள். “அம்மா சைக்கிள் கத்துக்க போறேம்மா! ஐம்பது காசுதாம்மா என்றாலும் சொருப்பாலே அடி... அம்பது காசாமே... மூதேவி நீ சைக்கிள் கத்துக்கலைன்னுதான் திருச்சியிலே எல்லாரும் ஏக்கப்பட்டுக்கிட்டிருக்காங்க”[98] என்று கூறிவிடுவாள். இதற்கெல்லாம் காரணம் ஏழை வீட்டில் மூன்றாவது குழந்தையாக விருப்பமின்றி விருப்பத்தை மிறிப் பிறந்து விட்டாள் என்பதற்காகத்தான் என மகள் உணர்கிறாள்.

ரங்கநாதன் அம்மா, தன் கணவரை இழந்த சூழ்நிலையில், எந்த மாதிரியான கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டேன் என்பதை மகளிடம் கூறும்போது, “ஒங்கப்பா போனப்போ உனக்கு எட்டு வயசு, நளினிக்கு நாலு வயசு. என்னை ஒக்காத்தி வெச்சு தலை முடியைக் கொத்தாக் களைஞ்சி மொட்டையடிச்சாளே அப்ப அவளும் நீயும் என்னம்மா கதறினேள் தெரியுமா... எங்கம்மாவுக்கு மொட்டையடிக்காதீங்க[99] என்று மகள் அலறி அழுது கூறியதை அம்மா நினைவுபடுத்தி அழுகிறாள்.

உமாவின் அம்மா, கணவனின் பெற்றோரையும் கூட உடன் பிறந்தவர்களையும் எங்ஙனம் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று உமாவிடம் அவள் அம்மா அறிவுரை கூறும்பொழுது, “இதோ பார்டி உமாஅவன் உனக்கு மச்சினன் இல்லேடி.. உன் மூத்த பிள்ளை, அது மாதிரித்தாண்டி அவன் உன்னைத் தேடி வந்திருக்கான்.[100] என்றும், உன் ஆத்துக்காரன் மட்டும் தான் உசச்திங்கறாப்பல உன் மாமனாரையும், இதோ நின்னுண்டிருக்கே இந்தக் குழந்தையையும் என்னிக்கும்

நீ அலட்சியமா மட்டும் நடத்திடாதேம்மா இவாளுக்கு ஒருதாயத்தான் நீ அங்கே நுழைய போறே"[101] என்று கணவன் வீட்டில் வாழப்போகும் தன் மகளுக்குப் புத்திமதிகள் சொல்கிறாள்.

மனைவி என்பவள் தன் கணவன் முன்பாகவும், மற்ற பெரியவர்கள் கூடியிருக்கும் போதும் அவர்களுடன் சமமாக இருப்பதில்லை என்பதை உமாவின் அம்மாவிடம் வெங்கடேஷன் உட்காரச் சொல்லும்போது, "அதெல்லாம் நேக்குப் பழக்கமில்லே சம்மந்தி. நீங்க ரொம்ப பெரியவா... நம்மாத்துலே அப்படிப் புருஷன் முன்னாலே ஒக்காந்துக்கிற பழக்கம்மெல்லாம் என்னண்டை இல்லை"[102] என்று கூறுவதாகப் புனையப்பட்டுள்ளனது.

தியாகுவின் அம்மா, தன் மகள் விரைவில் நல்ல வேலை பார்த்துச் சம்பாதித்துத் தன்னை நன்கு கவனித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணும் போது, "தியாகு பொறுப்புள்ள பிள்ளையா என்றைக்கடா நூறு ரூபாய் கொண்டு வந்து நீட்டப் போகிறாய்? ஏங்கி ஏங்கி உன் அம்மா செத்துப் போவதற்குள் நீ ஆசைப்பட்டது போல ஒரு புடவை வாங்கித்தர முடியுமா? உன்னால் அட கோயில் குளத்துக்காவது கூட்டிப் போவாயா?" என்று கேட்கிறாள்.

### 4.2.2.2.3 சகோதரி கூற்றுப் புனைவுகள்

நிர்மலாவின் தங்கை மாலா, அசோக் என்பவனைக் காதலிக்கிறாள். அவன் அவளைத் திருமணம் செய்து கொள்வதாகக் கூறி அழைத்துச் செல்கிறான். அவன் அவளை இன்பம் நுகர்கின்ற பொழுது, தன் விரல்களால் முன்னுச்சிக் குழல் கற்றைகளை அளந்து கொண்டு, அவளைத் தன் மடியில் மெல்லச் சாய்த்துக் கொள்கிறான். அப்பொழுது குனிந்து கண்களையே பார்க்கிறான். கண் மலரில் இதழ் மலரை ஒற்றி எடுக்கிறான். உதடுகளைப் பார்த்துவிட்டு புன்னைகையோடு கிட்டே

வருகிறான். அவனிடம் ‘‘அசோக் எனக்கு நடக்கிறது! கனவா இல்லை நனவான்னு புரியலைப்பா’’[103] என்று மாலா கூறுகிறாள். இன்பம் துய்த்தபின் மாலாவை ஏமாற்றி விட்டுப் போய் விடுகிறான் அசோக்.

அசோக்கை நம்பி ஏமாந்து போன மாலாவை அனைவரும் திட்டியதால் அவளுக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது. தன்னுடைய நிலைமைக்குத் தானே காரணம் என்று, ‘‘’’வெப்பமான பாலைவனத்தில் விழுந்துவிட்ட மழைத்துளி நான்! என் ஆத்திரமும், அடக்கமின்மையும் என்னை இந்த நிலைமைக்கு கொண்டுவந்து விட்டது’’[104] என்று வருந்துவதாகப் புனைந்துள்ளார்.

கண்மணி ஆதரவற்று நிற்கும்போது அவள் அக்கா மஞ்சுளா உதவி செய்ய முன்வரவில்லை. அவள் செண்பகராஜ பூபதி வீட்டில் வேலைக்குச் சேர்ந்து, வசதியாக வாழும்போது, அதைப் பொறுக்காத மஞ்சுளா, ‘‘ரொம்ப ஆடாதடி.... காரியம் முடிஞ்சவுடனே கிழவன் கையைக் கழுவி விட்டுடப் போறான். அப்ப நீ இந்த அக்கா கால்லேதான் வந்து விழப்போற.. என்று பொறாமையும் பொச்சாப்பும் மஞ்சுளாவை பேயாட்டம் ஆட வைத்தன என்று புனைகிறார்.[105]

அமுதா தன் தங்கை தாமரையிடம், ‘‘அப்பா பார்த்த மாப்பிள்ளை உனக்கு பிடிச்சிருக்கா? பிடிக்கலைன்னா தயங்காம உன் விருப்பம் என்னவென்று சொல்லிவிடு’’ என்று கூறியவுடன், தாமரை தன் அக்கா அமுதாவைப் பார்த்து, ‘‘உனக்கு வரவர எதுவுமே பிடிக்கிறதில்லை. எதைப் பார்த்தாலும் உனக்கு ஒரு வெறுப்பா இருக்கு. விதவையானதால் வெறுப்பு வந்து விட்டதாக குத்திக் காட்டுகிறாள்’’[106] என்று கூறுகிறாள்.

அமுதாவும் அவள் அம்மாவும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, தாமரை உன் கணவன் சம்பாதிக்கத் துப்பில்லாதவன் என்று தெரிந்தால் என்ன செய்வாய்?

என்ற உடன், தாமரை ஆவேசமாக, “உன் சமஸ்தமானத்துலே வந்து நிக்க மாட்டேன் அமுதா. வீட்டுல நல்லது நடக்கப் போகுதேன்னு சந்தோஷப்படுவேன்னு நினைச்சேன். நீ எல்லாம் கெட்டதாவே பேசிகிட்டுப் போறே! அபசகுனம் பிடிச்ச மாதிரி...”[107] என இரைகிறாள்.

### 4.2.2.2.4 தோழி கூற்றுப் புனைவுகள்

காஞ்சனாவைப் பற்றிப் பூவிழி கூறும்போது, கல்லூரியில் படிக்கும் போதே பல்வேறுவிதமான ஆடைகளை அணிந்து கொண்டு, ஆண் நண்பர்களின் வாகனங்களில் ஏறி உட்கார்ந்து கொண்டு, இடுப்பை வளைத்துப் பிடித்துக் கொண்டு, தலையை விரித்துப் போட்டுக் கொண்டு, குதிரையைப் போலச் சேர்ந்து திரிந்தவள். இன்று தலைவிரி கோலமாய், கறுத்துப் போய், சாயம் போன கிழிந்த ரவிக்கையை அணிந்து கொண்டு படுத்துக் கிடக்கும் அலங்கோலக் காட்சி, பூவிழியின் விழியை அதிர்ச்சிக்குள்ளாக்கியது என்கிறாள். முன் பின் தெரியாத ஒருவனைக் காதலனாக ஏற்று, அவனை நம்பிச் செல்கிறாள். அவன் அவளை ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் கணக்குப் பார்த்து அவளை விட்டுவிட்டு ஓடிவிடுகிறான். மீண்டும் பெற்றோரிடம் வந்தால், அப்பா அவமானத்தில் இறந்து விடுகிறார். அம்மா பைத்தியமாகி விடுகிறாள். உறவினர்கள் சொத்தைப் பிரித்துக் கொள்கிறார்கள். அதனால் வீட்டுக்குள் போன காஞ்சனாவை அடித்து விரட்டுகிறார்கள். அதனால் காஞ்சனா மீண்டும் லாரி டிரைவரிடம் அடைக்கலம் புகுகிறாள். ஆனால் அவனுக்கு பொதுஉடமைச் சித்தாந்தத்தின் மீது ஏகப்பட்ட நம்பிக்கை. எனவே மற்ற லாரி டிரைவர்களுக்கும் காஞ்சனாவைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்புகளைத் தாராளமாக ஏற்படுத்திக் கொடுத்துள்ளாள்”[108] என்கிறாள்.

பூவிழி உதவியுடன் காஞ்சனாவின் உடலை மருத்துவ பரிசோதனை செய்கிறார்கள். பரிசோதனைக்குப் பின் காஞ்சனாவின் நிலையைக் கூறும்போது, ''குளத்தைக் கலக்கி விட்டு கும்மாளம் இட்டு விட்டு, மிதித்து நசுக்கி விட்டு வெளியேறிய எருமைகள் நோயையும் தந்துவிட்டே போயிருக்கின்றனர்[109] என்கிறாள்.

### 4.2.2.2.5 காதலி கூற்றுப் புனைவுகள்

நளினி மானசீகமாக நந்தகோபாலைக் காதலிக்கிறாள். ஆனால், அதை அறியாமல் சுந்தர் என்பவருக்கு மணம் முடித்து வைக்க நளினி அண்ணன் ரங்கநாதனிடம் நந்தகோபால் பேசுகிறான் இதை அறிந்த நளினி, ''உங்க கூடவே இருக்கணும்னு துடிக்கிறேன். களைச்சி நீங்க வரும்போது நான் உங்கள் நெத்தி வியர்வையைத் துடைச்சி விடணும்''[110] என்று நளினி கூறுகிறாள்.

நளினி நந்த கோபாலுக்காகவே வாழ்கிறான். அவன் அடிபட்டு மருத்துவமனையில் இருக்கும்போது, தன்னால் தான் அவனுக்கு இந்த நிலைமை ஏற்பட்டதோ என்று எண்ணி வருந்தும் போது, ''எந்தன் களி தீர்க்கவந்த நந்தன்''[111] என்று கூறுவதாகப் புனைவு பெற்றுள்ளன.

பூவிழி கணவன் இமயவரம்பனின் இலட்சியமான, பாரதிதாசன் தொழிற்கூடம் ஒன்றை நிறுவி, நிறையப் பெண்களுக்குப் பூவிழி வேலைவாய்ப்பு அளிக்கிறாள். அது பற்றிக் கூறும் பொழுது, ''இது மாதிரி ஒண்ணு ஆரம்பிக்கணுங்கறது தானே உங்களோட லட்சியம் மறந்திட்டீங்களா இமயா''[112] என்று கேட்கிறார்.

முத்துவின் கள்ளக்காதலியாக மாலதி திகழ்கிறாள். அவளைச் சரோஜினி கண்டபடி திட்டி, அடித்து விடவே, கோபமுற்ற மாலதி, ''ஆம்பிடையானைப் பிடிச்சு

வைக்கத் துப்பில்லாதவளுங்க ரோஷம் ஏண்டி படறீங்க? அந்த ஆளை அடி.. என்னை எப்படிடி அடிப்பே"[113] என்று மறுப்புரைக்கிறள்.

மூர்த்தி, அமுதாவைப் பார்த்து, விதவையாகிப் போறது தப்பு இல்லே. கடவுள் கணக்கிலே ஏதோ தப்பு என்று கூறியதை அமுதா தன் வாழ்க்கையோடு இணைத்து நினைத்துப் பார்ப்பதாகக் கூறும்பொழுது, முதல் நாள் இரவிலேயே தன் சுபாவத்தைக் காட்டிக் கொண்டான். அவன் தன்னைப் படுக்கைக்கு அழைத்த விதமே எவளோ வேசியை அவசர அவசரமாக அழைப்பது போலவே இருந்ததாக எண்ணுகிறாள். அடி, உதை, வீட்டிற்கு வெளியே கொட்டும் மழையில் தள்ளி, கதவைத் தாழ் இடுதல், தலைமுடியை ஒரு சுழற்றுச் சுழற்றிச் சுவரில் தலையை முட்ட வைத்தல் என்று பலவாறாகக் கொடுமைப்படுத்தியதை எண்ணி வருந்துகிறாள். அவசர அவசரமா அவன் ஆட்டங்களை முடித்துக்கொண்டு இறந்த பிறகு, அமுதாவின் வயிற்றில் அவனின் மிச்சமும் இருந்தது. அதுவும் ஒருநாள் கரைந்து விட்டது. அவளை நினைத்து மகிழ ஒன்றுகூட இனிப்பாக இல்லை என்று எண்ணுவதாகப் புனையப்பட்டுள்ளது.[114] தன் வாழ்க்கையை மூர்த்தியுடன் அமைத்துக் கொள்ளலாம் என்று எண்ணும்போது அவள் கனவில், மூர்த்தியைத் தன் கணவன் கழுத்தை நெறித்துக் கொல்லப்போவது போல் கனவு காண்கிறாள்.

### 4.2.2.2.6 மகள் கூற்றுப் புனைவுகள்

உமா புகுந்த வீட்டில் மருமகளாகத் திகழாமல் மகளாகவே திகழ்கிறாள். தன் வீட்டிற்கு வந்த தன் மாமனாரின் நண்பரான துரை என்பவரை உபசரிக்கும் போது, "மாமா வாருங்கோ மாமா! நீங்களும் வாருங்கோ என்று அன்போடு அழைத்தாள் உமா. பாத்ரூமைக் காட்டினாள். துண்டை எடுத்து வந்து கைதுடைக்க கொடுத்தாள்[115]

உமா புகுந்த வீட்டில் உள்ள அனைவரையும் பேணி பேணி நன்கு உபசரிக்கிறாள். அங்கு மன்னி மன்னி என்று அன்பொழுக பழகும் ராஜாராமனுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதைக் கூறும்போது கொத்து மல்லித் தளைகளை ஆய்ந்து கொண்டே உமா அவனுக்கு அறிவியல் பாடத்தை விளக்கிக் கொண்டிருந்தாள்[116] என்று புனையப்பட்டுள்ளது.

### 4.2.2.2.7 பிற பெண்கள் கூற்றுப் புனைவுகள்

சரோஜினியின் பக்கத்துவீட்டு அம்மா, தன் கணவன் முத்துவுடன் தவறாகப் பழகும் ஆய்வு மாணவியைப் பற்றிக் கூறும் பொழுது, ‘‘அது பார்வையே சரியா இல்லை. பொட்டைக் கழுதைங்க போயி மேலே விழுந்தா பாவம் ஆம்பிள்ளைங்க என்ன பண்ணுவாங்க’’[117] என்று கூறுவதாகப் புனைவு பெற்றுள்ளமையைக் காணலாம்.

மேலும், ‘‘நீங்க அந்தப்பக்கம் போனவுடன் அந்த நாத்தம் புடிச்சக் கழுதை வந்துடறா... சொந்த பொண்டாட்டி மாதிரி அவளை பால்கனியிலே நிக்க வெச்சிக்கிட்டு தோள் மேலே கை போட்டுக்காரு... அடுக்குமா இது?’’[118] என்று பக்கத்துவீட்டு அம்மா சரோஜினியிடம் கூறுவதாகப் புனையப்பட்டுள்ளது.

தன் மகளின் வாழ்க்கையும், இப்படிப்பட்ட ஒரு பொண்ணால தான், அவ ஓரிடம் அவ ஆம்படையான் ஒரு இடம் குழந்தைங்க ஒரு இடம்னு ஆயிடிச்சிம்மா. அதனால பாவிப் பொண்ணு தூக்கு மாட்டிக்கிட்டு செத்து போயிட்டாம்மா! நீயாவது புத்தியோட பொழைச்சிக்கோ’’[119] என்று கூறுவதாகப் புனைவுபெற்றுள்ளது.

## 4.3 பெண் புனைவும் கருத்தியலும்

அரசு மணிமேகலையின் பத்துப் படைப்புகளிலும், குடும்ப உறவு சார்ந்த நிகழ்வுகளில் தாயாகவும், சகோதரியாகவும், மனைவியாகவும், மகளாகவும், காதலியாகவும், மருமகளாகவும் உறவு நிலைகளில் பெண் என்பவள் புனைவு பெற்றுள்ளமையினை இதுகாறும் கண்டோம். இப்புனைவுகள் வழிப் புலனாகும் கருத்தியல்களை இனிக் காண்போம்.

### 4.3.1 ஆணைச் சார்ந்து வாழ்பவள்

அரசு மணிமேகலையில் பத்துப் படைப்புக்களிலும், பெண் என்பவள் குழந்தைப் பருவம் முதல் பருவ வயது வரை தந்தை அல்லது சகோதரனைச் சார்ந்து வாழ்கிறாள். திருமணத்திற்குப் பின் கணவனைச் சார்ந்து வாழ்கிறாள். முதுமைக் காலத்தில் பிள்ளைகளைச் சார்ந்து வாழ்கிறாள்.

பொறுத்திறு பூ மலர நாவலில் பூவிழி தந்தையையும், பூவிழியின் தாய் கணவனையும் சார்ந்து வாழ்பவர்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

தீக்குளிக்காத சீதைகள் என்னும் நாவலில் மதுமதி தந்தையைச் சார்ந்து வாழ்பவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்.

கண்ணுக்குள் நூறு கவிதை என்னும் நாவலில் பொன்னாத்தாள் தந்தையைச் சார்ந்து வாழ்பவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்.

பூவே இளம் பூவே என்னும் நாவலில் சொர்ணா தந்தையையும், வசந்தி கணவனையும், காந்திமதி மகனையும் சார்ந்து வாழ்பவர்களாகப் படைக்கப்பட்டுள்ளார்கள்.

நாளை நான் ஜெயிப்பேன் என்னும் நாவலில் தியாகுவின் தாய் மகனைச் சார்ந்தும், உஷா தந்தையைச் சார்ந்தும் வாழ்பவர்களாகப் படைக்கப்பட்டுள்ளார்கள்.

கனவு சுமக்கும் கண்கள் என்னும் நாவலில் நளினி சகோதரனையும், நளினியின் தாய் மகனையும் சார்ந்து வாழ்பவர்களாகப் படைக்கப்பட்டுள்ளார்கள்.

காத்திருங்கள் காலம் வரும் என்னும் நாவலில், நிர்மலா தந்தையையும், நிர்மலாவின் தாய் கணவனையும் சார்ந்து வாழ்பவர்களாகப் படைக்கப்பட்டுள்ளார்கள்.

மனிதரில் இவர் மகாத்மா என்னும் நாவலில் உமா கணவனைச் சார்ந்து வாழ்பவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்.

என்றும் தொடரும் பயணம் என்னும் நாவலில் சரோஜினி கணவனைச் சார்ந்து வாழ்பவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்.

பொறுத்திரு பூ மலர என்னும் நாவலில் அமுதா தந்தையையும், அமுதாவின் தாய் கணவனையும் சார்ந்து வாழ்பவளாகப் படைக்கப்பட்டுள்ளார்கள்.

### 4.3.2 ஆண்களுக்கான நுகர்ச்சிப் பொருள்

காஞ்சனா ஒருவனைக் காதலித்தாள். அவன் ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் எனக் கணக்குப் பார்த்து இன்பம் துய்த்தபின் அவளை விட்டு விட்டு ஓடி விடுகிறான். பிறகு அவள் ஒரு லாரி டிரைவருடன் சேர்ந்து வாழ்ந்தாள். அவன் காஞ்சனாவைப் போகப் பொருளாகப் பார்த்தான். அவனுக்குப் பொதுவுடைமைச் சித்தாந்தத்தின் மீது ஏகப்பட்ட நம்பிக்கை. எனவே மற்ற லாரி டிரைவர்களுக்கும் காஞ்சனாவைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்புக்கள் அளித்தான்.”[120] காஞ்சனா போகப் பொருளாக உள்ளாக்கப்பட்டமையை இவண் அறியலாம்.

மாலதி அசோக் என்பவனைக் காதலித்து வீட்டை விட்டு ஓடிப் போனாள். அவன் அவளிடம் இன்பம் நுகர்ந்தவுடன் அவளை விட்டுவிட்டு ஓடி விடுகிறான். அசோக் அவளை இறுக அணைத்துக் கொண்டு, விரல்களால் முன்னுச்சி குழல்

கற்றைகளை அளைந்து கொண்டிருந்தான். அவளைத் தன் மடியில் மெல்லச் சாய்த்துக் கொள்கிறான். குனிந்து கண்களையே பார்க்கிறான். . . . கண் மலரின் இதழ் மலரை ஒற்றி எடுக்கிறான் . . . உதடுகளைப் பார்த்துவிட்டு புன்னகையோடு கிட்டே, கிட்டே வருகிறான் . . .[121] இங்கே மாலதி ஆணுக்கான நுகர்ச்சிப் பொருளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளாள்.

ஆய்வு மாணவி மாலதி ஆசிரியர் முத்துவைக் காதலிக்கிறாள். அவன் ஏற்கனவே திருமணம் ஆனவன். அவனுக்கும் மாலதிக்கும் உள்ள உறவைப் பற்றி அறிந்த சரோஜினி அவனைக் கண்டிக்க, அவன் அவளிடம், மாலதியைப் பற்றி, அவள் ரப்பர் பந்து மாதிரி என்னமா வளைஞ்சி எப்படி ஈடு கொடுப்பா தெரியுமா? என்று கூறுகிறான் என்பன போன்ற புனைவுகள் வழி, பெண்கள் பிற ஆண்களுக்கான போக நுகர்ச்சிப் பொருளாகவும் கணவனுக்கான நுகர்ச்சிப் பொருளாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளமையினை அறியலாம்.

### 4.3.3 பெண் முடிவெடுக்கத் தகுதி அற்றவள்

பெண் வாழ்வில் எந்த முடிவும் எடுக்கக் கூடாது என்று ஆசிரியர் கூறியுள்ளார். காத்திருந்தால் காலம் வரும் மாலதி அசோக்கைக் காதலித்து அவனுடன் ஓடி விடுகிறாள். முடிவில் அவளுக்குக் குடும்ப வாழ்வு மறுக்கப்படுகிறது. ஒத்த பறவையாக டென்மார்க்கில் காலத்தைக் கழிக்கிறாள்.

பொறுத்திரு பூ மலர நாவலில் வரும் காஞ்சனாவும் ஒருவனுடன் ஓடி விடுகிறாள். அவன் அவளைக் கை விட்டு விடுகிறான். இறுதியில் அவளுக்கு நோய் ஏற்படுகிறது.

பெண்கள் முடிவெடுத்தால் வெற்றியடையாது; குடும்ப வாழ்வு கிடையாது; தண்டனை கிடைக்கும் என்ற கருத்தியல்களை ஆசிரியரின் புனைவுகள் வழி அறிய முடிகிறது.

### 4.3.4 காதலைத் தேர்ந்தெடுக்கும் உரிமை

அரசு மணிமேகலையின் படைப்புக்களில், பெண்கள் தங்கள் காதலர்களுடன் உறவாடும் உரிமையைக் காணலாம். பூவிழி, இமயவரம்பனைக் காதலிக்கிறாள்; சொர்ணா ரமேஷைக் காதலிக்கிறாள். நளினி நந்தகோபாலைக் காதலிக்கிறாள். நிர்மலா கோபாலைக் காதலிக்கிறாள். ஆனால் அக்காதல் கைகூடித் திருமணமாகிக் கணவன் மனைவியாக வாழ வேண்டுமென்றால், குடும்பத் தலைமையேற்றிருக்கும் தந்தை அல்லது சகோதரர்களின் அங்கீகாரம் தேவைப்படுகிறது. பூவிழியின் தந்தையும், சொர்ணாவின் தந்தை ராஜலிங்கமும் நளினியின் அண்ணன் நந்தகோபாலும் நிர்மலாவின் அண்ணன் சிவாவும் அங்கீகரித்ததால், மேற்கூறியோரின் காதலுறவுகள் தொடர்கின்றன.

பெண்களுக்குக் காதலனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அதை உறுதிப்படுத்துவதும் அங்கீகரிப்பதும் ஆணாக இருப்பதை அறிய முடிகிறது. மேலும் விதவையர் காதலிப்பதாகத் தம் நாவல்களுள் புனைந்து, மறுமலர்ச்சியினைப் பதிவு செய்திருந்தாலும் ஆணின் அங்கீகாரம் தேவை என்ற மரபுக் கருத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளமையை அறியலாம்.

### 4.3.5 ஆண் நல்லவனாகப் படைக்கப்படல்

கதைத் தலைவர்கள் எல்லா நாவல்களிலும் நல்லவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

நந்தகோபால் இரக்கக் குணம் உடையவர் என்பதை நாவலில் வரும் வேலைக்காரி அலமேலு அம்மாள், ‘‘சாமி, ஏழைகளுக்கு, அனாதரவா நிக்கிற என்னை மாதிரிப் பாவப்பட்ட ஆளுங்களுக்கு, இரக்கம் காட்டுறவங்க அத்தனைப் பேரும் சாமிங்க தான் . . .’’[122] என்று கூறுகிறாள். மேலும் அவர் நற்பணி மன்றம் அமைத்து அனைவருக்கும் உதவுவதாகப் புனைந்துள்ளார்.

இமயவரம்பன் நல்லவனாகப் படைக்கப்பட்டுள்ளார். அவர் வரதட்சிணை வாங்காமல் திருமணம் முடிக்கிறார்.

வெங்கடேசன் தன் மகனுக்கு வரதட்சிணை வாங்காமல் திருமணம் முடிக்கிறார். அவர் காந்திஜி சேவா சங்கம் அமைத்து மக்களுக்கு உதவி புரிகிறார்.

கோபால் நல்லவராகப் படைக்கப்பட்டுள்ளார். அவர் தான் காதலிக்கும் நிர்மலாவின் குடும்பத்திற்குப் பல வழிகளில் உதவுகிறார்.

மூர்த்தி நல்லவராகப் படைக்கப்பட்டுள்ளார். அவர், விதவை அமுதாவுக்கு வாழ்வு கொடுக்கிறார்.

இவ்வாறு நாவல்களில் ஆண்கள், இரக்கக் குணம் உடையவர்கள், பொறுமை உடையவர்கள், அனைவருக்கும் உதவும் தன்மை கொண்டவர்கள் என்ற கருத்தியல் கற்பிதமாக்கப்படுவதைக் காணலாம்.

### 4.3.6 ஆண் வேறொரு பெண்ணை மணக்க முதல் மனைவி பழி சுமத்தப்படல்

ஆண் இன்னொரு திருமணம் முடிக்க, முதல் மனைவி பழி சுமத்தப்படுகிறாள். முதல் மனைவி உயிருடன் வாழும் போதே இன்னொரு திருமணம் முடிக்கின்றனர். அவர் இன்னொரு திருமணம் முடிப்பதற்கு, முதல் மனைவி சரியில்லை என்ற காரணம் சொல்லப்பட்டுள்ளது. ‘‘மங்களா வெளிநாட்டு நாகரிகத்தில்

கண்மூடித்தனமாக மூழ்கிப் போனவள். எந்நேரமும் அவளைச் சுற்றிலும் நண்பர்கள் . . . அவர்கள் தாடியும், அவர்கள் பார்வையும் ஒரு நாள் இரவு ஒரு மணிக்கு எவனோ ஒருவனுடன் கட்டிப் புரண்டு, ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் வந்து சேர்ந்தாள்[123] என்று ஆசிரியர் புனைவதன் மூலம் பெண்ணுக்கு ஒழுக்கவியல் கோட்பாடு முன் வைக்கப்படுகிறது. ஆண் இன்னொரு திருமணம் முடிப்பதற்குத் தகுதிகளாக, பணம், பகைவனை மன்னித்தல், பிறருக்கு உதவுதல், நேர்மை, அனைவரிடமும் அன்புடன் பழகும் தன்மை ஆகியன கூறப்படுகின்றன. ஆணுக்கு, ஒரு பெண் போனால் இன்னொரு பெண் அந்த இடத்தை நிரப்புகிறாள். ஆனால், பெண் (மனைவி) களங்கப்படுத்தப்படுகிறாள். அவள் பல ஆண்களோடு சுற்றுபவள் என்று புனைவு பெறுகிறாள்.

### 4.3.7 ஆண் செய்த தவற்றைத் தெய்வம் மீது சுமத்துதல்

ஆண், பெண் இரு பாலாரும் ஒருமனப்பட்டுக் காதலுறவில் திளைத்து வாழும் நிலையில், காதலெனும் திரையில் இன்பம் துய்த்த பின்பு, காதலியைக் கை கழுவி நழுவிவிடுகிறான். துக்கம் தாளாத பெண்களுக்குப் பைத்தியம் முதலான பல்வேறு உடல், உள்ளப் பாதிப்புக்கள் உருவாகின்றன. இந்நிகழ்விற்குக் காரணமான ஆண்களைப் பழியாக்காமல் தெய்வத்தின் மீது பழியைப் போடும் மரபுக் கருத்தியலை நாவல் புனைவுகள் மூலம் அறியலாம். ‘‘பாவம் சின்னஞ்சிறு பெண். தேவன் அவள் அவசரத்திற்கு இப்படியா ஒரு தண்டனை அளிப்பது[124] என்ற புனைவின் வழி மேற்கூறிய கருத்தியலுக்கு, அதாவது, ஆண் செய்த தவற்றிற்குத் தெய்வம் காரணமாகச் சொல்லப்படுவதனை அறியலாம்.

### 4.3.8 பெண் குடும்பத்தின் குலவிளக்கு

பெண் என்பவள் குடும்பத்தின் குலவிளக்காகப் போற்றப்படுகிறாள். மனிதரில் இவர் மகாத்மா நாவலில் “கிருகலெட்சுமியை அழைச்சுண்டு உள்ளே வந்திருக்கிறான்”[125] என்று ஆசிரியர் கூறியுள்ளார். பெண் வந்தால் தான் குடும்பத்திற்குச் சிறப்பு. ஏனெனில் அவள் தான் குலவிளக்கு என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

### 4.3.9 தியாகத்தின் மறு உருவம்

பெண் என்பவள் தியாகத்தின் மறு உருவமாகக் காட்டப்படுகிறாள். பெண்கள் ஏதாவது ஒரு விதத்தில் தியாகம் செய்கிறார்கள்.

1) தன் மகளுக்காகப் பொன்னாத்தாள் தன் வாழ்வைத் தியாகம் செய்கிறாள்.

2) மோகனா தாய்க்காகத் தன் காதலைத் தியாகம் செய்கிறாள்.

3) மோகனா மன்றம் அமைத்துப் பெண்களுக்கு உதவிட மோகனா தன் வாழ்வைத் தியாகம் செய்கிறாள்.

4) அமுதா தன் குடும்பத்திற்காகத் தன்னையே தியாகம் செய்கிறாள்.

என்று தியாகத்தின் குறியீடாகப் பெண்களைக் குடும்பத்தில் செயல்படும் மரபுக் கருத்தியல் புனைவுகள் வழிப் புலப்படுவதனைக் காணலாம்.

### 4.3.10 கணவனுக்காகவே வாழ்பவள்

பெண் என்பவள் கணவனுக்காகவே வாழ வேண்டும். அவன் கெட்டவனாக இருந்தாலும் அவன் நினைப்பிலேயே வாழ வேண்டும். சரோஜாவின் கணவன் முத்து. அவன் அவளுக்குத் தெரியாமலேயே விஷத்தை உணவுடன் கலந்து அவளுக்குக் கொடுத்து வந்தான். இறுதியில் அவனுக்குச் சிறைத் தண்டனை கிடைக்கிறது. ஆனால், சரோஜாவோ அவனையே நினைத்துத் தன் இறுதி நாட்களைக் கழித்தாள். இதை

“அந்தச் சீதை இராமன் இல்லாவிட்டாலும் சீதை தானே, பயணத்தைத் தொடர்கின்றாள் . . . மெல்ல, தங்கள் கல்யாண ஆல்பத்தை எடுத்து வைத்துக் கொண்டு புரட்டத் தொடங்குகிறாள் . . .”[126] என்பதிலிருந்து அறியலாம்.

நளினி, நந்தகோபாலுக்காகவே வாழ்கிறாள். இதை, “உங்க கூடவே இருக்கணும்னு துடிக்கிறேன். களைச்சி நீங்க வரும் போது நான் உங்கள் நெத்தி வியர்வையைத் துடைச்சி விடணும்[127] என நளினி கூறுகிறாள். பெண்கள் இறுதிக் காலம் வரை கணவன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவனையே நினைத்து வாழ வேண்டும் என்ற கருத்தியலை உணரலாம்.

### 4.3.11 விருந்தினரை உபசரிப்பவள்

பெண் என்பவள் விருந்தினரைப் பேணுபவள். உமா தன் மாமனாரின் நண்பரான துரை என்பவரை உபசரிக்கிறாள். “மாமா வாருங்கோ மாமா நீங்களும் வாருங்கோ அன்போடு அழைத்தாள் உமா. பாத்ரூமைக் காட்டினாள். துண்டை எடுத்து வந்து கை துடைக்கக் கொடுத்தாள்.[128] கணவன் குடும்பத்திற்கு வரும் விருந்தினரைப் பேணி உபசரிப்பவள் மனைவி எனும் கருத்து வலியுறுத்தப்படுவதை அறியலாம்.

### 4.3.12 பொறாமைக் குணம் படைத்தவள்

பெண் என்பவள் பொறாமைக் குணம் படைத்தவள் என்ற கருத்தியல் வெளிப்படுவதைக் காணலாம். கண்மணி ஆதரவற்ற நிலையில் தவிக்கின்ற பொழுது அவள் அக்காள் மஞ்சுளா அவளை ஏற்கவில்லை. அவள் பூபதியின் உதவியால் வசதியாக வாழ்ந்த போது கண்மணியின் மீது பொறாமை கொண்டு அவளைப் பழி தூற்றுகிறாள். மேலும், பூபதியையும், கண்மணியையும் இணைத்துத் தவறாகப் பேசுகிறாள். பொறாமையும் பொச்சாப்பும் மஞ்சுளாவைப் பேயாட்டம் ஆட

வைத்துள்ளது என்றும் பெண்களுக்கே உரிய குணம் பொறாமை என்றும் ஆசிரியர் தன் கூற்றின் மூலம் வெளிப்படுத்தியுள்ளமை இதற்கு அரண் சேர்க்கிறது.

### 4.3.13 ஆண்களை வளைத்துப் போடுபவள்

பெண் என்பவள் ஆண்களைக் கவர்ந்து வளைத்துப் போடுபவள் எனும் கருத்தியல் இவர் தம் புனைவுகள் வழி வெளிப்படுகிறது. மாலதி என்பவள் ஆய்வு மாணவி. அவளுக்கு ஆய்வு ஆலோசனை வழங்கும் விஞ்ஞானி முத்துவைக் காதல் வலையில் சிக்க வைப்பதாக ஆசிரியர் புனைந்துள்ளார். இது முத்துவின் மனைவி சரோஜினிக்குத் தெரியாது. ஒரு நாள் பக்கத்து வீட்டு அம்மாள், சரோஜினியிடம் “அது பார்வையே சரியா இல்லை. பொட்டைக் கழுதைங்க. போயி மேலே விழுந்தா, பாவம் ஆம்பிளைங்க என்ன பண்ணுவாங்க?”[129] என்று கூறுகிறாள். அதை முதலில் நம்ப மறுத்த சரோஜினி, பின் உண்மை என்று அறிந்தவுடன் மாலதியைத் திட்டுகிறாள். அவள் மாலதியைப் பற்றி முத்துவிடம், “இந்தத் தெரு நாய் இன்னிக்கி உன்னை மயக்கின மாதிரி நாளை வேற எந்த நாயையாவது மயக்காதுங்கறது என்ன நிச்சயம்?”[130] என்று கூறுகிறாள். ஆணும் சேர்ந்து செய்த தவறுக்குப் பெண் மட்டுமே கேள்விக்குள்ளாக்கப்படுகிறாள். ஆணைக் குறை கூறாமல் பெண்ணைப் பழி கூறுவதோடு, பெண் ஆணை வளைத்துப் போடுபவள் எனும் மரபு நிலை சார்ந்த கருத்தியல் பதிவு பெற்றுள்ளமையினை அறியலாம்.

### 4.3.14 பிரச்சினையை உருவாக்குபவள்

பெண் என்பவள் தன் குடும்பத்திற்கோ அல்லது வேறொரு குடும்பத்திற்கோ பிரச்சினையை உண்டு பண்ணுபவள் எனும் கருத்தியலை ஆசிரியரின் பல கதை நிகழ்வுப் புனைவுகளின் வழிக் காணலாம்.

அமுதா, நளினி, மாலா, மாலதி, பிரபாவதி, மஞ்சுளா முதலான பல பெண் பாத்திரப் புனைவுகளின் வழி, குடும்பத்தில் பிரச்சினையை உருவாக்குபவள் பெண் எனும் கருத்தியல் வலியுறுத்தப்பட்டுள்ளமையை அறியலாம்.

### 4.3.15 பெண்ணின் அறிவு குடும்பத்தைப் பேணுவதற்கு

பெண் என்பவள் குடும்பத்திற்காகவே வாழ வேண்டும். அவள் மட்டுமல்லாது அவளது அறிவும் குடும்பத்தைப் பேணிப் பராமரிக்கும் முறையில் செயல்பட வேண்டும் என்பதனை உமா, சரோஜினி முதலான பாத்திரப் புனைவுகளின் வழி அறியலாம்.

### 4.3.16 உறவுகளை இணைப்பவள்

பெண் என்பவள் கணவன் வீட்டிலுள்ள உறவுகளை இணைக்கும் இணைப்புப் பாலமாகச் செயல்படுபவள். பூவிழியின் கணவன் இமயவரம்பன் அவன் தந்தையுடன் கோபம் கொண்டு அவரை விட்டு விலகி இருந்தான். அவர்கள் இருவரையும் ஒன்று சேர்க்கிறாள் பூவிழி. மகிழ்ச்சிப் பெருமிதத்தோடு தனக்கும் மகனுக்கும் இணைப்புப் பாலம் அமைக்கத் துடிக்கும் மருமகளைப் பார்த்துத் தலையசைத்தார் என்று இமயவரம்பனின் தந்தை நிலையைக் கூறுவதன் வழி அறியலாம்.

### 4.3.17 ஆண்களின் இலட்சியத்தை நிறைவு செய்பவள்

பூவிழி, கணவன் இமயவரம்பனின் இலட்சியத்தை நிறைவேற்றுகிறாள். அவள், பாரதிதாசன் தொழிற்கூடம் என்ற ஒன்றை அமைத்துப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தாள். இதைத் தன் கணவன் இயமவரம்பனிடம் காட்டும் போது, இது மாதிரி ஒண்ணு ஆரம்பிக்கணுங்கறது தானே உங்களோட லட்சியம் . . . மறந்துட்டீங்களா இமயா?[131] என்ற கூற்றின் வழி, ஆண் இலட்சியத்தைப் பெண்

நிறைவு செய்கிறமையை அறியலாம். அதை இமயவரம்பன் நினைத்துப் பெருமைப்படுகிறான். கணவனைப் பெருமைப்படுத்துவதற்காக அவன் இலட்சியத்தை நிறைவு செய்பவளாகப் பெண் திகழ வேண்டும் எனும் கருத்தியல் அடையாளப்படுத்தப்படுவதனைக் காணலாம்.

### 4.3.18 தண்டனையை ஏற்பவள்

மாலதி அசோக்கைக் காதலிக்கிறாள். அவன் அவளுடன் உறவாடிய பின்பு கை கழுவிவிட்டு ஓடி விடுகிறான். குடும்பத்திலுள்ள அனைவரும் அவளைத் திட்ட, அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிடுகிறது. இதற்குக் காரணமான அசோக் தண்டிக்கப்படவில்லை. அவன் வேறு ஒரு திருமணம் முடித்து வாழ்கிறான். ஆனால், மாலதிக்கு வாழ்வு மறுக்கப்படுகிறது. அவளும் அவளுடைய நிலைமைக்குத் தானே தான் காரணம் என்று எண்ணுகிறாள். ‘‘வெப்பமான பாலைவனத்தில் விழுந்துவிட்ட மழைத்துளி நான் . . .என் ஆத்திரமும், அடக்கமின்மையும் என்னை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டன[132] எனத் தன்னைத் தானே நொந்து கொள்வதாகப் புனைவு பெற்றுள்ளாள்.

தீக்குளிக்காத சீதை என்ற நாவலில் வரும் மதுமதி அவள் கணவன் கொடுமையால் சீரழிகிறாள். அவன் அவள் சொத்தின் மேல் ஆசைப்பட்டு அவளைப் பலவாறு கொடுமைப்படுத்தினான். இறுதியில் அவளுக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது. ஆனால் அவளின் நிலைமைக்குக் காரணமான ரமணன் தண்டிக்கப்படவில்லை. ஆண் பெண் ஆகிய இரு பாலாராலோ, ஆண் மூலமாகவோ தவறு நிகழ்ந்ததென்றால் அத்தவற்றிற்கான தண்டனை பெண்ணுக்கு வழங்கும் சமூக மரபுக் கருத்தியலை ஆசிரியர் தம் நாவல்களுள் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார்.

## 4.4 தொகுப்புரை

குடும்ப உறவுப் புனைவும் கருத்தியலும் எனும் இவ்வியலை, ஆண் கூற்றுப் பெண் புனைவுகள், பெண் கூற்றுப் பெண் புனைவுகள், பெண் புனைவும் கருத்தியலும் என மூவகையாகப் பகுத்து, குடும்ப உறவு நிகழ்வுகளில் பெண் புனைவு பெற்றுள்ளமையினையும், புனைவுகள் வழிப் புலப்படும் கருத்தமைவுகளையும் இவ்வியலில் ஆய்வாளர் விவரித்துள்ளார்.

தந்தை, கணவன், மகன், சகோதரன் எனும் உறவுப் படிநிலைகளில், கதை நிகழ்வுகளில் உலா வருவோர், தத்தம் உறவு நிலைகளுக்கேற்ப, வாழ்வியல் சூழலில் வெளிப்படுத்தும், பெண் பற்றிய புனைவுகளையும், படைப்பாசிரியரான பெண் பெண்கள் பற்றிக் கூறும் புனைவுகளையும் தாய், மனைவி, சகோதரி, மகள், தோழி, காதலி எனும் படிநிலை உறவுகளில் கதை நிகழ்வுகளில் வருவோர் தத்தம் உறவு நிலைகளுக்கேற்பப் பிற பெண்களைப் பற்றிக் கூறியுள்ள பெண் புனைவுகளையும் ஆய்வாளர் இவ்வியலில் விவரித்துள்ளார்.

ஆண் கூற்றுக்கள் வழியாகவும் பெண் கூற்றுக்கள் வழியாகவும் வெளிப்படும் பெண்களின் புனைவுகளில் இருந்து புலப்படும் கருத்தியல்களைக் கீழ்க்காணுமாறு தொகுக்கலாம். பெண் என்பவள், ஆணைச் சார்ந்து வாழ்பவள்.

❖ ஆண்களுக்கான நுகர்ச்சிப் பொருள்.

❖ பெண் முடிவெடுக்கத் தகுதி அற்றவள்

❖ ஆண் வேறொரு பெண்ணை மணக்க முதல் மனைவி பழி சுமத்தப்படுதல்.

❖ பெண் குடும்பத்தின் குலவிளக்கு

❖ தியாகத்தின் மறு உருவம்

❖ கணவனுக்காகவே வாழ்பவள்

- ஆண்களை வளைத்துப் போடுபவள்
- பிரச்சனையை உருவாக்குபவள்
- பொறாமைக் குணம் படைத்தவள்
- ஆடம்பரப் பிரியர்கள்

என்பன போன்ற கருத்தியல்கள் குடும்ப உறவுப் பெண் புனைவுகள் மூலம் வெளிப்படுவதினை இவ்வியலுள் காணலாம்.

## அடிக்குறிப்புகள்

1. சு.சண்முகசுந்தரம், திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களில் சமுதாய அமைப்பு, ப. 109.
2. இரா.கற்பகம், சமூகவியல், ப. 56.
3. மேலது., ப. 58.
4. க.ப.அறவாணன், தமிழ் இலக்கிய சமூகவியல், ப. 63.
5. சீ.பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல், ப. 336.
6. மேலது., ப. 340.
7. மேலது., ப. 327.
8. மேலது., ப. 329.

   க.ப.அறவாணன், மு.கூ.நூ., ப. 67.
9. மேலது., ப. 70.
10. மேலது., ப. 77.
11. சி.பக்தவத்சல பாரதி, மு.கூ.நூ., ப. 327.
12. அரசு மணிமேகமலை, என்றும் தொடரும் பயணம், ப. 12.
13. மேலது., ப. 24.
14. மேலது., ப. 25.
15. மேலது., ப. 30.
16. மேலது., ப. 32.
17. மேலது., ப. 38.
18. மேலது., பக். 39 - 40.
19. அரசு மணிமேகலை, தீக்குளிக்காத சீதைகள், ப. 19.
20. மேலது., பக். 149 - 154.
21. அரசு மணிமேகலை, கனவு சுமக்கும் கண்கள், ப. 152.
22. அரசு மணிமேகலை, மனிதரில் இவர் மகாத்மா, ப. 152.
23. மேலது., ப. 156.
24. மேலது., ப. 167.
25. அரசு மணிமேகலை, மு.கூ.நூ., ப. 38.
26. மேலது., ப. 105.
27. அரசு மணிமேகலை, மு.கூ.நூ., ப. 129.
28. மேலது., ப. 129.
29. மேலது., ப. 132.
30. மேலது., ப. 136.
31. மேலது., ப. 138.
32. மேலது., ப. 164.
33. அரசு மணிமேகலை, பூவே இளம் பூவே, ப. 86.
34. மேலது., ப. 137.
35. மேலது., ப. 140.

36. அரசு மணிமேகலை, நாளை நான் ஜெயிப்பேன், ப. 137.
37. மேலது., ப. 137.
38. மேலது., ப. 140.
39. அரசு மணிமேகலை, கண்ணுக்குள் நூறு கவிதை, பக். 137, 138.
40. மேலது., ப. 139.
41. அரசு மணிமேகலை, பொறுத்திரு பூ மலர, பக். 57 - 69.
42. மேலது., ப. 42.
43. அரசு மணிமேகலை, கண்ணுக்குள் நூறு கவிதை, ப. 26.
43. மேலது., ப. 28.
44. அரசு மணிமேகலை, மனிதரில் இவர் மகாத்மா, ப. 125.
45. மேலது., ப. 144.
46. அரசு மணிமேகலை, பொழுது ஒரு நாள் புலரும், பக். 88, 89.
47. மேலது., ப. 92.
48. அரசு மணிமேகலை, பூவே இளம் பூவே, பக். 81, 82.
49. மேலது., ப. 191.
50. அரசு மணிமேகலை, நாளை நான் ஜெயிப்பேன், பக். 121 - 122.
51. மேலது., ப. 125.
52. மேலது., பக். 129 - 139.
53. மேலது., ப. 132.
54. மேலது., ப. 147.
55. மேலது., ப. 164.
56. அரசு மணிமேகலை, கனவு சுமக்கும் கண்கள், ப.33.
57. மேலது., ப.89.
58. மேலது., ப.109.
59. மேலது., ப.111.
60. மேலது., ப.112.
61. மேலது., ப.122.
62. மேலது., பக். 122 - 123.
63. மேலது., ப. 134.
64. அரசு மணிமேகலை, பொறுத்திரு பூ மலர, பக். 32 - 33.
65. மேலது., ப. 65.
66. மேலது., ப. 77.
67. மேலது., ப. 93.
68. மேலது., ப.75.
68. மேலது., பக். 16, 4, 7.
69. அரசு மணிமேகலை, என்றும் தொடரும் பயணம், ப. 19.
70. மேலது., ப. 27.
71. அரசு மணிமேகலை, பொறுத்திரு பூ மலர, ப.55.
72. மேலது., பக். 59, 89.

73. மேலது., ப.93.
74. அரசு மணிமேகலை, தீக்குளிக்காத சீதைகள், ப. 143.
75. மேலது., ப.144.
76. மேலது., ப.146.
77. அரசு மணிமேகலை, மனிதரில் இவர் மகாத்மா, ப. 132.
78. அரசு மணிமேகலை, கண்ணுக்குள் நூறு கவிதை, ப. 87.
79. மேலது., ப. 145.
80. மேலது., ப. 191.
81. மேலது., ப. 27.
82. அரசு மணிமேகலை, பொறுத்திரு பூ மலர, ப. 42.
83. மேலது., ப. 55.
84. மேலது., ப. 56.
85. அரசு மணிமேகலை, என்றும் தொடரும் பயணம், ப.23.
86. மேலது., ப.28.
87. அரசு மணிமேகலை, கனவு சுமக்கும் கண்கள், ப.42.
88. அரசு மணிமேகலை, மனிதரில் இவர் மகாத்மா, ப.148.
89. அரசு மணிமேகலை, தீக்குளிக்காத சீதைகள், ப.157.
90. மேலது., ப.144.
91. அரசு மணிமேகலை, பூவே இளம் பூவே, ப.145.
92. மேலது., ப.27.
93. அரசு மணிமேகலை, பொழுது ஒருநாள் புலரும், ப.43.
94. மேலது., பக்.83-84.
95. மேலது., ப.85.
96. மேலது., ப.87.
97. அரசு மணிமேகலை, தீக்குளிக்காத சீதைகள், ப.116.
98. மேலது., பக்.98,100.
99. அரசு மணிமேகலை, மனிதரில் இவர் மகாத்மா, ப.24.
100. மேலது., ப.134.
101. மேலது., ப.135.
102. அரசு மணிமேகலை, கனவு சுமக்கும் கண்கள், ப.136.
103. மேலது., ப.96.
104. அரசு மணிமேகலை, தீக்குளிக்காத சீதைகள், ப.42.
105. அரசு மணிமேகலை, பொழுது ஒருநாள் புலரும், ப.165.
106. மேலது., ப.37.
107. மேலது., ப.42.
108. மேலது., ப.87.
109. மேலது., ப.88.
110. அரசு மணிமேகலை, கனவு சுமக்கும் கண்கள், ப.27.
111. மேலது., ப.42.

112. அரசு மணிமேகலை, பொழுது ஒருநாள் புலரும், ப.172.
113. அரசு மணிமேகலை, என்றும் தொடரும் பயணம், ப.38.
114. அரசு மணிமேகலை, பொழுது ஒருநாள் புலரும், பக்.77-79.
115. அரசு மணிமேகலை, கனவு சுமக்கும் கண்கள், ப.172.
116. மேலது., ப.122.
117. அரசு மணிமேகலை, என்றும் தொடரும் பயணம், ப.21.
118. மேலது.. ப.122.
119. மேலது., ப.22.
120. அரசு மணிமேகலை, கனவு சுமக்கும் கண்கள், ப.96.
121. அரசு மணிமேகலை, என்றும் தொடரும் பயணம், ப.25.
122. அரசு மணிமேகலை, கனவு சுமக்கும் கண்கள், ப.12.
123. மேலது., பக்.36-37.
124. மேலது., ப.17.
125. மேலது., ப.164.
126. அரசு மணிமேகலை, என்றும் தொடரும் பயணம், ப.46.
127. அரசு மணிமேகலை, கனவு சுமக்கும் கண்கள், ப.30.
128. மேலது., ப.172.
129. அரசு மணிமேகலை, தீக்குளிக்காத சீதைகள், ப.165.
130. அரசு மணிமேகலை, என்றும் தொடரும் பயணம், ப.20.
131. மேலது., ப.24.
132. அரசு மணிமேகலை, கனவு சுமக்கும் கண்கள், ப.176.

# இயல் – 5

# பொருளுறவுப் புனைவும் கருத்தியலும்

## 5.0 முன்னுரை

உலகத்தில் உயிரினங்கள் இருக்கின்றன. எல்லா உயிரினங்களுக்கும் இருத்தல் பண்பு அடிப்படையானது. மனிதர்களுக்கு இருத்தல் பண்புடன் வாழ்தல் பண்பும் அடிப்படையாய் அமைகிறது. வாழ்தல் என்பது உயிரினத்தின் பொதுவான பண்பு, இப்படித்தான் வாழ்தல் வேண்டும் என்று விதிமுறைகள் வகுத்து வாழ்வது மனித இனத்திற்கான சிறப்பான பண்பு. வாழ்விற்கு அடிப்படையானது பொருள், அந்தப் பொருளை ஈட்டும் நெறி, அறநெறிப்பாற்பட்டதாக இருக்க வேண்டும் என்பதே தமிழருக்கான அடிப்படையான வாழ்வியல் கட்டுமானம், இந்தக் கட்டுமானப் பின்புலத்தில் ஆண்- பெண் தனியாகவும் ஆண்- பெண் இணைந்து குடும்பமாகவும், குடும்பங்கள் பல இணைந்து சமூகமாகவும் வாழக்கூடிய வாழ்வியலில், மனித வாழ்வினுடைய அடிப்படையான மையமாக அமைவது பொருள் ஈட்டுதல் ஆகும். பொருள்தான் இல்வாழ்வின் மையமாக உள்ளது. பொருள்சார்ந்த நெறியில், பெண் தனியாகவோ, ஆண் - பெண் இணைந்து குடும்பமாகவோ சமூக உறவுநிலையிலோ அவள் வாழ்கின்ற பொழுது, பொருள் சார்ந்த தொழில் நெறியில் ஈடுபடுகின்ற பொழுது, அந்தப் பெண் பற்றிய புனைவுகள் எங்ஙனம் இடம்பெற்றுள்ளன என்பதனையும் பொருள் சார்ந்த பெண் புனைவில் வெளிப்படும் கருத்தியல்களையும் பின்வருமாறு இவ்வியல் விவரிக்கிறது.

1. குடும்ப நிலையில் பொருள் சார்ந்த நெறி
2. தொழில் நிலையில் பொருள் சார்ந்த நெறி
3. கல்வி கற்றலில் பொருள் சார்ந்த நெறி

4. சமூக நிலையில் பொருள் சார்ந்த நெறி

5. பெண் புனைவும் கருத்தியலும்

எனப் பாகுபடுத்தி ஆய்வாளர் விளக்கி உள்ளார்.

## 5.1 குடும்ப நிலையில் பொருள் சார்ந்த நெறி

என்றும் தொடரும் பயணம் என்ற நாவலில் விஞ்ஞானிமுத்து, பேராசிரியை சரோஜினி இருவரும் கணவன் மனைவியாக இணைந்து இல்லற வாழ்வை நடத்தி வருகின்றனர். முத்து, ஆய்வுப் பணியை வீட்டில் வைத்தே மேற்கொண்டு வருகிறார். சரோஜினி வீட்டில் உள்ள எல்லா வேலைகளையும் அவசர அவசரமாக முத்துவிட்டுக் கல்லூரிக்கு வேலைக்குச் சென்று வருகிறார். வேலைக்குச் செல்லும் முன்பு கணவனுக்கான அத்தனை பணிவிடைகளையும் செய்து கொடுக்கிறாள். நாவலில் அலுவலகத்துக்குச் செல்லும் மனைவிக்குக் கணவன் எந்த உதவியும் செய்யாமல் இருப்பதைக் காணமுடிகிறது.

### 5.1.1 பிறருக்காக வாழ்பவள் பெண்

பல குடும்பத்தில் வேலைக்குச் செல்லும் பெண்கள் தனக்காக என்று எதுவும் வாங்கிக் கொள்வதில்லை. பிள்ளைகளுக்காகவும், கணவனுக்காகவுமே வாழ்வதைப் பாக்கியமாகக் கொண்டு வாழ்கிறார்கள். பிறந்தது முதல் இறக்கும் வரை பெண் இவ்வாறு பிறருக்காக வாழ்வதினாலேயே பெருமைப்படுத்தப்படுகிறாள் சிந்தனையோட்டத்துடன் சரோஜினியின், கைகள் அவசர அவசரமாக ஒரு சிறு எவர்சில்வர் பாத்திரத்தில் சோற்றை அடைத்தன. வேறு ஒரு பாட்டலில் சாம்பாரை ஊற்றிக் கொண்டாள். இன்னும் ஒரு எவர் சில்வர் பாத்திரத்தில் இருந்து நான்கு கரண்டி நெய்யை வழித்து, ஒரு சிறு தட்டில் போட்டு மூடிவிட்டு, வேறொரு பாத்திரத்தில்

உருளைக்கிழங்கு வறுவலைப் போட்டுக் கொண்டாள். கொத்து மல்லிச்சட்டினியை சோற்றுக்கு மேலே வைத்துக் கொண்டாள். "ஆச்சு... இந்தச் சோறுதான் அவள் கண்டது இரண்டாயிரம் ரூபாய் சம்பாதிக்கும் பேராசிரியர் கண்டது இதுதான். மத்தியானம் இடைவேளை நேரத்தில் ஆறி அவலாகிப் போன இந்தச் சோற்றை அடைத்துக் கொண்டு, எண்ணி ஏழே நிமிஷத்தில் அடுத்த வகுப்புக்கு ஓட வேண்டும்"[1] என்று அலுவல் மகளிரின் அவசர நிலையினைப் புனைந்துள்ளமையினைக் காணலாம்.

அலுவலகத்திற்குப் போய் அலைந்து திரிந்து வரும் கணவன், வீட்டில் வேலை பார்ப்பதில்லை. மனைவி என்ற பெண்ணே அனைத்து வேலைகளையும், கவனிப்பதோடு, வீட்டிற்குத் தேவையான பொருள்களை வாங்கும் போது தனக்கென, "ஒரு எலுமிச்சம் பழம்கூட வாங்கிக் கொள்வதில்லை"[2] எனக் கூறியபடித் தன் குடும்பத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதில் கண்ணுங் கருத்துமாகச் செயல்படுவதாகப் புனைந்துள்ளார்.

பெரியவர்கள் எவ்வளவு பணம், நகை, சொத்து என்று இருந்தாலும் மனநிறைவு அடைய மாட்டார்கள். ஆனால், குழந்தைகள் சின்னச் சின்ன பொருள் கிடைத்தாலே தனக்குக் கிடைத்து விட்டதாக எண்ணி மகிழ்ச்சி அடைவார்கள். இதை நாவலில் சரோஜினியியும், அவள் தோழி லீலாவும் பேசிக் கொள்வதாகக் கூறியுள்ளார். "லீலா! பெரியவர்களுக்கு எட்டுப் பவுன்லே செயின் வாங்கிக் கொடுத்தாலும், மனசு திருப்திபடாது தெரியுமா? எனக்கு எட்டுப் பவுன்தானே கொடுத்தா? அவளுக்குப் பத்துப் பவுன் இல்லே கொடுததா. அப்படின்னு ஒரு எரிச்சல் தாண்டி வந்து சேரும், தெரியுமா? அதே, குழந்தைகளைப் பாரு ஒண்ணரை ரூபா

கிளிப்பு, ரெண்டு ரூபா வளையல், ஒரு பேனா இதுலேயே சொல்ல முடியாத சந்தோஷப்படுங்க[3] என்று கூறுவதின் வழி அறியலாம்.

### 5.1.2 பணத்திற்காக மனைவியை கொடுமைப்படுத்துதல்

காதலித்து மணந்த மனைவி சரோஜினியை உதறித் தள்ளிவிட்டு, முத்து மாலதியுடன் தகாத தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட பிறகு, சரோஜினியைக் கொஞ்சம் கொஞ்சமாக உணவில் விசத்தைக் கலந்து கொல்ல முயற்சிக்கிறான். இதை மருத்துவர் மூலம் அறிந்து கொண்ட சரோஜினியை அடித்து மிரட்டிச் சொத்து, பணம் என அனைத்தையும் அபகரிக்கத் திட்டமிடுகிறான். அதற்காக அவைளத் துன்புறுத்திக் கையெழுத்து வாங்கும் செயலில் ஈடுபடுகிறான்.

“கமான் சரோஜினி! கிடுகிடுன்னு அஞ்சாறு கையெழுத்து போடு... என்ன முழிக்கிறே  நீ எங்கே வெளியிலே போக்கபோறே உயிரோடு இருந்தாத்தானே! . . . இதோ பார் இது உன் சொத்துக்கள் அத்தனையும் எனக்குங்கிற செட்டில் மென்ட். இது இன்சூரன்ஸ் பண விவகாரம். கொஞ்சம் பணமா மாசாமாசம் கூட்டிக்கிட்டு வாரேன்? அடையாறு வீட்டை எனக்கு மாற்றித் தரே இந்தப் பத்திரம் தான் அது”[14] ஒரு பெண்ணின் கணவனே அவளின் சொத்தை அபகரிக்கத் திட்டமிட்டுக் கொலை செய்ய முயற்சிக்கத் துணிந்து விடுவதை அறியமுடிகிறது.

### 5.1.3 குடும்பப் பாரத்தைச் சுமப்பவள்

அமுதா விதவைப் பெண். ஆனால் பணம் சம்பாதிக்கும் பெண். அலுவலகத்தில் பொது மேலாளராகப் பணியாற்றும் துணிச்சலான பெண். ஆனால், அப்பாவின் பேச்சால் அவள் உயிர் கருகிப் போவதாய் உணர்கிறாள். “அது மூதேவி ஜாதகம் உருப்படலை அவன் மண்டையை உருட்டிட்டா”[5] இந்தக் கொடூரமான

வார்த்தைகளைக் கேட்ட பிறகும் கூட அப்பாவிடம் இயல்பாக அமுதா பேசுகிறாள். தங்கையின் திருமணத்தைப் பற்றிப் பேசுகிறார் தந்தை.

“உன் தங்கை தாமரைக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணிக்கிட்டு வந்துட்டோம் சும்மா வெறும் ஒப்புத் தாம்பூலம் தான் . . .”[6] என்று கூறியவுடன், அமுதாவின் மனத்திற்குள் ஆத்திரம் பொங்கி எழுந்தாலும் தன் உணர்வுகளை அடக்கிக் கொள்கிறாள். ஆனால், அந்தக் குடும்பத்தைத் தனியொரு பெண்ணாக நின்று கவனித்து வருபவள். அப்படிப்பட்ட பெண்ணை அமங்கலமாகக் கருதி, ஓரங்கட்டி விடுகிறார்கள். ஆனால், அவள் சம்பாதிக்கும் பணம் மட்டும் மங்கலமாகக் கருதப்பட்டு மங்கல நிகழ்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகிறது.

தாலியிலிருந்து தட்டுவரை எல்லாம் அலைந்து, திரிந்து வாங்கி வரப் போகிறவள் அமுதாதான். அவள் அபிப்பிராயம் யாருக்கும் வேண்டாம். அவள் உழைப்பு மட்டும் வேண்டுமாக்கும். ஒரு கணம் உள்ளம் எரிமலையாய்க் குமுற ஆரம்பித்தது. அந்தக் குடும்பத்தைத் தாங்கி நிற்பவளே அமுதாதான். அப்பா ரிட்டையர் ஆனவர். கையில் பைசா மிச்சம் இருந்து விடக்கூடாது என்றே ரேஸ் மைதானங்களுக்கு ஓடி, குதிரையின் வாலில் கட்டித் தொலைத்தவர். குடும்பத் தலைவி என்கிற பிரமோஷன் வேறு வழியின்றி அமுதாவுக்கு வந்தது என்று எண்ணி வருந்தியபடிக் குடும்பத்தில் கடமையாற்றுகிறாள்.[7]

அமுதாவைக் குடும்பத் தலைவியாக, அக்குடும்பத்தினர் பாவிப்பது, அவள் கொண்டு வரும் மாத ஊதியத்திற்காகத்தான். அவளின் அன்பை எதிர்பார்க்காமல் ஊதியத்தை மட்டும் எதிர்பார்க்கும் அப்பா, அம்மா, தங்கை, தம்பியை எண்ணி வருந்துகிறாள்.

வீட்டுப் பொறுப்புக்களிலும், அலுவலகப் பொறுப்புக்களிலும் சிறப்பாகச் செயல்படுகிறாள். தாமரைக்குப் பாவாடைத் துணி, இளமுருகுக்கு அரைக்கால் சட்டை என்று வாங்கிவிட்டு வெளியே வரும்போது, வாங்கிய ஊதியத்தில் பாதி தீர்ந்து விட்டதை எண்ணி வருந்துவாள். மீதி இருக்கும் நாளை எவ்வாறு சிரமமின்றி நடத்துவது என்று கவலைப்படுவாள்.

### 5.1.4 சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை

அமுதா குடும்பத்தின் அனைத்துப் பொறுப்புக்களையும் ஏற்று வழி நடத்துகிறாள். ஆனால், அவள் பெண் என்கிற காரணத்தினால் புறக்கணிக்கப்படுகிறாள். இளமுருகு அமுதாவின் உடன் பிறந்த சகோதரன். அவன் பள்ளியில் படிப்பவன். அப்பா உழைப்பதில்லை. அவர்களுக்குக் கிடைக்கும் மதிப்பு, கவனிப்பு உழைக்கின்ற தனக்குக் கிடைக்கவில்லை என்று வருந்துகிறாள்.

“பள்ளிக் கூடத்திலே படிக்கிற தம்பி சாண்பிள்ளைனாலும் ஆண் பிள்ளைன்னு அவனைத் தூக்கி தலைமேலே வைச்சிக்கிறா நியாயம்மா இது?[8] என்று கேட்டு வருந்துகிறாள். ஆனால் அவள் அப்பா, அம்மா செய்வது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போன்றிருக்கும்.

“அமுதாவிடம் கைநீட்டிப் பணத்தை வாங்கிக் கொண்டு அவள் தயவில் ஒன்றும் தாங்கள் வாழவில்லை என்ற போலியாக மிரட்டுகிற தாய்[9]

“வேலைக்குப் போகிற பெண் மேல் ஒரு கண் இருந்துகிட்டே இருக்கணும். பிடியை விட்டுவிடவே கூடாது”[10] என்று ஏகத்திற்கு விரட்டிக் கொண்டிருப்பாள் என்று அமுதா தன் தாயை எண்ணி வருந்துகிறாள்.

### 5.1.5 திருமண பந்தம்

கடையில் காசு கொடுத்து வாங்கும் தக்காளியைக் காசுக்கு ஏற்றதுதானா? என்று பார்ப்பதுண்டு. ஆனால், தன் அப்பாவிடம் திருமணம் வேண்டாம் வேண்டாம் என்று சொன்னபோது கூட மறுத்து ஒரு சூதாடியைத் திருமணம் செய்து வைத்துவிடுகிறார்கள்.

"தன்னைப் போலவே ஒரு சூதாடியைப் பிடித்து வந்தார். வேண்டாம், வேண்டாம் என்று எவ்வளவோ மறுத்தும், அமுதாவை மிரட்டி, திருமணப் பந்தலிலே உட்கார வைத்து விட்டார்[11]

பெண்களின் விருப்பு வெறுப்புக்களைத் திருமணத்தின் போது கேட்பதில்லை. முடிவு தவறானதாகப் போகின்ற போது மட்டும், அதற்குப் பெண்ணைப் பொறுப்பு ஏற்கச் செய்கின்றனர். அமுதா, மாதம் மாதம் கொண்டு வந்து கொடுக்கும் பணத்திற்கு இருக்கும் மதிப்புக் கூடத் தனக்குக் கிடைப்பதில்லை என்று வருந்துகிறாள். அதனால் வேலைக்குச் செல்வதற்கே வெறுப்பாக இருப்பதாக உணருகிறாள்.

"பணம் சம்பாதித்து வந்து கொட்ட எனக்கு வெறுப்பாக இருக்கிறது என்று சொல்லிவிட்டு, நான் தலைவிரிகோலமாய் மூலையிலே முடங்கிக் கொண்டால் விட்டு விடுவார்களா?"[12] என்று தன் வாழ்க்கையை எண்ணி நொந்து கொள்கிறாள்.

செய்நன்றி உடையவர்களுக்கும் பிறரன்பு கொண்டவர்களுக்கும் மெழுகுவத்தியைப் போன்று உருகலாம். ஆனால், "இந்த ஆணவம் பிடித்தவர்களுக்கு, வெறுப்பை நெருப்பாய் வீசியெறியும், இந்த விவஸ்தை கெட்டவர்களுக்கு, எவ்வளவு உழைத்துப் போட்டாலும், எனக்கு என்ன கிடைத்து விடப் போகிறது? சக்கையாகப் பிழிந்து சாறு எடுத்துக் கொண்ட பின்னால், நாளை ஒரு வேளைச் சோறு போடுவார்களா?[13] என்று அமுதா தன் குடும்பத்தின் பொருளாதாரச் சூழ்நிலையை எண்ணி விரக்தியடைகிறாள்.

திருமணங்கள் பொருளாதாரத்தின் அடிப்படையில் முடிவு செய்யப் படுகின்றன. அமுதாவின் தங்கை தாமரைக்குப் பத்துச் சவரன் நகை போடுவதாகச் சொல்லி உறுதியளிக்கிறார்கள். மாப்பிள்ளை வீட்டார் அதைப் பெருமிதத்தோடு ஏற்றுக் கொள்கிறார்கள். திருமணம் முடிவதற்கு முன்பாகவே மாப்பிளை வாங்கிய கடனை அடைப்பதற்குப் பெண் வீட்டாரிடம் ஐந்தாயிரம் ரூபாய் பணம் கேட்டதை அறிந்த அமுதாவுக்கு எல்லாமே ஏமாற்று வேலையாகத் தெரிகிறது.

ஒரு அஞ்சாயிரம் ரூபா கொடுத்தா, நான் ஆபீஸ் கடனை மொத்தமாகக் கட்டிடறேன். சம்பளம் முள்ளங்கிப் பத்தை மாதிரி வந்திடும்ங்கறாரு[14] என மாப்பிள்ளைக்கு சார்பாக உமாவிடம் பேசுகிறாள்.

மாப்பிள்ளையைப் பற்றிச் சரியாக விசாரிக்காமல் திருமணம் செய்து வைத்ததால் தன் வாழ்க்கை திசை மாறிப் போனது. அதே போன்று தங்கை தாமரையின் வாழ்வும் ஆகிவிடக்கூடாது என்ற எண்ணத்தில் அமுதா தன் பெற்றோர்களிடம் மாப்பிள்ளையை நன்றாக விசாரித்தீர்களா என்று கேட்டவுடன் குரோதமாக அப்பா, அம்மா, தாமரை எல்லோரும் அமுதாவைப் பார்த்தபடி,

‘‘மாப்பிள்ளைக்கு அப்பாவும், அம்மாவும் இல்லை. அண்ணன் அஸ்ஸாம்லே அரசு வேலையில இருக்கான். அண்ணி பணக்கார வீட்டுப் பொண்ணு. அதனால யாரையும் மதிக்கமாட்டாள். மாமா, மாமி, தன் பொண்ணை கூட மாப்பிள்ளைக்கு பெண் கொடுக்க விரும்பி இருக்காங்க. பொண்ணையும் கொடுத்து எண்பது சவரன் நகையும் போட்டு, வீட்டையும் எழுதி வைக்கிறேன்னு சொல்லியிருக்காங்க. இவர் வேண்டாம்னு ஒரே அடியாச் சொல்லிட்டாரு . . .[15] என்று அமுதாவிடம் கூறுகின்றனர். இவ்வளவும் உண்மைதானா? என்று ஒருவரிடம் கூட விசாரிக்காமல்

திருமண ஏற்பாடுகளைச் செய்கின்றனர். இதை எண்ணிய அமுதா, தன் வாழ்க்கை போல் தங்கை தாமரையின் வாழ்க்கை ஆகிவிடக்கூடாது என்று வருந்துகிறாள்.

தங்கையின் கல்யாணச் செலவுக்காகப் பத்தாயிரம் கடன் வாங்கிக் கொடு அமுதா என்று அம்மா கூறியவுடன், அவ்வளவு தொகை அலுவலகத்தில் கொடுக்க மாட்டார்கள் என்று சொல்லிப் பார்க்கிறாள். எப்படியாவது கடன் வாங்கிக் கொடுக்கச் சொல்கிறாள் தாய்.

"பாத்திரம் பண்டம் வாங்கணும். பட்டுப்புடவை வாங்கக் காஞ்சிபுரம் போய்ட்டு வரணும். எவ்வளவு செலவு இருக்குது. அம்மா உள்ளே போய்விட்டாள். விக்கித்து நின்று விட்டாள் அமுதா. எத்தனைச் செலவுகளைத் தான் அவள் ஈடுகட்டுவாள்? எப்படி சமாளிப்பாள்?[16]

அமுதாவிற்கு என்று எதையும் செய்யத் துணியாத இந்த அம்மா, தன் தங்கைக்காகப் பத்தாயிரம் கடன் வாங்கிவரச் சொல்லியிருக்கிறாள். தன் இயலாமையைப் புரிந்து கொள்ளாத பெற்றோரை எண்ணி வருத்தமடைகிறாள்.

இளமுருகுவை வேலைக்குப் போகச் சொல்லி அமுதா தூண்டிய பிறகு எண்ணூறு ரூபாய் சம்பளத்தில் வேலைக்குச் சேர்கிறான். அதில் நானூறு ரூபாயை எடுத்துவிட்டுத்தான் அம்மாவிடம் கொடுப்பான். அதை அம்மா எதுவும் கேட்க மாட்டாள்.

அவனை அதட்டிக் கேட்க அம்மாவிற்கும் அப்பாவிற்க்கும் உள்ளூரப் பயம். "ஏமாறுரவளைக் கண்டால் தலையில் ஏறிக்கொள்ள துணிபவர்கள் ஏமாத்துறவனைக் கண்டால் தூரப்போய் விடுகிறார்கள்.[17] என்று பொருளீட்டுதலில் பெற்ற வருமானத்தைப் பகிர்தலில் ஆண் - பெண்ணிடையே வேறுபாடுகளைக் கடைபிடிக்கும் நிலையைக் கண்டு வெதும்புகிறாள்.

மேலும், ‘‘ஏன் அமுதா? வெத்திலைக் கூட்டுகூட ஒரு மூணு நாலு கட்டு வாங்கக் கூடாது. எப்படி இது போதும்... பேசாமே நானே இதெல்லாம் கவனிச்சிக்கணும்... ஒன்னை விட்டேன் பாரு . . .[18] என்று குடும்பத்திற்காகப் பாடுபடும் அமுதாவைக் குத்திக் குத்திப் புண்ணாக்கிக் கொண்டு இருப்பார் அமுதாவின் அப்பா.

சென்னையில் உள்ள மக்கள் தொகையில் பாதி மக்களை அழைத்து விருந்து கொடுக்கிறார்கள். திருமண விழாவிற்கு வந்தவர்களுக்குத் தாம்பூலப் பையில் எதை வைத்துக் கொடுப்பது என்று ஒரு சண்டையே போட்டுக் கடைசியில் தேங்காயைப் போடுவது என்று முடிவெடுக்கிறார்கள்.

‘‘ஆயிரம் செலவு! இதிலே ஆரஞ்சுப் பழம் போட்டு அப்படி என்ன செலவைக் குறைச்சிடப் போறோம்? பேசாமே தேங்காயே போடுவோம். ஊர்லே அவன் முழி பிதுங்கிப் போயிட வேண்டாம் . . .[19] என்று தம்பட்டமடிப்பதைக் கண்டு அமுதா தவிக்கிறாள்.

### 5.1.6 பணம் சம்பாதிக்கிற இயந்திரம்

அமுதா விதவை என்று தெரிந்தும் மூர்த்தி திருமணம் செய்து கொள்ள விரும்பி, அவளின் சம்மதம் பெற முயற்சிக்கிறான். அப்பொழுது, அமுதா மூர்த்தியிடம், தன் அப்பாவின் செயலைப் பற்றிக் கூறும் பொழுது, ‘‘சம்பாதிக்கிற இயந்திரமாத்தான் அவர் கண்ணுக்கு நான் தெரிகிறேனே தவிர ஒரு பெண்ணாகவே அவர் கண்ணுக்கு நான் காட்சியளிக்கவில்லை. என் உள்ளத்திலாவது துணிச்சல் இருக்கிறதா? என்னை மறந்து விடுங்கள். மன்னித்து விடுங்கள். தூய்மையான அன்புக்குக் கொடுத்து வைக்காத பாவி நான்[20] என்று கூறி மன உணர்வைப் பூட்டிப் புதைத்து விடுகிறாள்.

தாமரையின் கலியாணச் செலவுகளைப் பொறுப்பு ஏற்று அமுதா நடத்தி வைக்கிறாள். ஆனால், தாமரை கணவனோடு புகுந்த வீட்டிற்குச் செல்வதற்கு முன் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் சென்று விட்டதை எண்ணி மனமுடைந்து போகிறாள்.

“அக்கா பேரில் ஏது மரியாதை… அக்கா கொடுக்கும் பணத்திற்கும் கடனுக்கும் மட்டும் தானே மரியாதை . . .”[21] என்றும், வேலைக்குப் போவதால் மட்டுமே அந்த மரியாதை; அதுவும் இல்லை என்றால் ஓர் ஓரமாக உட்கார வைத்து விடுவார்கள் என்றும் மிகுந்த வேதனை அடைகிறாள்

குடும்பத்தில் அனைவரும் நடந்து கொள்ளும் விதத்தினைக் கண்டு விரக்தியடைந்த அமுதா, குடும்பப் பொறுப்பிலிருந்து விலகும் முடிவைத் தெரிவிக்கிறான். “இதோ பாருங்க! அப்பா! அம்மா இனிமேயும் இந்த வீட்டுப் பொறுப்பை நான் சுமக்கத் தயாரா இல்லை. அப்பா உங்ககிட்டே இனிமே நானும் நானூறு கொடுத்துடறேன்”[22] என்று கூறிய உடன், உழைத்துக் கொண்டு வந்து கொடுத்த பெண்ணைப் புண்ணாக்கியது எவ்வளவு பெரிய தவறு என்று எண்ணிக் குடும்பத்தினர் வருந்துகின்றனர்.

அமுதாவின் அப்பாவும், அம்மாவும் தன் விதவை மகளை எண்ணி வருந்தாமல், அவளை மனம் வருந்தும்படிச் செய்தது எவ்வளவு பெரிய தவறு என்று எண்ணி வருந்துகின்றனர். அப்பா, அம்மா முகத்தில் பிரகாசம் அடங்கிக் கொண்டிருந்தது. “அப்பொழுது, எங்க ஆபீஸ் கடனை நானே அடைச்சுக்கிறேன். நீங்க கவலைப்பட வேண்டாம். மத்த நகைக்கடன், புடவைக்கடன் இதையெல்லாம் நீங்களே பாத்துக்குங்க”[23] என்ற அமுதா கூறியதைக் கேட்டுத் திகைப்படைகின்றனர்.

தன் மகள் இளமுருகுவிடம் குடும்பப் பொறுப்பை ஏற்று நிர்வகிக்குமாறு பெற்றோர் வற்புறுத்துகின்றனர். அதற்கு, ‘‘இவ்ளோ நாள் அக்காவைக் க டப்படுத்தினீங்க. இப்போ நானா! குடும்பப் பொறுப்பை ஏத்துக்க முடியாதுன்னுட்டு . . . சட்டையை மாற்றுவது போல, அவன் பாட்டுக்கு வீட்டை மாற்றிவிட்டான்’’[24] என்று கூறி அம்மா வருத்தப்படுகிறாள்.

### 5.1.7 பணமே உறவு

பூவே இளம் பூவே நாவலில் சொர்ணா ராஜலிங்கத்தின் ஒரே மகள் ராஜலிங்கம் விபத்தில் சிக்கிக் கொள்கிறார். திடிரென்று அவர் விபத்தில் மாட்டிக் கொண்டதால் அவர்கள் வீட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படுகிறது. அதைச் சமாளிக்கத் தன் வீட்டிற்கு அடிக்கடி வந்து செல்லும் காந்திமதியம்மாள் வீட்டிற்குச் சென்று பணம் வாங்கி வரலாமென்று எண்ணிச் செல்கிறாள். தங்கள் குடும்பத்தினருடன் நன்கு உறவாடும் காந்திமதியம்மாளின் செயல்பாடு இச்சூழலில் வேறுபடுவதை அறிந்த சொர்ணா, காந்திமதியம்மனிடம், ‘‘சரி அத்தை நான் வர்றேன்’’[25] என்று கூறியபடி வெளியேறுகிறாள். நெருக்கடியில் நிதி தந்து உதவாத காந்திமதியம்மாளின் உறவை எண்ணி வேதனையுடன் வெளியேறுகிறாள்.

ராஜலிங்கம் குருமூர்த்தியிடம் ஒரு லட்சம் ரூபாய் தொழிலுக்குக் கொடுப்பா என்கிறார். உடனே உயிர் கொடுப்பான் தோழன் என்பது போல் உடனே தருவதாகச் சொல்லிச் சென்றவன் பணம் தரமுடியாது என்று சொல்லிவிடுகிறான். உற்சாகமாக இருந்த ராஜலிங்கம் அப்படியே நொடிந்து போய்விடுகிறார்.

‘‘பாழாய்ப் போற அந்தப் படுபாவி ஏமாத்திட்டாண்டி, ஒத்தைப் பைசா தரமாட்டானாம். கோர்ட்லே பாத்துக்கச் சொல்றான்’’[26] என்று அப்பா வருத்தத்தோடு கூறிய உடன் சொர்ணா தன்னம்பிக்கை தரும்விதமாகப் பேசுகிறாள்.

“கவலையேபடாதீங்கப்பா என்னைப் பொண்ணுக்குப் பொண்ணா, புள்ளைக்குப் புள்ளையா வளர்திருக்கீங்க. நான் வேலைக்குப் போயி தாங்கிக்கப் போறேன்”[27] என்று தன் மகள் கூறுவது கேட்டு, ராஜலிங்கம் சிரிக்கிறார். அப்பாவிடம் உடனே ஏதாவது ஒரு வேலைக்குச் சென்று குடும்பத் துயரத்தைப் போக்கப் போவதாகக் கூறிச் செல்கிறாள்.

தியாகு கனவில் உஷா என்ற பெண் தோன்றுகிறாள். தியாகு எந்த வேலையும் கிடைக்காமல் சும்மா இருக்கிறான். கனவில் சந்திக்கும் காதலிக்கு ஒரு முழம் பூ வாங்கித் தர முடியவில்லையே என்று வருந்துகிறான். தன்னை நம்பி உஷா வந்தால் ஒரு வேளைச் சோறு கூடப் போட முடியாத தன்னைக் கணவனாக ஏற்றுக் கொள்வாளா? என்று எண்ணுகிறான். அடுத்து,

மரகதம் என்ற பெண் அவன் கனவில் வருகிறாள். அவள் கணவன் சிவராமன் சம்பளத்தை முழுவதும் கொடுத்தாலும், அவள் மகிழ்ச்சி அடைவதில்லை.

“சிவராமன் பொழுதுக்கும் உழைக்கிறார். வருகிற சம்பளத்தை விள்ளாமல், விரியாமல் அப்படியே எடுத்து வந்து கொடுக்கிறான். மரகதம் என்ன மகிழ்ச்சியா அடைகிறாள்? வெடுவெடுக்கிற அவள் முகமும், சிடுசிடுப்பான சொற்களும், கணவனைக் கண்டதுமே எகத்தாளமாகக் கடுகடுகிற அவள் இயல்பும், சீ.. பொண்ணா அவள் . . .[28] என்று தியாகு உஷாவையும், மரகத்தையும் நினைத்து, தான் உழைப்பு இல்லாமல் இருப்பதை எண்ணிக் கனவில் இருந்து விழித்து உடற் பயிற்சி செய்ய மொட்டை மாடிக்குச் செல்கிறான்.

தியாகு அவன் அம்மாவை மிகவும் நேசிக்கிறான். எப்படியாவது ஒரு நல்ல வேலைக்குச் சென்று தாயைப் பேண வேண்டும் என்று எண்ணுகிறான். அதை அம்மாவிடம் கூறும்போது,

“நான் சம்பாதிச்சிட்டு வந்து நூறு நூறா உன்கிட்ட கொடுக்கணும். நீ உன் இ டப்படி செலவு பண்ணணும். நல்லதா நாலு புடவை வாங்கிக்கிட்டு வந்து தருவேன். ஒன் கைக்குத் தங்க வளையலுங்க நாலு நாலு செய்து போடுவேன். மூக்குக் கண்ணாடி மாத்தணும்னு சொன்னியே. அழகா ரோல்டு கோல்டு பிரேம்லே மாத்தித் தருவேன்[29]

இது போன்ற கனவுகளைச் சுமர்ப்பவனாக ஒரு நல்ல மகனாகத் தியாகு திகழ்கிறான். அம்மாவுக்கு, இவற்றையெல்லாம் செய்யும் பாக்கியம் கிடைக்க வேண்டும் என்று எண்ணுகிறான்.

அவன் கனவு நனவாகிறது. தியாகு இப்பொழுது சாதாரண தியாகு அல்லன். ஒவ்வொரு மகனும் தன் அம்மாவுக்குச் செல்லப் பிள்ளையாக இருப்பார்கள். அந்தத் தாய்க்குக் கடைசிக் காலத்தில் ஏதாவது செய்ய வேண்டும் என உணர்ந்த தியாகு, தன் தாய்க்குச் சேலை, வளையல் எல்லாம் வாங்கிக் கொடுகிறான்.

“வெள்ளை நிறக் காஞ்சிபுரப் பட்டுப்புடவை, ஆரஞ்சு வண்ண பார்டர், அம்மா கையில் நான்கு தங்க வளையல்கள் காதில் பு பராகம், வைரம் போல் ஜொலித்தது. எப்போதுமே ஒரு சோர்வு கப்பியிருக்குமே அந்தப் பனி மூட்டம் விலகி, இப்போது பளிச்சென்றிருந்தாள்[30] என்கிறாள்.

சில ஆண்டுகளுக்கு முன், முன்னூறு ரூபாய் வாடகை வீட்டில் இருந்த தியாகுவும், அம்மா அம்புஜமும் இப்பொழுது நல்ல நிலையில் இருக்கிறார்கள். அப்பொழுது, நீண்ட நாட்களுக்கு பிறகு உஷாவைத் தியாகு பார்க்கிறான். அவள் தான் இப்படி மாறிப் போனதற்கு காரணம் பெற்றோர் என்று கூறி அழுகிறாள். “திரும்பி வரமுடியாத தூரத்துக்கு போயிட்டேன் தியாகு என்னை மறந்துவிடுங்கள்[31] என்று அவன் காதலுக்கு, உஷா முற்றுப்புள்ளி வைக்கிறாள்.

தீக்குளிக்காத சீதைகள் என்ற நாவலில், பிறந்த வீட்டில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த தன் அம்மா தற்பொழுது வறுமையில் வாடி உழலும் அவல நிலையினை, ‘‘பாவம் . . . என்ன சுகம் கண்டாள். அப்பா காலத்திற்கும், சீட்டாடியே குடும்பச் சொத்து அழிந்து போய்விட்டது. இதே திருச்சியில் சீரோடு தாய்வீட்டில் செல்வ மகளாக வளர்ந்தவள் கஞ்சிக்கு போட உப்பு வேண்டுமே என்று கணவன் வீட்டுக்கு வந்து கவலைப்பட்டாள்[32] என்று கூறுவதன் மூலம் பிறந்த வீட்டுக்கும், புகுந்த வீட்டுக்கும் பொருளாதாரத்தில் உள்ள வேறுபாட்டினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளமையினை அறியலாம்.

கண்மணியின் தாய் இறந்து விடுகிறாள். பெற்றோரை இழந்து நிற்கும் கண்மணியை யார் பொறுப்பில் பராமரிப்பது; அண்ணனா? அக்காவா? என்று பிரச்சினை எழுகிறது. கண்மணியின் அக்கா மஞ்சுளா. ‘‘நான் என்ன இருந்தாலும் பொண்ணு. இன்னொருத்தர் வீட்டுக்குப் போயிட்ட பொண்ணு. அப்பா அம்மா வீட்டுக் க டத்துலே பங்கு எடுத்துக்கலாமே தவிர, க டத்தையே புரட்டி எடுத்துக்கிட்டு என் வீட்டுக்கு போயிட முடியாது. எங்க வருமானமும் ரொம்ப குறைச்சல் தான். இவரு அப்பா அம்மா எங்க கூட இல்லையே தவிர மாசா மாசம் முன்னூறு அனுப்பிடறோம்’’[33] என்று கூறித் தங்கை கண்மணியை அக்காவும், அண்ணனும் தனித்து விடுகிறார்கள். செய்வதறியாது திகைத்த கண்மணி பணத்திற்காக உறவாடும் உடன் பிறந்தோரின் செயல்களை எண்ணி வருந்துகிறாள்.

## 5.2 தொழில் நிலையில் பொருள் சார்ந்த நெறி

உடல் உழைப்பைத் தந்து சம்பளம் பெற்று ஒரு தொழிலைச் செய்பவர் அல்லது தொழிற்சாலையில் இயந்திரங்களை இயக்கிப் பொருள் உற்பத்தியில் நேரடியாக ஈடுபடுபவரைத் தொழிலாளர் என்பர்.[34]

தொழில் என்பது வருமானம் ஈட்டுவதற்காகச் செய்யும் செயலைக் குறிப்பது. அது ‘வேலை’, ‘அலுவல்’, ‘பணி’ என வெவ்வேறு சொற்களால் குறிப்பிடப்படுகிறது. வேலை என்பது பொருள் உற்பத்தி செய்வதுடன் பணிபுரிவதற்கும் களமாக அமைகிறது.

மார்க்ஸ் என்பவர், ‘வேலை’ என்பதை ஒரு செயல்பாடு என்றும் அது செய்பவனுடைய திறமையை வெளிக்காட்டும் என்றும் கூறுகிறார். அத்துடன் அது சமூக நடவடிக்கை என்றும் குறிப்பிடுகிறார். அலெக்ஸாண்டர் என்பவர் வேலையை இரண்டாகப் பிரிக்கிறார்.

1. பயன்பாட்டிற்கான உற்பத்தி (Production for use)

2. பரிமாறிக் கொள்வதற்கான உற்பத்தி (Production for exchange)

பெண்ணியவாதிகள் பயன்பாட்டிற்கான உற்பத்தியை மறுஉற்பத்தி மற்றும் பராமரிப்பு என்று விளக்குகின்றனர். அதாவது, வீட்டில் செய்யும் வேலையும், வெளிவேலைக்குச் செல்பவர்களைப் பராமரிப்பதும், குழந்தைகளைப் பராமரிப்பதும், இதில் அடங்கும். இதற்கு ஊதியம் கிடையாது. இது உண்மையில் ‘வேலை’ என்று மதிப்பிடப்படுவதில்லை. ஆகவே இதற்கு கூலியும் இல்லை.

இரண்டாவதாகக் கூறப்பட்ட பரிமாறிக் கொள்வதற்கான உற்பத்தி, வீட்டிற்கு வெளியே செய்யப்படுவது. இஃது ஊழியத்திற்கான ஊதியத்தைப் பெற்றுத்தரும். இவ்வேலை ஆண்களுக்கானது, வேலைத் தளங்களிலுள்ள பலின வேறுபாடு மரபார்ந்த ஒன்று என்பதால் தொடக்கத்தில் இது புறக்கணிக்கப்பட்டது. சமூகவியல் அறிஞர்களும், பெண்ணியவாதிகளும் இதைப்பற்றிய சிந்தனைகளை எழுப்பி விழிப்புணர்வைத் தர முயன்றனர். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் நிலவுகின்ற

தொழிற்பாகுபாடே பால் அடிப்படையில் அமைந்த தொழில் பாகுபாடு (Sexual Division of Labour)[35] என வரையறுக்கின்றனர்.

### 5.2.1 தொழில் நிலையில் ஆண் – பெண் வேறுபாடு

குழந்தையை ஈன்றெடுத்தல், பராமரித்தல், வளர்த்தல், வீட்டுத் தொடர்பான பணிகள் பெண்ணுக்கு உரியவை என்றும் வீட்டுக்கு வெளியே சென்று செய்யும் வேலைகள், வருவாயை ஈட்டுகின்ற வேறு தொழில்கள் போன்றவை ஆணுக்குரியவை என்றும் சமுதாயம் வேறுபடுத்திக் காண்கிறது.

இத்தகைய வேறுபாடு ஆணுக்கம், பெண்ணுக்குமிடையே சமத்துவம் அற்ற நிலையினை உருவாக்கித் தருகிறது. பொருள் உற்பத்தியிலும் மனித இன உற்பத்தியிலும், பெண்களின் பங்கானது இயற்கையின் ஒரு விளைவாகக் கருதப்படுகிறது.

பெண்களின் உழைப்பு, உடலியற்கையின் தவிர்க்க முடியாத விளைவு (Biological Determination) என்ற கருத்தாக்கம் உயிரியல் விதி வாதத்தினின்று தோற்றம் பெற்றதாகும். இத்தகைய உயிரியல் விதி வாதம் 19-ஆம் 20-ஆம் நூற்றாண்டுகளில் அறிஞர்கள், உளவியலாளர்கள், தத்துவவாதிகள் ஆகியோரிடத்துப் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது. பெண்ணினத்தின் உழைப்பு, உரிய மதிப்புப் பெறாத காரணத்தினால், அதுவே பெண்ணின் மீதான ஆணின் ஆதிக்கத்திற்கும் சுரண்டலுக்கும் காரணங்களாக அமைந்து விடுகின்றது. இதையே மௌன் சித்திரலேகா தன் கட்டுரையில்,

உற்பத்தித் திறன் மிக்க உழைப்பு என்பது ஆணுக்குரியது. உபரி உற்பத்தியை அல்லது மிகையை உருவாகக்கூடிய உழைப்பையே உற்பத்தித் திறனுடைய உழைப்பு எனக் கருதப்படுகிறது. ஏனைய உழைப்புகள் உழைப்பாகக் கருதப்படுவதில்லை.

பெண்ணினது வீடு சார்ந்த தொழில்களும், உழைப்பும், கடமைகள், அல்லது நடவடிக்கைகள் என்றே கருதப்படுகின்றன. உழைப்பு பற்றிய கருத்தாக்கம் ஆண்களும்,பெண்களும் தமக்கிடையே சில தொழில்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர் என்று கூறுவது மாத்திரமல்லாது இப்பாகுபாட்டுக்கு அடிப்படையில் காணப்படும் ஆண்-பெண் சமத்துவமற்ற உறவு நிலை ஆகும். பெண்ணின் மீதான ஆணின் ஆதிக்கம், சுரண்டல் ஆகியவற்றை மறைத்தும் விடுகிறது. ஆணினது உழைப்பு அல்லது தொழில் உணர்வுப் பூர்வமான பகுத்தறிவு சார்ந்த திட்டமிட்ட உற்பத்தித் தன்மை வாய்ந்தது. இதுவே மனித உழைப்பாகும். பெண்ணினது உழைப்பு அவளது உடலியற்கையுடன் தொடர்புடையது. ஆகவே, அது இயற்கையான நடவடிக்கை என்பதும், அதில் எத்தகைய உற்பத்தித் தன்மையும் இல்லை என்பதும் இக்கருத்தாக்கத்தின் மூலம் பெறப்படுவனவாகும்[36]

தொழில் அடிப்படையிலான பாலின வேறுபாடு, சகல நாடு, இனம் கலாச்சாரம் ஆகியவற்றிலும் ஊடுருவி உள்ளது. இது பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட பெண்ணிய இயக்கங்கள், தொழில் உழைப்பின் அடிப்படையில் பெண்கள் விடுதலை பெற வேண்டும் உயர்வு பெற வேண்டும் எனப் போராடி வருகின்றன.

குடும்பத்தின் பிரதான உழைப்பாளி ஆண், பெண் மனைவி என்ற பாத்திரம் மாத்திரமே (Male Bread Winnder and Female House-wife Moder) என்ற கருத்து இன்று பெரும்பாலான சமூக, பொருளாதார ஆய்வுகளுக்கும், அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பின்னணியாக உள்ளது[37]

இதன் அடிப்படையில் தொழில், தளங்களில் ஆண்களுக்குச் சமமான வேலைவாய்ப்பும், உரிமையும் பெண்களுக்கு அளிக்கப் பெறுவதில்லை. ஆண்களுக்குக் கடினமான வேலைகளும், பெண்களுக்கு எளிதான பணிகளும்

தெரிவு செய்யப்படுகின்றன. அது போன்றே உயர் பதவிகளுக்கு, செயல் திறன்மிக்க பணிகளுக்கு ஆண்களும், இரண்டாம் நிலைக்கான பணிகளுக்குப் பெண்களும் தெரிவு செய்யப்படுகின்றனர். சான்றாக விமானம் ஓட்டுநர், மருத்துவர், செயலாளர், முதல்வர், மேலாளர் போன்ற பணிகளில் ஆண்களும், விமானப் பணிப்பெண்கள், செவிலியர் அந்தரங்க காரியதரிசி, உதவியாளர் ஆசிரியை சுருக்கெழுத்தர் போன்ற பணிகளில் பெண்களும் பணியாற்றுகின்றனர்.

தொழில் அடிப்படையில் வகிக்கும் பதவியின் பெயரோடு ஆண்பால், சொற்களை மட்டும் இணைத்துப் பார்க்கும் போக்கு நடைமுறையில் இருந்து வருகிறது. ‘Chairman’, ‘Fireman’, ‘Foreman’, ‘Mailman’, ‘Policeman’, ‘Postman’, ‘Watchman’ போன்றவற்றை உதாரணமாகக் கொள்ளலாம்[38] என்கிறார். ஜெ.வில்லியம் அடித்தட்டு மக்களிடையேயும் தொழில் பாகுபாடு உண்டு என்பதைக் கீழ்வரும் பகுதிவழி எடுத்துரைக்கிறார்.

தானியங்கள் அரைத்தல், உணவு சமைத்தல், தண்ணீர் சுமந்து வருதல், ஆடை நெய்தல், பாய் பின்னுதல், கூடைகள் முடைதல், கொட்டைகள், பழங்கள், மூலிகைகள் கிழங்குகள் போன்றவற்றைச் சேகரித்தல் மண்பாண்டத் தொழிலில் ஈடுபடல் போன்றவை பெண்களுக்கு உரிய தொழில்கள் என்றும், கால்நடை மேய்த்தல், வேட்டையடுதல், மீன் பிடித்தல், சுரங்கம் அமைத்தல், கல் உடைத்தல், உலோகப் பணிகள், இசைக் கருவிகள் செய்தல், மரவேலைகள், கட்டிட வேலைகள் ஆகியன ஆண்களுக்குரிய தொழில்கள் என்றும் கருதப்படுகின்றன என்கின்றார்.[39]

வேலை பார்க்கும் மகளிர், வேலை பார்க்கும் ஆண்களைப் போல பணிபுரிவதற்குரிய தகுதியும் உறுதியும் வாய்ந்தவர்களாக இருக்கின்றனர் என்றாலும், உலகில் பெரும்பான்மையான நாடுகளில் பெண்களுக்கு வேலைத்தளங்களில்

பணிபுரியும் மணி நேரங்களுக்குக் கட்டுப்பாடுகள் வைத்துள்ளனர். இன்றைய காலக்கட்டத்தில் விழிப்புணர்வு பெற்ற பெண்கள், வேலைத்தளத்தில் தாங்கள் ஆண்களுக்கு இணையாக மதிக்கப் பெறவில்லை என்பதை உணர்வதுடன், தாங்கள் பெண்கள் என்பதாலேயே பல விதக் கட்டுப்பாடுகளுக்கு ஆளாக வேண்டிய சூழல் இருப்பதையும் உணர்ந்து வருந்துகின்றனர். வேலைத்தளங்களில் பெண்களுக்குப் பெண்கள் என்பதாலேயே அதிகப் பாதுகாப்புத் தருவதுடன் இரவுப் பணிகளில் பெண்களை ஈடுபடுத்தாமல் விலக்குகின்றனர்.

பெண் என்பவள் மறு உற்பத்தி செய்யக்கூடிய உயிர் இனம், (Reproduction Human being) அவள் குழந்தை வளர்ப்பிற்கு உரியவள் ஆகவே, அவள் இரவு நேர வேலைக்குத் தகுதி இல்லாதவள் ஆகிறாள். பணிபுரியும் பெண்களுக்கு இல்லப் பணிகளுடன் பிறபணியும் சுமையாகிறது. அத்துடன் இரவு நேர வேலையும் சேர்ந்தால் பணிப்பளுவாலும், உடல் நலக் குறைவாலும் வருந்தக்கூடும். இந்தியா போன்ற நாடுகளில் குழந்தைப் பாதுகாப்பு இல்லங்கள் இருபத்தி நான்கு மணி நேரமும் இயங்கக்கூடியவை அல்ல. எனவே அலுவல் பார்க்கும் பெண் இரவு நேரத்தில், குழந்தையைப் பராமரிக்க வேண்டிய அவசியத்திற்கு உள்ளாகிறாள். இரவு நேரப்பணிகளில் வேலை புரியும் பெண்கள் சமூகம் மற்றும் குடும்ப வாழ்வில் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. ஆண்களுக்கும் (குடும்பத் தலைவர்) இவ்விரவு நேரப் பணிகளால் பாதிப்புகள் ஏற்படுகின்றன. பெண்களுக்கு இரவு நேரப் பணி மறுப்பதற்கான காரணங்களைப் பெண்ணியவாதிகள் மறு சிந்தனைக்குட்படுத்துகின்றனர். மகப்பேறு என்பது பெண்களுடைய வாழ்க்கையில் மிகச் சிறிய காலக்கட்டம் தான். ஆனால் அரசாங்கமும், தொழிற்சங்கங்களும் பெண்கள் எல்லாக் காலத்திலேலேயும் கர்ப்பம் அடைந்துள்ளதாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. இரவு நேரப் பணியைத் தடுப்பதன் மூலம் பெண்களுக்குப் பாதுகாப்பு

அளிப்பதாகக் கூறுகின்றனர். அதனால், அவ்வகையான பணிகளைப் பெறுவது தடையாய் இருக்கின்றது. அத்துடன் அதிக வருமானம், பதவி உயர்வு போன்றவற்றிற்கும் இப்பணிப் பாதுகாப்பு, தடையாக உள்ளது. இவ்வகையான பாகுபாடு பாலின அடிப்படையில் சமத்துவம் கேட்கும் கொள்கைக்கு எதிராக அமைந்து விடுகிறது. ஆகவே சமூகச் சூழல் மாறுபட வேண்டும். குறிப்பாக ஆண்கள் பெண்களைப் பார்க்கும் பார்வையில் வேறுபாட்டினைக் கொண்டு வரவேண்டும். பழைய சட்டதிட்டங்களை இன்றைய நிலைமைக்கேற்ப மாற்ற வேண்டும். பெண்கள் வேலைத் தளத்தில் இருக்கும் பொழுது அவர்களை வேலைக்குரியவர்களாகவே நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்களைப் பெண்ணாக நினைத்துப் பார்க்கக்கூடாது. இரவு நேரப் பணியைப் பால் பேதத்தின் அடிப்படையில் சம்பந்தப்படுத்திப் பார்க்கக்கூடாது. எந்தப் பெண்ணாவது இரவு நேரத்தில் வேலை பார்க்க இயலாது எனக் கூறுவாளேயானால் வேலை பெறுவதற்குரிய தகுதியை அவள் இழக்கிறாள். அந்த அளவிற்குச் சமுதாயக் கண்ணோட்டம் மாற்றம் அடைய வேண்டும். இரவு நேரப் பணி பெண்களுக்கு கூடாது என்று கூறுவது ஆண் பெண் பேதத்தை வலியுறுத்துவதாக அமைகிறது[40] என்று எடுத்துரைக்கின்றனர்.

நம் சமுதாய அமைப்பில், பெண்ணின் உழைப்பு மதிப்பற்றதாகவும், ஆணுக்கு இணையாகப் பணிபுரிய இடம் அளிக்காத நிலையும் வேரூன்றியுள்ளன. இந்நிலையில் இருந்து பெண்கள் மீட்சியடையவும், முன்னேற்றமும் சமத்துவமும் பெறவேண்டியும் பல மாற்றுத் திட்டங்களை மௌ.சந்திரலேகா முன் வைக்கிறார்.

பெண்ணினது உழைப்பு உற்பத்தி பற்றிய ஆக்கப்பூர்வமான கருத்து மாற்றத்தைப் பரப்புதல் வேண்டும். அதாவது உபரிப் பெறுமதியை நல்கும் ஆணினது வீட்டுக்கு வெளியிலான உழைப்பே சமூக ரீதியான உற்பத்தித்திறன் வாய்ந்த உழைப்பு

என்ற கருத்திற்குப் பதிலாக, பெண்களின் உழைப்புப் பற்றிய மாற்றுக் கருத்து முன் வைக்கப்பட வேண்டும். அதாவது, பயன் பெறுமதி (Use values) வாய்ந்த பெண்ணினது வீட்டு உழைப்பும், உற்பத்தித் திறன் வாய்ந்தது என்பது உணரப்பட வேண்டும். அத்துடன் உழைப்புத் தவிர பெண் ஈடுபடும் ஏனைய உழைப்புத் துறைகள் இரண்டாம் பட்சமானவையாகக் கருதப்படாது. அவற்றில் பயன் அங்கீகாரம் பெறுதல் வேண்டும். இதனை, அரசாங்கமம், சட்ட நிறுவனங்களும் அபிவிருத்தித் திட்டமிடுவோரும் தமது கொள்கைகளில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும். இதன் மூலம் சமூக நலத் திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் என்பவை பெண்ணினுடைய உற்பத்தித் திறன், உழைப்பு, பொருளாதார முக்கியத்துவம் என்பவற்றையும் கருத்தில் கொண்டு வகுக்கப்படும் சாத்தியப்பாடு ஏற்படலாம்[41] எனக் கூறுவதன் மூலம சமூகத்தின் மரபு சார்ந்த கண்ணோட்டம் மறையவும் தொழில் தளத்தில் பெண்ணுரிமையை நிலை நிறுத்தவும் முடியும் என்பதை அறியலாம்.

தொழில் நிலையில் ஆண் பெண் பணிப் பாகுபாடு, திறன் மதிப்பீடு, பாலினவடிப்படையிலான சுரண்டல், பொருளீட்டும் நெறி, சமத்துவப் பணிக்கான குரல்கள் முதலானவை அரசு மணிமேகலையின் படைப்புக்களில் எங்ஙனம் புனைவு பெற்றுள்ளனவென்பதனை இனிக் காணலாம்.

### 5.2.2 நாவல்களில் தொழில் உறவு சார்ந்த புனைவுகள்

என்றும் தொடரும் பயணம் நாவலில் சரோஜினி என்ற பெண் கல்லூரிப் பேராசிரியையாகப் பணியாற்றி வருகிறாள். அவளுக்கு மூச்சிரைப்பு நோய் உள்ளதால், அடிக்கடி படபடப்பு வரும். வகுப்பில் பாடம் எடுக்கும் நேரத்தில் வரக்கூடாது என்று வேண்டிக் கொள்வாள். சரோஜினியுடன் லீலா, பானுமதி, தமிழரசி,

மாதவி, மாலினி என்ற மற்ற பேராசிரியர்களும் உடன் பணியாற்றுகின்றனர். துறையில் ஒன்றாக அமர்ந்து நன்றாகப் பேசுவார்கள். பானுமதி நன்றாக நகைச்சுவையாகப் பேசுவாள். எல்லோரும் எப்பொழுதும் கலகலப்பாக இருப்பார்கள். குடும்பக் கதைகளைப் பேசுவர். ஒருவரையொருவர், ஒல்லியாக இருப்பதை, குண்டாக இருப்பதைச் சுட்டிக் காட்டிக் கிண்டலடித்துக் கொள்வார்கள். இவ்வாறு இருக்கும்போது ஒருநாள், சரோஜினிக்கு மூச்சிரைப்பு நோய் வந்து விடுகிறது. இதைக் கவனித்த லீலா பதறிப்போகிறாள். உடனே,

“என்ன சரோ? என்ன இவளே? திரும்ப ஒரு மாதிரி இருக்கா? என்ன சரோ அடிக்கடி வர ஆரம்பிச்சிருக்கு . . .”[42] என்று லீலா நிஜமான கவலையுடன் கேட்டடது சற்று நிம்மதியாக இருந்தது என்று உணருகிறாள். இன்று சமூகத்தில் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதை ஒரு சிலரிடத்தில் காணமுடிகிறது. அப்படி இல்லாமல், லீலா கேட்டது சரோஜினிக்கு ஆறுதலாக இருக்கிறது. இது போன்ற அன்பான, கரிசனமான கருணைப் பகிர்வுதான் சமூகத்திற்கு நன்று என்று உணர முடிகிறது. மேலும் லீலா அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, மருத்துவ உதவியும் செய்கிறாள். பணியாற்றும் பணித்தளத்தில் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து சமூகத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ்வதாக ஆசிரியர் புனைந்துள்ளார்.

படிக்கும் போதும், பணியாற்றும் போதும் சரோஜினிக்கு லீலா மிகவும் நெருங்கிய தோழி. லீலாவின் கணவர் மருத்துவர் வசந்த். லீலா சரோஜினியை மருத்துவப் பரிசோதனைக்காகத் தன் கணவர் பணியாற்றும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறாள். சரோஜினியைப் பரிசோதனை செய்த பிறகு, அவள் உடலில் சிறிது சிறிதாக விஷம் ஏற்றப்பட்டு வருவதைக் கண்டறிந்து சொல்கிறார். அந்த நோயிலிருந்து விடுபட மருத்துவ ஆலோசனைகளையும் கொடுக்கிறார்.

சரோஜினியின் கணவன் முத்துவால் கொடுமைப்படுத்துப்படுவதை அறிந்த மருத்துவர் வசந்த், காவலரின் உதவியுடன் சரோஜினியைக் கொடுமையிலிருந்து மீட்பதுடன், அவள் உயிரையும் காப்பாற்றுகிறார்.

ராம் அண்டு ராம் கம்பெனியின் பொது மேலாளர், திரு. மரகத வடிவேலுவுக்கு, அமுதாவின் திறமை, சுறுசுறுப்பு மிகவும் பிடித்து விடுகிறது.

“அமுதா ஒரு தனிப்பிறவியாகவே தெரிந்தாள். அவள் ஒத்த பலர் அதே அலுவலத்தில் என்ன ஒரு இருபது பேர் இருப்பார்களா? அத்தனைப் பேரிலும் அவள் என்னவோ வித்தியாசமானவள்தான்[43] என்கிறார்.

அமுதா பணியாற்றும் வேலை நேரத்திற்கும் அதிகமாக வேலை செய்யத் தயாராக இருப்பாள். பெண் என்று காரணம் காட்டி எந்தச் சலுகையும் வாங்க மாட்டாள். நிர்வாக இயக்குநரை அதிகாலையில் வரவேற்கப் பம்பாய் செல்ல வேண்டிய நிலையில் தயங்காது புறப்பட்டுச் செல்லும் துணிவு மிக்கவளாகத் திகழ்கின்றாள்.

### 5.2.2.1 பாலியல் தொல்லை

தீக்குளிக்காத சீதைகள் எனும் நாவலில், பொது மேலாளர் மாதவன், அலுவலகத்தில் பணிபுரியும் கண்மணியைக் கட்டியணைத்து வல்லுறவில் ஈடுபட முனைகிறான். முரட்டுத்தனமான அவன் செயலைக் கண்டிக்கின்ற பொழுது, “நீ எல்லாம் பெரிய கண்ணகியாடி, எவ்வளவு பேரைப் பார்த்திருப்பே… ரொம்ப பிகு பண்ணாம கிட்டே வந்தடு[44] என்று மிரட்டுகிறான். அவன் மிரட்டலுக்குப் பயப்படாமல், துணிந்து அவன் ஆணவத்தை அடக்கும் செயலில் கண்மணி ஈடுபடுகிறாள்.

அவனைத் துணிச்சலுடன் எதிர்த்துச் செருப்பால் அடித்து அவன் ஆணவத்தை அடக்குகிறாள். அடுத்த நாளே வேலையை ராஜினாமா செய்துவிட்டு, சென்னைக்குப் புதிய வேலை தேடிச் செல்கிறாள்.

கண்மணி சென்னை வந்து மனநிலை பாதிக்கப்பட்டு இருக்கும் மதுமதியையும், பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ள மதுமதியின் தந்தை செண்பகராஜ பூபதியையும் பராமரிக்கும் பொறுப்பை ஏற்று இன்முகத்தோடு பணிவிடை செய்து வருகிறாள். அத்துடன் அவர்களின் அலுவலகப் பொறுப்பையும் ஏற்றுத் திறம்பட நிர்வகிக்கிறாள். இந்தச் சூழலில், சகோதரி மஞ்சுளா கணவனுக்கு ஒரு வேலை போட்டுக் கொடு. அல்லது எழுபதாயிரம் கடன் கொடுத்து உதவி செய் என்று தங்கை கண்மணியிடம் கேட்டவுடன், கண்மணி, தன்னிடம் ஏழாயிரம்கூட இல்லை என்று சொல்லி உதவ மறுத்து விடுகிறாள்.

கடன் கொடுக்கவில்லை என்ற உடன், செண்பகராஜ பூபதியோடு சேர்த்து வைத்துத் தவறாகப் பேசுகிறாள். இதைக் கேட்ட கண்மணி மனமுடைந்து போய் அழுகிறாள். செண்பகராஜபூபதி ஆறுதல் கூறித் தேற்றுகிறார். தன் சொத்தை இரண்டாகப் பிரித்து மதுமதிக்கும், கண்மணிக்கும் கொடுக்கிறார்.

தன் கோடிக்கணக்கான சொத்துக்களை இரண்டாகப் பகிர்ந்து, பெற்ற மகள் மதுமதிக்கு ஒரு பங்கு என்றும், வளர்ப்பு மகள் கண்மணிக்கு மறுபங்கு என்றும் தவறாகப் பேசுபவர்களின் வாயை அடைக்கும் விதமாகச் செண்பகராஜபூபதி, கண்மணியைத் தன் மகளாகவே எண்ணிச் சொத்தைப் பிரித்து ஒரு பங்கு கொடுத்து விடுகிறார்.[45]

மேலும், செண்பகராஜ பூபதி, கண்மணிக்குத் தொழில் நிறுவனத்தின் நுட்பங்கையெல்லாம் சொல்லிக் கொடுகிறார். ‘‘நெளிவுகள், சுளிவுகள் இப்போது

ஓரளவிற்கு அத்துப்படி ஆகியிருந்தன. தன் அறிவுத்திறன், கல்வியால் பெற்ற இதர தகுதிகள், சமயோசிதம், புத்திசாலித்தனம், இத்தனையையும் அவள் ஒருமுகப்படுத்த வேண்டியிருந்தது.[46] ஒவ்வொரு தொழில் நுட்பத்தையும் திறம்படக் கற்று நிர்வாகத் திறமையுள்ள ஒரு பெண்ணாக மதுமதிக்குப் பதில் அவள் இடத்தில் இருந்து கண்மணி பணியாற்றுகிறாள்.

### 5.2.2.2 இரட்டைச் சிலுவை

தன் வாழ்க்கையைப் போல, வேலை பார்க்கும் பல பெண்களின் உடலும் உள்ளமும் இயந்திரமாகிப் போனதாக நிர்மலா எண்ணுகிறாள். அப்பொழுது, இரட்டைச் சிலுவைகள் ஏந்தி நடக்கிறோம் என்ற ஒரு கவிஞரின் கூரிய சிந்தனை நினைவுக்கு வருகிறது. அந்தளவிற்குப் பெண்கள் ஊதியமில்லாமல் வீட்டிலேயும், ஊதியத்தோடு நாட்டிலேயும் அல்லல்படுவதாகப் புனைந்துள்ளார்.

### 5.2.2.3 பெண் தலைமையேற்றல்

காந்திஜி சேவா சங்கம் ஓர் அற்புதமான அமைப்பு, அதில் வெங்கடேஷன் சிறப்பு உரையாற்றுகிறார். அப்பொழுது சங்கத்தின் கொள்கைகளையும், லட்சியங்களையும் கூறும் போது, நூறு பிள்ளைகள் படிக்கிற தொழிற் கல்விக் கூடம் உருவாக வேண்டும். வாழ வழியில்லாதவர்களுக்குத் தையல் பயிற்சி, தொழில் பயிற்சி இந்தச் சங்கத்தின் மூலம் தரப்பட வேண்டும். இத்தனைக் கனவுகளும் என் மருமகளாகிய மகள் உறுதுணையால் தான் செழித்து வளருகின்றன என்கிறார். அப்பொழுது, “என் சங்கத்தை உன் பொறுப்பிலே விட்டுவிட்டுப் போறேம்மா . . .”[48] என்று கூறிவிட்டு இறந்து விடுகிறார். மற்ற பெண்களைப் போல் அல்லாமல் லட்சியப் பொண்ணா அவர் கனவுகளை நனவாக்கும் விதத்தில் உமா செயல்படுவதாகப் புனைந்துள்ளார்.

### 5.2.2.4 நிர்வாகத் திறன்

ராஜலிங்கம் விபத்தில் அடிபட்டவுடன், சொந்தம் கொண்டாடிய காந்திமதியம்மாள், தொழில் முறை நண்பர்கள் ஆகியோர் உதவி செய்ய முன்வர மறுக்கின்றனர். அதனால் மனம் உடைந்த சொர்ணா, தன் அப்பா அம்மாவை வேலை செய்து காப்பாற்றுவேன் என்று உறுதி கூறி, வேலை தேட ஆரம்பிக்கிறாள். ஆனால், எந்த வேலையும் கிடைக்காமல் மன வேதனைப்படுகிறாள். அந்தச் சூழலில், தன் தந்தையின் கம்பெனியிலேயே வேலைக்குச் சேர்கிறாள். அப்பொழுது, ‘‘ஷேர்னா என்ன, ஷேர் நிலவரம் எப்படி, நம்ம கம்பெனியின் வொர்க்கிங் கேபிடெல் எவ்வளவு? டர்ன் ஓவர் எவ்வளவு, எந்த எந்த டிபார்ட்மெண்ட்டுக்கு என்னென்ன பொறுப்பு; போனஸ் கணக்கு என்ன? எல்லாவற்றையும் அப்பா சொல்ல அவர் மகள் சொர்ணா குறிப்பெடுத்துக் கொள்கிறாள். அதன்படி நிர்வாகம் பண்ணும் போது, ஏன் சார் கொச்சி பார்ட்டி என்ன சொல்றாங்க? ஒரு வாரம் முன்னதாகவே பணம் அனுப்பிட்டாங்களாம். அப்படின்னா வந்திருக்கணுமே! விசாரிங்க நம்ம ஆபீஸ்லே. சரிங்க மேடம் என்றாள். தலைமை அலுவலக உதவியாளர் மெட்ராஸ் ஹார்பர்க்குப் பணம் கட்டணுமே. இன்னும் ரெண்டு நாள்தான் இருக்கு. ஏற்பாடு பண்ணிட்டீங்களா? நாளை கட்டலாம்ன்னு . . . என்று இழுத்த உதவியாளை கடைசி நாள் வரைக்கும் ஏன் சார் காத்திருக்கணும், இன்னிக்கே கூட்டிடலாமே’’[49] என்று திறமையாக நிர்வாகம் நடத்துவதாகப் பதிவு செய்துள்ளார்.

ராம் அண்ராம் கம்பெனியில் ஜி.எம். மரகத வடிவேலுவின் காரியதரிசியாக அமுதாவை நியமித்திருந்தார். அமுதா பல சூழ்நிலைகளில் அதற்கு ஏற்ற பெண்ணாக நடந்து கொள்கிறாள். தான் பெண் என்ற காரணம் காட்டி எந்தச் சலுகையும் பெறாமல், கூடுதல் நேரம் பணி செய்வாள். கல்கத்தாவுக்கு கான்பரன்ஸ்க்கு போவாள்?

அதிகாலையில் மனேஜிங் டைரக்டரை வரவேற்க விமானத்தில் பம்பாய் செல்ல வேண்டுமா? எதுவாக இருந்தாலும் அவள் தயார் நிலையில் இருந்தாள்''[49] என்று புனைவு பெற்றுள்ளமையினைக் காண முடிகிறது.

### 5.2.2.5 பால் வியாபாரம்

பொன்னாத்தா பால் விற்றுச் சேர்த்த பணத்தை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்ட பானைக்குள் துணிப் பைக்குள் சுருட்டி ஒளித்து வைத்திருந்த பணத்தை எடுத்து எண்ணத் தொடங்குகிறாள். ‘‘அதில் ஐந்தும், பத்துமாக அரையும், ஒன்றுமாக நாணயங்கள் இவையெல்லாம் மாட்டுக் கொட்டகையைப் பெருக்கி, வைக்கோல் வாங்கி வந்து போட்டு, புண்ணாக்கு ஊற வைத்து பருத்திக் கொட்டை அரைத்து, புல்லை அறுத்துத் தலை மீது சுமந்து வந்து போட்டு . . . சாணியை எடுத்துச் சுத்தப்படுத்தி, வரட்டி தட்டி, காய வைக்க வேண்டும், விடியலில் ஆரம்பிக்கும் வேலைகள், இரவு வரை நீடிக்கும்''[50] ஆனால் இது எது பற்றியும் மோகனா கவலைப்படாமல் ஊதாரியாகச் சுற்றித் திரிவாள் என்று தாய் கவலையுறுகிறாள்.

### 5.2.2.6 அடிமைத் தொழில்

பண்ணையில் நெடு நாட்களாகக் காவல் செய்பவன் முத்தையன். அவனுக்குத் திடீரென்று குளிர்க் காய்ச்சல் வந்து உடல் நலக் குறைவு ஏற்படுகிறது. உடனே சின்னப் பண்ணையார் கதிர்வேல், முத்தையனைத் தோட்டத்து வீட்டுக்குப் போய்ப் படுத்துக் கொள்ளச் சொல்லி அனுப்பி விடுகிறான். அப்பனுக்குச் சோறு கொடுக்க வந்த பொன்னாத்தாளைக் காதலிப்பதாகவும் திருமணம் செய்து கொள்வதாகவும் ஆசை வார்த்தைகள் கூறி இன்ப உறவில் திளைத்தபின், அவளைத் துறந்து, வேறு பெண்ணை மணம் முடிக்கப் போவதை அறிந்து நியாயம் கேட்கப் போன

முத்தையனை அடித்துக் கொன்று விடுகிறார்கள். இதனால் பொன்னியின் வாழ்க்கை பாழடிக்கப்பட்டு விட்டது என்கிறார்.[51]

### 5.3 கல்வி கற்றலில் பொருள் சார்ந்த நெறி

பூவிழியும் மங்கையும் தனக்குத் தேவையானதை வாங்கிக் கொண்டு இருக்கும்போது, அந்த நேரத்தில் தன் கல்லூரியில் படிக்கும் கண்ணம்மாவின் கையை ஓர் ஆடவன் பிடித்துத் துன்புறுத்துகிறான். இந்தக் கொடூரக் காட்சியைக் கண்ட பூவிழி பொங்கியெழுகிறாள். இதைப் பார்த்த இமயவரம்பனுக்கு பூவிழி மேல் காதல் ஏற்படுகிறது. முதலில் காதலை ஏற்க மறுத்தாலும், பின்பு ஏற்றுக்கொள்கிறாள். ஆனால் பெற்றோர் ஏற்க மறுக்கின்றனர்.

இமயவரம்பன் முதலில் பத்திரிகையில் வேலை பார்த்து வருவதாகக் கூறுகிறான். அந்த வருமானத்தில் குடும்பம் நடத்துவதற்குப் போதாது என்று பூவிழி அப்பா கூறிவிடுகிறார். "நீ ஏதோ பத்திரிகையிலே வேலை செய்யறியா… அப்படி என்ன பிரமாதமான சம்பளம் கிடைச்சிடப் போகுது? எப்படி வாழுவீங்க. ஏறிகிட்டு வார விலைவாசியாலே எப்படி வாழ முடியும் என்று…[52] என்று கேட்கிறார்.

அதற்கு இமயவரம்பன், எங்களுக்குப் பூங்குன்றம் பக்கத்திலே இருபது ஏக்கர் பண்ணை இருக்கு. எங்க ஊர்லேயே ஆறு வீடு இருக்குது. எங்கப்பா பரம்பரை ஜமீன்தார். தென்னந்தோப்பு, மாந்தோப்பு, நஞ்சை, புஞ்சைன்னு எக்கச்சக்கமான சொத்து. அவரோட ஆணவம் பிடிக்காம நான் தன்னிச்சையாக பத்திரிக்கையிலே வேலை செய்யறேன். ஐ.ஏ.எஸ். எழுதி பாஸ் ஆகிட்டேன். பயிற்சி முடிந்து வந்ததும் டெப்டி கலெக்டரா எனக்குப் போஸ்டிங் கிடைச்சிடும்[53] என்று கூறுகிறான்.

இதைக் கேட்ட பிறகு பூவிழியின் தந்தை உடனே திருமணத்திற்குச் சம்மதம் தெரிவிக்கிறார். இங்கு பூவிழி இமயவரம்பன் திருமணத்தைப் பொருளாதாரமே நிர்ணயிப்பதாகப் பதிவு செய்துள்ளார்.

### 5.3.1 கல்விச் சூழலில் பெண்களின் மனநிலை

சொர்ணா கல்லூரியில் படிக்கும் போது விளையாட்டுப் பிள்ளையாகக் குறும்பு செய்து கொண்டு இருக்கிறாள். தூங்கிக் கொண்டிருந்த பியூன் ஆறுமுகத்திடம், முதல்வர் மணி அடிக்கச் சொன்னார் என்று கூறியவுடன், தூக்கம் கலைந்த நிலையில் தன்னை அறியாமல் மணியை அடித்துவிட, முதல்வர் அவனைத் திட்டுகிறார். இதனால் பழிவாங்கும் நோக்கோடு ஆறுமுகம் ஒருநாள் மூச்சிரைக்க ஓடிவருகிறான்.

“சொர்ணம்மா… சொர்ணம்மா..”

என்ன ஆறுமுகம்

அய்யோ நான் என்னன்னு சொல்வேன்…[54] என்று பதறுகிறான்.

அப்பா, அம்மாவுக்கு ஏதோ விபரீதம் நடந்துவிட்டதோ என்று பயந்து போகிறாள். அவன் கடைசியிலே, பாட்டுப் போட்டியிலே பங்கேற்கத் துணை முதல்வர் அழைக்கிறார் என்று கூறியவுடன் அவள் பயம் தெளிந்தாள் என்கிறார். ஒருவருக்கு ஒரு தீங்கைச் செய்தால் அதே தீங்கு நமக்கும் வந்து சேரும் என்பதால் நாம் மனத்தாலும் தீயதை நினைக்காமல் வாழ வேண்டும் என்று கூறுகிறார்.

இன்னொரு நாள் சொர்ணா பியூன் ஆறுமுகத்தை மாட்டிவிடுகிறாள்.

“பாருங்க சார், இந்த ஆறுமுகம்! குழம்பிலே உப்புக் குறைஞ்சா என்ன சார்? எடுத்துப் போட்டுக்கிட்டா சரியாப் போயிடப் போவுது. அதுக்காக, சம்சாரத்தை அடிச்சு நொறுக்கறதா?[55] என்று புகார் தெரிவிக்கிறாள்.

பெண்களை அடிக்கிறவன் மனிதனே இல்லை என்று ஆறுமுகத்திடம் முதல்வர் அறிவுரை கூறுகிறான். அப்பொழுது, “தண்ணி அடிச்சதனால் ஏதோ தெரியாம பண்ணிட்டார் சார். மன்னிச்சிடுங்க” என்று சொர்ணா பாசாங்கு செய்கிறாள். உடனே முதல்வர்,

ஏன்யா, உனக்கு அவ்வளவு மப்பு ஏறிடிச்சா? தண்ணி போடற அளவுக்குப் பெரிய மனுஷன் ஆயிட்டியா?”[56] என்று திட்டுவதோடு அவனுக்குரிய ஊதிய உயர்வை வழங்காமல் தடுப்பது என முடிவெடுக்கும் நிலையைச் சொர்ணா உருவாக்குகிறார்.

## 5.3.2 ஆசிரியர் கூறும் அறிவுரை

பூவிழி போன்ற மாணவிகளுக்கு ஹவி டீச்சரை ரொம்ப பிடிக்கும். மாணவிகளை வெறும் கொலு பொம்மைகளாக உருவாக்கிவிடக் கூடாது; கல்லூரியில் பயிலும் மாணவிகளை வெறும் ஊமைகளாய்த் தயாரித்து அனுப்பக் கூடாது. அப்பொழுதுதான் பொறுப்புள்ள “பாரதப் பிரஜைகள், சமுதாய உணர்வு மிக்கவர்கள், பாரதி கனவு கண்ட புதுமைப் பெண்கள் வீறுநடை போட்டு வெளியில் வருவார்கள்”[57] எனக் கூறுகிறார்.

நிர்மலா தான் பணியாற்றும் கல்லூரியில் பயிலும் மாணவிகளை அன்புடன் வாடா, போடா என்று அழைப்பதால் அனைவருக்கும் மிகவும் பிடிக்கும். மேலும், அவர்கள் “இதோ பாருங்கடா! வகுப்பிலே நான் சொல்ற எந்த வார்த்தை புரியலைன்னாலும், தயங்காம கேளுங்க . . . சந்தேகம் கேட்கிறது தப்பே கிடையாது. எல்லாம் தெரிஞ்ச மாதிரி நடிக்கிறதுதான் முட்டாள்தனம்” என்று கூறி மாணவிகளைப் பார்வையாளர்களாக அல்லாமல் பங்கேற்பாளராக மாற்ற முயல்வதாகப் புனையப்பட்டுள்ளது. மேலும், மாணவிகளைப் பார்த்து . . . கேள்விகள் கேட்க

கேட்கத்தான் அறிவு விசாலப்படும்[58] ஏன்? எதற்கு என்கிற கேள்விகளைக் கேட்கிறவர்களாக நீங்கள் விளங்க வேண்டும் என்று கூறுவதாகப் படைத்துள்ளார்.

### 5.3.3 நண்பர்கள் நற்பணி மன்றம்

கல்லூரி மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு, ஊர்ப் பொதுக் கிணற்றைத் தூர்வாரிச் சுத்தப்படுத்த வேண்டும் என்று வரதன் திட்டமிடுகிறான். நந்த கோபாலின் உற்சாகமான பேச்சால் எல்லாத் திட்டங்களும் அழகாக நிறைவேறுகின்றன.

பள்ளியின் மேற்கூரை பழுதடைந்து உள்ளதால் அதை மாற்றுவது, நாற்காலிகளைப் பழுது பார்ப்பது, சுவருக்கு வெள்ளையடிப்பது, பள்ளி இடத்தைச் சுத்தமாக்கி விளையாட்டு மைதானம் அமைப்பது என எல்லாப் பணிகளையும் புனித மலர் பள்ளியில் இளைஞர்கள் கூடி ஆளுக்கொரு வேலையாகச் சுறுசுறுப்புடன் செய்கின்றனர். இதனை, ‘‘மொத்தத்தில் அங்கே மானுட நேயம் மலர்ந்து கொண்டிருந்தது. உழைப்பின் சக்தி, உருவெடுத்து கொண்டிருந்தது. உழைப்பின் சக்தி உருவெடுத்துக் கொண்டிருந்தது. எத்தனையோ கைகள் தங்கள் நிறங்களை, தங்கள் இனங்களை தங்கள் வகுப்புகளை மறந்து அங்கே செயலாற்றிக் கொண்டிருந்தனர். அங்கே நாடுகள் தங்கள் நிறங்களை மறந்து இணைந்த கொண்டிருந்தன[59] என்கிறார்.

கல்விக் கூடத்தை, நண்பர்கள் நற்பணி மன்ற உறுப்பினர்கள் வேறுபாடுகளை மறந்து புது ஒளிப் பெறச் செய்கின்றனர்.

நிர்மலா தன் தம்பியையும், தங்கை மாலாவைப் பற்றியும் கோபாலிடம் கூறும்பொழுது, என் தம்பியும் தங்கையும் தான் தோன்றியவைகளாக இந்தியக் கலாச்சாரத்தையே குழி தோண்டிப் போட்டு விட்டு ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள்[60] என்கிறார்.

### 5.3.4 கேலி செய்தல்

காஞ்சனா, அர்ச்சனா, ரோஸ், கண்ணம்மா ஆகியோர் கல்லூரியில் மூன்றாமாண்டு படிக்கும் மாணவியர், இவர்கள் முதலாமாண்டு மாணவியர்களைப் பார்த்து, நாங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறினால் விட்டுவிடுவோம் என்றவுடன் அந்தப் பெண் மெதுவாகத் தலையாசைக்கிறாள். ‘‘என்ன நீ வேகமா தலையை ஆட்டு, இன்னும் வேகமா... வேகமா’’ என்று சொல்லிவிட்டு இப்படியே ஐந்து நிமிடம் தலையை ஆட்டிக்கிட்டே இருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். அதோடு மட்டும் அல்லாமல், புதிதாகக் கல்லூரிக்குப் பணியாற்ற வந்துள்ள ஆசிரியைகளையும் வம்புக்கு இழுப்பார்கள். ‘‘மேடம் குழந்தைங்க இருக்குதா உங்களுக்கு? ஓ ரெண்டு பேர்ன்னாக! இந்த மக்கு அடுத்தாப்லே கல்யாணம் ஆயிடுச்சான்னு கேட்டுத் தொலைச்சதா! மேடம் கெட் அவுட்ன்னு கத்தின கத்துல வெளியே ஓடிப்போயிட்டா..’’[61] என்று கேலி செய்கின்றனர்.

### 5.3.5 துணிவு மிக்கவர்கள்

திருவண்ணாமலைக்குப் பக்கத்தில் அய்யம்பாளையத்திலிருந்து சென்னைக்குப் படிக்க வந்த பூவிழி, தவறுகளைத் தட்டிக் கேட்பதில் தலைசிறந்தவளாகத் திகழ்கிறாள். மூன்றாமாண்டு மாணவிகள் கேலி செய்யும் போது தடாலடியாக உடனுக்குடன் பதில் கூறி அதிரவைக்கிறாள். அதே போன்று தெருவில் ஒரு நாள் மூண்டாமாண்டு படிக்கும் கண்ணம்மாவை ஒரு தறுதலை கையைப் பிடித்து துன்புறுத்துவதைப் பார்த்த பூவிழி தன் தாவணியை இறுக்கிச் செருகிக் கொண்டு, ‘‘பாய்ந்து சென்று பப்ளிக்பிளேஸ்லே என்ன மிஸ்டர் இது கலாட்டா.. எடு கையை..’’ என்று அதட்டினாலும், அவன் பயப்படவில்லை. ‘‘இந்தா மிஸ்டர் இது கொஞ்சங்கூட நல்லால்லே எடு கையை முதல்லே’’ என்று கேட்ட பிறகும் அந்த வாலிபன் அவள்

கையை விடாமல் இன்னும் நெருக்கமாக அவளை இழுத்துக் கொள்கிறான். உடனே பூவிழி அங்கு கூடியிருப்போரிடம் உதவியை நாடிய பிறகும் கூட உதவ முன்வர மறுத்தவுடன், கரும்புச்சாறு வண்டியிலிருந்து கரும்பொன்றை உருவி எடுத்து அடிக்க ஆரம்பித்தவுடன் அந்த வாலிபன் விட்டு விட்டு ஓடிவிடுகிறான்.[62] எனப் பெண்ணின் துணிவை ஆசிரியர் பாராட்டியுள்ளார்.

## 5.4 சமூக நிலையில் பொருள் சார்ந்த நெறி

தனிமனிதனாகவும், குடும்பமாகவும் சமூக மக்களோடு உறவாடி வாழ்கின்ற போது, குடும்ப வாழ்வியலிலும், தொழில் தளங்களிலும், கல்விக் கூடங்களிலும் பெண்கள் பொருள் உறவு சார்ந்த நெறிமுறைகளில் ஈடுபடுகின்ற பொழுது, மேற்கூறிய உறவு நிலைகளில் பெண்கள் எங்ஙனம் புனைவு பெற்றுள்ளனர் என்பதனை இதுகாறும் கண்டோம்.

வாழ்வியல் சூழல் காரணமாகவோ வறுமை காரணமாகவோ மிகை உணர்ச்சியின் காரணமாகவோ பருவக் கோளாறு காரணமாகவோ சமூக வாழ்வியல் நிலையில் நெறி பிறழ்ந்து பொருள் ஈட்டும் பெண்கள் பற்றிய புனைவுகளை ஆசிரியர் தம் நாவல்கள் வழி இனிக் காணலாம்.

இராணி பத்மாவதி மகளிர் கல்லூரியில் பூவிழி சேர்ந்து பயில்கின்ற பொழுது, கல்லூரி வளாகம் பொருளாதார நிதியின்மையால் பொலிவிழந்து காணப்படுகிறது. அதனால் பூவிழி தன் தோழிகளுடன் சென்று முதல்வரிடம் கோரிக்கை வைக்கின்றாள். இதுவரை கல்லூரியில் அசட்டையாகவும், அலட்சியமாகவும், விட்டிருந்த பராமரிப்புப் பணியைப் பார்க்க முதல்வர் கட்டளையிட்டதால், கல்லூரி புதுப்பொலிவு பெறுகிறது.

சுத்தமான குடிநீர் குடிப்பதற்காகச் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த் தொட்டியை நான்கு இடங்களில் வைக்க ஏற்பாடு செய்கிறாள். சுவர்கள் அனைத்தும் வெள்ளையடிக்கப்பட்டன. கழிப்பிடங்கள் பல புதிதாக கூட்டப்பட்டன. கழிப்பிடத்தைத் தினமும் கழிவிவிட ஆட்கள் நியமிக்கப்பட்டனர்[63]

பூவிழி, சமூக அக்கறையோடு நடந்து கொள்கிறாள். கல்லூரி நிர்வாகம் பொருட் செலவு என்று கருதி தள்ளிப்போட்டு வந்ததைப் பூவிழி தோழியரோடு சென்று தீர்த்து வைக்கிறாள்.

கூலி வேலை பார்ப்பவர்கள் தாழ்வாகவும் அரசு வேலை பார்ப்பவர்கள் உயர்ந்தவர்களாகவும், சமூகத்தில் ஏற்றத்தாழ்வுடன் மதிக்கப்படுகின்ற காரணத்தால் பூவிழி அப்பா, தன் மகளுக்குப் பொருளாதாரத்தில் நிறைவடைந்துள்ள ஒரு மருத்துவரைத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஆனால், பூவிழி அவர் விருப்பத்தை ஏற்க மறுத்ததோடு, தான் வேறு ஒருவரைத் திருமணம் செய்யப்போவதாகக் கூறியவுடன், அப்பா, “கூலிக்கு வேலை பார்க்கிறவனைக் கட்டிக்கப் போறேன்னு அடம் பிடிக்கிறியே! என்ன புத்தி சாலியா இருந்து என்ன? கல்யாண விஷயத்துலே கழுநீர்ப் பானையிலே இல்லே கையை விட்டுட்டியே உனக்கே தோணலையா? ஒரு டாக்டரை கட்டிக்கிட்டா வாழ்க்கை என்ன மாதிரி இருக்கும்? போயும் போயும்![64] என்ற கூற்றுக்கள் வழிச் சமூக ஏற்றத் தாழ்வுகளை விளக்கியுள்ளார்.

### 5.4.1 வரதட்சணை இல்லாத் திருமணம்

இமயவரம்பன், பூவிழி படிக்கும் கல்லூரிக்குச் சென்று விழாச் சிறப்புரை ஆற்றுகின்ற போது, மாணவிகள் எல்லோரும் புரட்சியாகப் பேசும் இமயவரம்பனைப் பார்த்து, “வரதட்சணை வாங்காமல் திருமணம் செய்வீர்களாக?” என்று கேட்கிறார்கள்.

அதற்கு உடனே இமயவரம்பன், ‘‘என் திருமணம் விரைவில் நடைபெற உள்ளது. ஒற்றைக் காசு கூட வரதட்சணையாக நான் வாங்கப் போவதில்லை. காரணம் என் அவள் தேடக்கிடைக்காத திரவியம். என் அவள் முன்னால் லட்சங்களும், வைரங்களும் தோற்றுப் போய்விடும். என் அவள் அழகும், அன்பும் நிறைந்த ஒரு தேவதை’’[65] என்று வருணிக்கிறான். வரதட்சணை வாங்காமல் திருமணம் செய்ய வேண்டும் என்ற சமூகம் சார்ந்த அக்கறையோடு வாழும் மனிதனைப் பாத்திரமாக்கியுள்ளார்.

### 5.4.2 குடும்ப வறுமை

தியாகு, பக்கத்து வீட்டுப் பெண்ணான உஷாவுடன் பேசி உறவாடதவனாக இருந்தாலும் அவள் மேல் இவனுக்கு விருப்பம் உண்டு. ஆனால், வெளிப்படுத்தியது கிடையாது. உஷாவின் அண்ணன் ஆனந்த் தொழில் போட்டியில் ஒருவனைக் கொலை செய்துவிட்டு வேலூர் சிறைச்சாலையில் வாழ்நாட்களைக் கழித்து வரும் சூழ்நிலையில் உஷாவின் குடும்பம் வறுமை நிலைக்குத் தள்ளப்படுகிறது. அந்தச் சூழ்நிலையில், வேறு ஆடவனுடன் உஷா காரில் சென்றதைக் கண்ட தியாகுவிடம் கூறும்பொழுது, ‘‘ஆடம்பரமா வாழ்ந்துவிட்ட என் அப்பா அம்மாவுக்கு ஆனந்த் இல்லாமலே சமாளிக்க முடியலை. அதனால இந்த வழிக்கு என்னை அவங்கதான் அவங்களே தான் தயார் பண்ணி அனுப்பினாங்க. நான் திரும்பி வரமுடியாத அளவுக்கு எங்கியோ போயிட்டேன் என்று தன்னிலையைக் கூறி அழுகிறாள்.

தியாகு அவளிடம், ‘‘உஷா, எதுவுமே மீண்டு வர முடியாத தூரம் இல்லே..’’ என்று கூறும்பொழுது, உஷா ‘‘ப்ளீஸ் தியாகு நான் பொன் முட்டை இடற வாத்து... என்னை இழக்க அந்தப் பேராசைப் பிசாசுங்க ஒருநாளும் சம்மதிக்க மாட்டாங்க. அழுகிப் போன பழத்தை அப்பாவிக் குழந்தைக்கு யாராவது தின்னக்

குடுப்பாங்களா?’’[66] என்று வறுமையால் மாறிய தன் அவல நிலை வாழ்வை எடுத்துக் கூறுவதாகப் புனைந்துள்ளார்.

### 5.4.3 பொறுப்பற்ற தனம்

உஷாவின் பெற்றோர்கள் ஆடம்பரமான வாழ்க்கை வாழ ஆசைப்பட்டுத் தன் மகன் ஆனந்தைத் தவறான வழியில் ஈடுபடுத்தினர். அதே போன்று உஷாவையும் ஈடுபடுத்துவதால் தியாகுவிடம் அதுபற்றிக் கூறும்பொழுது, ‘‘அப்பா அம்மாவோட பேராசை, சுயநலம், கண்டவனோடவும் கூடிக் குலாவறது, அந்தக் காசுல எங்கப்பா அம்மா நடத்துற டாம்பீகமான வாழ்க்கை அத்தனையுமே சலிச்சுப்போச்சி…’’[67] என்று பெற்றோரின் பொறுப்பற்றதனத்தைக் கூறி அழுகிறாள்.

நிர்மலாவின் அப்பா, தன் குழந்தைகளைப் பற்றி, அவர்களின் வருங்கால வாழ்வைப் பற்றிக் கவலைப்படாமல், குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டி, கட்டி, தன் சொத்து சுகம் எல்லாவற்றையும் இழந்து, குடும்பம் நடத்துவதற்கே மிகவும் அல்லல்படுகிறார். அப்பாவின் இப்படிப்பட்ட பொறுப்பற்ற செயலை எண்ணிய நிர்மலா அதுபற்றிக் கூறும்பொழுது, ‘‘ஏம்பா? அன்னிக்கு நான் சொன்னப்போ கொஞ்சமாவது அக்கறை எடுத்துக்கிட்டீங்களா? கொஞ்சமாவது கவலைப்பட்டீங்களா? முதல்லே என்மேல குறை கண்டுபிடிச்சீங்க… அவங்க படிக்கிறாங்களா? சம்பளம் கூட்டிட்டோமா? வீட்டிலே உப்புப் புளி, மிளகாய் இருக்கா… குதிரைங்களோ ஜாதகத்தை கரைச்சுக் குடிக்கத் தெரியும்’’[68] என்று அப்பாவின் பொறுப்பற்ற செயலைக் கண்டிக்கிறாள்.

மேலும் தாயைப் பற்றிக் கூறும் பொழுது, ‘‘ஒவ்வொரு தாயும் வேலைக்காரியா, சமையற்காரியா, தன்னை அழிச்சிக்கிறா? யாருக்காக தங்களோட குழந்தைகளுக்காக! ஆனா நீ கூடமாட வேலை செய்ய வேண்டாம். ஒரு ஆறுதலா

ஒரு பக்கத்துணையா நீ இருக்கக் கூடாதா? உன்னோட எந்தக் கடமையை நீ செய்திருக்கேம்மா மனைவிங்கிற கடமைக்கு அப்புறம் தாய்ங்கற கடமை இருப்பது தெரியுமா''[69] என்று நிர்மலா தாயிடம் கடிந்து கொள்கிறாள்.

### 5.4.4 துணிவு மிக்க பெண்

பொன்னி தன் அப்பா மாணிக்கம் செய்யும் தவறான தொழிலைக் கைவிடச் சொல்லிப் போராடி வெற்றி பெறுகிறாள். அப்பொழுது, ''அநீதியை எதிர்த்து துணிச்சலாகக் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டதா? பெண் இனம்?'' என்று ஆசிரியர் வினா எழுப்புகிறார். அவ்வினாவிற்குப் பொன்னியின் செயல் பதிலாக உள்ளது.[70]

### 5.4.5 சூழல் காரணமாக நெறி பிறழ்தல்

அரசு மணிமேகலையின் படைப்புக்களுள் மாலதியும், பிரபாவதியும் சூழல் காரணமாக விபச்சாரத் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

மாலதி ஆய்வு தொடர்பான செயல்பாடுகளில் ஈடுபடும் போது, ஆய்வு நெறியாளர் விஞ்ஞானி முத்து என்பவருடன் காதல் வயப்பட்டு தவறான பாதைக்குச் செல்கிறாள். கணவனுடன் அவள் கொண்டிருக்கும் தவறான உறவைப் பற்றி அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எடுத்துக் கூறுகின்ற பொழுதும் அதை நம்பாமல் இருக்கும் அவர் மனைவி சரோஜினி ஒரு நாள் கல்லூரி முடிந்து வீடு திரும்பும்போது கணவன் மாலதியுடன் தவறான செயலில் ஈடுபடுவதைக் கண்டு அதிர்ச்சி அடைந்து மாலதியைத் திட்டுகிறாள். அப்பொழுது மாலதி எதுக்குங்க அவளோட பேச்சு? விசயத்தை முடிச்சிக்கிட்டு சீக்கிரமா.. வாங்க''[71] என்று கூறுவதன் மூலம் தன் ஆய்வுப் பணியை முடிக்கப் பாலியலுறவின் மூலம் தன் பணியை நிறைவு செய்யத் துடிக்கும் பெண் மனநிலையினை விளக்கியுள்ளார்.

பிரபாவதி ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். மதுரையில் இருந்து சென்னைக்குத் திரைப்படத்தில் நடிக்க வாய்ப்புக் கேட்டுச் சென்னை வந்த இடத்தில் ரமணனுடன் பழக்கம் ஏற்பட்டுத் தவறான உறவில் ஈடுபடுவதாக ஆசிரியர் புனைந்துள்ளார்.

## 5.5 பெண்புனைவும் கருத்தியலும்

குடும்ப நிலையிலும், தொழில் நிலையிலும், கல்வி கற்கும் நிலையிலும் சமூக வாழ் நிலையிலும், பொருளியல் சார்ந்த நெறியியலில் பெண்கள் புனைவு பெற்றுள்ளமையினை இதுகாறும் ஆய்வாளர் விளக்கியுள்ளார். இனிப் பொருளியல் சார்ந்த இப்புனைவுகள் வழிப் புலனாகும் கருத்தியல்களை இனிக் காண்போம்.

ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் இல்லற வாழ்வில், பெண் கல்வி கற்று ஆணைப் போன்று அலுவல் பணி மேற்கொண்டாலும், ஆண்களைப் போன்று அவர்கள் சுதந்திரமாக வாழ முடிவதில்லை. கணவனுக்குச் செய்யும் பணிவிடை, குடும்பப் பணிகள் அத்னையையும் ஊதியமில்லா ஊழியக் காரியாக மாறிச் செய்பவளாக வாழும் நிலையினைச் சரோஜினியின் புனைவு வழியாக அறியலாம்.

தனக்கென வாழாமல் தன் கணவனுக்காகவே வாழ்தல் பணிவிடை செய்தல், கணவனின் தவறுகளைப் பொறுத்துக் கொள்ளுதல், கணவனை எதிர்த்துப் பேசினால் மனைவிக்குத் தண்டனை என்பன போன்ற கருத்தியல்கள் சரோஜினி என்ற பெண் புனைவு மூலம் வெளிப்படுவதைக் காணலாம்.

மேலும், குடும்பப் பாரத்தைச் சுமப்பதற்காகவே பொருள் ஈட்டும் பெண்ணாக அமுதா படைக்கப்பட்டுள்ளாள். பொருள் ஈட்டும் நெறியில், குடும்பங்களில் பின்பற்றப்படும் ஆண் - பெண் பேதங்களில் பெண் ஈட்டித்தரும் பணத்திற்கு இருக்கும் மதிப்பு, அப்பெண்ணுக்கு இல்லை என்பதனையும், பணம் சம்பாதிக்கும்

இயந்திரமாகப் பெண்களைப் பாவிக்கின்ற நிலையையும் அமுதா என்ற பாத்திரம் வாயிலாக அறிய முடிகிறது. பணத்தை மையமாக வைத்துக் குடும்பங்களில் உறவுகள் உறவாடும் நிலையினைச் சொர்ணா, கண்மணி எனும் பாத்திரங்களின் வாயிலாக ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

பெண்கள் பணியாற்றும் பணித்தளங்களில் ஆண்கள், பெண்களைப் போகப் பொருளாக எண்ணுதல், பாலியல் தொல்லை கொடுத்தல், தொழில் திறனை ஆண்கள் குறைத்து மதிப்பிடல், பெண்களை ஆண்களோடு பாலியல் ரீதியாக தொடர்புபடுத்திப் பழி சுமத்துதல் முதலான கருத்தியல்கள் பொருளியல் உறவு சார்ந்த பெண் புனைவுகளில் வெளிப்படுவதனைக் காணலாம். மேலும், ஆண்-பெண் பால் வேறுபாட்டுப் பேதம் பாராமை, கல்வி கற்றல், பணித்திறன், நிர்வாகத்திறன், ஆளுமைத்திறன் முதலானவைகளைக் கண்மணி போன்ற பாத்திரப் புனைவுகளின் வழி ஆசிரியர் தம் படைப்புக்களுள் பதிவு செய்துள்ளமை சிறப்பிற்குரியது.

கல்வி கற்கும் மாணவியர் கள்ளங்கபடமற்றவராக, பொறுப்பற்றவர்களாக, ஆடம்பரப் பிரியர்களாக, பிறரை ஏளனம் பண்ணுபவர்களாக உள்ளனர் என சித்திரித்திருக்கும் ஆசிரியர், சமூக சேவையாற்றும் தொண்டுள்ளம் படைத்தவர்கள், துணிவு படைத்தவர்கள், தடைகளைத் தகர்ப்பவர்கள், முடிவெடுத்துச் செயலாற்றும் திறன் படைத்தவர்கள் எனும் முறையில் தம் படைப்புக்களுள் ஆசிரியர் பதிவு செய்துள்ள பாங்கு பாராட்டுதற்குரியது.

## 5.6 தொகுப்புரை

பொருளுறவுப் புனைவும் கருத்தியலும் என்னும் தலைப்பின் கீழ் விளக்கம்பெற்றுள்ள கருத்துக்களை, குடும்ப நிலையில் பொருள் சார்ந்த நெறி, தொழில் நிலையில் பொருள் சார்ந்த நெறி, கல்வி கற்றலில் பொருள் சார்ந்த நெறி,

சமூக நிலையில் பொருள் சார்ந்த நெறி, பெண் புனைவும் கருத்தியலும் என ஐவகையாகப் பகுத்து ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

பெண்கள் வேலைக்குச் சென்றாலும், குடும்பக் கடமைகளை, கணவனுக்குச் செய்யும் பணிவிடைகளைத் திறம்பட செய்திடல் வேண்டும். நெறி தவறி நடக்கும் கணவனின் செயலைப் பொறுத்துக் கொள்ளுதல், தட்டிக் கேட்டால் தண்டனைக்குள்ளாதல், குடும்பப் பாரங்களைச் சுமத்தல் முதலான கருத்தியல்களைக் குடும்ப உறவு நிலை சார்ந்த பொருளியல் உறவுப் புனைவுகளில் காணமுடிகிறது.

பணித்தளங்களில் ஆண் பெண் பால்வேறுபாடு, பணிப்பளு வேறுபாடு, பெண்கள் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுதல், பாலியல் உறவு நிலையில் ஆண்களுடன் தொடர்புப்படுத்திப் பழிதூற்றப்படுதல் முதலான கருத்தியல்களையும் பெண்கள் துணிவு மிக்கவர்கள், செயல்திறன் படைத்தவர்கள், நிர்வாகத் திறன் படைத்தவர்கள், பிரச்சனைகளை எதிர்கொண்டு சாதுர்யமாகத் தீர்ப்பவர்கள், அறிவுக் கூர்மையுடையவர்கள் என்பன போன்ற கருத்தியல்கள் வெளிப்படும் முறையில் பூவிழி, காஞ்சனா, மாலா முதலான பெண் பாத்திர புனைவுகளின் வழி ஆசிரியர் படைத்துள்ளார்.

குடும்பத்தினரின் ஆடம்பர வாழ்க்கை வசதிக்காக பெண்கள் விபச்சாரத் தொழில் ஈடுபட்டுப் பொருள் ஈட்டுதல், பெற்றோரின் பொறுப்பற்ற செயல்களால் குடும்பத்தைக் காப்பாற்றப் பாலியல் தொழிலில் ஈடுபடுதல் என்பதனை உஷா என்ற பாத்திரப் புனைவு வழியாகவும், வாழ்வியல் சூழல் காரணமாகப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகிப் பின் அதனையே தொடர்ந்து, தொடர, அந்த ஆணையே அண்டி வாழ்பவளாகப் பெண் உள்ளாகும் நிலையினை மாலதி என்ற பெண்பாத்திரப் புனைவு வழியாகவும், பொருள் ஈட்டும் நெறிக்காகவே பாலியல் தொழிலில் ஈடுபடும்

பெண்ணின் சமூக வாழ்வியல் அவல நிலையைப் பிரபாவதி என்ற பெண் பாத்திரப் புனைவு வழியாகவும், பெண்களை விலைபேசி விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தும் ஆண்களை எதிர்த்தும், அவர்களைத் திருத்தியும் வாழ வைக்கும் துணிவு மிக்க பெண்களின் செயல்களைப் பொன்னி என்ற பெண் பாத்திரப் புனைவுகள் வாயிலாகவும் ஆசிரியர் திறம்படப் பதிவு செய்துள்ளமையினை அறிய முடிகிறது. பால் வேறுபாடு பார்க்காமல் தோழமை உணர்வுடன் பணியாற்றுபவர்கள் பெண்கள் என்ற கருத்தியல் தொழில் நிலையில் பொருள் உறவு சார்ந்த பெண் புனைவுகளில் வெளிப்படுவதனையும் இவண் காணலாம்.

கல்வி கற்று, அறிவு பெற்று, பட்டம் பெற்று, பொருள் ஈட்டும் நெறிக்காகக் கல்வி பயில வந்துள்ள மாணவியர், பொறுப்பற்றவர்களாகவும், ஆடம்பரப் பிரியர்களாகவும், ஆண்கள் பின்னால் அலைபவர்களாகவும், பிறரை ஏளனம் செய்பவர்களாகவும் உள்ளனர் என்ற மரபார்ந்த கருத்தியல்கள் வெளிப்படும்படி ஆசிரியர் மாணவியரைப் புனைந்திருந்தாலும், மாணவியர் பொறுப்புள்ளவர்கள், பொதுத்தொண்டு மனப்பான்மை உள்ளவர்கள், பிறரன்பு பேணுபவர்கள், துணிவு மிக்கவர்கள், வாழ்வு குறித்த விழிப்புணர்வு பெற்றவ்ரகள் என்பன போன்ற மறுமலர்ச்சிக் கருத்தியல்கள் வெளிப்படும் முறையிலும் புனைந்துள்ளமையினைக் கல்விகற்றலில் பொருள் சார்ந்த நெறி எனும் பகுதியில் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

சமூக வாழ்வியல் நிலையில் குடும்பச் சூழல், பெற்றோரின் பொறுப்பற்ற செயல்கள், குடும்பத்தினரின் ஆடம்பர வாழ்வு முதலான காரணங்களுக்காகப் பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களின் நிலையினையும், வாழ்வுச் சூழல் நெருக்கடி காரணமாக ஆண்களின் இச்சையைத் தணிக்கும் பொருளாகப் பெண்கள் மாறுதல், வறுமை காரணமாகப் பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுதல், பொருள்

ஈட்டுவதற்காகவே பாலியல் தொழிலை நெறியாகக் கொள்ளுதல் எனும் முறையில் பெண்கள் ஈடுபடுகின்றனர் என்பதனைப் பெண்களின் புனைவுகள் வழிப் புலனாகும் கருத்தியல்களாக வெளிப்படுவதனை ஆய்வாளர் இவ்வியலுள் விளக்கியுள்ளார்.

குடும்பக் களம், தொழில் தளம், கல்வி நிறுவனம், சமூகம் ஆகியவற்றுடன் பொருள் ஈட்டுதல் சார்ந்த நெறிகளில் ஈடுபடும் பெண்கள் வழிப் புலனாகும் கருத்தியல்களான கணவனுக்காக வாழ்பவள், பெண் குடும்பப் பாரத்தைச் சுமப்பவள், கணவனின் குற்றங்களைப் பொறுப்பவள், ஆண்களின் போகப் பொருள், பொருள் ஈட்டலுக்காகப் பாலியல் உறவைத் தொழிலாகக் கொள்ளுதல் முதலானவற்றைப் பெண்புனைவும் கருத்தியலும் எனும் பகுதியில் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

## அடிக்குறிப்புகள்

1. அரசு மணிமேகலை, என்றும் தொடரும் பயணம், ப.2.
2. மேலது., ப.2.
3. மேலது., ப.11.
4. மேலது., ப.39.
5. அரசு மணிமேகலை, பொழுது ஒருநாள் புலரும், ப.57.
6. மேலது., ப.58.
7. மேலது., ப.58.
8. மேலது., ப.60.
9. மேலது., ப.60.
10. மேலது., ப.60.
11. மேலது., ப.61.
12. மேலது., ப.62.
13. மேலது., ப.63.
14. மேலது., ப.66.
15. மேலது., ப.67.
16. மேலது., ப.69.
17. மேலது., ப.69.
18. மேலது., ப.70.
19. மேலது., ப.71.
20. மேலது., ப.77.
21. மேலது., ப.82.
22. மேலது., ப.82.
23. மேலது., ப.88.
24. மேலது., ப.89.
25. அரசு மணிமேகலை, பூவே இளம் பூவே, ப.47.
26. மேலது., ப.65.
27. மேலது., ப.66.
28. அரசு மணிமேகலை, நாளை நான் ஜெயிப்பேன், ப.125.
29. மேலது., ப.147.
30. மேலது., ப.154.
31. மேலது., ப.170.
32. அரசு மணிமேகலை, தீக்குளிக்காத சீதைகள், ப.12.
33. மேலது., பக்.18-19.
34. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.593.
35. மௌ. சித்திரலேகா, பால் அடிப்படையிலமைந்த தொழிற்பாகுபாடு பெண்களும், தொடர்பு ஊடகங்களும், ப.60.
36. மேலது., ப.61.

37. மேலது., ப.70.
38. மேலது., பக். 77 - 79.
39. மேலது., ப. 81.
40. மேலது., பக். 83 - 87.
41. மௌ. சித்திரலேகா, மு.கூ.நூ.,ப.73.
42. அரசு மணிமேகலை, என்றும் தொடரும் பயணம், ப.5.
43. அரசு மணிமேகலை, பொழுது ஒருநாள் புலரும், ப.48.
44. அரசு மணிமேகலை, தீக்குளிக்காத சீதைகள், ப.29.
45. மேலது., ப.166.
46. மேலது., ப.135.
47. அரசு மணிமேகலை, காத்திருங்கள் காலம் வரும், ப.64.
48. அரசு மணிமேகலை, மனிதரில் இவர் மகாத்மா, பக்.182-184.
49. அரசு மணிமேகலை, பூவே இளம் பூவே, ப.88.
50. அரசு மணிமேகலை, பொழுது ஒருநாள் புலரும், பக்.47-48.
51. அரசு மணிமேகலை, கண்ணுக்குள் நூறு கவிதை, ப.26.
52. அரசு மணிமேகலை, பொறுத்திரு பூமலர, ப.81.
53. மேலது., ப.85.
54. அரசு மணிமேகலை, பூவே இளம் பூவே, ப.15.
55. மேலது., ப.16.
56. மேலது., ப.17.
57. அரசு மணிமேகலை, பொறுத்திரு பூமலர, ப.18.
58. அரசு மணிமேகலை, காத்திருங்கள் காலம் வரும், ப.64.
59. அரசு மணிமேகலை, கனவு சுமக்கும் கண்கள், ப.22.
60. மேலது., ப.91.
61. அரசு மணிமேகலை, பொறுத்திரு பூமலர, ப.23.
62. மேலது., பக்.20-26.
63. மேலது., ப.93.
64. மேலது., ப.98.
65. மேலது., ப.100.
66. அரசு மணிமேகலை, நாளை நான் ஜெயிப்பேன், பக்.170-172.
67. மேலது., ப.172.
68. அரசு மணிமேகலை, கனவு சுமக்கும் கண்கள், ப.120.
69. மேலது., ப.126.
70. அரசு மணிமேகலை, நாளை நான் ஜெயிப்பேன், ப.160.
71. அரசு மணிமேகலை, என்றும் தொடரும் பயணம், ப.42.
72. அரசு மணிமேகலை, தீக்குளிக்காத சீதைகள், ப.37.

# இயல் – 6

# பண்பாட்டுப் புனைவும் கருத்தியலும்

## 6.0 முன்னுரை

தமிழ்ப் பண்பாடு என்பது ஒவ்வொரு மக்களும் வாழ்வதற்கான தனித்தனி அடையாளம். ஒரு நாட்டின் பண்பாட்டை அளக்கும் அளவு கோல். அதன் மக்கள் தொகையோ, நகர் அழகோ, தெய்வமோ அன்று. சிறந்த பண்புகளாய் நிறைந்து வாழும் மக்களே ஆவர். படைப்பினங்களில் மனித இனம் உயர்ந்த நிலை பெற்றதாகும். மக்களிடம் காணப்படும் பண்புகளைக் கொண்டு பண்பாட்டை மதிப்பிட முடியும். மனிதர்கள் மட்டுமே பண்பாடு என்ற சொல்லோடு தொடர்புடையவர்கள். இதுவே மனிதர்களைப் பிற விலங்கிடமிருந்து பிரித்துக் காட்டுகிறது. பண்பாடு என்பது மக்களால் ஆக்கப்பட்ட கருவி. தலைமுறை தலைமுறையாக மக்கள் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும் பழக்க வழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த தொகுதியாகும் என்று லெப்பியர் குறிப்பிடுகிறார்.[1]

சமுதாயத்தில் வாழும், மனிதர்கள் உருவாக்கிய சடங்குகள் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிகள், பொருளாதாரப் பண்புகள், சட்டங்கள், இன்ன பிற மரபுகள் முதலானவைகளை உள்ளடக்கிய பண்பாட்டுப் புனைவுகளையும் இப்புனைவுகள் வழிப் புலனாகும் கருத்தியல்களையும் அரசு மணிமேகலையின் நாவல்கள் வழி இவ்வியல் விவரிக்கிறது. இதனை,

- ❖ பண்பாடு பற்றிய வரையறைகள்
- ❖ காதல் பற்றிய புனைவுகள்
- ❖ திருமணம் பற்றிய புனைவுகள்

- ❖ ஒழுக்க நெறிகள் சார்ந்த புனைவுகள்
- ❖ மதம் சார்ந்த புனைவுகள்
- ❖ சாதி சார்ந்த புனைவுகள்
- ❖ பண்பாட்டுப் புனைவும் கருத்தியலும்

என பகுத்து ஆய்வாளர் இவ்வியலில் விளக்கியுள்ளார்.

### 6.1 பண்பாடு – வரையறை

பண்பாடு என்ற சொல்லிற்கு ஆங்கிலத்தில் Culture என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. Culture என்ற ஆங்கிலச் சொல் Culus என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்தது. Culture என்கிற சொல்லிற்கு Tillage Improvement of Training, Intelectural, Development Cultivate எனும் பொருள்கள் குறிக்கப்படுகின்றன என்று ஆக்ஸ்போர்டு அகராதி விளக்கம் தருகிறது.[2]

ஆங்கிலத்தில் Culture என்று குறிப்பிடப்படும் சொல்லிற்குத் தமிழில் பண்பாடு என்ற சொல் வழக்கு நிலை கொண்டுள்ளது.

பண்படுவது பண்பாடு. பண்படுதல், சீர்ப்படுதல் அல்லது திருந்துதல், திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்னும், திருந்திய தமிழைப் பண்பட்ட செந்தமிழ் என்றும், திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளமென்றும் சொல்வது வழக்கம். பண்பாடு பல பொருட்கு உரியதேனும், நிலமும் மக்கள் உள்ளமும், பற்றியே பெருவழக்காகப் பேசப்பெறும். ஆங்கிலத்தில் Culture என்னும் பெயர்ச்சொல் சிறப்பாக நிலப்பண்பாட்டையும், உளப்பண்பாட்டையும் குறிக்கிறது. Cultivative என்னும் வினைச் சொல்லும் அப்படியே இவ்விரு வகைப் பண்பாட்டுள்ளும் மக்களைத் தழுவிய உளப்பண்பாட்டைச் சிறப்பாகக் கொள்ளவும் சொல்லவும் பெறும்”[3] என்கிறார் பாவாணர்.

குரோபரும், குருக்களும் பண்பாடு பற்றி தொகுத்துத் தந்துள்ள வரையறைகளைப் பக்தவத்சல பாரதி என்பார் பண்பாட்டு மானுடவியல் எனும் தன் நூலில் வரிசைப்படுத்தியுள்ளார்.

அவை,

- ❖ பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து செயல்படும் போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இது அந்தந்தச் சமுதாயத்திற்கு மட்டுமே உரியது. இஃது உயிரியல் நிலையில் மரபுரிமையாகி வராதது.
- ❖ பண்பாடு என்பது மக்களால் ஆக்கப் பெற்ற கருவி. அந்த ஊடகத்தைக் கொண்டே மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர்.
- ❖ மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், பழக்கவழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு ஆகும்.
- ❖ பண்பாடு என்பது மனிதனின் உடல் சாராத தகவமைப்பு.
- ❖ பண்பாடு என்பது மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சுற்றுச்சூழல். இதில் பொருளாதாரப் பண்புகள், சட்டங்கள், நம்பிக்கைகள் முதலானவை அடங்கும்.
- ❖ பண்பாடு என்பது மரபு வழியில் புரிந்து கொண்டுள்ளவை பற்றிய ஓர் அமைப்பு அது கற்றலின் மூலம் பெறப்படுவது கற்றல் நடத்தை முறையின் வழி உருவாக்கப்பட்டது.
- ❖ பண்பாடு என்பது அனைவராலும், பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துகளும், சமுதாய மரபுரிமையாகப் பெறப்பட்ட நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் அடங்கிய தொகுப்பாகும்.

❖ **பண்பாடு என்பது அறிவு நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவைவும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும்''**[4]

எனப் பண்பாடு பற்றிய வரையறைகளை வரிசைப்படுத்தியுள்ளார்.

மக்கள் கூட்டம், தமது சமூக வரலாற்று வளர்ச்சியின் அடியாகத் தோற்றுவித்துக் கொண்ட ஒழுக்க நெறிமுறைகள், மத வழிபாட்டு நடைமுறைகள், திருமணம் முதலான வாழ்வியல் சடங்குகள், காதல், வீரம் பற்றிய மரபுகள், குடும்ப நிலையிலும் சமூக உறவு நிலையிலும் பின்பற்றும் நடத்தை முறைகள் முதலானவற்றைத் தலைமுறை தலைமுறையாகச் சமூகத்தின் வாயிலாகக் கற்றுக் கொண்டும், கற்பித்துக் கொடுத்தும் பின்பற்றி வரும் நடத்தை முறையினைத் தன் இனத்தார்க்கும், தலைமுறையினர்க்கும் கற்பிதமாக்கி வருவதையே பண்பாடு எனக் கூறலாம்.

மனித சமூக அடையாளத்தினைத் தாங்கி நிற்கும் பண்பாடு பற்றிய புனைவுகளை அரசுமணிமேகலை நாவல்கள் வழி இனிக் காண்போம்.

## 6.2 காதல் பற்றிய புனைவுகள்

இருமனம் இணைந்து, ஒரு மனப்பட்டு, ஒன்றி உறவாடும் நிலையில் மலரும் காதல் பற்றிய நிகழ்வுகள் அரசு மணிமேகலையின் நாவல்களில் புனைவு பெற்றுள்ளன. அவற்றை,

6.2.1 எதிர்ப்பில் தொடரும் காதல்

6.2.2 சம்மதத்தில் தொடரும் காதல்

6.2.3 தோல்வியில் முடியும் காதல்

எனப் பாகுபடுத்தலாம்.

## 6.2.1 எதிர்ப்பில் தொடரும் காதல்

அரசுமணிமேகலையின் பத்துப் படைப்புகளுள், காத்திருங்கள் காலம் வரும் நாவலில், மாலா – அசோக் ஆகிய இருவரின் காதல் பற்றிய புனைவுகளும், என்றும் தொடரும் பயணம் நாவலில் சரோஜினி – முத்து ஆகிய இருவரின் காதல் பற்றிய புனைவுகளும், கண்ணுக்குள் நூறு கவிதை நாவலில், மோகனா – சோம சேகர் ஆகிய இருவரின் காதல் பற்றிய புனைவுகளும், பொறுத்திரு பூ மலர நாவலில், பூவிழி – இமயவரம்பன் ஆகிய இருவரின் காதல் பற்றிய புனைவுகளும் எங்ஙனம் புனைவு பெற்றுள்ளன என்பதை இனிக் காணலாம்.

கல்லூரியில் பேராசிரியையாகப் பணிபுரியும் நிர்மலாவின் தங்கை மாலா, பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, கல்லூரிக்குச் செல்ல ஆரம்பித்த நாள் முதல் அவள் நடவடிக்கையில் ஒரு மிகப்பெரும் மாற்றம் நிகழ்கிறது. கண்ணாடி முன் நின்று கொண்டு, ஏழு எட்டுத் தடவை பவுடரை முகத்தில் தேய்ப்பது, புருவங்களை ஒற்றைக் கீற்றுப் போல, ஒழுங்குபடுத்திக் கொள்வது, தலைமுடியைக் குட்டையாக வெட்டிக் கொள்வது போன்ற செயல்களில் ஈடுபடுவதைப் பெற்றோர்கள் கண்டு கொள்வதில்லை. நிர்மலா கண்டித்தாலும் அவள் கேட்பதில்லை.

அண்ணன் ராஜாவும், மாலாவும் ஒருவரை ஒருவர் குறை கூறிக்கொண்டு அடிக்கடி சண்டை போட்டுக் கொள்வார்கள். அவன், மாலா ஆண் நண்பனுடன் சேர்ந்து ஊர் சுற்றுவதையும், படம் பார்க்கத் திரையரங்குச் செல்வதையும் கண்டிக்கிறான். அதற்கு அதே நாள் அதே இடத்திற்கு நீயும் ஒரு பேண்ட் போட்ட பிசாசைக் கூட்டி வந்தாயே அது ஏன் என்று கேட்டு அவனை மடக்கி விடுகிறாள். இதை மறைந்து நின்று கேட்ட நிர்மலா, தன் அப்பாவிடம் கூறுகிறாள். ஆனால்,

பொறுப்பில்லாத அவள் அப்பா, “ஆமாம் நிர்மலா . . . மோசம் தான்! எல்லாக் கழுதைங்களுமே மோசம்தான்[5] என்று நிர்மலாவையும் குற்றம் சுமத்தியதால் வருத்தத்தோடு அறையைவிட்டு வெளியேறிவிடுறிாள்.

இச்சம்பவம் நடந்த சிறிது நாட்களில், மாலா பணக்காரப் பையன் அசோக் என்பவனுடன் ஓடிப்போய்த் திருமணம் செய்து கொள்கிறாள். தானாகத் தன் காதலினிடம் பெண்மையை இழந்து விடுகிறாள், பின்பு அவள் வளையைல்களை வாங்கி விற்றுச் செலவு செய்து, உணவக விடுதியில் தங்கிக் கணவன் மனைவியாக நேரம், காலம் என்றில்லாமல் வாழ்ந்து வருகிறார்கள். அசோக் ஒரு சுத்தப் பொறுக்கி. இது போல பல பெண்களுடன் இதே அறையில் தங்கி இருக்கிறான். அப்பெண்களைக் கடைசியில் விபசாரத் தொழிலில் ஈடுபடுபவர்களிடம் விட்டுவிட்டுச் சென்றுவிடுவான். அதே போன்று, மாலாவையும் விட்டுவிட்டுத் தலைமறைவாகி விடுகிறான். அங்கு மாலாவின் பெண்மை அழிக்கப்பட்டும், மிரட்டிச் சூடுகள் வைக்கப்பட்டும் பிறரால் அவள் பெண்மை களவாடப்படுகின்றன. ஒரு நாள் இதே போன்று துன்புறுத்தப்பட்டு வல்லுறவுக்கு உள்ளாக்கப்படும் போது, நிர்மலாவின் காதலன் கோபால் காவல்துறை அதிகாரிகளின் துணையுடன் மீட்டுக் கொண்டு வந்து அவளை அவள் வீட்டில் ஒப்படைக்கின்றான். அங்கு அவளை முதலில் ஏற்க மறுக்கின்றனர். அவளும் பைத்தியமாக மாறிவிடுகிறாள். நிர்மலா மருத்துவரிடம் காட்டி அவளைக் குணமடையச் செய்து விடுகிறாள். அதன்பின்பு எல்லாம் மறந்து புதிய வாழ்வை மாலா வாழத் தொடங்குகிறாள்.[6]

என்றும் தொடரும் பயணம் என்ற நாவலில், விசாலாட்சி மகளிர் கல்லூரியில் பேராசிரியையாகப் பணிபுரியும் சரோஜினியும், விஞ்ஞானி முத்துவும் சேலத்தில் எதிர்

எதிர் வீட்டில் வசித்து வரும் போதே இருவருக்கும் காதல் உருவாகி, அது பத்தாண்டுகளாகத் தொடர்கிறது.

சரோஜினியின் அப்பா, அம்மா, அண்ணன், தம்பி எல்லோரும் இவர்கள் காதலை ஏற்க மறுத்து, வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிக்கின்றனர். பெற்றோர் பார்க்கும் மாப்பிள்ளை “பூவா வெச்சிக்கிறேன், பொன்னா வெச்சிக்கிறேன்”[7] என்று கூறியபோதும் வந்த சம்பந்தத்தையெல்லம் மகள் உதறித் தள்ளுவதையெண்ணி அப்பா அம்மா இருவரும் மனசு வெறுத்து விட்டுவிடுகிறார்கள். அதன் பின் பத்து ஆண்டுகள் கழித்து வெளிநாட்டில் இருந்து திரும்பிய விஞ்ஞானி முத்துவைக் காதல் திருமணம் செய்து வாழ்ந்து வருகிறாள்.

கண்ணுக்குள் நூறு கவிதை எனும் நாவலில் பொன்னாத்தாவின் ஒரே மகள் மோகனா. மிகவும் செல்லமாக வளர்க்கப்படுவதால், ஊதாரியாகவும் திரைப்படத்தில் பைத்தியமாகவும் அலைந்து திரிந்து கொண்டிருக்கும் போது, அவளின் ஊருக்குப் படக்குழுவினர் வருகின்றனர். அந்தப் படக்குழுவினருள் ஒருவரான சோம சேகர், மோகனாவின் அழகில் மயங்கி அவளைத் தன் காதல் வலையில் வீழ்த்துகிறான்.

மோகனாவின் அம்மா பொன்னாத்தா, அவள் ஏற்கனவே பண்ணையாரின் மகன் கதிர்வேலுவின் காதலில் விழுந்து ஏமாந்ததால், தன் மகளின் காதலுக்கு மிகவும் எதிர்ப்பு தெரிவிக்கிறாள்.

இதையறிந்த மோகனா, சோம சேகரின் உதவியுடன் தன் அம்மாவின் பழைய வாழ்க்கையைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொண்டு, தன் வளர்ப்பு அப்பா தங்கதுரையின் பெயரில் தொண்டு நிறுவனம் நடத்திச் சேவை செய்ய ஆரம்பிக்கிறாள். அவளின் காதல் கனவில் வளருகிறது. சோம சேகரும் அதே கனவுகளோடு வாழ்வைத் தொடருகிறான்.[8]

பொறுத்திரு பூ மலர நாவலில், பூவிழி கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போது, பெண்ணைத் துன்புறுத்தும் கயவனை ஆடவர்கள் யாரும் தட்டிக் கேட்காத நிலையில், இவள் துணிந்து சண்டை போட்டு அப்பெண்ணைத் துன்பத்தினின்று காப்பாற்றுகிறாள். இதை அறிந்த சலங்கைகள் பத்திரிக்கையில் பணிபுரியும் இமயவரம்பன் பேட்டி காணுகிறான். அப்பேட்டி இடம்பெற்றுள்ள கருத்துக்களைப் பற்றிய விமர்சனங்களை அறிவதற்காக மறுபடியும் வருகிறான், இப்படியாக பல தடவை வரும்போது ஒருவரை ஒருவர் விரும்ப ஆரம்பிக்கின்றனர். வெளியிடங்களில் ஊர் சுற்றிவிட்டு வீட்டிற்கு வரத் தாமதமானால் இமயவரம்பன் கொண்டு வந்துவிட வருகின்றான். மகளின் இத்தகைய செயலைச் சற்றும் எதிர்பாராத பூவிழியின் அப்பா, அவர்களின் காதலுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார். ஆனால் பூவிழி தந்தையின் எதிர்ப்பையும் மீறி இமயவரம்பனைத் தொடர்ந்து காதலித்து வருகிறாள்.[9]

### 6.2.2 சம்மதத்தில் தொடரும் காதல்

அரசு மணிமேகலையின் பத்துப் படைப்புகளுள், கனவு சுமக்கும் கண்கள் நாவலில் நளினி – நந்தகோபால் ஆகிய இருவரின் காதல் பற்றிய புனைவுகளும், பூவே இளம் பூவே நாவலில் சொர்ணா – ரமே ஆகிய இருவரின் காதல் பற்றிய புனைவுகளும், பொழுது ஒரு நாள் புலரும் நாவலில் அமுதா – மூர்த்தி ஆகியோரின் காதல் பற்றிய புனைவுகளும், காத்திருங்கள் காலம் வரும் நாவலில் நிர்மலா – கோபால் ஆகிய இருவரின் காதல் பற்றிய புனைவுகளும் எங்ஙனம் புனைவு பெற்றுள்ளன என்பதனை இனிக் காணலாம்.

கனவு சுமக்கும் கண்கள் நாவலில் நளினி என்ற இளம் விதவைப் பெண், அம்மா, அண்ணனோடு முல்லைவனம் கிராமத்தில் வசித்து வருகிறாள். கணவனை

இழந்து, பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்து, சென்னையில் உள்ள ஒரு கல்லூரியில் வேலைக்குச் சேர்ந்துவிட்டு, வீட்டிற்கு வருகின்ற பொழுது, அந்த ஊரில் புதிதாகக் குடியேறியுள்ள நந்தகோபால் அவளைப் பார்க்கிறான். ஏற்கனவே மங்களா என்ற பெண்ணுடன் திருமணமாகி விவாகரத்துப் பெற்றிருப்பதால் அவள் அழகைக் கண்டு ரசிக்கின்ற பொழுது, அவள் கழுத்து வெறுங் கழுத்தாக இருப்பதைக் கண்ணீர் மல்கப் பார்க்கின்றான்.[10]

தன் நண்பன் ரங்கநாதனின் தங்கை நளினிக்கு எப்படியாவது ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று விரும்பி, அவர்கள் இனத்தைச் சேர்ந்த ஓர் இளைஞனை ஏற்பாடு செய்கிறான். இதனை அறிந்த ரங்கநாதனும், அம்மாவும் சந்தோஷப்படுகிறார்கள். ஆனால் சமூக சேவையில் ஈடுபட்டுத் தன் ஊரையே சிறப்பாக மாற்றிக் கொண்டிருக்கும் நந்த கோபாலையே திருமணம் செய்து கொள்வதாக விருப்பம் தெரிவிக்கிறாள். இந்நிலையில் நந்தகோபாலின் சமூக சேவைச் செயல்பாட்டினைப் பிடிக்காத வடிவேலு என்பவர், ஆட்களை வைத்து வெட்டி விடுகிறார். இச் செய்தியைத் தன் தம்பி மூலம் அறிந்து கொண்ட நளினி, வேகமாக ஓடிச்சென்று, குற்றுயிரும், குலையுயிருமாகக் கிடக்கும் நந்தகோபாலைப் புரட்டித் தன் மடியில் போட்டுக் கொள்கிறாள். அவளின் இது போன்ற பல பாசமான செயல்கள், ஊராருக்கு இது நாள் அறியாத உண்மையை உணர்த்தி நின்றன. பின்பு நந்தகோபாலைச் சென்னையில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்கிறார்கள். தீவிர சிகிச்சைக்குப் பிறகு உடல் நலம் தேறி வருவதையும், மற்றவர்களின் நலம் குறித்து விசாரித்ததையும் அண்ணன் ரங்கன் வீட்டில் சொல்லும் போது, தன்னைப் பற்றி ஏதாவது விசாரித்தாரா? என்ற ஆர்வத்தோடு நளினி கேட்கிறாள். நந்தகோபாலைவிட நளினிதான் அவரைச் சுற்றிச் சுற்றிக் காதலித்தவள். இப்பொழுது நந்தகோபாலைப் பிரிந்து இருக்க விடாமல் காதல் வேதனையை அனுபவிக்கிறாள்.

நந்தகோபால் குணமடைந்த பிறகு, நளினியை முறைப்படிப் பெண் கேட்டுக் காந்தி சிலைக்கு முன்னால் நின்று நளினியை முறைப்படித் திருமணம் செய்து கொள்கிறான்.[11]

பூவே இளம் பூவே என்ற நாவலில் சொர்ணா - ரமே பற்றிய காதல் புனைவுகள் இடம்பெற்றுள்ளன. ராஜலிங்கத்தின் ஒரே மகள் சொர்ணா, கல்லூரியில் படித்துக் கொண்டு இருக்கிறாள். ராஜலிங்கம் திடீரென்று ஒரு நாள் விபத்தில் சிக்கிக் கொள்கிறார். அதுவரை சொந்தம் கொண்டாடிய காந்திமதியம்மாளிடம், பண உதவி கேட்டுச் சொர்ணா போகிறாள். ஆனால் அங்குக் காந்திமதியம்மாளின் நடவடிக்கை பிடிக்காமல் வீட்டிற்குத் திரும்பும் போது, பேருந்து நிலையத்தினுள் வைத்து ஒரு கயவன் கையைப் பிடித்து இழுத்துத் தகராறு பண்ணுகிறான். அவனிடமிருந்து ரமே என்ற இளைஞன் காப்பாற்றுகிறான். அதனால் அவன் மீது சொர்ணாவுக்குக் காதல் வருகிறது. அவனும் அவளை விரும்புவதால் அடிக்கடி வெளியிடங்களில் சந்தித்து அன்பைப் பரிமாறிக் கொள்கிறார்கள். முதலில் இவர்கள் காதலை எதிர்த்த சொர்ணாவின் அப்பா ராஜலிங்கம், பின்பு தன் நண்பனின் மகன் என்பதை அறிந்த பின்பு, அவனிடம் மட்டும் தனக்கு விருப்பம் தான் என்று தெரிவித்துவிட்டு, இதனைச் சொர்ணாவிடம் கூற வேண்டாம், அவள் தொழில் நிர்வாகம் நன்கு கற்ற பிறகு திருமணம் வைத்துக் கொள்ளலாம் என்று கூறிவிடுகிறார். இதனை அறியாத சொர்ணா, எப்பொழுதும் போல் இயல்பாக வாழ்ந்து வருகிறாள்.[12]

விதவையான அமுதா, ராம் அண்ட் ராம் தொழில் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறாள். உடன் பணிபுரியும் மூர்த்தி என்ற இளைஞன், அமுதா ஓர் விதவை என்பதை அறியாது திருமணம் செய்து கொள்ள விருப்பம் தெரிவிக்கிறான். முதலில் ஏற்க மறுக்கிறாள். பின்பு பொறுப்பற்ற தன் அப்பாவினால்தான், தன் வாழ்க்கை இப்படி

ஆனது என்று எண்ணி வாழ்ந்து கொண்டு இருக்கும் போது, தனது தங்கை தாமரையின் கணவன் செய்த தவற்றுக்காக விசாரணை செய்ய வந்த காவல் துறை அதிகாரி கூறியதைக் கேட்ட அமுதா, மூர்த்தியின் காதலை ஏற்று, மூர்த்தியின் அம்மாவைச் சந்தித்துச் சம்மதம் பெற்றுக் காதல் வானில் சிறகடிக்கிறாள்.[13]

பார்வதியம்மாள் மகளிர் கல்லூரியில் பேராசிரியையாக நிர்மலா பணிபுரிந்து வருகிறாள். பொறுப்பற்ற பெற்றோர்க்கு மகளாகப் பிறந்ததால் வீட்டுப் பொறுப்பை நன்கு கவனித்துக் கொண்டு வாழ்ந்து வருகிறாள். ஒரு நாள் அவள் கல்லூரியிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கும் பொழுது, பேருந்தினுள் தகாத செயலில் ஈடுபட்ட ஒருவனைத் தைரியமாகத் தட்டிக் கேட்கிறாள். அதனைப் பின் இருக்கையில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த கோபால், அவள் தவற விட்டுவிட்டுச் சென்ற குடையை எடுத்துக் கொடுப்பதற்காக வேகமாக வருகின்றான். குடையைக் கொடுத்துவிட்டு ஆட்டோகிராப் தாங்க என்று கேட்கிறான். பின்பு அவளிடம் தன் காதலையும் வெளிப்படுத்துகின்றான். அவனிடம் “முட்செடி நடுவே ஓர் முல்லைச் சரம்”[14] என்று நினைத்து அவன் காதலை ஏற்கத் தயங்குகிறாள். வியாபாரம் தொடர்பாகக் கோபால் வெளியூர் சென்றிருந்த போது, தங்கை மாலாவை மிகப்பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றியதால், நிர்மலாவுக்குக் கோபால் மீது இன்னும் காதல் அதிகமாகிறது. நிர்மலாவின் அண்ணன் சிவாவிடம் கோபால் தொடர்பு கொண்டு பெண் கேட்டதை நிர்மலாவிடம் சிவா கூறுகிறான். தங்கையின் விருப்பம் அறிந்து பிறகு கோபாலைப் பார்க்க கிளம்பிச் சென்ற பிறகு, கோபால் விபத்தில் சிக்கிக் கொண்ட செய்தியை அறிந்து, திரும்பி வந்து தங்கையையும் உடன் அழைத்துச் செல்கிறான். அங்கு கோபால் நிர்மலாவைப் பார்த்து, “உன் தைரியமும், துணிச்சலும்தான் உன் மேலே ஒரு ஈடுபாட்டை ஏற்படுத்திச்சி . . . அந்தத் தைரியம் கடைசி வரையிலும் துணை வரணும்[15] என்று கூறுகிறான்.

### 6.2.3 தோல்வியில் முடியும் காதல்

அரசு மணிமேகலையின் பத்துப் படைப்புகளுள், நாளை நான் ஜெயிப்பேன் என்ற நாவலில் தியாகு - உஷா ஆகிய இருவரின் காதல் பற்றிய புனைவுகளும், கண்ணுக்குள் நூறு கவிதை என்ற நாவலில் பொன்னி - கதிர்வேல் ஆகிய இருவரின் காதல் பற்றிய புனைவுகளும், பொறுத்திரு பூ மலர நாவலில் காஞ்சனாவின் காதல் பற்றிய புனைவுகளும் எங்ஙனம் புனைவு பெற்றுள்ளன என்பதனை இனிக் காண்போம்.

நாளை நான் ஜெயிப்பேன் நாவலில் தியாகுவும், உஷாவும் எதிர் எதிர் வீட்டைச் சேர்ந்தவர்கள். தியாகுவுக்கு உஷா மீது எப்பொழுதுமே ஒரு மானசீகமான காதல் உண்டு. தனக்கு வேலை எதுவும் இல்லையாதலால், வேலை கிடைத்த பிறகு பெண் கேட்டுக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொள்கிறாள். அது போல் உஷாவும் தியாகு மேல் காதல் கொண்டிருந்தாள். சந்தர்ப்ப வசத்தால் பெற்றோராலே உஷா விபச்சாரத்திற்குத் தள்ளப்படுகிறார். தான் ஒரு அழுகிப் போன பழம், அதை யாருக்கும் தின்னக் கொடுக்கக் கூடாது என்று கூறி அவன் காதலை ஏற்க முன் வர மறுக்கிறாள்.[16]

கண்ணுக்குள் நூறு கவிதை என்ற நாவலில் முத்தையனின் ஒரே மகள் பொன்னாத்தாள். முத்தையன் பண்ணையாரின் விவசாயப் பண்ணையைக் காவல் செய்து கொண்டிருக்கும் போது, உடல் நலப் பாதிப்பு ஏற்பட்டு விட்டதை அறிந்த சின்னப் பண்ணை கதிர்வேல் பண்ணை வீட்டில் தங்க வைக்கிறான். அந்நேரம் முத்தையனுக்கு அவன் மகள் பொன்னாத்தாள், உணவு கொண்டு வருகிறாள். அவளின் அழகில் மயங்கிய கதிர்வேல், அவளைத் திருமணம் செய்து கொள்வதாகக்

கூறி ஏமாற்றி, வல்லுறவில் ஈடுபட்டுவிட்டு, அவளைக் கைவிட்டுவிட்டுப் பெற்றோர் பார்க்கும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு வாழ்கிறான்.[17]

காஞ்சனா கல்லூரியில் படிக்கும் போது, பணக்கார இளைஞர்களோடு சுற்றித் திரிவாள். அவன் அவள் கற்பைச் சூறையாடிவிட்டு, அவனுடைய கூட்டாளியான வாகன ஓட்டுநரிடம் விட்டு விட்டு ஓடிவிடுகிறான். இதனால் அவள் குடும்பம் சீரழிந்து விடுகிறது. ஓட்டுநருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது, அவள் மற்ற ஓட்டுநர்களுக்கும் விருந்தாக்கப்படுகின்றாள். அதனால் தீராத நோயினைச் சுமந்து கொண்டு வாழ்வில் இன்னலுறுகிறாள்.[18]

## 6.3 திருமணம் பற்றிய புனைவுகள்

அரசு மணிமேகலை படைத்துள்ள பத்து நாவல்களுள், திருமணம் என்ற திருமணச் சடங்கு நிகழ்வுப் புனைவுகள் சிறப்பிடம் பெறுகின்றன. இத்திருமணச் சடங்கு பற்றிய இவர் தம் புனைவுகளை,

- ❖ காதல் திருமணம்
- ❖ நிச்சயிக்கப்பட்ட திருமணம்
- ❖ விதவைத் திருமணம்

என வகைப்படுத்திக் காணலாம்.

### 6.3.1 காதல் திருமணம்

அரசு மணிமேகலை படைத்துள்ள பத்து நாவல்களுள், என்றும் தொடரும் பயணம் எனும் நாவலில் சரோஜினி - முத்து ஆகியோரின் காதல் திருமண வாழ்வு பற்றிய புனைவுகளும், காத்திருங்கள் காலம் வரும் எனும் நாவலில் மாலா - அசோக் ஆகியோரின் காதல் திருமண வாழ்வு பற்றிய புனைவுகளும், பொறுத்திரு பூ மலர

எனும் நாவலில் பூவிழி இமயவரம்பன் ஆகியோரின் காதல் திருமண வாழ்வு பற்றிய புனைவுகளும், கனவு சுமக்கும் கண்கள் என்ற நாவலில் நளினி - நந்தகோபால் ஆகியோரின் காதல் திருமண வாழ்வு பற்றிய புனைவுகளும், காஞ்சனாவின் காதல் திருமண வாழ்வு பற்றிய புனைவுகளும் எங்ஙனம் பதிவு பெற்றுள்ளன என்பதனை இனிக் காண்போம்.

என்றும் தொடரும் பயணம் என்ற நாவலில் பெற்றோரின் எதிர்ப்பையும் மீறிப் பத்து ஆண்டுகள் காத்திருந்து விஞ்ஞானி முத்துவைச் சரோஜினி திருமணம் செய்கிறாள். ஆனால், விஞ்ஞானி முத்து அவளோடு சிறிது காலம் வாழ்ந்துவிட்டு, வேறொரு பெண்ணுடன் வாழ ஆரம்பிக்கிறான். இதைத் தட்டிக் கேட்ட சரோஜினியை உணவில் விஷத்தைக் கலந்து கொல்லப் பார்க்கிறான். அம்முயற்சி தோழியின் கணவன் மருத்துவர் வசந்த் மூலம் முறியடிக்கப்படுகிறது. பின்பு அவளை ஆள் இல்லாத இடத்துக்கு ஏமாற்றி அழைத்துச் சென்று சொத்துக்களை அபகரிக்கக் கையெழுத்துப் போடச் சொல்லிக் கொடுமைப்படுத்துகிறான். அங்கு வந்த காவல் துறை அதிகாரிகள், சரோஜினியை அவனிடமிருந்து காப்பாற்றுகிறார்கள். “சரோ வாழ்க்கை நூலறுந்த பட்டம் போல ஆனது தான் மிச்சம்”[19] என்று காதல் திருமணம் பற்றிய புனைவுகள் புனையப்பட்டுள்ளமையை அறிய முடிகிறது.

காத்திருங்கள் காலம் வரும் நாவலில், நிர்மலாவின் தங்கை மாலா பெற்றோருக்குத் தெரியாமல் அசோக் என்பவனுடன் ஓடிப்போய் திருமணம் செய்து கொள்கிறாள். அவன் பெரிய பணக்காரன். அதனால் ஒரு விடுதியில் வாடகைக்கு அறை எடுத்து, அவளை அங்குத் தங்க வைக்கிறான். அங்கு இருவரும் கணவன் மனைவியுமாக வாழ்கிறார்கள். பணச் செலவுக்காக மாலாவின் வளையல்களைக் கழற்றி விற்கப் போவதற்கு முன், விபசாரத் தொழில் செய்யும் நண்பனிடம்

விட்டுவிட்டுச் சென்றவன் திரும்பி வராமல் போய்விடுகிறான். அவன் இதுபோலப் பல பெண்களை, பல நேரங்களில் அழைத்து வந்துள்ளான். இது போலக் கடைசியில் கைவிட்டுவிட்டுச் சென்று விடுவான். அந்தக் கயவர்கள் கூட்டத்திடம் இருந்து கோபால் மாலாவை மீட்டு வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான். இச்சம்பவத்தால் மாலாவின் மனநிலை பாதிக்கப்படுகிறது. பின்பு மருத்துவர்களின் சிகிச்சைக்குப் பிறகு, கோபால் அவளை ஊட்டியில் உள்ள ஒரு பள்ளியில் வேலைக்குச் சேர்த்து விடுகிறான். அங்கிருந்து சிறப்புப் பயிற்சிக்காகப் பள்ளி நிர்வாகம் டென்மார்க் அனுப்புவதற்கு முடிவு செய்து அனுப்பி வைக்கிறது.[20]

பொறுத்திரு பூ மலர நாவலில் பூவிழியைச் சலங்கைகள் பத்திரிக்கையில் பணிபுரியும் இமயவரம்பன் பல எதிர்ப்புகளையும் மீறித் திருமணம் செய்து கொள்கிறான். பூவிழி இமயனின் லட்சியத்தை நிறைவு செய்பவளாகப் பாரதிதாசன் தொழிற்கூடம் ஒன்றை நிறுவி, பல பெண்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்கிறான். பின்பு, உறவுகளை இணைத்து வைக்கும் விதமாக, இமயனின் பெற்றோரைத் தொழிற்கூடத்தின் உரிமையாளராக்கிவிடுகிறாள். பேசாத இருவரையும் ஒருவர் ஒருவருடன் பேச வைக்கிறாள்.[21]

நந்தகோபால், நளினியைக் காதல் திருமணம் செய்து கொண்ட பிறகு, முல்லைவனத்தில் ஒரு மருத்துவமனை கட்டப் போறோம். சென்னையில் ஓர் அனாதை இல்லம். நாம் ஊருக்கே ஓர் உதாரணமாக வாழ்ந்து காட்டப் போறோம் என்று கூறியவுடன் நளினி மெல்லப் புன்னகை செய்கிறாள்.

### 6.3.2 நிச்சயிக்கப்பட்ட திருமணம்

அரசு மணிமேகலை படைத்துள்ள பத்து நாவல்களுள், மனிதருள் இவர் மகாத்மா எனும் நாவலில் உமா – ரகு ஆகியோரின் நிச்சயிக்கப்பட்ட திருமண வாழ்வு

பற்றிய புனைவுகளும், பொழுது ஒரு நாள் புலரும் என்ற நாவலில் தாமரை - விஜயரங்கன், அமுதா - கணவன் ஆகியோரின் நிச்சயிக்கப்பட்ட திருமண வாழ்வு பற்றிய புனைவுகளும் எங்ஙனம் புனைவு பெற்றுள்ளன என்பதனை இனிக் காணலாம்.

மனிதருள் இவர் மகாத்மா எனும் நாவலில் உமா - ரகு இவர்களின் திருமணம், இரு வீட்டாரின் சம்மதத்துடன் வெகு விமரிசையாக நடைபெறுகிறது. அதனால், மணமக்கள் இருவரும் மகிழ்ச்சிக் கடலில் நீந்துகிறார்கள். இத்திருமண விழாவிற்கு என்று மணப்பெண் வீட்டில் எந்த விதமான வரதட்சணையும் வாங்காமல், தன் மனைவியின் நகைகளைக் கொடுத்துப் போடச் சொல்லித் தன் மருமகளை வெங்கடே அழகு பார்க்கிறார்.

உமாவும் புகுந்த வீட்டில் மருமகளாக இல்லாமல் மகளாகவே வாழ்ந்து வருகிறாள். கணவன் ரகுவும் தன் தாயை மனைவி வடிவத்தில் பார்ப்பதாக நினைத்துப் பெருமைப்படுகிறான்.[23]

பொழுது ஒரு நாள் புலரும் நாவலில், தாமரை - விஜயரங்கன் என்பவர்களின் திருமணம் வீட்டில் உள்ள பெற்றோரான பார்வதி - வெங்கடேஷனின் ஏற்பாடுகளில் நடைபெறுகிறது. ஆனால், இத்திருமண ஏற்பாடுகள் எதிலும் அமுதாவுக்கு உடன்பாடு இல்லை. விஜயரங்கனை முதலில் அமுதா பார்க்கும் பொழுதே, அவன் பார்வை அவள் உடல் எங்கும் சென்றதை அவள் உள்ளுணர்வு அவளுக்குக் காட்டிக் கொடுத்தது.

என் வாழ்க்கைதான் இப்படி நாசமாகிப் போனது, தங்கையின் வாழ்க்கையாவது நன்றாக இருக்க வேண்டும் என்று கடவுளிடம் அமுதா வேண்டிக் கொள்வாள். ஆனால் அவள் எதிர்பார்த்தது எதுவும் நடைபெறாமல் போய்விடுகிறது. அவன் தாமரையைப் போன்று பல பெண்களைத் திருமணம் முடித்துவிட்டு, கிடைத்த

நகையையும் பணத்தையும் சுருட்டிக் கொண்டு தலைமறைவாகி விடுவான். அதே போன்று தாமரையையும் விட்டுவிட்டுச் சென்றுவிடுகிறான். தாமரை அவனால் உருவான குழந்தையை வளர்த்துக் கொண்டு வாழ்ந்து வருகிறாள்.[24]

பொழுது ஒரு நாள் புலரும் நாவலில், அமுதாவுக்குப் பொறுப்பற்ற பெற்றோர்களால் திருமணம் நடத்தி வைக்கப்படுகிறது. அவள் கணவன் குடித்துவிட்டு அமுதாவை அடித்துத் துன்புறுத்துவான். அவன் அவளைப் படுக்கை அறைக்கு அழைத்த விதமே எவளோ ஒரு வேசியை அவசர அவசரமாக அழைப்பது போலவே இருந்தது.[25] மேலும் கொட்டும் மழையில் வெளியே தள்ளித் தாழ் இடுதல், தலைமுடியை ஒரு சுழற்றுச் சுழற்றிச் சுவரில் தலையை மோத வைத்தல் என இதுபோல் பல மோசமான செயல்பாடுகளில் ஈடுபடுவான். ஒருநாள், நண்பர்கள் முன்னிலையில் அமுதாவை அடித்த உடன், அவள் கீழே விழுந்து விடுகிறாள். அவளைத் தூக்கிவிட நண்பன் ஓடிவந்து தூக்குகிறான். அவள் பதறிப் போய் எழுந்து, சமையலறைக்குள் ஓடி ஒளிந்து கொள்கிறாள். அங்கும் வந்து எட்டி உதைக்கிறான். "ஏண்டி! அவன் எவ்வளவு பெரிய மனுஷன்! அவன் ஓடி வரான் தூக்கிவிடறதுக்கு! உள்ளே போய் ஓடிப் போய் நின்னுக்கிறே"[26] என்று கூறுகிறான். கடைசியில் அவசர அவசரமாக ஆட்டங்களை முடித்துவிட்டு இறந்து விடுகிறான்.

### 6.3.3 விதவைத் திருமணம்

அரசு மணிமேகலை படைத்துள்ள பத்து நாவல்களுள், பொழுது ஒரு நாள் புலரும் என்ற நாவலில் அமுதா – மூர்த்தி ஆகியோரின் விதவைத் திருமண வாழ்வு பற்றிய புனைவுகளும், கனவு சுமக்கும் கண்கள் என்ற நாவலில் நளினி – நந்தகோபால் ஆகியோரின் விதவைத் திருமண வாழ்வு பற்றிய புனைவுகளும், என்றும் தொடரும் பயணம் எனும் நாவலில் பொன்னாத்தா – தங்கத்துரை ஆகியோரின் விதவைத்

திருமண வாழ்வு பற்றிய புனைவுகளும் எவ்வாறு புனையப்பட்டுள்ளன என்பதனை இனிக் காணலாம்.

விதவை அமுதாவை மூர்த்தி தன் வீட்டிற்கு கூட்டிட்டுப் போய் அம்மாவிடம் அறிமுகப்படுத்துகிறான். அங்கு அவளுக்கு வண்ண ஆடைகளைக் கொடுத்து மங்களப்படுத்துகிறாள். “சீக்கிரமா கல்யாணம் பண்ணிக்கிட்டு எனக்கு ஒரு பேரப் பிள்ளையை பெத்துக் கொடு[27] என்று பாசமாகக் கூறுகிறாள் மூர்த்தியின் தாய்.

நந்தகோபால் மருத்துவமனையிலிருந்து உடல் நலம் குணமடைந்த உடன், “என்னாலே உன்னைப் பார்க்காம ஒரு நிமிஷம் கூட இருக்க முடியலே . . . உன் பாசம், உன் காதல் போன உயிரை மீட்டுக் கொண்டு வந்து விட்டது. வா! வா! நளினி”[28] என்று கூறுவதோடு, நாங்க எல்லோரும் உன்னைப் பெண் கேட்டு வந்துள்ளோம். உனக்கு மகிழ்ச்சி தானே என்று கேட்கிறான். பின்பு விதவை நளினியினை மணப்பெண் போல அலங்கரித்து, அழைத்து வருகிறார்கள். பின்பு இருவரும் காந்தி சிலை முன்பாகத் திருமணம் செய்து புதிய வாழ்வைத் தொடங்குகிறார்கள்.

பொன்னாத்தாள் கதிர்வேலுவை நம்பி ஏமாந்து கற்பைப் பறிகொடுத்ததோடு மட்டுமல்லாமல், அவன் உயிரையும் சுமந்து வருவதால், அவளை வாழ விடாமல் பல நெருக்கடிகளை வேலையாள் மாரி மூலம் பண்ணையார் கொடுக்கிறார். இது பற்றி மக்கள் எதுவும் கேட்காமல் ஊமைகளாய் நிற்கிறார்கள். ஆனால், “பட்டாளத்துக்காரர் நானே பொன்னியைக் கலியாணம் கட்டிக்கிறேன். உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா? என்று கேட்டவுடன் பொன்னிய கன்னிப் பெண்ணாகக் கல்யாணத்துக்கு நிக்கிற ரோஜாப் பூக்களைப் பார்த்தே யாரும் இந்தக் கேள்வியைக் கேட்பதில்லையே! எருமை மாட்டால் மிதிபட்டு இதழ் கிழிபட்டு, சேற்றில் கிடக்கிற தன்னிடமா இந்தக்

கேள்விப் பூ நீட்டப்படுகிறது”[29] என்று எண்ணி வியப்பால் பெருமிதமாகத் தங்கதுரையை பார்த்துக் கொண்டு இருக்கிறாள்.

ஒரு நாள் இரவில் பட்டாளத்துக்காரர் தங்கதுரை உயிரினும் மேலாகக் கருதும் அண்ணாவின் படத்துக்கு முன்பாக வைத்துப் பொன்னியின் கழுத்தில் மாலை அணிவிக்கிறார். புன்னகை ததும்ப மஞ்சள் கயிற்றினை எடுத்துப் பொன்னியின் கழுத்தில் கட்டித் தன் மனைவியாக்கிக் கொள்கிறான்.[30]

## 6.4 ஒழுக்க நெறிகள் சார்ந்த புனைவுகள்

### 6.4.1 கணவனுக்கு மனைவி கீழ்படிதல்

கணவனிடம் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக சரோஜினி எச்சூழலிலும் தயாராக இருக்கிறாள். கடையில் காய்கறி வாங்குவதற்காகச் செல்லும் பொழுது, வழியில் இடைமறித்து, ‘‘வாங்களேன் சரோஜினிம்மா வீட்டுக்கு! ஒரு அஞ்சி நிமிஷம் பேசிட்டுப் போங்க”[31] என்று கேட்கும் போது, ‘‘வீட்டுக்காரரிடம் ஐந்து நிமிடத்தில வந்து விடுகிறேன்னு சொல்லிட்டு வந்தேன், அதனால எதிர்பார்ப்பாரு தாமதமாயிட்டுன்னா ரொம்ப பயப்படுவார். அதனால போயிட்டு வேறொரு நாள் உங்களை வந்து பார்க்கிறேன்”[32] என்று கூறிவிட்டுச் சென்று விடுகிறாள்.

கணவன் முத்துவிற்கு உணவு எப்பொழுதும் சூடாக இருக்க வேண்டும் என்பதால், அதற்கேற்பக் கீழ்ப்படிந்து தயார் செய்து கொடுப்பதாக ஆசிரியர் புனைந்துள்ளார்.

### 6.4.2 காலில் விழுந்து வணங்குதல்

ஒவ்வொரு பெண்ணும், தான் திருமணம் முடித்து, தன் பிறந்தகத்தைவிட்டுச் செல்லும் போது, வீட்டில் இருக்கும் பெரியவர்களிடம் காலில் விழுந்து வணங்கித் தன்

பணிவை நன்றிக் கடனாகச் செலுத்திவிட்டுச் செல்வாள். அது போன்று, அரசு மணிமேகலை படைத்துள்ள பொழுது ஓர் நாள் புலரும் நாவலில் அமுதாவின் தங்கை பெற்றோர்களின் காலில் வணங்கிச் செல்கிறாள். ஆனால் அதே நேரத்தில், தாமரை தன் உட.ன்பிறந்த மூத்த சகோதரியான அமுதாவை, அபசகுனம் என்று கருதி, நேரில் கூட பார்க்காமல் செல்கிறாள். இதைப் பார்த்த வேலக்காரக் கிழவி, ''ஒண்ணுமில்லே அமுதாம்மா! உன்னை ஆண்டவன் இந்தக் கோலம் பண்ணிட்டானே. நீ இருக்க வேண்டிய நிலைமையிலே இருந்தியானா உன்னையும், ஒன் வீட்டுக்காரரையும் நிறுத்தி வைச்சி, கால்லே விழுந்து ஆசீர்வாதம் வாங்காமே போவுமா அந்தப் பொண்ணு[33] என்று தங்கையால் அக்கா ஒதுக்கப்படுவது கண்டு வேலைக்காரக் கிழவி ஆயா அவதியுறுவதாகப் புனைந்துள்ளார்.

### 6.4.3 பெண் பணிவிடை செய்பவளாக இருத்தல்

தியாகு தன் மன விருப்பத்தை வழி தப்பிப் போன உஷாவிடம் கூறும் பொழுது, உஷா நான் உங்களுக்கு என்ன கடமைகளெல்லாம் செய்வேன் என்று கூறும்பொழுது, ''நீங்க வேலை முடிஞ்சி வீட்டுக்கு வரும்போது, என்னங்க இன்னிக்கு இவ்வளவு நேரம்னு கேட்டுக்கிட்டே, நான் காபி கொண்டு வந்து கொடுப்பேன். முகம் கழுவிக்கிட்டு வாங்கன்னு சொல்வேன். நானே சீப்பு எடுத்துத் தலையை வாரி விடுவேன். ஒரு பெண், மனைவி என்ற நிலையில் இருந்து என்னென்ன பணிவிடைகள் செய்ய வேண்டுமோ அந்த பணிவிடைகள் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் செய்வேன் என்று தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறாள்.''[34] ஆனால் அவள் வாழ்க்கை பணப் பேராசை பிடித்த பெற்றோர்களால் திசை மாறிப் போனதால் அவ்வாசைகள் எல்லாமே நிறைவேறாமல் போய்விடுமே என்று தியாகுவிடம் கூறுவதோடு மட்டுமன்றித் தன் வாழ்வையே மாய்த்துக் கொள்கிறாள்.

### 6.4.4 நடை, உடை பாவனை

கல்லூரியில் பயிலும் மூன்றாமாண்டு மாணவியர் காஞ்சனா, அர்ச்சனா, கண்ணம்மா ஆகிய எல்லோரும் இணைந்து, புதிதாகக் கல்லூரியில் சேர்ந்துள்ள முதலாமாண்டு மாணவியரை வீண் வம்புக்கு இழுக்கிறார்கள். அப்பொழுது, அவர்களை அழகிப் போட்டியில் நடந்து வருவது போன்று ஒயிலாக நடந்து வரச் சொல்கிறார்கள். பூவிழியைப் பார்த்து, நல்ல தமிழ்ப் பெயரை வைத்துக் கொண்டு மால்டன் டிரெஸ் போடலாமா? என்ற உடன், பூவிழி அவர்களைப் பார்த்து, ‘‘பண்பாடுங்கறது ஆடைகளை மட்டிலுமே பொறுத்த விஷயம் இல்லையே . . . என் மனசுல தமிழ்ப் பண்பாடு நிறையவே இருக்குங்க’’ என்று கூறித் தான் தமிழ்ப் பண்பாட்டை மதிக்கும் தன்மையை எடுத்துச் சொல்வதாகப் புனையப்பட்டுள்ளமையைக் காண முடிகிறது.[35]

மங்கை என்ற பெண் ஆபாசமான ஆடை அணிவது தமிழ்ப் பண்பாட்டுக்கு எதிரானது, நாகரீகம் என்பது நம் அடிமனசிலே இருந்து வர வேண்டும் என்று கூறும் போது, ‘‘மார்டன் டிரெஸ் போட்டுக்கலாம். ஆனா ஆபாசமான டிரெஸ் பண்ணிக்கிறது ஒண்ணும் நாகரிகம் இல்லே. அதை புரிஞ்சிக்கோ நீ . . . ரோஸ் போட்டிருக்கிற டிரெஸ்ஸைப் பாரு . . . அப்படி குட்டைக் கவுன் தேவைதானா?. . . சர்க்கஸா பண்ணப் போற? ஷாப்பிங் தானே பண்ணப் போற அதனால ஆடையில் ஆபாசம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்’’[36] என்று சொல்கிறார்.

### 6.4.5 பாரா முகங்கொண்ட நகரப் பண்பாடு

கிராமங்களில் சிறு பிரச்சனை என்றாலே உதவிக்கு ஆட்கள் வந்துவிடுவார்கள். ஆனால், சென்னை போன்ற பெரு நகரங்களில் யாரும் அவ்வாறு எளிதில் உதவி புரிய முன்வருவதில்லை. பூவிழி, தன் தோழிகளுடன் கடைக்குச்

செல்லும் போது, ஓர் இளைஞன் கல்லூரி மாணவியுடன் தவறாக நடக்க முயற்சிக்கிறான். அந்த மோசமான இளைஞனிமிருந்து, தன் தோழியைக் காப்பாற்றுமாறு உதவி கேட்கிறாள்; இறைஞ்சினாள்; கெஞ்சுகிறாள். சாலையில் குறுக்கும் நெடுக்கும் போகிறவர்கள் நின்று வேடிக்கை பார்க்கத் தயாரானர்களே தவிர, ஒருவர்கூட தட்டிக் கேட்க முன்வரவில்லை என்று பூவிழி வருந்துகிறாள். “இப்படியா நகரத்து மக்கள் துணிச்சல் இல்லாமல் இருப்பார்கள். நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறமும் இன்றி வாழுகின்ற புழுக்களா?”[37] என்று பூவிழி சாடுகிறார்.

### 6.4.6 அறிவுரை

ஹவி டீச்சர், எல்லா மாணவிகளுக்கும் நற்பண்பைச் சொல்லிக் கொடுக்கிறார். “வகுப்பிலே மாணவர்கள் சிரித்த முகத்துடன் இருக்க வேண்டும், யாரும் முகத்தை உம்முன்னு தூக்கி வெச்சிக்கிட்டு இருக்கக் கூடாது. ஒருவர் அந்த மாதிரி இருந்தா அதே மாதிரி எல்லாரும் ஆயிருவாங்க. அதனால, நீங்க சிரிச்சிப் பாருங்க. அன்பா இருந்து பாருங்க. மரியாதையான வார்த்தைகளைச் சொல்லிப் பாருங்க. அப்படியே அத்தனை பேரும் மாறிடுவாங்க”[38] என்று அறிவுரை கூறுகிறார்.

### 6.4.7 பெரியோரை மதித்தல்

பூவிழி, கல்லூரி வளாகத்தைப் புதுப்பொலிவாய் மாற்றுவதற்காக ஆசிரியர்களைப் பார்த்துப் பேசினாலும், முதல்வரைச் சந்தித்துப் பேசினாலும் அவர்களிடம் மரியாதையாகவும், அன்பாகவும், பாசமாகவும் நடந்து கொள்வாள். அதனால், ஆசிரியத் தெய்வங்கள் பூவிழியைப் பார்த்து, “பூவிழி இப்படி துணிச்சலாகவே இருக்கட்டும். நல்ல பொண்ணு, ரொம்ப மரியாதையாவே பேசறா! பழகறா, இதே மாதிரி வந்தாள்ன்னா பெரிய தலைவரா, சமூக சேவகியா வாருவா”[39] என்று கூறி அவர்கள் ஆசி வழங்குகின்றனர்.

### 6.4.8 சகுனத் தடை

சமூகத்தில் ஒவ்வொரு காலத்திலும் சில சகுனத் தடைகள் இருந்து வருகின்றன. பூனை குறுக்கே செல்வது, தும்முவது, வாழாவெட்டி எதிரே வருவது போன்ற பல்வேறு சமூகத் தடைகள் சமூகத்தில் நிலவி வருவதை அறிய முடிகிறது. நாவலில் அமுதா என்ற பெண் விதவையாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். அவளின் அந்நிலைக்கு ஒரு விதத்திலே அவர்கள் பெற்றோர்களே காரணமாகின்றனர். அமுதாவின் தங்கை தாமரைக்குத் திருமண சுப நிகழ்ச்சி நடக்கும் போது, தாயே அவள் மகளை முன்னே வந்து நிக்கவிடாமல் பார்த்துக் கொள்கிறாள். பெற்ற தாயே மகள் விதவை ஆனதால் அபசகுனம் என்று ஒதுக்கும் நிலையினை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

தாமரையிடம், திருமணம் செய்து கொள்வதற்காகப் பார்த்திருக்கிற மாப்பிள்ளையை, உனக்குப் பிடிச்சிருக்கா இல்லையா? அப்பா அம்மா சொன்னாங்க என்பதற்காக சம்மதிக்க வேண்டாம் என்று அமுதா கூறியவுடன், தாமரை அமுதாவைப் பார்த்து, “நீ இப்படி ஆயிட்ட பிறகு உனக்கு எதுவுமே பிடிக்கிறதில்லை, அபசகுனம் மாதிரி பேசிக்கிட்டு இருக்க”[41] என்று கூறிவிடுகிறாள்.

### 6.4.9 அசோகவனத்துச் சீதை

காதலன் முத்து வெளிநாட்டில் தங்கி ஆய்வு செய்த பத்து ஆண்டுகள், அவன் நினைவிலேயே சரோஜினி அசோகவனத்துச் சீதையாக வாழ்ந்து வருகிறாள் என்று ஆசிரியர் புனைந்துள்ளார்.

### 6.5 மதம் சார்ந்த புனைவுகள்

அரசு மணிமேகலை இந்து மதத்தைச் சார்ந்தவர். மதம் பற்றிய விவாதத்தினையோ விமர்சனத்தையோ படைப்பில் முன் வைக்கவில்லை. ஆசிரியர் இந்து மதத்தின் மீது நம்பிக்கை கொண்டவராக இருப்பதால், சில படைப்புக்களில், அறக்கோட்பாடு, கற்புக் கோட்பாடு, ஊழ்வினை, நம்பிக்கை முதலானவற்றை அழுத்தமாகக் கூறிச் செல்கிறார்.

செண்பகராஜ பூபதியிடம் மிகுந்த நம்பிக்கைக்குரியவனாக ரமணன் பழகி, அவர் மகள் மதுமதியைத் தன் மனைவியாக்கி வாழும் போது, அவளின் நிர்வாகப் பொறுப்புகளில் உரிய அதிகாரம் செலுத்த இயலாமல் போவதால், மதுமதியைப் பல வழிகளில் கொடுமைப்படுத்துகின்றான். ஒரு கட்டத்தில் அவளைப் பைத்தியமடையச் செய்துவிட்டுச் சொத்தை அபகரிக்கத் திட்டமிடுகிறான். ஆனால், அவன் கனவு, கனவாகவே போகிறது. மதுமதிக்கு அவன் செய்த தவற்றுக்கு எந்தத் தண்டனையும் கிடைக்காமல் போகிறது. ஆனால், அவன் செய்யாத கொலைக்குத் தண்டனை கிடைக்கிறது. இது பற்றிச் செண்பராஜபூபதி, ரமணனிடம், ‘‘தர்மம்னு ஒண்ணு இருக்கில்லே . . . நியாயம்னு ஒண்ணு இருக்கில்ல . . . அது உன்னை வளைச்சிப் போட்டுடிச்சி . . . செய்த தப்பை மறைச்சிட்டு உலாத்திகிட்டு இருந்தே இல்லையா? செய்யாத தப்புக்கு உன்னை மாட்டி வெச்சிருச்சி தர்மம் . . . எப்படியோ ஒரு தண்டனை . . . எந்த முற்பகலுக்கும், பிற்பகல் உண்டு’’[42] என்கிறார்.

பொன்னாத்தாவை ஏமாற்றிப் பாலியல் பலாத்காரம் செய்கிறான் கதிர்வேலு. ஆனால், கடைசிக் காலத்தில் நோய் வந்து படுக்கையில் படுத்து விடுகிறான். அப்பொழுது, ‘‘இவன் தான் செய்த பாவத்திற்கு வட்டியும், முதலுமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறான்’’[43] என்று ஆசிரியர் கூறுகிறார்.

மாலதி, அசோக்கைக் காதலித்து, அவனுடன் ஓடி விடுகிறாள். அவன் அவளை ஏமாற்றிவிட்டு ஓடிவிடுகிறான். ஆண், பெண் சேர்ந்து செய்த தப்புக்குத் தெய்வம் பெண்ணுக்குத் தண்டனை தருவதாகக் கூறியுள்ளார். ‘‘பாவம் சின்னஞ்சிறு பெண் . . . கால தேவன் அவள் அவசரத்திற்கு இப்படியா ஒரு தண்டனை அளிப்பது’’[44] என்கிறார்.

விதவை நளினிக்குத் திருமணம் செய்து வைப்பது பற்றிப் பேசும் போது, ‘‘தெய்வ சங்கல்பம் இருந்தா நடக்கும். அதாவது பெருமாள் கிருபா கடாட்சம் இருக்கணும்?’’[45] என்று நளினியின் தாய் கூறுவதாகப் புனைந்துள்ளார்.

சரோஜினியின் கணவன் முத்து கெட்டவனாகச் செயல்படுகிறான். அவன் செய்த தவற்றுக்காகத் தண்டனை அனுபவிக்கச் சிறைச்சாலை செல்கிறான். அச்சூழலில், அவனைப் பிரிந்து அவன் மனைவி வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது, அவன் நினைப்பிலேயே தனிமரமாய் வாழ்வதாகப் புனைந்துள்ளார்.

‘‘அந்த சீதை இராமன் இல்லாவிட்டாலும் அவள் சீதை தானே. தங்கள் கல்யாண ஆல்பத்தை எடுத்து வைத்துக் கொண்டு மெல்ல புரட்டத் தொடங்குகிறாள்.’’[46] கணவன் பிரிந்தாலும் அவளை நினைத்து ஏக்கத்துடனே வாழ வேண்டும் என்ற கற்புக் கோட்பாட்டை முன்மொழிந்துள்ளார். ஆசிரியர் மதம் பற்றி விமர்சனம் செய்யாமல், மக்களின் மத நம்பிக்கைகள் சார்ந்த கருத்துக்களைத் தம் நாவலுள் பதிவு செய்துள்ளார்.

அமுதாவின் வாழ்க்கை அப்பாவின் பொறுப்பற்றதனத்தால் சீரழிந்து விடுகிறது. கணவன் அமுதாவைக் கொடுமைப்படுத்திவிட்டுச் சில மாதத்தில் இறந்துவிடுகின்றான். தன் வாழ்க்கை போல் தன் தங்கையின் வாழ்க்கையும் அமைந்துவிடக் கூடாது என்று எண்ணும் பொழுது, ‘‘முருகா . . . முருகா என்

தங்கையை நல்லபடியா வைப்பா . . . அவளுக்காவது பொழுது புலரட்டும்''[47] என்று முருகக் கடவுளிடம் அமுதா வேண்டுவதாகப் புனைந்துள்ளார்.

ஒருவனுக்கு ஒருத்தி என்பது தமிழ்ப் பண்பாடாக இருந்தாலும், அது என்னவோ பெண்ணுக்கு மட்டும் தான் கடைபிடிக்கப்படுகிறது. மனைவி இறந்து விட்டால், ஆண்கள் வேறு திருமணம் செய்து கொள்கிறார்கள். ஆனால், பெண்கள் அப்படிக் கிடையாது. கணவன் நினைவில் நோன்பு இருந்து வாழ்ந்து வருகின்றனர். அமுதா என்பவன் விதவைப் பெண் என்று அறியாத மூர்த்தி, காதல் கொண்டு திருமணம் செய்து கொள்ள விருப்பம் தெரிவிக்கின்ற பொழுது அவன் காதலை ஏற்க மறுத்துவிடுகிறாள். அப்பொழுது, ''இதோ பாருங்க அமுதா! விதவையாகிவிடறது உங்க தப்பு இல்லே. கடவுள் கணக்கிலே ஏதோ தப்பு''[48] என்று கூறுகிறார்.

## 6.6 சாதி சார்ந்த புனைவுகள்

சாதி என்பது மனித சமூகத்தோடு இணைந்த ஒன்று. அது அவனுக்கான ஓர் அடையாளம். சாதியடையாளத்துடனேயே சமூகச் சடங்குகள் நிகழ்வதனைக் காணலாம். பெண்ணின் திருமணத்தில் சாதி முக்கிய இடம்பெறுகிறது. சாதி, மதம் பார்க்கக் கூடாது என்று கூறும் ஆசிரியரும், திருமணத்திற்குச் சாதி தேவை என்கிறார். பார்வதியம்மாள் மகளிர் கல்லூரியில், பேராசிரியையாக நிர்மலா பணியாற்றி வருகிறார். காலையில் அனைத்து வீட்டு வேலைகளையும் செய்து கொண்டிருக்கும் பொழுது, தம்பி ராஜா இடுப்பில் கையை வைத்துக் கொண்டு வேலைக்காரியை அதட்டுவது போல், ''எப்பக்கா நீ சமைச்சிப் போறது? நான் தின்னுட்டு ஒழியறது . . .'' என்று அதட்டுவான். அதே வேளையில், தம்பி கனகவேல் மரியாதையாக, ''அக்கா தீண்டாமைன்னா அருஞ்சொற் பொருள் என்னக்கா எழுதணும்? கெஞ்சலாகக் கேட்பான். நிர்மலா உடனே கனகு! தீண்டாமைன்னா தொடாமே இருக்கிறது . . சும்மா

உடம்பாலே மட்டும் இல்லேடா . . . மனசாலேயும் . . . ! தாழ்ந்த சாதிக்காரங்களை மேல் சாதிக்காரங்க எங்க தெரு வழியா நீங்க வராதீங்க . . . எங்க வீடுகளுக்கு உள்ளே வரக்கூடாது, உங்களை நாங்க தொட மாட்டோம் அப்படின்னு சொல்றாங்க இல்லையா. அதுதான் தீண்டாமை"[49] என்று கூறியவுடன், இப்போ நல்லா புரியுது அக்கா என்று கூறி அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு, கன்னத்தில் ஒரு முத்தம் பதித்து தன் மகிழ்ச்சியைப் புலப்படுத்துவதன் மூலமாகச் சாதிய அடையாள ஆதிக்கப் போக்கினைப் பதிவு செய்துள்ளார்.

நளினி, நந்தகோபால் திருமணத்தில் சாதி பற்றிப் பேசவில்லை. ஏனெனில், நந்தகோபால் பணக்காரர். நளினியும் கல்லூரிப் பேராசிரியை. எனவே பொருளாதாரப் பலம் சமன்படுத்தப்படுவதால் இங்கு சாதிய ஆதிக்கம் முதன்மை பெறாமல் போகிறது.

சாதி பேதம் பார்க்க் கூடாது என்பதை மனிதரில் இவர் மகாத்மா என்ற நாவலில் வெவ்வேறு சமூகத்தைச் சார்ந்த வெங்கடேஷனும், துரையும் நட்புடன் பழகுவதன் வழிப் புலப்படுத்தியுள்ளார். அதைப் பற்றித் தன் மனைவி உமாவிடம் கூறும்போது, "அப்பாவுக்கு ஜாதி பேர்லே அபிமானம் கிடையாது. யாரா இருந்தா என்ன? அவா மனுஷா! அது போறாதா . . . அப்படிங்கிற அபிமானம் நிறையவே உண்டு. இதெல்லாம் நோக்குப் புதுசா இருக்கலாம்"[50] என்று கூறுவதன் வழி அறியலாம்.

வெங்கடேஷனைத் தேடி வேற்றுச் சாதியைச் சார்ந்த துரை என்பவர் வருகிறார். அப்பொழுது அவர் எந்தப் பாகுபாடும் காட்டாமல் உள்ளே அழைத்து, இருக்க வைத்து, அவரோடு பேசி மகிழ்கிறார். இருவருக்குமான நட்பு பற்றி மருமகளிடம் கூறும் பொழுது, "அம்மா உமா! இவன் பேரு துரைசாமி! என் பால்ய சினேகிதன். ஒண்ணா ஜெயிலுக்கும் போனோம். ஒண்ணா ஒதையும் வாங்கினோம் . . .

காஞ்சீபுரம் பக்கத்துலே கிராமம்! பெரிய வீடும்மா . . . துரையோட சம்சாரம் அமிர்தம் தங்கமான குணம்மா"[51] என்று கூறி அறிமுகப்படுத்தியவுடன் உமா அவர் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்குகிறாள். இதைச் சற்றும் எதிர்பாராத துரை, பதட்டமடைந்து "இருக்கட்டும்மா! இருக்கட்டும்! தீர்க்காயுசா, நிறைஞ்ச சுமங்கலியா, அமோகமா இருக்கணும்"[52] என்று வாழ்த்துகிறார்.

பிறகு எல்லோரும் சேர்ந்து சாப்பிட, உப்புமா ரெடி பண்ணு உமா என்று வெங்கடே கூறியவுடன், துரைசாமி கூச்சப்பட்டுக் கொண்டு, "முன்னே நீங்க மட்டும் இருந்தீங்க. உன் இ டத்துக்கு என்னைத் தொட்டுப்பே! சாப்பிடச் சொல்லுவே. ஏன் வெங்கடேசு? இப்ப மருமக வந்திருக்கா! அவ என்னவாவது நினைச்சுறப் போறாப்பா"[53] என்றவுடன், வெங்கடே "நீ போய் ஜாதியை மனசுலே வெச்சுண்டு பேசறது நன்னாவா இருக்கு? த்தூ! என்று கூறியவுடன், உடனே துரைசாமி . . ." ஒவ்வொரு ஜாதியிலேயும் ரெண்டு ரெண்டு ஜாதிங்க இருக்கு. இன்னொன்னு கவனிச்சியா வெங்கடேசு? அவன் அவன் ஜாதிக்கு ஒரு சங்கம் ஆரம்பிச்சிருக்கான். இந்த சுதந்திர பாரதத்திலே இது தேவையா?"[54] நியாயமாய்யா இது? என்று அங்கலாயிக்கிறான். "ஜாதிக்கு இத்தினி எம்.எல்.ஏ. இத்தனை மந்திரின்னு கணக்கு . . . அட வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கறப்பவே ஜாதி அடிப்படையிலே இல்லே தேர்ந்தெடுக்கிறாங்க?" என்று சாதி வேறுபாடு பார்க்காமல் சமத்துவச் சிந்தனையுடன் பழகும் வெங்கடேசு, துரைசாமி நட்பைப் பார்த்து, "பாப்பானும் பறையனும் ஒண்ணா சுத்துறாங்க டோய்"[54] என்று ஊரே சிரிக்கிறதாகப் புனைந்துள்ளார்.

### பண்பாட்டுப் புனைவும் கருத்தியலும்

காதல், திருமணம், மதம், சாதி, ஒழுக்க நெறிகள் முதலான தமிழர் தம் பண்பாட்டுக் கூறுகள் பற்றிய புனைவுகள், அரசு மணிமேகலையின் படைப்புக்களில்

கதை நிகழ்வுகளாகப் பின்னப்பட்டுள்ளமையினை இதுகாறும் கண்டோம். மேற்கூறிய பண்பாட்டுக் கூறுகள் பற்றிய புனைவுகள் வழிப் புலனாகும் கருத்தியல்களை இனிக் காணலாம்.

இருமனம் இணைந்து, ஒரு மனப்பட்டு ஒன்றி, காதல் கொண்டு, உறவாடும் நிலையில் மலரும் காதல் பற்றியும் விதவையைக் காதலித்துத் திருமணம் முடிப்பது பற்றியும் மனைவியை விட்டுப் பிரிந்து இன்னொருவரைக் காதலித்துத் திருமணம் முடிப்பது பற்றியும் உள்ள புனைவுகளில் வெளிப்படும் கருத்தியல்களைக் காண்போம்.

திருமணமாகாத ஆண், பெண், காதல் கொள்வது காலங்காலமாக இருந்து வருவது. அது உயிர்களின் இயற்கை. அவ்வியற்கையின்படி ஆணும் பெண்ணும் சந்தித்து ஒருவரை ஒருவர் மனத்தால் விரும்பி, உள்ளன்போடு பழகி, காதலை வெளிப்படுத்துகின்றனர். அதற்குச் சமூகத்தில் எதிர்ப்பு இருந்து வருவதென்பது ஒருமரபாகக் காணப்படுகிறது. இம் மரபினை ஆசிரியர் தம் நாவல்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆணும்– பெண்ணும் ஒருவரை ஒருவர் மனத்தால் விரும்பி, உள்ளன்போடு உறவாடி மகிழக்கூடிய காதல் காலங்காலமாகத் தொடர்கிறது. இவ்வாறு தொடரக்கூடிய மரபை தம் நாவலில் பதிவு செய்துள்ளார். அவர்கள் காதலிக்க உரிமை உண்டு. ஆனால் அந்தக் காதல் வெற்றி அடைய வேண்டுமா? வேண்டாமா? என்பதைத் தந்தை என்ற ஆணோ, அல்லது உடன் பிறந்த சகோதரன் என்ற ஆணோ எடுக்கும் முடிவைப் பொறுத்தே அமைகிறது. பெற்றோர் சம்மதத்துடன் அல்லது உடன்பிறந்தவர் சம்மதத்துடன் அவருடைய காதல் தொடருகின்ற பொழுது அது

சிறப்பானதாக இருக்கும் என்ற கருத்தியல் அதே மரபு நிலையில் நின்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

பெற்றோரின் அல்லது உடன்பிறந்தோரின் எதிர்ப்பை மீறி அவர்களாக வாழ்க்கைத் துணையோடு சேர்ந்து வாழலாம் என்று முடிவெடுத்து, காதலர் உடன் போக்காகச் சென்று அடைவதாகவும் மணம் முடித்து வாழும் காதலன் அவளை விட்டுவிட்டு ஓடிவிடுவதாகவும், அவள் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவளாகவும் வாழும் நிலையை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

மூன்றாவது நிலையில் பெற்றோர்கள் காதலை எதிர்ப்பது என்பது, தங்களது பொருளாதார பலத்திற்குச் சம நிலையில் காதலிப்பவரின் பொருளாதாரப் பலம் இல்லை என்கிற போது எதிர்க்கும் நிலையாக உள்ளது. பொருளாதார பலத்தில் சமநிலை இருக்கின்ற போது சம்மதத்தில் தொடரும் காதலாக உள்ளது.

பெறற்றோரின் அலட்சியத்தாலோ, அல்லது நன்கு விசாரிக்காமலோ, பெண்ணின் ஒப்புதல் பெறாமலோ முடியும் திருமணம் தோல்வியில் முடிவதோடு, கணவனை இழந்து மனைவி விதவையாக வாழும் சமுதாய நிலையைப் பதிவு செய்துள்ளதோடு, விதவையாக இருக்கக்கூடிய ஓர் பெண், இன்னொரு ஆணை காதலிப்பதாகவும் விதவை மறுமணம் முடிப்பதாகவும் காலத்திற்கேற்ற மாற்றத்தைப் பிரதிபலிக்கக்கூடிய மறுமலர்ச்சிக் கருத்தியலாக அமைந்துள்ளது. ஆனால் அதையும் அவள் சார்ந்து வாழும் குடும்பத்தில் உள்ள பெற்றோர் நிலையில் இருக்கக்கூடியவர்களோ பெற்றோர்களோ, அப்பா அம்மா இல்லாத நிலையில் உடன்பிறந்தோருடன் சார்ந்து வாழ்கின்றபோது ஒரு பெண்ணுக்கு ஏற்படுகின்ற காதலை மேற்குறிப்பிட்ட ஆண்கள் ஏற்றுக் கொள்கின்ற பொழுது அந்தக் காதல் தொடருகிறது. ஒரு வேளை விதவையின் வீட்டில் பெற்றோரோ அண்ணனோ

எதிர்க்கின்ற நிலையில் மணம் முடிக்க விரும்பும் ஆணின் பெற்றோர் சம்மதிக்கும் நிலையில் விதவைத் திருமணம் நடைபெறுகிறது. இதனை ஆண் கதைமாந்தரின் அம்மா விதவையைப் பார்த்துக் கூறும் போது, "இந்தப் பூவோட வீட்டுக்குப் போம்மா. அவனையும் கூட்டிக்கிட்டுப் போ. அவனே விஷயத்தை உங்கப்பா, அம்மா கிட்ட சொல்லட்டும். ஒத்துகிட்டா பாருங்க.... இல்லைன்னா என்ன பண்ணுவாங்க... கத்துவாங்க, பேசுவாங்க, அடிக்க வருவாங்க, ஆபாசமாத் திட்டுவாங்க, அவ்வளவுதானே... நீ பாட்டுக்குக் கட்டின புடவையோட வந்துடு... நாளைக்கே ஊரைக் கூட்டி கல்யாணம் பண்ண நான் இருக்கேன்[55] என்று கூறும் மறுமலர்ச்சிக் கருத்தியலையும் இவர் தம் நாவல்களின் வழிக் காணலாம்.

தன் மனைவியுடன் வாழாமல், அவள் நடத்தையில் சந்தேகம் கொண்டு பிரிந்து விட்டு, கலாச்சாரச் சூழலுக்கு ஏற்ற நிலையில் இல்லை என்று அவள் மீது பழி சுமத்திவிட்டு, அவளைப் பிரிந்து வாழ்கின்ற ஆண் மகன், தன் மனைவி மீது காட்டாத இரக்கத்தை இன்னொரு விதவையின் மீது காட்டி அது காதலாக மலர்வதற்குரிய சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழலில் விதவைக்கு வாழ்வு கிடைக்க வேண்டும் என்று எப்பொழுதும் நினைக்கின்ற ஒரு ஆண், திமிர் பிடித்தவளாக, ஆடம்பரமானவளாக, பெற்றோரை மதிக்காதவளாகத் தன் மனைவி உள்ளாள் எனப் பழி தூற்றிப் பிரிகிறான். அவள் செய்யும் தவறைத் திருத்த முயற்சிக்காமல், வாழ்விழந்து நிற்கக் கூடிய ஒருத்திக்கு வாழ்வு கொடுக்கலாம் என்று முன்வரக்கூடிய அந்த ஆண்; வழி தவறிச்செல்லக்கூடிய தன் மனைவியைத் திருத்துவதற்கு முழு உரிமை இருந்தும் அதனை விட்டு விட்டு, விதவையைக் காதல் செய்து திருமணம் செய்து கொள்கிறான். இதனை, "ஒரு கொண்டதக்காரி போனா, இன்னொரு பின்னல்காரி" என்று வேறொரு பெண்ணைத் தேடிக் கொள்ளும் மரபுக் கருத்தியலின் நீட்சியாகக் கருத இடமளிக்கிறது. ஒரு விதவைப் பெண் இவரைத்தான் மறுமணம்

முடிப்பேன் என்று சொல்லக்கூடிய நிலையில் காதல் வருகிறது. இத்தகைய காதல் பற்றிய புனைவுகளில் வெளிப்படும் கருத்தியலில்,

❖ காதலிக்க உரிமை கொடுத்துள்ளார்.

❖ காதலை அங்கீகரிப்பது ஆண் (தந்தை, சகோதரன்)

❖ தாய் தந்தை விருப்பத்துடன் செய்யலாம்

❖ தாய் தந்தை விருப்பத்துடன் செய்யவில்லை எனில் அக்காதல் வெற்றி பெறாது.

❖ பொருளாதாரம் சமநிலையில் இருந்தால் காதல் உறவு தொடரலாம் என்ற மரபு நிலை வெளிப்படுவதனைக் காணலாம்.

திருமணம் என்னும் சடங்கு மூலம் இரு மனம் இணைந்து ஒரு மனமாக உறவாடும் கணவன் மனைவியை மையமிட்ட ஒரு குடும்ப நிறுவனம் உருவாவதற்கு அடிப்படையாகத் திகழ்கிறது. இத்திருமணச் சடங்கு பற்றிய பதிவுகளைக் காதல் திருமணம், நிச்சயிக்கப்பட்ட திருமணம், விதவைத் திருமணம் என மூவகை நிலைகளில் ஆசிரியர் தம் நாவல் படைப்புக்களில் பதிவு செய்துள்ளார்.

பெற்றோரின் எதிர்ப்பை மீறி ஓடிப்போய் திருமணம் செய்து கணவன் மனைவியாக இல்லறம் நடத்தும் காதல் தம்பதியரின் வாழ்வு தோல்வியில் முடிவதாக ஆசிரியர் புனைந்துள்ளார். ஓடிப்போய் மணம் முடிக்க காதலர் இருவரும் இன்ப உறவில் இரண்டறக் கலந்த பின்பு சில நாட்களில் காதல் கணவன் காதல் மனைவியை கைகழுவிவிட்டு ஓடிவிடுவதாகவும் காதல் மனைவி கர்ப்பம் தரித்த நிலையில் வாழ வழியின்றி அல்லல்படுபவளாகவும் பிறந்த வீட்டினரின் ஆதரவினைப் பெற முடியாமல் தவிப்பவளாகவும் சமுதாயத்தினரால் பழிதூற்றப்படுபவளாகவும் வாழும்

அவல நிலையினைப் பதிவு செய்துள்ளார். மேலும், ஓடிப்போன காதல் கணவன் ஒழுக்கமற்றவனாகவும் தன் காதல் மனைவியை பல ஆண்களுடன் உறவு கொள்ளச் செய்யும் அரக்கனாகவும் சித்தரித்துள்ளார். காதல் கணவனால் கைவிடப்பட்டு வாழாவெட்டியாய் வாழும் காஞ்சனா, மாலா ஆகிய பாத்திரங்களின் வழியாக மேற்கூறிய நிகழ்வுகளைத் தம் நாவலில் பதிவு செய்துள்ளார்.

காதல் கணவனால் கைவிடப்பட்ட காதல் மனைவியைப் பழிதூற்றும் சமுதாயம் அக்காதலனைப் பழிதூற்றுவதில்லை. ஓடிப்போன பெண்ணை பழிதூற்றுவதோடு வாழ்விழந்தவளாக சித்தரிப்பதன் மூலம் பெண்களிடம் காதல் உணர்வு பற்றிய அச்ச உணர்வினை ஏற்படுத்துதல் உறவுகளோடு உறவாட முடியா தனிமைத் தவிப்பை வலியுறுத்துதல் என்பன போன்ற மரபை வலியுறுத்தும் விதத்தில் காதல் திருமணத்தைத் தோல்வியில் முடிந்த இல்லற வாழ்வாக சித்தரிப்பதன் மூலம் ஆசிரியர் தம் மரபுக் கருத்தியல் தாக்கத்தினை இனங்காண முடிகிறது. மேலும் காதல் திருமணம் இரு வீட்டாரின் சம்மதத்துடன் (பெற்றோர்) நிகழ்கின்ற போது அவர்களின் இல்லற வாழ்வு சிறப்புற அமைவதாகப் பதிவு செய்துள்ளமையினைப் பூவிழி - இமயவரம்பன், ரமே - சொர்ணா தம்பதியரின் வாழ்வியல் புனைவு மூலம் அறிய முடிகிறது.

பெற்றோர்கள் பார்த்து நிச்சயிக்கப்பட்ட திருமண வாழ்வில் கணவன் மனைவியர் மகிழ்வுடன் உறவினர்களுடன் உறவாடி ஆண் மகன் குடும்பத்திற்கு மட்டுமல்லாது சமூகத்திலும் மதிப்பு மிக்க தலைவனாக தலைநிமிர்ந்து வாழ்வதாகவும், மனைவி என்ற பெண் குடும்பத்திற்கேற்ற குல விளக்காக வாழ்வதாகவும் சித்தரித்திருப்பதன் மூலம் மரபுக் கருத்தியலை வலுவாகப் பதிவு செய்துள்ளார் என அறிய முடிகிறது.

விதவைத் திருமணம் என்பது காலத்திற்கேற்ற கருத்தாக வெளியிட்டாலும் மரபு நிலையில் தொடரக்கூடிய மேற்கூறிய கருத்துக்களை ஆசிரியர் மீறாமல் அம்மரபை பாதுகாக்கும் விதத்தில் இவ்விதவைத் திருமண நிகழ்வுகளைத் தம் நாவலில் பதிவு செய்துள்ளமையினைக் காணமுடிகிறது.

சாதியம் குறித்த கருத்தியல்களில் சாதிய முரண்கள் இவர்தம் நாவல்களுள் பதிவு பெறவில்லையென்றாலும், தன் இனத்தில் பெண் பார்க்கக்கூடியதான பதிவு இடம்பெற்றுள்ளது.

சாதி, சமூகத்தோடு இணைந்த ஒன்று. அஃது ஓர் இனத்துக்கான, குடும்பத்துக்கான அடையாளமாகத் திகழ்கிறது. ஆகையால் சாதி இல்லாமல் சமூகம் சுமூகமாக இருக்காது. பெண்ணின் திருமணத்தில் சாதி, முக்கிய இடம் பெறுகிறது. இச்சாதிய முரண்களை ஆசிரியர் கேள்விக்குள்ளாக்கவில்லை. சாதி பேதம் பார்க்கக்கூடாது என்று கூறும் ஆசிரியர், திருமணத்திற்குச் சாதி தேவை என்று கூறுகிறார். பொருளாதாரப் பலம் சமன்படுத்தப்பட்டால், அங்குச் சாதிக்கு இடமில்லாமல் போகிறது என்ற கருத்தியல் வெளிப்படும் முறையில் தம் நாவல்களைப் படைத்துள்ளமையினைக் காணலாம்.

மதம் சார்ந்த கருத்தியல்களில் ஆசிரியர்க்கு எவ்வித முரண்பாடும் இருப்பதாகப் புனைவுகளில் வெளிப்படுத்தவில்லை. ஆசிரியர் இந்து மதத்தின் மீது நம்பிக்கை கொண்டவராக இருக்கிறார். அதனால் படைப்புக்களில் உழவினையும் நம்பிக்கையும் சார்ந்த விதிக்கோட்பாட்டுக் கருத்தியலைத் தம் புனைவுகளில் வெளிப்படுத்தியுள்ளார். ஆண் செய்த பழியைத் தெய்வம் செய்த பழியாக, தெய்வத்தின் மீது சுமத்துவது; ஆண் செய்த தவற்றுக்குப் பெண் மீது பழி போடுவது, ஆண் எவ்வளவு பெரிய தவறு செய்திருந்தாலும், அவனுக்காகத் தீக்குளிக்காத

சீதைகள் காத்திருப்பது என்பன போன்ற கூற்றுக்களின் வழி மேற்கூறிய கருத்தியலை அறிய முடிகிறது. திருமணம் முடிந்த பிறகு கணவன் இறந்தால் அவள் மூதேவி சாதகம் உருப்படலை என்று கூறும் கருத்தும் இதற்கு அரண் சேர்க்கிறது எனலாம்.

## 6.8 தொகுப்புரை

பண்பாடு பற்றிய அடையாளத்தினை வெளிப்படுத்தக்கூடிய பதிவுகள் நாவல்களில் எங்கனம் இடம் பெற்றுள்ளன என்பதை இவ்வியல் ஆய்ந்துள்ளது. ஆய்வாளர் பண்பாட்டுக் கூறுகள் பற்றி விளக்குகின்ற போது, பண்பாடு பற்றிப் பல்வேறு அறிஞர்கள் குறிப்பிட்டிருக்கின்ற வரையறையினை ஆய்வாளர் தொகுத்துத் தந்துள்ளார். பண்பாடு பற்றிப் பக்தவத்சல பாரதி, தெ.பொ. மீ. முதலான அறிஞர்கள் கூறிய வரையறைகளை வரையறை என்னும் பகுதியில் ஆய்வாளர் முதலில் விளக்கியுள்ளார்.

பண்பாடு என்பது மக்கள் கூட்டமானது, தமது சமூக வரலாற்று வளர்ச்சியின் அடியாகத் தோற்றுவித்துக் கொண்ட ஒழுக்க நெறிமுறைகள், மதவழிபாட்டு நடைமுறைகள், திருமணம் முதலான வாழ்வியல் சடங்குகள், காதல், வீரம், பற்றிய மரபுகள், குடும்ப நிலையிலும், சமூக உறவு நிலையிலும் பின்பற்றும் நடத்தை முறைகள் முதலானவற்றைத் தலைமுறை தலைமுறையாகச் சமூகத்தின் வாயிலாகக் கற்றுக் கொண்டும் கற்பித்துக் கொடுத்தும் பின்பற்றி வரும் நடத்தை முறையினைத் தன் இனத்தாருக்கும், தலைமுறையினர்க்கும் கற்பிதமாக்கி வருவதையே பண்பாடு எனக் கூறலாம். இத்தகைய பின்புலத்தில் இந்தப் பண்பாட்டினுடைய அடையாளக் கூறுகள் நாவலில் எங்ஙனம் புனைவு பெற்றுள்ளன என்பதனை,

- ❖ காதல் பற்றிய புனைவுகள்
- ❖ திருமணம் பற்றிய புனைவுகள்

- ஒழுக்க நெறிகள் சார்ந்த புனைவுகள்
- மதம் சார்ந்த  புனைவுகள்
- சாதி சார்ந்த புனைவுகள்
- பண்பாட்டுப் புனைவும் கருத்தியலும்

என வகைப்படுத்தி விளக்கியுள்ளார்.

காதல் பற்றிய புனைவுகளில்,

- காதலிக்க உரிமை கொடுள்ளார்.
- காதலை அங்கீகரிப்பது ஆண்
- தாய் தந்தை விருப்பத்துடன் காதலுறவைத் தொடராம்
- தாய் தந்தையின் விருப்பமில்லையெனில் காதல் வெற்றிபெறாது.
- பொருளாதாரம் சம நிலையில் இருந்தால் செய்யலாம் எனும் கருத்தியலை

இவ்வியலுள் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

காதல் பற்றியக் கருத்துக்களை,

- எதிர்ப்பில் தொடரும் காதல்
- சம்மதத்தில் தொடரும் காதல்
- தோல்வியில் முடியும் காதல் என மூவகையாக விளக்கியுள்ளார்.

திருமணம் பற்றியக் கருத்துக்களை,

- காதல் திருமணம்
- நிச்சயிக்கப்பட்ட திருமணம்
- விதவைத் திருமணம்

என வகைப்படுத்தி விளக்கியுள்ளார்.

ஒழுக்க நெறிகள் சார்ந்த கருத்துக்களை,

❖ கணவனுக்கு மனைவி கீழ்படிதல்

❖ காலில் விழுந்து வணங்குதல்

❖ பணிவிடை செய்பவளாக இருத்தல்

❖ நடை உடை பாவனை

❖ பாராமுகங் கொண்ட நகர பண்பாடு

❖ அறிவுரை

❖ பெரியோரை மதித்தல்

❖ சகுனத் தடை

❖ அசோகவனத்து சீதை

என வகைப்படுத்தி விளக்கியுள்ளார்.

மதம் சார்ந்த கருத்துக்களை,

❖ அறக்கோட்பாடு

❖ கற்புக் கோட்பாடு

❖ ஊழ்வினை

❖ நம்பிக்கை

என வகைப்படுத்தி விளக்கியுள்ளார்.

சாதி சார்ந்த கருத்துக்களை, ஆசிரியர் தம்படைப்புகளில் கூறும்போது சாதி பேதம் இருக்கக்கூடாது, அது தற்காலத்தில் ஒருவரை ஒருவர் பிரிக்கக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் அது மக்களை இணைப்பவையாக இருக்க வேண்டும் என்ற ஆசிரியரின் எண்ணவோட்டத்தினை ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

பெண் புனைவும் கருத்தியலும் எனும் பகுதியில் காதல் பெற்றோரின் அங்கீகாரத்துடன் நடைபெறுகின்ற போது அந்தக் காதல் தொடருகிறது. தந்தை அல்லது சகோதரன் என்ற ஆண் எதிர்ப்பதால் அந்தக் காதல் தொடர முடியாமல் போகிறது. அதையும் மீறி அவர்கள் காதல் தொடர்ந்தால் அது வெற்றியடையாது தோல்வியில் முடிகிறது.

பெண்ணின் ஒழுக்கக் கோட்பாடு கதையில் முதன்மைப்படுத்தப்படுகிறது. பெண் ஒழுக்கங் கெட்டவளாக இருந்தால் அவள் வாழத் தகுதியற்றவள், காதலிக்கவே தகுதியற்றவள் என்ற நிலையில் தன் உயிரையும் மாய்த்துக் கொள்ளக்கூடிய கருத்தியலை ஆய்வாளர் இவ்வியலில் விவரித்துள்ளார்.

திருமணம் பற்றிய கருத்துக்களை முன் வைக்கின்ற பொழுது, காலத்திற்கேற்ற புதுமையினை மறுமலர்ச்சிக் கருத்தாக விதவைத் திருமணத்தைக் கூறினாலும், வெவ்வேறு காதலைக் கூறினாலும், ஆணை மையப்படுத்தியதாகவே உள்ளது. படைப்பாளர் மதம் பற்றிய விமர்சனத்தையோ, விளக்கங்களையோ தம் நாவலில் விவரிக்காமல் இருந்தாலும், மத நம்பிக்கை உடையவராகத் திகழ்கிறார் என்பதை அவர் தம் புனைவுகள் மூலம் அறிய முடிகிறது. சான்றாக, ❖ கற்புக் கோட்பாடு, ❖ ஊழ்வினை, ❖ விதிக் கோட்பாடு, ❖ மூடநம்பிக்கைகள்.

முதலான கருத்துக்களை நாவல்களுள் பதிவு செய்துள்ளமையினைக் காணமுடிகிறது. சான்றாக,

❖ ஆண்கள் செய்யும் தவறை தெய்வத்தின் மீது பழிபோடுவது

❖ ஆண் வேறு திருமணத்தை செய்வதற்கு பெண் மீது பழிபோடுவது

❖ பண்பாட்டு நிலையில் அவள் தமிழ் மரபுக்கேற்ற நிலையில் அவள் இல்லை என்று பழி போடுவது அல்லது தூற்றுவது

என்பன போன்ற கருத்தியல்கள் அடிப்படையில் புனைவு பெற்றுள்ளமையினை ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

## அடிக்குறிப்புகள்

1. டாக்டர் மீ.பு. மு. நாசீர் அலி, நாட்டுப்புற பண்பாட்டியல், பக்.22-23.
2. ஆக்ஸ்போர்டு அகராதி, ப.669.
3. பாவாணர், பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்,ப.15.
4. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல், பக்.150-152.
5. அரசுமணிமேகலை, காத்திருங்கள் காலம் வரும், ப.78.
6. மேலது., ப.57.
7. அரசுமணிமேகலை, என்றும் தொடரும் பயணம், ப.27.
8. அரசுமணிமேகலை, கண்ணுக்குள் நூறு கவிதை, பக்.127-135.
9. அரசுமணிமேகலை, பொறுத்திரு பூ மலர, பக்.102-103.
10. அரசுமணிமேகலை, கனவு சுமக்கும் கண்கள், ப.47.
11. மேலது., பக்.50-67.
12. அரசுமணிமேகலை, பூவே இளம் பூவே, ப.53.
13. அரசுமணிமேகலை, பொழுது ஒருநாள் புலரும், ப.96.
14. அரசுமணிமேகலை, காத்திருங்கள் காலம் வரும், ப.40.
15. மேலது., ப.43.
16. அரசுமணிமேகலை, நாளை நாள் ஜெயிப்பேன், ப.162.
17. அரசுமணிமேகலை, கண்ணுக்குள் நூறு கவிதை, ப.44.
18. அரசுமணிமேகலை, பொறுத்திரு பூ மலர, ப.67.
19. அரசுமணிமேகலை, என்றும் தொடரும் பயணம், ப.46.
20. அரசுமணிமேகலை, காத்திருங்கள் காலம் வரும், பக்.94-98.
21. அரசுமணிமேகலை, பொறுத்திரு பூ மலர, பக்.90-93.
22. அரசுமணிமேகலை, காத்திருங்கள் காலம் வரும், ப.67.
23. அரசுமணிமேகலை, மனிதரில் இவர் மகாத்மா, ப.146.
24. அரசுமணிமேகலை, பொழுது ஓர் நாள் புலரும், ப.89-92.
25. மேலது., ப.65.
26. மேலது., ப.87.
27. அரசுமணிமேகலை, நாளை நான் ஜெயிப்பேன், ப.113.
28. அரசுமணிமேகலை, கனவு சுமக்கும் கண்கள், ப.48.
29. அரசுமணிமேகலை, கண்ணுக்குள் நூறு கவிதை, ப.167.
30. மேலது., ப.170.
31. அரசுமணிமேகலை,என்றும் தொடரும் பயணம், ப.15.
32. மேலது., ப.15.
33. அரசுமணிமேகலை,பொழுது ஒருநாள் புலரும், ப.99.
34. அரசுமணிமேகலை,நாளை நான் ஜெயிப்பேன், ப.164.
35. அரசுமணிமேகலை,பொறுத்திரு பூ மலர, ப.23.
36. மேலது., ப.24.
37. மேலது., ப.26.

38. மேலது., ப.17.
39. மேலது., பக்.39-42.
40. அரசுமணிமேகலை, பொழுது ஒரு நாள் புலரும், ப.98.
41. மேலது., ப.112.
42. அரசுமணிமேகலை, தீக்குளிக்காத சீதைகள், ப.173.
43. அரசுமணிமேகலை, கண்ணுக்குள் நூறு கவிதை, ப.196.
44. அரசுமணிமேகலை, கனவு சுமக்கும் கண்கள், ப.117.
45. மேலது., ப.27.
46. அரசுமணிமேகலை, என்றும் தொடரும் பயணம், ப.46.
47. அரசுமணிமேகலை, பொழுது ஒரு நாள் புலரும், ப.72.
48. மேலது., ப.68.
49. அரசுமணிமேகலை, காத்திருங்கள் காலம் வரும், ப.
50. அரசுமணிமேகலை, மனிதரில் இவர் மகாத்மா, ப.157.
51. மேலது., ப.169.
52. மேலது., பக்.168-170.
53. மேலது., ப.171.
54. மேலது., பக்.172-174.
55. அரசுமணிமேகலை, பொழுது ஒருநாள் புலரும், பக்.115-116.

# இயல் – 0

# ஆய்வு முடிவுரை

அரசு மணிமேகலையின் படைப்புக்களில் பெண் புனைவுகளும் பெண்ணிய விடுதலையும் எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில் கண்டுணர்ந்த கருத்துக்கள் முடிவுரையாகக் கீழ்க்காணுமாறு விளக்கம் பெறுகின்றன.

அரசு மணிமேகலையின் படைப்புக்களுள் பதிவு பெற்றுள்ள பெண் பாத்திரங்களின் உடல் உறுப்புப் புனைவுகள், குடும்ப உறவு நிலைகளில் பெண் புனைவுகள், பொருள் ஈட்டும் உறவு நெறியில் பெண் புனைவுகள், பண்பாட்டு அடிப்படையிலான பெண் புனைவுகள் என வகைப்படுத்தி ஆய்வு மேற்கொண்டதன் மூலம் ஆய்வாளர் கண்டறிந்த கருத்துக்கள், ஆய்வாளர் உருவாக்கிய கருதுகோளை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்துள்ளன எனலாம்.

அதாவது, அரசு மணிமேகலை படைத்துள்ள நாவல்களுள், பெண் புனைவுகள் பற்றிய பதிவுகளில் வெளிப்படும் பெண் விடுதலை குறித்த கருத்தியல்கள் மரபு சார்ந்து கட்டமைக்கப்பட்டுள்ளன; சமூக அரசியல், பொருளாதார மாற்றத்திற்கேற்ப மலரும் பண்பாட்டு மறுமலர்ச்சியை மரபு சார்ந்து இவர் தம் புதினங்கள் பதிவு செய்துள்ளன என்று ஆய்வாளர் உருவாக்கிய கருதுகோள், ஆய்வாளர் மேற்கொண்ட ஆய்வின் வழி நிரூபணமாகியுள்ளது.

பெண்களின் உடல் உறுப்புக்கள் பற்றிய புனைவுகள் ஆண் கூற்றுக்கள் வழியாகவும், பெண் கூற்றுக்கள் வழியாகவும் பதிவு பெற்றுள்ளமையினை ஆய்வாளர் விளக்கியுள்ளார். குடும்ப உறவு நிலைகளில் கணவன், தந்தை, மகன், சகோதரன், காதலன் என்ற உறவுப் படிநிலைகளில் உறவாடும் ஆண்களின் கூற்றுக்கள் வழியாகப் புனைவு பெற்றுள்ள பெண்களின் குடும்ப உறவு வாழ்வியல் நிலையினையும்

மனைவி, தாய், மகள், சகோதரி, காதலி என்ற உறவுப் படிநிலைகளில் உறவாடும் பெண்களின் கூற்றுக்கள் வழியாகப் புனைவு பெற்றுள்ள பெண்களின் குடும்ப உறவு வாழ்வியல் நிலையினையும் ஆய்வாளர் விளக்கியுள்ளார். குடும்பத்திலும் பணிபுரியும் தொழிற்களங்களிலும் பொருளீட்டும் நெறியியலில் ஆண்கள் பெண்கள் பற்றியும் படைப்பாசிரியராகிய பெண் பிற பெண்கள் பற்றியும் பொருளுறவில் இணைந்து உழைக்கிற பெண்கள் தங்களைப் பற்றியும் பிற பெண்களைப் பற்றியும் கூற்றுக்கள் வழியாகக் கருத்துக்களை வெளியிடுகின்ற பொழுது பெண் புனைவு பதிவு பெற்றுள்ளமையினையும் ஆய்வாளர் விரிவாக விளக்கியுள்ளார். தமிழர் தம் பண்பாட்டுக் கூறுகளாகத் திகழ்கின்ற ஒழுக்கநெறி, மதநெறி, திருமணம், காதல், சாதி முதலானவற்றின் பின்புலத்தில் பெண் புனைவு பெற்றுள்ளமையினை விரிவான முறையில் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

தனிமனித நிலையிலும் குடும்ப உறவு நிலையிலும் பொருளுறவு நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் பதிவு பெற்றுள்ள பெண் புனைவுகள் வழிப் புலனாகும் கருத்தியல்கள், மரபு நிலைப் பெண்நிலைவாதக் கருத்தியல்களாக, மரபைப் பறைசாற்றும் கருத்தியல்களாக அமைந்துள்ளன எனலாம்.

அதாவது,

❖ பெண் மென்மைத் தன்மை உடையவள்

❖ ஆணை வளைத்துப் போடுபவள்

❖ ஆணின் உணர்ச்சியைத் தூண்டுபவள்

❖ ஆணின் உணர்ச்சிக்கு விருந்து படைப்பவள்

❖ ஆணைக் கவர்ந்து இழுப்பவள்

- ஆண்களுக்கான போக நுகர்ச்சிப் பொருள்
- ஆணைச் சார்ந்து வாழ்பவள்
- ஆணின் அரவணைப்பில் வாழ்பவள்
- பிரச்சனையை உருவாக்குபவள்
- உறவுகளை இணைப்பவள்
- உறவுகளைப் பிரிப்பவள்
- பெண் பெண்ணுக்கு எதிரி
- பிறரைப் பழி தூற்றுபவள்
- ஆண்களின் லட்சியத்தை நிறைவு செய்பவள்
- கணவனுக்காக வாழ்பவள். பெண் குடும்பத்தின் குல விளக்கு
- கணவனையும் அவன் வழித்தோன்றல்களையும் பேணப் பிறந்தவள்
- பெண் தியாகத்தின், பொறுமையின் குறியீடாகத் திகழ்பவள்

எனக் காலங் காலமாக நம் தமிழ்ச் சமுதாயம் கற்பிதமாக்கும் கருத்தியல்களைப் படைப்பாளர் தம் படைப்புக்களுள் எவ்விதத்திலும் கேள்விக்குள்ளாக்காமல், மரபில் காலூன்றி மேற்கூறிய கருத்தியல்கள் புலனாகும்படிப் படைப்பாளர் தம் படைப்புக்களைப் புனைந்துள்ளார்.

சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களுக்கேற்பத் தமிழ்ப் பண்பாட்டில் மலரும் மறுமலர்ச்சிக் கருத்தியல்களான,

- பெண் கல்வி
- காதல் மணம்

- ❖ பெண் மறுமணம் (விதவைத் திருமணம்)
- ❖ பொருளாதாரச் சார்பின்மை
- ❖ நிர்வாகத் திறன்
- ❖ முடிவெடுக்கும் திறன்
- ❖ பொருளீட்டும் திறன்
- ❖ தடைகளை எதிர்கொள்ளும் / எதிர்க்கும் / முறியடிக்கும் திறன்

முதலான சீர்திருத்தக் கருத்தியல்கள் மரபுக் கருத்தியல்களுடன் கலந்து வெளிப்படும் முறையில் அரசு மணிமேகலை என்பார் தம் நாவல்களைப் புனைந்துள்ளார் என்பதனை ஆய்வாளர் இவ்வாய்வின் வழிக் கண்டுணர்ந்துள்ளார்.

**மேலாய்வு**

தமிழ்ப் படைப்புலகில் அரசு மணிமேகலையைப் போன்று நாவல் படைப்பாளர்களாகத் திகழும் பெண் படைப்பாளர்களின் படைப்புக்கள் முழுவதையும் வேரோட்டமான முறையில் ஆய்வு மேற்கொண்டால், பெண் விடுதலை சார்ந்த கருத்தியல்கள், இவர் தம் படைப்புக்களுள் வெளிப்படும் பாங்கினைத் தமிழ் கூறும் நல்லுலகம் அறிவதற்கும், பெண் அடிமைத்தனம் ஒழிவதற்கான கருத்தியல்களை முன்னெடுத்துச் செல்வதற்கும் வழி வகை உருவாகும் எனலாம்.

மேலும், ஆண்கள் படைப்புக்களிலும் பெண்கள் படைப்புக்களிலும் ஆண் – பெண் பற்றிய புனைவுகள் வழிப் புலனாகும் கருத்தியல்களை ஒப்பியல் நோக்கில் ஆய்ந்தறியும் நோக்கிலும் ஆய்வு மேற்கொள்ளலாம்.

சாதீயச் சமுதாய அமைப்பில், காதல் மணமும் சமூக வாழ்வியலும் குறித்த, விதவை மணமும் சமூக வாழ்வியலும் குறித்த நிலையியலை அறிவதற்கு, சமூகவியல் நோக்கில் நாவல் படைப்புக்களை ஆய்வுப் பொருளாகக் கொண்டு ஆய்வு மேற்கொண்டால் சமூகப் பயன்மிக்க முடிவுகளை அறிவுக் கொடையாகப் பெறுவதற்கும் வாய்ப்புக்கள் உண்டு.

# துணைநூற்பட்டியல்

## அ) முதன்மை ஆதாரங்கள்

**1. அரசு மணிமேகலை, – என்றும் தொடரும் பயணம்,**
பத்மாவதி பதிப்பகம்,
சிருங்கேரிமடம் சாலை,
சென்னை- 600 028.
முதற்பதிப்பு-1985.

**2. . . . . . . . . . . . . , – பொழுது ஒருநாள் புலரும்,**
பத்மாவதி பதிப்பகம்,
சிருங்கேரிமடம் சாலை,
சென்னை- 600 028.
முதற்பதிப்பு-1985.

**3.. . . . . . . . . . . , – தீக்குளிக்காத சீதைகள்,**
தமிழரசி பதிப்பகம்,
சல்லிவன்ஸ் கார்டன் லேன்,
சென்னை- 600 004.
முதற்பதிப்பு-1985.

**4.. . . . . . . . . . . , – கனவு சுமக்கும் கண்கள்,**
தமிழரசி பதிப்பகம்,
சல்லிவன்ஸ் கார்டன் லேன்,
சென்னை- 600 004.
முதற்பதிப்பு-1985.

**5.. . . . . . . . . . . , – காத்திருங்கள் காலம் வரும்,**
தமிழரசி பதிப்பகம்,
சல்லிவன்ஸ் கார்டன் லேன்,
சென்னை- 600 004.
முதற்பதிப்பு-1985.

**6.. . . . . . . . . . . , – மனிதரில் இவர் மகாத்மா,**
தமிழரசி பதிப்பகம்,
சல்லிவன்ஸ் கார்டன் லேன்,
சென்னை- 600 004.
முதற்பதிப்பு-1985.

**7.. . . . . . . . . . . ,** – **பொறுத்திரு பூ மலர,**
விசாலம் பதிப்பகம்,
சென்னை- 600 024.
முதற்பதிப்பு-1986.

**8. . . . . . . . . . . . ,** – **கண்ணுக்குள் நூறு கவிதை,**
பத்மாவதி பதிப்பகம்,
காமராஜர் நகர்,
சென்னை- 600 041.
முதற்பதிப்பு- 1992.

**9. . . . . . . . . . . . ,** – **பூவே இளம் பூவே,**
நர்மதா பதிப்பகம்,
தியாகராயர் நகர்,
சென்னை- 600 017.
முதற்பதிப்பு- 1994.

**10. . . . . . . . . . . . ,** – **நாளை நான் ஜெயிப்பேன்,**
நர்மதா பதிப்பகம்,
தியாகராயர் நகர்,
சென்னை- 600 017.
முதற்பதிப்பு- 1994.

## ஆ) துணைமை ஆதாரங்கள்

**11. அறவாணன், க.ப.,** – **தமிழ் இலக்கியச் சமூகவியல்,**
தமிழ்க் கோட்டம்,
புதுச்சேரி.
முதற்பதிப்பு-1992.

**12. அரங்க மல்லிகா,** – **தமிழ் இலக்கியமும் பெண்ணியமும்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்.,
41- பி- சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர்,
சென்னை- 600 098.

**13. இசக்கியம்மாள், ஆ.,** – **பெண்மனச் சிக்கல்கள்,**
காவ்யா,
16, இரண்டாம் குறுக்குத் தெரு,
டிரஸ்புரம், கோடம்பாக்கம்,
சென்னை- 600 024.
முதற்பதிப்பு- 2009.

**14. இனியன் அ. கோவிந்தராஜீ,** – **நா. பார்த்தசாரதியின் நாவல்களில் குடும்பச் சிக்கல்கள்,**
பானுரேகா பப்ளிகேஷன்ஸ்,
32, சாதுல்லா தெரு,
தி.நகர்,
சென்னை- 600 017.
முதற்பதிப்பு-1996.

**15. இராமாத்தாள், கு.ம.,** – **பெரியாரியப் பெண்ணியம்,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
இரண்டாம் முதன்மைச் சாலை,
மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி,
சென்னை -600 113.

**16. எங்கல்ஸ்,** – **குடும்பம், தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம்,**
முன்னேற்றப் பதிப்பகம்,
மாஸ்கோ,
மூன்றாம் பதிப்பு ஆண்டு இல்லை.

**17.கனக சவுந்தரி இளந்திரையன்,** – **தமிழகப் பெண்கள் வாழ்வும் வளமும்,**
மெர்க்குரி புத்தகக் கம்பெனி,
கோயம்புத்தூர்.
முதற்பதிப்பு- 1971.

**18. கணேஷலிங்கன்,** – **பெண்ணடிமை தீர,**
குமரன் பதிப்பகம்,
சென்னை.
முதற்பதிப்பு- 1985.

**19. கலியாணசுந்தரனார், க.,** – **பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை,**
பாவை பப்ளிகேஷன்ஸ்,
இராயப்பேட்டை, சென்னை - 600 004,
முதற்பதிப்பு- 2000.

**20.கற்பகம், இரா.,** – **சமூகவியல்,**
தமிழ்ப்பாடநூல் நிறுவனம்,
சென்னை.
முதற்பதிப்பு-1973.

**21. கார்த்திகேசு சிவத்தம்பி, – நாவலும் வாழ்க்கையும்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்.,
41- பி- சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர்,
சென்னை- 600 098.
முதற்பதிப்பு-1998.

**22. கைலாசபதி, க., – தமிழ் நாவல் இலக்கியம்,**
குமரன் பப்ளிஷர்ஸ்,
3, மெய்கை விநாயகர் தெரு,
வழிகுமரன் காலனி,
7வது தெரு,
வடபழனி,
சென்னை-600 026.

**23. . . . . . . . . . . . , – இலக்கியமும் சமூகவியலும்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்.,
41- பி- சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர்,
சென்னை- 600 098.
முதற்பதிப்பு-1988.

**24. சண்முகசுந்தரம், சு., (தொ.ஆ.) – பெண்ணியமும் பிரதிகளும்,**
காவ்யா,
16, இரண்டாம் குறுக்குத் தெரு,
டிரஸ்புரம்,
கோடம்பாக்கம்,
சென்னை- 600 024.
முதற்பதிப்பு- டிசம்பர்-2007.

**25. . . . . . . . . . . . , – பெண்ணியம்,**
காவ்யா பப்ளிஷர்ஸ்,
16, இந்திரா நகர்,
பெங்களூர்-560 038.
முதற்பதிப்பு- பிப்ரவரி-1994.

**26. . . . . . . . . . . . , – தமிழ் வட்டார நாவல்கள்,**
காவ்யா பப்ளிஷர்ஸ்,
16, இந்திரா நகர்,
பெங்களூர்-560 038.
முதற்பதிப்பு-1991.

**27. சாவித்திரி, எஸ்.,** – **சமூகவியல்,**
மோகன் பதிப்பகம்,
திருவல்லிக்கேனி,
சென்னை-5.
முதற்பதிப்பு- 1987.

**28. சிவத்தம்பி, கா.,** – **தற்கால இலக்கியத்தில் வறுமையும் சாதியமும்,**
தமிழ்ப் புத்தகாலயம்,
சென்னை.
இரண்டாம் பதிப்பு-1978.

**29. சித்ரலேகா, இரா.,** – **லட்சுமி சூடாமணி நாவல்கள்,**
முத்துப் பதிப்பகம்,
மதுரை.
முதற்பதிப்பு-1989.

**30. ஞானசேகரன், ச.,** – **தமிழ் நாவல் 50 பார்வை,**
பத்தினிக் கேட்டம் பதிப்பகம்,
மேலையூர்,
பூம்புகார்-600 107.
முதற்பதிப்பு-1988.

**31. தண்டாயுதம், இரா.,** – **சமூக நாவல்கள்,**
தமிழ் புத்தகாலயம்,
58, டி.பி. கோயில் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-5,
முதற்பதிப்பு-1979.

**32. தெட்சிணாமூர்த்தி, அ.,** – **தமிழர் நாகரிகமும் பண்பாடும்,**
ஐந்திணைப் பதிப்பகம்,
181, பாரதி சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

**33. தேவதத்தா, கமலி, தி.,** – **பெண்ணியக் கலைச் சொல் விளக்கக் கையேடு,**
அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம், கொடைக்கானல்.
முதற்பதிப்பு-1992.

**34.** **நிர்மலா ராணி, வீ.,** – **தமிழ்ச் சிறுகதைகளில் பாலின வேறுபாடும்,**
பெண்ணிடிமைத் தனமும்,
காவ்யா,
14, முதல் குறுக்குத் தெரு,
டிரஸ்ட்புரம்,
கோடம்பாக்கம்,
சென்னை-600 024,
பதிப்பு-2003.

**35.** **. . . . . . . . . . . ,** – **பெண்ணியத் திறனாய்வு,**
காவ்யா வெளியீடு,
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.
முதற்பதிப்பு-2003.

**36.** **பஞ்சாங்கம், க.,** – **பெண் என்னும் படைப்பு – சில மானுடவியல் குறிப்புகள்,**
செல்வன் பதிப்பகம்,
புதுச்சேரி.
முதற்பதிப்பு-1994.

**37.** **பக்தவத்சல பாரதி, சி.,** – **பண்பாட்டு மானுடவியல்,**
மாணிக்கவாசகர் பதிப்பகம்,
சென்னை.
முதற்பதிப்பு-1990.

**38.** **பரமசிவானந்தம், அ.மு.,** – **சமுதாயமும் பண்பாடும்,**
தமிழ்க் கலைப் பதிப்பகம்,
சென்னை-14,
முதற்பதிப்பு-1972.

**39.** **பாக்கியமுத்து, தி.,** – **இலக்கியத்தில் பெண்கள்,**
கிறித்தவ இலக்கியச் சங்கம்,
பதிப்பு-1977.

**40.** **பாஸ்கரன், க.,** – **சமுதாயத் தத்துவம்,**
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.
முதற்பதிப்பு-1994.

**41. பாஸ்கல் கில்பர்ட், – சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்,**
சாந்தா பப்ளிஷர்ஸ்,
சென்னை.
முதற்பதிப்பு-1984.

**42. பிரேமா, – பெண்ணியம்,**
தமிழ்ப் புத்தகாலயம்,
34-35, சாரங்கபாணி தெரு,
காமராஜர் நினைவு இல்லம் அருகில்,
தி. நகர்,
சென்னை-600 017,
நான்காம் பதிப்பு- 2010.

**43. பிரேமா அருணாச்சலம், – பத்தினி தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும்,**
சவுத் ஏசியன் புக்ஸ்,
6, தாயார் சாகிப் 2-வது தெரு,
சென்னை- 600 002,
முதற்பதிப்பு-1993.

**44. பிரேமா, இரா., – பெண் எழுத்துக்களின் அரசியல்,**
அறிவுப் பதிப்பகம்,
142-17, ஜானி ஜான்கான் சாலை,
ராயப்பேட்டை,
சென்னை-600 014.

**45. மதியழகி மனோகரன், இ., – அரசு மணிமேகலை படைப்புகள் ஒரு பார்வை,**
இலக்குவனார் பதிப்பகம்,
YF-2 'A' பிளாக் வசந்த் குடியிருப்பு,
142, மேட்டுத் தெரு,
அயனாவரம்,
சென்னை-23.
பதிப்பு-1998.

**46. முத்துச்சிதம்பரம், ச., – பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்,**
தமிழ் புத்தகாலயம்,
சென்னை.
முதற்பதிப்பு-1997.

**47. ரெங்கம்மாள் இரா., வாசுகி. சி.,** – **பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும்,**
அறிவுப் பதிப்பகம்,
142, ஜானி ஜான்கான் சாலை,
ராயப்பேட்டை,
சென்னை-600 014.

**48. ராஜம் கிரு ணன்,** – **காலந்தோறும் பெண்,**
நாம் தமிழர் பதிப்பகம்,
சென்னை-600 005.

**49. வரதராசன், மு.,** – **பெண்மை வாழ்க,**
தாயக வெளியீடு,
சென்னை.
ஐந்தாம்பதிப்பு-1979.

**50. வளர்மதி, மு., (தொ.ஆ.),** – **சுயமரியாதை இயக்க வீராங்கனைகள்,**
கருப்புப் பிரதிகள்,
13-74, பப்பு மஸ்தான் நகர்,
இலாயிட்ஸ் சாலை,
சென்னை-5,
இரண்டாம் பதிப்பு- பிப்ரவரி-2008.

**51. வச்சிரவேலு, ச.,** – **திரு.வி.க. பெண்ணின் பெருமை ஓர் ஆய்வு,**
வசந்த செல்வி பதிப்பகம்,
74, வெளிப்பேட்டைத் தெரு,
தர்மபுரி.

**52. வேங்கடராமன், சு.,** – **எண்பதுகளில் தமிழ்ப் புதினங்களில் பெண்ணியம்,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
டி.டி.டி.ஐ (அஞ்சல்),
தரமணி, சென்னை-600 113.

**53. வேலம்மாள், ந.,** – **தமிழ் நாவல்களில் பொருளாதாரச் சிக்கல்கள்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்.,
41- பி- சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை- 600 098.
முதற்பதிப்பு-2008.

**54. ஸ்ரீவித்யா,** – **நவீனப் பெண்ணியத் திறனாய்வும் வ.ரா.வின் புதினங்களும்,**
காவ்யா,
18, இரண்டாம் குறுக்குத் தெரு,
டிரஸ்புரம்,
கோடம்பாக்கம்,
சென்னை- 600 024.

**இ) ஆங்கில நூல்கள்**

**55. Chatterji A. Shoma,** - **The Indian Womens Search for an Identity,**
Vikas Publishing House Pvt. Ltd.,
New Delhi.
1988.

**56. Sachdeva,** - **An Introdution to Sociology,**
Vitab Mahal,
Allahabd.
First Edition - 1984.

**57. Rose Lub Laser (Ed.)** - **The Family It's Structures and Functions,**
P XVI Cawated by (ப.முருகேஸ்வரி)

**58. William J.Croode,** - **The Family,**
Prentice Hall of India Private Limited,
New Delhi,
IInd Edition - 1994.

**ஈ) ஆங்கிலக் கலைக்களஞ்சியங்கள்**

**59. . . . . . . . . . . . ,** - **Oxford Ditionary,**
Oxford Univeristy Press,
Delhi,
First Edition - 1995.

**60. . . . . . . . . . . . ,** - **International Encyclopedia of the Social Science,**
The Macmillian Company,
New York.

## உ) ஆய்வேடு


61. கமலா, – **அரசு மணிமேகலையின் படைப்புக்களில் ஆண் பெண் கருத்துருவாக்கம்,**
இளநிலை ஆய்வுப்பட்ட ஆய்வேடு,
தூய சவேரியார் கல்லூரி,
பாளைங்கோட்டை.
திருநெல்வேலி,
1997.


## ஊ) கட்டுரைகள்


62. இராமமூர்த்தி, சு., – **தமிழ்க் குடும்பம்,**
தொல்காப்பியத்திற்கு முன்பும் பின்பும்.


## எ) களஞ்சியங்கள்


63. . . . . . . . . . . . , – **கலைக்களஞ்சியம் தொகுதி–4,**
தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு,
சென்னை.

64. . . . . . . . . . . . , – **வாழ்வியற் கலைக் களஞ்சியம், தொகுதி–8,**
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.


## ஏ) அகராதிகள்


65. . . . . . . . . . . . , – **க்ரியாவின் தமிழ் அகராதி,**
க்ரியா பதிப்பகம்,
சென்னை.

66. . . . . . . . . . . . , – **ஆக்ஸ்போர்டு அகராதி,**
சென்னை.

# பின்னிணைப்பு – 1
## படைப்பாளியின் படைப்புப் பட்டியல்

**வெளியீடுகள்**

1. ஒரு வானம்பாடி வாய் திறக்கிறது (கவிதைகள்) 1980
2. பெரியார். ஈ.வே.ரா. சிந்தனையில் பெண்கள் (எம்.ஃபில் பட்ட ஆய்வேடு)1981.
3. நிஜங்களும் நிழல்களும் (சிறுகதைகள்) 1984
4. வெளிச்ச மின்னல் (கவிதைகள்) 1984
5. நெஞ்சுக்குள் ஒரு நெருப்பு நதி (சிறுகதைகள்) 1985
6. சிறுவர் பொன்மொழிக் கதைகள் 1985
7. நகைச்சுவை நாடகங்கள்– 1985
8. புல்லைத் தின்னும் புலிகள் (சிறுகதைகள்) – 1985
9. ஏழிசைவல்லி (கவிதை நாடகம்) –1985
10. கனவு சுமக்கும் கண்கள் (நாவல்) 1985
11. தீக்குளிக்காத சீதைகள் (நாவல்) – 1985
12. பயனுள்ள வீட்டுக் குறிப்புகள் – 1985
13. என்றும் தொடரும் பயணம் (நாவல்) – 1985
14. சிரிப்பு நாடகங்கள் – 1985
15. நன்மொழிக் கதைகள் – 1985
16. பெரியார் சிந்தனையில் பெண்கள் மலேசியப் பதிப்பு – 1986
17. அழகும் ஆரோக்கியமும் பெற . . . – 1986
18. பொறுத்திரு பூ மலர . . . (நாவல்) 1986
19. மனித உடலும், மருத்துவமும் (சிறுவருக்கான அறிவியல் நூல் – 1986
20. சிறுவனும், சிங்கக் குட்டியும் –1987
21. மெழுகுவர்த்திகள் (நாடகங்கள்) 1987
22. கவிதைக் கதிரவன் தாகூர் – 1988
23. ஆளுக்கோர் அகல் விளக்கு – 1986
24. மாணவர்களுக்குச் சில யோசனைகள்– 1987
25. முயன்றால் முன்னேறலாம் (சிறுவர் கதைகள்) 1988
26. சுட்டிப்பயல் (சிறுவர் கதைகள்) 1988.
27. அன்பென்று கொட்டு முரசே (சிறுவர் நாடகங்கள்) 1988.
28. அறிவியல் அறிவு பெற... –1988.

29. கடல் வீரன் நெல்சன்– 1989.

30. நல்லவர்கள் கெடுவதில்லை (சிறுவர் கதைகள்) –1989.

31. தமிழகத்து மும்மணிகள்–1989.

32. சிந்திக்கச் சில நொடிகள் – 1992.

33. கண்ணுக்குள் நூறு கவிதை (நாவல்) – 1992.

34. கட்டுரைக் களஞ்சியம்– 1992.

35. மழலைப் பூக்கள் (கவிதைகள்) –1992.

36. எழுத்தறிவு.. –1992.

37. கனவுச் சுகம் (சிறுகதைகள்) –1993.

38. பூவே இளம் பூவே (நாவல்) –1994.

39. வயலைத் தாண்டாத பயிர்கள்

40. வாழ்க்கை மாளிகை

41. அரசு மணிமேகலை படைப்புகள் ஒரு ஆய்வு

42. முடிவல்ல ஆரம்பம்

43. வானத்தை வளைப்போம்

44. பயனுள்ள வீட்டுக் குறிப்புகள்

45. மதவெறி அறியாத மழலைகள்

46. புதிய சொர்க்கம்

47. வசந்தம் வந்தது

48. நல்லவர்கள் கெடுவதில்லை

49. விளக்கை நாடும் விட்டில்கள்

50. ஆழ்கடலில் சில அதிசயங்கள்

51. நாடும் வீடும் நலம்பெற

52. விண்ணைத் தொடுவோம் பெண்ணே

53. மூன்று கால் மனிதர்கள்

54. சேற்றில் முளைத்த செந்தாமரை

# பின்னிணைப்பு – 2

## உடல் உறுப்புக்கள் பற்றிய பட்டியல்

| வ. எண் | பெண்ணுடல் உறுப்புக்கள் | உறுப்புப் புனைவுகள் |
|---|---|---|
| 1. | முடி | கார்மேகம்<br>கருங்குழல்<br>தோகை மயில்<br>கருமேகக் குவியல் |
| 2. | பின்னல் | சாட்டைப் பின்னல் |
| 3. | நெற்றி | நிலாத்துண்டு<br>பிறை நிலா |
| 4. | கண் | மீன் கண்<br>காதளவு ஓடியது<br>தாமரை<br>மெல்லியது<br>அறிவு களை<br>நிரம்பியது<br>பளபளப்பு |
| 5. | விழி | கருப்புத் திராட்சை<br>வட்டக் கரிய விழி<br>கருவண்டு |
| 6. | பார்வை | பூவின் மென்மை<br>குளிர்ச்சி |
| 7. | கன்னம் | இளநுங்கு<br>கண்ணாடி<br>இளம்பூ<br>பட்டு |
| 8. | மூக்கு | – |
| 9. | மீசை | – |
| 10. | உதடு | பவழம்<br>சிகப்பு ரோஜா<br>பலாச்சுளை<br>பவளத் துண்டு |
| 11. | குரல் | கீச்சுக் குரல் |

| | | |
|---|---|---|
| 12. | சிரிப்பு | முல்லை<br>நளினம்<br>மென்மை |
| 13. | முகம் | பளபளப்பு |
| 14. | தோள் | - |
| 15. | கை | வாழைத்தண்டு<br>அல்லப்பூ |
| 16. | விரல் | வெள்ளரிப்பிஞ்சு<br>பஞ்சு<br>மெல்லியது |
| 17. | இடை | மெல்லியது<br>கொடி |
| 18. | முதுகு | - |
| 19. | பாதம் | பூம்பாதம் |
| 20. | நடை | பூனைக்குட்டி<br>மெல்லிய நடை<br>நாட்டிய நடை<br>தங்கரதம்<br>காகிதத் தேர் |
| 21. | உடல் | மெல்லியது<br>கொடி<br>பஞ்சு |
| 22. | நிறம் | மாநிறம்<br>சந்தனம்<br>தங்கம் |
| 23. | தோற்றம் | - |

### பின்னிணைப்பு – 3

## ஆண் பெண்ணைப் பற்றிக் கூறும் சொல்லாடல்கள்

1. வாலிப நிலவு
2. பவுர்ணமி தரிசனம்
3. சந்தன முல்லை
4. மாணிக்கம்
5. அழகான பெண்
6. அழகு தேவதை
7. தங்கச் சிலை
8. பாரிஜாதகம்
9. செப்புச் சிலை
10. சேலத்து மாம்பழம்
11. பச்சைக் கிளி
12. பூங்கொத்து
13. தேவலோக சுந்தரி
14. அம்பிகை
15. மஞ்சள் நிலா
16. மகாலெட்சுமி
17. கிருக லெட்சுமி
18. கோயில் விக்ரகம்
19. மன்மத அழகுகள்
20. சுக வீணை
21. தங்க விக்ரகம்
22. கனி
23. பத்தினி
24. ரோஜாப் பூக்கள்
25. அழகு பதுமை
26. லட்டு
27. வெள்ளை ரோஜா
28. மஞ்சள் ரோஜா
29. குத்து விளக்கு
30. பட்டுப்பூச்சி
31. தேவதை
32. மோகினி
33. கட்டின பசு
34. ஆவேச புயல்
35. ரப்பர் பந்து
36. முயல் குட்டி
37. கிராதகி
38. பறவை
39. சாகசக்காரி
40. நாய்
41. பத்து பேர் கூட போன நாய்
42. எச்சிக்கலை நாய்
43. மானம் கெட்ட நாய்
44. மூதேவி
45. பொட்டைக் கழுதை